OFFICE OF THE REGISTRAR OF BOOKS

அசைவிலொரு அதிசயம்



பஞ்சணையில் படுத்துறங்கும் சுகத்துக்கு ஈடா
னது 1948 ப்யூக் சவாரி. எந்த ரஸ்தாவானா
லும் சரி, காற்றில் மிதப்பதுபோன்ற சுகமான
ஓட்டம். துளி ஆட்டம், அசைவு இருக்க
வேண்டுமே! ஊஹூம், இடையவே கிடை
யாது. புதுக் கார் வாங்குமுன் ஒரு தடவை
இந்த 1948 ப்யூக்கில் ஏறிச்சென்றுபாருங்கள்.
அதன் சுகம் அப்பொழுது தெரியும்.

1948 ப்யூக் ஸூபர்

Buick

SUPER

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்

மவுண்ட் ரோடு, சென்னை.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் லிமிடெட்

மதுரை, திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை.

சட்டம் ஒரு இருட்டறை...
அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு..
ஆனால் அது ஏழைக்கு எட்டாத விளக்கு!

பல உயர்ந்த தத்துவங்கள் நிறைந்த
உன்னத சமூகப் படம்....

ஜூபிடரின்

வேலைக்காரி

திவ்யமான நடிப்புக் கலையில்
திறமை மிகுந்து விளங்கும்
கே.ஆர். ராமஸ்வாமி
டி.எஸ். பாலையா நடிக்கது

இப்பொழுது
தமிழ் நாடெங்கும்
நடைபெறுகிறது

பொன் விழாவின் பொலிவு......

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்தின் சிகரம் ஆனந்தத்தாண்டவம். சுகவாழ்வும் ஆரோக்யமும் அனைவருக்கும் அத்தியாவசியமானது. அரை நூற்றாண்டுக்கு மேலாக மானிட வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியும் மாசற்ற தேகாரோக்யமும் அளித்து வரும் பண்டித டி. கோபாலாச் சார்லுவின் ஜிவாம்ருதம் பொன் விழாவின் பொலிவுடன் விளங்குகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17

19804

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப் படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா :— (வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மனச் சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக்குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரையும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7—0—0.

குஷ்டம், வெண்குஷ்டம் :— இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3—0—0.

நரை மயிர் நிவாரணி :— ஆயுர்வேத முறையால் தயார் செய்யப்பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ. 2—8—0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ. 3—8—0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ. 5—0—0.

N.B. பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லாவிட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார் :

"பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்குகிறது. ஸ்நானம் செய்த பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது."

Baidya Raj Brij Kishore Ram
(150) RANIGUNJ P. O.
(BURDWAN)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - APR 1949
MADRAS

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

★

சிறந்த சேவைசெய்து வருகிறது.

நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 70,00,000

★

கிளைகள்: { பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, நாகபுரி.

★

பிரதம ஏஜண்டுகள்:

ஏ & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.



ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாபூர். மதராஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

●

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

ரூ. 300 இனும்!

விநோத சக்தி வாய்ந்த சித்தி கவசம்!!

மிகவும் சக்தி வாய்ந்தது. எவ்வளவு கஷ்டமான காரியமானாலும் இந்த மஹா சக்தி யந்திரத்தை வைத்துக்கொள்வதாலேயே வெற்றி ஏற்படுகிறது! நீங்கள் வேறு ஒன்றும் சிரமப்பட வேண்டாம். இதன் மூலம் நீங்கள் விரும்புவது உமது கட்டுப்பாட்டிற்கு வரும். கிரஹ தோஷங்கள் விலகும். எதிரிகள் பணிவர். பரீக்ஷை, வியாபாரம், வழக்கு, லாட்டரி, பந்தயம், வேலை, புத்திர பாக்கியம், செல்வப் பெருக்கு முதலியவைகளில் சிறந்த வெற்றி அளிப்பதுடன் கொடிய வியாதிகளினின்றும் காப்பாற்ற வல்லது. அதிர்ஷ்டம் உங்களைத்தேடி வரும்.

ஒன்றின் விலை ரூ. 1—4—0 3-கவசங்கள் ரூ. 3—2—0

ஸ்பெஷல் மஹாசக்தி யந்திரம் ரூ. 3—15—0 (உடனே பலனளிக்கவல்லது)

ஒன்றிலிருந்து மூன்று கவசங்களுக்கு தபால் செலவு ரூ. 0—7—0.

உண்மையல்ல என்று நிரூபிப்பவருக்கு
ரூ. 300 பரிசு அளிக்கப்படும்.

SHRI SARVA SIDHI MANDIR
(C. K.) KARTARPUR

எஃகும் முன்னேற்றமும்



மிகவும் சிரமப்பட்டு மண்வெட்டி கடப்பாறை இவைகளைக் கொண்டு நிதானமாகக் காடுகளையழித்து தரையைச் சமப்படுத்தும் அதே வேலையை குறைந்த நேரத்தில் திருப்திகரமாகப் புல் டோஸர். ஸ்டீம் ரோலர் இவைகளைக் கொண்டு செய்ய முடிகிறது.

மண்வெட்டி, புல் டோஸர், கடப்பாறை ஸ்டீம் ரோலர் எதானாலும் சரி. கட்டிட நிர்மாண வேலைகளின் முன்னேற்றத்துக்கு உதவுவது எஃகே.

வருங்காலத்திலும் இம்முன்னேற்றத்தின் முன்னணியில் நிற்பது டாடா எஃகே.

தரையைச் சமப்படுத்தும் புல்டோஸர்

டாடா
எஃகு

தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

தலைமை சேல்ஸ் ஆபீஸ்:

23B, நேத்தாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா.



பரிசு ரூ. 1,000/-

வசீகர சக்தி வாய்ந்த மோதிரம்

(ஓர் அபூர்வ சிருஷ்டி)

யோக சித்தியாலும், வசீகரசக்தியின் உதவியாலும் இம் மோதிரம் தயாரிக்கப்படுகிறது. இது அதிசயங்கள் புரிகிறது! இதை அணிபவர் எத்துணை நீங்காத கஷ்டங்கள் அனுபவிப்பவராயினும் எக்காரியத்திலும் வெற்றி பெறுவது திண்ணம். கிரக தோஷங்களும் நீங்கும். எவரும் இம் மோதிரம் அணிபவரிடம் பணிந்துவிடுவர். இம் மோதிரத்தை அணிபவர் தொழில், காதல், செல்வம், உடல் நலம், வழக்கு, விவாகம், பரீக்ஷை முதலியவைகளில் அமோக வெற்றி பெறுகிறார் லாட்டரி முதலியவை மூலம் நிறைய பணவசதியும் ஏற்படக்கூடும். சகல விதமான பிணிகளினின்றும், அபாயத்தினின்றும் காப்பாற்ற வல்லது. இம் மோதிரம் உங்கள் மெய்க்காவலனாக விளங்கும்!!

ஒரு முறை உபயோகித்தால் முதல் நாளிலேயே இதன் அபூர்வ இயல்புகள் விளங்கும். விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—15—0 (மிகவும் சக்தி வாய்ந்தது) வெளி நாடுகளில் 5 ஷில்லிங். ஸ்பெஷல் ரகம் 10 ஷில்லிங். அட்வான்ஸ் தொகையுடன் ஆர்டர் அனுப்பவும்.

இது உண்மையல்ல என்று நிரூபிப்பவருக்கு பணம் திருப்பி அளிக்கப்படும்.

SHINING MESMERISM HOUSE
(C. M.) KARTARPUR (E. P.)

லைசென்ஸ் தேவையில்லாத

அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

NO LICENCE NEEDED

உங்கள் உயிர், வாழ்வின் கௌரவம், ஆஸ்தி இவைகளைத் துஷ்டர்கள், விலங்குகள் முதலியவைகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்

வீட்டிலும், பிரயாணம் செய்யும் பொழுதும் இந்த அழகிய உறுதியான ரிவால்வர் உங்களுக்குச் சிறந்த நம்பகமான தோழனாக விளங்கும். ஒன்றன்பின் ஒன்றாக, தானே ஆறு தடவை சுடுவதற்கான ரவைகள் பொருந்திய அமெரிக்கன் பிஸ்டல்களுக்குச் சமமானது. 15 அவுன்ஸ் கனமும் 9 அங்குல நீளமும் உள்ள இது பயங்கர சப்தத்துடன் நெருப்பைக் கக்கிக்கொண்டு வெடிக்கிறது. இன்றே இதில் ஒன்றை ஆர்டர் கொடுங்கள். குறைந்த விலையுள்ள இந்த மெய்காப்பாளன் இன்றி ஒரு போதும் இருக்காதீர்கள்.

ரவையுடன் ஒவ்வொன்றின் விலை

ரகம் 111 Rs. 5-0-0, 222 Rs. 6-8-0, 333 Rs. 7-8-0, 444 Rs. 8-8-0

குறிப்பு: 555 ஸ்பெஷல் வெள்ளி முலாம் பூசப்பட்டது ரூ. 10-0-0 மேற்கொண்டு 4 டஜன் ரவைகள் ரூ 4-8-0 பிஸ்டல் உறை கொண்ட தோல் பெல்டின் விலை ரூ. 5-0-0, லூப்ரிகேடிவ் ஆயில் பாட்டில் ஒன்று விலை ரூ. 1-0-0.

HINDUSTAN TRADERS
P. Box No. 286, KANPUR (U. P.)

தி யுனைடெட்

கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்றமூலதனம்	....	ரூ.	8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ.	45,00,000

•

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்—சேர்மன்)
ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

ரமண்லால் ஜி. ஸரையா
(வைஸ்—சேர்மன்)
மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்
B. T. தாகூர்

•

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் கீர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து அத்தருக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்

சந்தன அத்தர்

MSR 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

உங்கள் எதிர்காலத்தைப்பற்றி

உங்களுக்கு 1949-ல் என்ன நடக்கும் ?

எதிர்காலத்தில் உங்களுக்கு என்ன நடக்கப்போகிறதென்றும், நீங்கள் என்ன காரியங்கள் செய்வீர்களென்றும் அறிய விரும்பினால் ஏதாவது உங்களுக்குப் பிரியமான புஷ்பத்தின் பெயரை கடுதாசியில் எழுதுங்கள் நீங்கள் எழுதும் தேதி, வேளை விவரங்களையும் குறித்து உங்கள் சரியான விலாசத்தையும் உடனே எழுதி யனுப்புங்கள்.

ஜோதிஷ சாஸ்திரப் பிரகாரம் நாம் கணித்து உங்கள் கார்டு எழுதப்பட்ட தேதியிலிருந்து 12 மாதங்கள் வரையில் உங்கள் அதிர்ஷ்டம் லாப நஷ்டங்கள், ஜீவிக்கும் வழி, எந்த வேலையில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும், உங்கள் உத்தியோகத்தில் உயர்வு, தாழ்வு முதலான மாறுபாடுகள், ஆரோக்யம், வேறு தேசங்களுக்கு யாத்திரை, புண்ணிய தீர்த்த யாத்திரை, விவாகம், ஸ்திரீயினுலுண்டாகும் சௌக்யம், சந்தானம், புதையல் முதலானவைகள் கிடைக்குமிடம் லாட்டரி எதிர்பாராத விதமாய் திரவியம் கிடைத்தல் இவைகளைப்பற்றி தெளிவாய் மாதப் பிரகாரம் எழுதி ரூ. 1—4—0 வி. பி. யில் அனுப்புவோம். (வி. பி. சார்ஜ் வேறு) துஷ்ட கிரகங்களுக்குச் செய்யவேண்டிய சாந்தி முதலானவைகளைக் குறிப்பிடுவோம். நாங்கள் விவரங்களுக்குப் பொறுப்பாளிகள். நாங்கள் அனுப்பும் விவரங்கள் உங்களுக்குத் திருப்தியளிக்காவிடில் பணம் வாபஸ் செய்யப்படும். ஒரு தடவை பரீட்சிக்கவும்.

பண்டிட் தேவ் தத் சாஸ்திரி

ராஜ்ஜோதிஷி, (C. B.), கார்த்தார்பூர் (E. P.)

Pt. Dev Dutt Shastri, Raj Jyotishi (C. B.), Kartarpur (E. P.)

இந்திய ரேடியோ உற்பத்தியில் ஒரு புரட்சி!
ஐ. ஆர். பி. ரேடியோக்கள் - உலகெங்கும் கேட்க மிகச் சிறந்தவை



அகில இந்திய மாடல்-4 வால்வ் 2பாண்ட் ஷர்ட்வேவ், மீடியம் வேவ் ட்ரை பாட்டரி சூபர்ஹெட் விலை ரூ. 225/- பாட்டரிவிலை ரூ. 30/- பிரத்தியேகம்.

மாடல் 476U/B- 6 வால்வ், 3 பாண்ட் ஆல்வேவ் AC/DC ட்ரை பாட்டரியுடன் கூடியது சூபர்ஹெட் ரூ. 408/-

மாடல் 495 5-U வால்வ், 3 பாண்ட், ஆல்வேவ், அகில உலகமும் கேட்கும். AC/DC. சூபர்ஹெட் ரூ. 236/-

மாடல் 486 B- 6 வால்வ், 3 பாண்ட் ஆல் வேவ், ட்ரை பாட்டரி சூபர்ஹெட் விலை ரூ. 360/- பாட்டரி விலை ரூ. 30- பிரத்தியேகம்.

தாமதமாகாமலிருப்பதற்கு எல்லா கடிதங்களும் ஆங்கிலத்திலேயே எழுதப்படல் வேண்டும்

தயாரிப்பவர்கள்:—

ஐ. ஆர். பி. (ரேடியோ) லிமிடெட்

சித்தரஞ்சன் அவென்யு, கல்கத்தா

போன்: கல்கத்தா 1875 * தந்தி: "BETARBANI"

ரூ. 22—8—0 பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரமும் ஒரு பவுண்டன் பேனவும் இனும்
உயர்தர கைக் கெடியாரங்கள்

எல்லா கெடியாரங்களும் உயர்ந்த ரகம். ஸ்விஸ் தயாரிப்பு, உறுதியுள்ள லிவர் மெக்கானிஸம். நீடித்து உழைப்பதுடன் சரியாக மணி காட்டும். ஐந்து வருஷங்களுக்கு உத்திரவாதம். படத்தில் காட்டியிருப்பதை விட மிகவும் அழகானவை. ஒவ்வொன்றும் ப்ளாஸ்டிக் பட்டையுடன், வெல்வெட் பெட்டியில் அமைக்கப் பட்டுள்ளது.



நெ. 201 வட்ட வடிவம்

வட்டவடிவம் க்ரோமியம் 17/8/- உயர்ந்தரகம் 18/8/-
3 ஜுவெல்கள் 20/8/- 5 ஜுவெல்கள் உ. ர. 22/8/-
7 ,, 26/- ரோல்ட்கோல்டு 38/-
15 ,, 35/- ,, ,, 58/-



நெ. 202 தட்டை வடிவம்

5 ஜுவெல்கள் 28/- உயர்ந்த ரகம் 30/-
5 ,, ரோல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம் 38/-
7 ,, 35/- ரோல்ட்கோல்டு 40/-
15 ,, 50/- ,, ,, 58/-



நெ. 203 வளைந்த வடிவம்

5 ஜுவெல்கள் க்ரோமியம் 30/- உயர்ந்த ரகம் 32/-
5 ,, ரோல்ட்கோல்டு 10வருஷ உத்தரவாதம் 40/-
7 ,, க்ரோமியம் 40/- ரோலட்கோல்டு 45/-
15 ,, ,, 52/- ,, ,, 60/-



நெ. 204 நீண்ட சதுரடோனு வடிவம்

5 ஜுவெல்கள் க்ரோமியம் 34/- உயர்ந்தரகம் 37/-
5 ,, ரேர்ல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம் 42/-
7 ,, க்ரோமியம் 42/- ரோல்ட்கோல்டு 48/-
15 ,, ,, 54/- ,, ,, 62/-

தபால் செலவு அணா 12 பிரத்தியேகம். ஒவ்வொரு கைக் கெடியார ஆர்டருக்கும் ஒரு அமெரிக்கன் பேனா இனமாக அளிக்கப்படும். சேர்ந்தாற்போல் மூன்று கைக் கெடியாரங்களுக்கு ஆர்டர் செய்தால் ரூ. 22-8-0 பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரம் இனமாக அளிக்கப்படும், அல்லது விலையில் பன்னிரண்டரை சத விகிதம் தள்ளுபடி செய்யப்படும்.

STANDARD WATCH CO. - Post Box No. 11419 - CALCUTTA - 6



எமது முதல்தரமான சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான் களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண் டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்ச்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட் கிராஸ், பெங்களூர் ஸிடி.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

1949-ஆம் ஆண்டு

உங்களுக்கு வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின்மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேறுவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாகப் பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

●

தபாற்செலவு தனி

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

●

Shree Swami Yogiraj Jyotish Asram,

C. K. PHAGWARA. (Kapurthala State)



தற்கால கட்டிட நிர்மாணம்

பால் பண்ணைகள்.

பால் குழந்தைகளுக்கு அத்தியாவசியமான உணவு. தேசத்தின் சுகாதாரம் அதன் குழந்தைகளுக்கு வினியோகிக்கப்படும் பால் சுத்தமாயிருத்தலைப் பொறுத்தது. புதிய, சுத்தமானபால் புஷ்டியான, உயர்ந் ஆகாரம். ஆனால் அசுத்தமான பால் வியாதிகளுக்கெல்லாம் ஆதாரம். பழைய, சுகாதாரமற்றபசுத் தொழுவங்கள். பசுக்களிடம் "ட்யூபர்குலோஸிஸ்" என்னும் நோயைப் பரப்புகின்றன இதன் மூலம் அப்பசுக்களின் பாலை அருந்தும் சிறியோர் பெரியோர் முதலானல்லோருக்கும் அக்கொடிய நோய்பாவக்காரணமாகிறது. ஆகையால், பண்ணைக் கட்டிடங்கள் சுத்தமாய், ஈரமற்று, சுகாதாரமாக இருக்கவேண்டும். அப்படி குப்பையும் ஈரமுமில்லாமல் இருக்கக்கூடிய சாதனம் "சிமெண்ட் கான்கிரீட்"டைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

கான்கிரீட் தரை வழவழப்பாக இருக்கிறது. அதில் வெடிப்புகள் கிடையாது. ஆகையால் விஷஜந்துக்கள் வசிக்கவழியில்லை. தண்ணீர் தேங்கி சகதியாவதில்லை. கான்கிரீட் தொழுவங்கள் மிகவும் குறைந்த சிலவில் கட்டலாம். மேலும் அவைகள் வெகுகாலம் இருப்பதுடன், எப்பொழுதும் புதிது போல் காணப்படும். வசதியும் ஆரோக்கியமும் உள்ள பண்ணை அதிகமான நல்ல பாலைக்கொடுத்து மிகவும் லாபத்தையும் அளிக்கும் என்பதை மறவாதீர்கள் மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 9, மவுண்ட் ரோட், தபால் பெட்டி 312 மதராஸ்

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லி.
டிஸ்டரிபூடேர்ஸ் போர்
தி அஸோஸியேடெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லி.

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.

12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) திமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா, ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKARVARTHI
Ayurvedha Sasthri (K. M.)
24, Debendra Ghose Road, Bhowanipore
CALCUTTA, 25.
Telephone: South 308
Stockists:
Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.

பொருளடக்கம்

சர்வதாரி மலர் 8 — பங்குனி இதழ் 8

சுயராஜ்யக் குயில்	15
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — ராமய்யா	17
தேசிய கவி உலகுக்குத் தந்த செய்தி — வாரன்	21
நமது சர்தார் — விசாகா நேமி குமார்	24
கர்நாடக ஸங்கீதம் — கலாதாஸன்	25
பட்டண் பெருமை (தொடர் கதை) — கே. எம். முன்ஷி	29
ரதம் வாங்கிய பலி — வேங்கடலட்சுமி பீ. ஏ.	39
பகைவனா நண்பனா? — நா. கி. நாகராசன்	44
வீராங்கனை — கே. சுந்தரம்மாள்	49
சாபம் — வை. சுப்ரமண்யம்	58
தெய்வப் பிறவி — கி. சந்தானம்	66
கலை உள்ளம் — வே. ரங்கராஜன்	71
பிரமை — கே. வி. கே.	78
கோயிலும் மசூதியும் — எம். எஸ். கமலா	89

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.



கோட்டையைப்போல
உறுதியும்...
விமானத்தைப்போல
வசதியும்..
உள்ள சைக்கிள்கள்
இப்போது வந்திருக்கின்றன...



BRITISH MAKE
MILNER
LONDON





ஒரு சைக்கிளில் முக்கிய அம்சம் உறுதி. இரண்டாவது அம்சம் அமைப்பு. எங்களுடைட சைக்கிள்கள் இந்த அம்சங்கள் அனைத்தும் பொருந்தியவை. அரசாங்கத்தாரும், இதர பெரிய ஸ்தாபனங்களும் எங்கள் நீண்ட நாளைய வாடிக்கைக்காரர்கள் என்பதே எங்கள் சைக்கிள்களின் உயர்வுக்கு அத்தாட்சி. மேல் நாட்டிலிருந்து சப்ளைகள் வேண்டிய அளவு வராதபோதிலும் கூடியவரை உங்கள் ஆர்டர்களைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்வோம்.

எப்பொழுதும் போல சரஸமான விலை.

ராயல் சைக்கிள் & மோட்டார் கோ.,

13/14 பிராட்வே, மதருஸ்

தி பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேல கோபுர வீதி, மதுரை

காவேரி

சர்வதாரி மலர் 8	“சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார்	பங்குனி இதழ் 8

சுயராஜ்யக் குயில்

இந்திய மக்களைத் தனது இனிய கீதத்தினால் தட்டி எழுப்பிச் சுதந்திரம் அடையச் செய்த குயில் இனி பாடாது. நமக்குச் சுதந்திரத்தின் மகிமையையூட்டியவர் மகாத்மா. அதைப் பாடிக்காட்டியவர் ஸ்ரீமதி சரோஜினி. இவர்கள் சேவையினால் சுதந்திரம் கிடைத்தது. ஆயினும் சுதந்திர மக்களின் ஆத்மாவான மகாத்மாவும் மறைந்தார்; தேசீயப் பண்ணை எடுத்துக்காட்டி, குயில் போன்ற தமது சொற்களால் நம்மை உற்சாகமூட்டிச் சுதந்திரமடையச் செய்த சரோஜினியும் இனி காணக் கிடைக்கமாட்டார்.

இந்தியா உலகிலேயே ஜனத்தொகை பெருத்த நாடு. கோடிக் கணக்கான மக்கள் அடைந்துகிடக்கும் நாடு. இன்று சுதந்திரம் பெற்று, தன் வறுமையை விலக்கி உலகிற்கே எடுத்துக்காட்டாக விளங்க ஆசைப்பட்டு உழைத்து வருகிறது. ஆனால் அதன் தலைவர்கள் பத்துப் பேர். எல்லோரும் பழுத்த கிழங்கள். மஹாத்மா முதலில் மறைந்தார். இன்று சரோஜினி. எஞ்சியிருப்பவர்கள் நாலைந்து தலைவர்கள். அவர்களுக்குப்பின் இந்தியாவின் நிலை என்ன ஆகும் என்று நினைக்கவும் பயமாக இருக்கிறது. அவர்கள் காலியாக்கின ஸ்தானங்களைப் பூர்த்திசெய்து மக்களின் நன்மதிப்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருப்பவர்களைக் காணோம். நாட்டில் பலர் இருக்கின்றனர். சீலமும் ஒழுக்கமும், அறிவும் திறனும் ஒருங்கே அமைவதில்லை. அப்படி இயற்கையில் ஒருங்கே அமைந்த சக்தியுள்ளவர்கள் தான் நாம் இன்று கொண்டாடிவரும் தலைவர்கள். அவர்களுக்குத் துணையாக, வாரிசாக, தலைவர்களை முன்னணிக்குக் கொண்டுவரவேண்டும். பண்டித நேருவும் பட்டேலும் உள்ளவரை கவலையில்லை. எனினும் முன்ஜாக்ரதை அவசியம். மஹாத்மா தம் வாழ்நாளிலேயே நேருவைத் தமக்கு வாரிசு என்று பிரகடனப் படுத்தினர். நேருவுக்கு வாரிசு யார்? மக்கள் பக்திகொள்ளும் தலைவராக இருத்தல் அவசியம். கே. எம். முன்ஷி போன்ற அறிவுச் சுடர்களை இந்தியா கவர்மெண்டில் இப்பொழுதே சேர்த்துக்கொள்வது தீர்க்கதரிசனமாகும்.

காஷ்மீர் போர் நிறுத்தம்

காஷ்மீர் போர் நிறுத்தம் ஆரம்பமானதிலிருந்து காஷ்மீரைப் பற்றிய செய்திகள் மக்கள் கவனத்தைக் கவரவில்லை. நேரு சர்க்கார் சமாதானம் நிலவ என்னென்ன செய்யவேண்டுமோ அவை அனைத்தையும் செய்ய ஆயத்தமாக உள்ளார்கள். பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் லியாகத் அலிகான் காஷ்மீர் பிரச்னைதான் இந்தியா — பாகிஸ்தான் சரிவர உறவாடுவதற்குக் குறுக்கே நிற்கிறது என்பதைப் பறைசாற்றினாலும் பாகிஸ்தான் இந்திய யூனியன்பால் உண்மையில் சமாதானம் வேண்டவில்லை என்பது தெரியவருகிறது. பிப்ரவரி கடைசியில் கராச்சியில் பான் இஸ்லாமிக் காங்கிரஸ் கூட்டம் ஒன்று நடந்தது.

அதில் காஷ்மீரின் எதிர்காலத்தைப்பற்றி தீவிர விவாதம் நடந்தது. இதைப்பற்றி இந்தியப் பத்திரிகைகளில் ஒன்றும் செய்தி வெளிவரவில்லை. இந்தியாவிலுள்ள முஸ்லிம்களை உத்தேசித்தேதான் இன்று இந்தியா மதப்பற்றற்ற அரசியலாகத் தன்னை அமைத்துக்கொண்டுள்ளது. ஆனால் காஷ்மீரைப் பாகிஸ்தானத்தின் ஓர் பாகமாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த ஜனவரிமுதல் பாகிஸ்தான் முயற்சி செய்து வருவதாகத் தெரிகிறது. ஆஸாத்—காஷ்மீர் ஆட்சிக்குட்பட்ட எல்லைக் குள்ளிருந்து காஷ்மீர்—ஜம்மு பிரதேசங்களுக்குள் பாகிஸ்தானிகளை புகுத்தி ரபரண்டம் எடுக்கும்பொழுது தங்களுக்குச் சாதகமாகச் செய்து கொள்ளப் பாகிஸ்தான் சகல ஏற்பாடுகளும் செய்து வருவதாகத் தெரிகிறது. இதைத் தடுக்க இந்தியா கவர்மெண்டாரும் ஷேக் அப்துல்லா கவர்மெண்டாரும் தயாராயிருப்பதாகத் தெரியவில்லை.

காஷ்மீர் பாகிஸ்தானத்துக்கு அத்யாவசியமானது என்று பிரிட்டிஷ்காரர்கள் பிரசாரம் செய்து வருவதின் மர்மம் விளங்கவில்லை. "பாகிஸ்தானத்தின் சில கேந்திரப் பிரச்னைகள்" என்ற தலைப்பின் கீழ் லெப்டினண்ட் ஜனரல் கோடார்ட் என்றவர் "ஆர்மி குவாட்டர்லி" என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் சில விஷயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

"காஷ்மீரினுடைய ராணுவ கேந்திர உபயோகம் எதிரி தாக்குதலை எதிர்க்கவா அல்லது எதிரி மீது தாக்கவா என்பதைப் பொறுத்திருக்கிறது. பாகிஸ்தான் அல்லது ருஷ்யாவிலிருந்து தாக்குதல் ஏற்பட்டால் அதைச் சமாளிக்க மட்டும் இந்தியாவுக்குக் காஷ்மீர் வசதியாயிருக்கும். பாகிஸ்தான் பாதுகாப்புக்கு காஷ்மீர் அத்யாவசியம் என்று ஒப்புக் கொள்வதோடு, இந்தியாவுக்கு அது பாகிஸ்தான் மீது ராணுவப் பொருளாதார அரசியல் தாக்குதல் செய்ய உபயோகமாக விருக்கலாமேயன்றி வேறு உபயோகத்துக்குப் பயன்படாது."

இப்படியே மற்றப் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் காஷ்மிரைப்பற்றி மிக அக்கரை காட்டி எழுதி வருகின்றன. டயம்ஸ் பத்திரிகை காஷ்மீர் பிரிவினைதான் இப்பிரச்னைக்கு சமாதானமான முடிவு என்பதை இந்தியாவும் பாகிஸ்தானும் ஒத்துக் கொள்ள வேண்டும் என்று ஓர் தலையங்கத்தில் எழுதியுள்ளது. நியூ ஸ்டேஸ்மன் என்ற பத்திரிகை காஷ்மீரைச் சார்ந்த பூஞ்ச், கில்கிட், இன்னும் மலைப் பிரதேசங்களில் பெரும்பாலானவை, உண்மையில் பாகிஸ்தான் ஆதிக்கத்திற்குள் வந்து விட்டன என்றும், ஜம்மு மட்டும் இந்தியாவைச் சேர்ந்ததுதான் என்றும் எழுதியிருக்கிறது. இந்தியா கவர்மெண்டார் பகுத்தறிவுக்கு ஏற்ற பிரிவினைத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருப்பதாயும் அதைப் பாகிஸ்தான் ஒத்துக் கொள்ள மறுத்து விட்டதாயும் எழுதியிருக்கிறது.

இது உண்மையானால் ஐ. நா. கமிஷன் எதற்கு? காஷ்மீரில் என்ன நடக்கிறது என்பதைக் குறித்து இந்தியா கவர்மெண்டாரும் இந்திய மக்களுக்கு விவரமாக ஒன்றும் அறிவிக்க வில்லை. காஷ்மீரில் நடக்கவிருக்கும் ப்ளபிஸிட்டில் ஷேக் அப்துல்லா தலைமையில் உள்ள முஸல்மான்கள் இந்தியாவுடன் இருக்க விரும்புகிறார்களா இல்லையா என்பதை விளக்குவதோடு, இந்தியாவிலுள்ள நாலுகோடி முஸல்மான்கள் சமயம் வாய்த்தால் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் அமையும். இந்தியா மதப்பற்றற்ற தேசமாக இருப்பதற்குக் காஷ்மீர் ப்ளபிஸிட்டின் முடிவு ஓர் துணைக்கருவியாகவுமாகலாம்; அல்லது ஓர் நாசகாரியாகவும் விளையலாம். இந்திய முஸ்லீம்கள் இதை உணர்வார்களானால் காஷ்மீர் முஸ்லிம்களை அவர்கள் இந்தியாவுடன் நிற்கத் தூண்டுவார்கள் என்பது திண்ணம்.

Madras Shops & Establishments Act.

சென்னை கடைகள் ஸ்தாபனங்கள் சட்டம்:—

கும்பகோணம் பாங்க் மானேஜிங் டைரக்டர் எஸ். மகாலிங்க ஐயர் அவர்கள் எழுதிய உரை, குறிப்புகளுடன் கூடியது. பிரசுரித்தவர் ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம். விலை அணா 12.

இப்புத்தகம் மிகவும் எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வகையில் தமிழில் ஆக்கப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தைப் பற்றி அறிய விரும்பும் எவரும் இதை ஆதாரமாகக் கொள்ளலாம். விளக்கம் மிகவும் போற்றத்தக்க நடையில் இருப்பது ஆசிரியரின் நுண்ணறிவைக் காட்டுகிறது.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

யுத்த வருஷங்களுக்கு முன் சிறிது செல்வாக்குடைய கவர்மெண்ட் உத்யோகஸ்தர்கள், வியாபாரிகள், வக்கீல்கள், டாக்டர்கள், இன்னும் இவைபோன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்த பிரமுகர்கள், தத்தம் இனத்தினரில் சபைச் சேர்க்கை பெருகுவதற்கும் அந்நியோந்நியம் ஏற்படுவதற்கும், அடிக்கடி சிறிய விருந்துக் கூட்டங்களிலும் டீ பார்ட்டிகளிலும் கலந்து மகிழ்ச்சியடைவது சகஜமாயிருந்தது. பெரும்பாலும் இந்த வழக்கம் ஜில்லாக்களில் அதிகப்பட்டிருந்தது. அதனாலேயே ஜில்லாக்களிலும் சிறிய பட்டணங்களிலும் காலத்தைக் கழித்து வந்த உத்தியோகஸ்தர்களுக்கும், உத்தியோக ரீதியில் வாழ்க்கையைக் கழித்து வந்த பிரமுகர்களுக்கும், சென்னைப் பட்டணத்தைப் போன்ற பெரிய பட்டணத்தில் வந்து சிறிது காலம் தாமதிப்பது கூட கஷ்டமான காரியமாக இருந்தது. யுத்தம் கழிந்த பிறகும், அதுவும் சுதந்திரம் வந்த பிறகும் மேற்கூறிய நல்லொழுக்கம் சிதறிப் போய்க்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவாயிருக்கலாம்? நிதி சம்பந்தமான நெருக்கடியால் இருக்கலாமோ? அல்லது உணவுப் பொருள்கள் சேமிப்பதில் உள்ள சிரமத்தாலும் இருக்கலாமோ? எனினும் செல்வாக்குள்ள மக்களில் அநேகருக்கு மேற்கூறிய நெருக்கடிகளால் மாத்திரமே சிற்றுண்டி விருந்து வைபவங்களைக் கைவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று சொல்வது சரியல்ல. விருந்துகளை வெறுப்பதற்கு மனப்பான்மை மாறுபட்டதிலும் ஒரு காரணம் உண்டாகும். ஒரு வகுப்பில் சேர்ந்த சிலர், அவ்வகுப்பில் மற்றவர்களோடு கலந்து கட்டிக்கொண்டு அந்நியோந்நியம் அதிகரிக்கும்படி பிரமேயங்கள் தேடிக்கொள்வது சகஜம். ஐரோப்பிய நாட்டார்களில் நல் வாழ்க்கைக்கு அறிகுறியான விஷயம் இது. சபா கம்பமாக வாழ்ந்து வருவது அவர்களில் பெரும்பாலாருக்கு இஷ்டமில்லாத காரியம். ஐரோப்பியர்களில் சாப்பாட்டுக் கூட்டத்தில் சமரஸம் ஏற்படுத்திக்கொள்ளும் தன்மை தொன்றுதொட்ட பழக்கம். விருந்துக் கூட்டங்களில் சாப்பாட்டின்மீது மாத்திரம் கவனத்தைச் செலுத்தமாட்டார்கள். சம்பாஷணையிலேயே அதிகமாக ஈடுபட்டு, சிறிய பொதுக் கூட்டங்களில் பலவித சர்ச்சைகளை முடித்துக்கொள்வது அவர்களுடைய பிரத்தியேக சக்தி. ஐரோப்பியர்களுடன் பலமுறை பழகிய இந்தியர்களுக்கும், இத்தகைய சக்தி ஏற்பட்டிருப்பதைக் கவனித்து வரலாம். சாமான்ய வாழ்க்கையில் ஈடுபட்டவர்களும் சரி, பெரிய பதவிகளை வஹிப்பவர்களும்சரி, யாராயிருந்தாலும் சமபந்தியில் அமர்ந்து சாவதானமாகச் சம்பாஷணையில் கலந்துகொண்டு எத்தகைய கடினமான வாதத்தையும், நிவர்த்தி செய்யலாம், பலவித வெறுப்புகளையும் தீர்த்து வைக்கலாம், அநேக விதங்களில் அந்நியோந்நியத்தைப் பெருக்கி வைக்கலாம் என்பது திண்ணம்.

எந்தக் காரணத்தினால் இந்த நல்லொழுக்கம் வரவர குன்றி வருகிறது? அம்மாஞ்சி சொல்லுகிறான்: "நமக்குச் சுதந்திரம் வந்த பிறகு, பெரிய கூட்டங்களிலும் பெரிய வகுப்புகளிலுமே நமது கவனத்தைச் செலுத்தி வருகின்றோமேயொழிய, சல்லாபம் அதிகரிக்கக் கூடிய சிறிய கூட்டங்களின் பற்றுதல் குறைந்து வருவதே காரணம்" என்கிறான். எங்கே பார்த்தாலும் கொடியேற்றத்துடன்

ஆரம்பிக்கும் வைபங்களே அதிகரித்து விட்டன. பத்து ஆட்கள் சேர்ந்து செய்யக்கூடிய இயக்கங்களுக்கும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் திரண்டால் தான் கண்ணுக்குக் கனிசம் என்கிற மனப் பான்மை அதிகரித்து விட்டது. மூன்று பேர் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு அலுவலுக்கு முப்பதுபேர்களைத் தேர்ந்தெடுப்பது சகஜமாய் விட்டது. அதில் இருபத்தேழு ஆட்கள் அலங்கார ரீதியாகவே இருந்து வருவார்கள். ஆயினும் அவர்களைச் சேர்க்காவிட்டால் இயக்கம் சிதறிப்போகும். மூன்று பேர்கள் மாத்திரம் ஒரு கமிட்டியில் இருந்தால் மூவரும் சேர்ந்து சிற்றுண்டி வேளையில் வேலையைக் கவனிக்கலாம்; முப்பதுபேர்கள் கூட்டம் கூடினுல் ஒரு சமாராதனை அல்லவோ வேண்டி வரும்!

வகுப்புக்களில் அந்நியோந்நியத்தைப் பெருக்குவதற்கு முக்கியமாக முயற்சி எடுத்துக்கொண்டு செய்யவேண்டியவர்கள் ஸ்திரீகளே. இல்வாழ்க்கையின் நல்லொழுக்கத்தைப் பெருக்குவதற்கு அவர்களே மூலாதாரம். ஒரு சமூகத்தில் ஏற்பட்ட ஒழுக்கங்களில் பலவிதப் பாகுபாடுகள் இருந்தும், அவைகளை வற்புறுத்தாமல் கேவலம் ஒற்றுமையையே அதிகப்படுத்துவதற்கு முக்கியமாக முயற்சி செய்ய வேண்டியவர்கள் ஸ்திரீகளே. வாழ்க்கையின் அலங்காரங்களைப் பெருக்குவது அவர்களாலேயே ஆகும். சிறிய பதவியில் உள்ளவனுனுலும் சரி, பெரிய பதவியில் உள்ளவனுனுலும் சரி, ஒரு மனிதனுடைய பதவியை ஒழுங்குபடுத்தி அவனுடைய வாழ்க்கைத்தத்துவத்தில் ஈடுபட்டு, அவனை உத்ஸாகப்படுத்தி, அவனுடைய துர்க்குணங்களை மூடிவைத்து, நற்குணங்களை மேன்மைப் படுத்த அவனுடைய மனைவியே உரியவளாவாள். எந்த நாட்டிலும் சரி, இந்தத் தத்துவம் பல பெரியோருடைய வாழ்க்கைச் சரித்திரங்களில் காணலாம். பெண் மக்களில் படிப்பும் அனுபவமும் அதிகப்பட்டுள்ள மேல் நாடுகளில் அநேக பெரியோர் தத்தம் மனைவிகளாலேயே பெரிய பதவிகளை வஹித்துள்ளதாக நாம் படிக்கலாம். ஆதலால் தான், "சகதர்மிணி" என்கிற வாக்கு நம் தேசத்தில் பெண் மக்களை அனுசரித்த வரையில் நல்ல வாக்காக ஏற்பட்டிருக்கிறது.

எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் நல்ல உண்டி அளிப்பது பெண் மக்களுடைய பிரத்தியேக சக்தி என்பதாக அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. குயுக்தி புத்தி உள்ளவர்கள் மாத்திரம் அசந்தர்ப்பமாக, "ஏன் பெண்மக்கள் சமையல் அறையிலேயே கிடந்து சாக வேண்டும்?" என்று சொல்வார்கள். சமையல் செய்வது ஒரு கடினமான ஜோலி என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்; அம்மாஞ்சியும் அப்படியே. நல்ல உண்டியைத் தயாரிப்பது ஒரு சாஸ்திரமாகும்; அதனையே பாக சாஸ்திரம் என்று சொல்வது. பலவித சாஸ்திரங்களில் புத்தியைச் செலுத்தி நாகரிகமான முறைகளில் ஆராய்ச்சி செய்யும் ஆண் மக்கள், பாக சாஸ்திரத்திலும் ஈடுபட்டு, ஆராய்ச்சி மூலம் சமையல் வேலையைக் கடினமான முறையிலிருந்து மீட்டு, மேல் நாட்டில் உள்ளபடி சுலபமான முறைகளில் கைப்பற்றும்படி செய்து வைத்தால், நம் நாட்டுப் பெண் மக்கள், சமையல் செய்வது ஒரு கேவலமான தொழில் என்று கருத மாட்டார்கள். பஸ் கண்டக்டிரஸ் வேலைகளிலும் இது போன்ற முரட்டுத்தனமான ஜோலிகளிலும் கவனத்தைச் செலுத்தாமலிருப்பார்கள்.

இது நிற்க, செல்வாக்குள்ள பெண்மணிகள் அநேகர் தற்காலத்தில் ஒரு நவீன சம்பிரதாயத்தை அனுஷ்டித்து வருகிருர்கள். என்னவென்ருல், புருஷன் நான்கு நண்பர்களை வீட்டில் விருந்துக்கு அழைத்துவிட்டால், பல பதார்த்தங்களை ஹோட்டல்களிலிருந்து வாங்கி வந்து வைத்து விடுகிருர்கள். பஜ்ஜிகளும் போண்டாக்களும் ஜிலேபி மைசூர்பாகும் எந்தச் சமயத்திலும் எங்கே பார்த்தாலும் கிடைக்கின்றன அல்லவா? வீட்டில் இவைகளைத் தயாரிப்பது சிரமமான காரியம். காசை வீசி எறிந்தால் கிடைத்து விடுகின்றன. அவ்வளவு தான். வீட்டுக்குச் சாப்பிட வருகிறவர்கள், அடுத்த நாள் வயிற்றுக் கடுப்பினுல் அவஸ்தைப்பட்டால் என்ன பிரமாதம்? ஒரு நாள் பட்டினி கிடக்கட்டுமே! யாராலாகும் இந்தச் சமையல் சங்கடம்! வெற்றிலை பாக்கு எடுத்து அலங்காரமாகத் தட்டில் வைப்பதுகூட ஒரு கஷ்டமான காரியம்தானே! தெருக்கோடியில் இருக்கும் ஸோடா கடையில் எட்டணு

வீசி எறிந்தால் பதினறு பீடா கணிசமாகக் கிடைக்கிறது. அவைகளை மென்று தின்கிறவர்கள் அதிகச் சுண்ணும்பினுல் நாக்கு வெந்து போய் அவஸ்தைப் பட்டால் என்ன முழுகி விட்டது? சிறிது நேரம் நெய்யைத் தடவிக் கொண்டு நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தால் சரியாய் விடுகிறது. இவ்வளவு தானே! இந்த மாதிரி நான் எழுதுகிறேனென்று, இதைப் படிக்கும் பெண்மணிகள் என் மீது கோபம் கொள்ளலாகாது. இது என் அபிப்பிராயம் அல்ல. கேவலம் அம்மாஞ்சியின் அபிப்பிராயம். தைரியமிருந்தால் எதிர்க்கட்டும்! "தைரியமிருந்தால்" என்று எதற்குச் சொல்லுகிறேன் தெரியுமா? அம்மாஞ்சி பாகசாஸ்திரத்தில் நிபுணன். அழகாகச் சமையல் செய்யும் திறமையுள்ளவன். காய்கறிகள் திருத்திக் கொடுக்கவும், அம்மி, ஆட்டுக் கல்லில் அரைத்துக் கொடுக்கவும் மாத்திரம் ஒரு ஆளை வைத்துக் கொண்டு, ஐம்பது பேருக்கு மூன்றுமணி நேரத்தில் அறுசுவையுடன் சமையல் செய்யத்தகுந்த யோக்கியதை அவனுக்கு உண்டு. இதைச் சொல்லி விட்டேன். இனி தைரியமிருந்தால் அம்மாஞ்சியை எதிர்க்கலாம்.

நம் வீட்டுக்கு விருந்தாளிகளை அழைத்துவிட்டு, வெளியிலிருந்து உண்டிப் பதார்த்தங்களை வாங்கிவருவது நாகரிகத்துக்கு விரோதமான விஷயம் என்பது அம்மாஞ்சியின் அபிப்பிராயம். பந்தி போஜனத்தின் அடிப்படையான கொள்கைக்கே விரோதம். நம் வீட்டில் வந்தவர்களுக்கு நாமே தயாரித்த சாப்பாட்டைப் போடுவதுதான் அழகு. சொல்பமாக இருந்தால் என்ன தவறுதல்? ஒருகுழம்பு, ஒரு கறி, ஒருரஸம், அன்னம், தயிர், போதுமே! வட இந்தியாவிலும், மேல் நாடுகளிலும் இது போல் சுலபமாகத் தயாரித்த பண்டங்களையே சில்லறை விருந்துகளில் அளிக்கிருர்கள். தமிழ்நாட்டில் மாத்திரம் இந்தச் சுலபமான வழியைக் கைப்பற்றியவர்கள் அரிதாக இருக்கின்றனர். ஒருவிருந்து என்ருல், இரண்டு கறி, சாம்பார், மோர்க் குழம்பு, வற்றல் குழம்பு, பச்சடி, வறுவல், சட்னி, அப்பளாம், ரஸம், பஜ்ஜி, போண்டா, வடை, ஜிலேபி அல்லது மைசூர்பாகு, பாதாம்கீர் அல்லது சேமியா பாயஸம், பகாளபாத், இரண்டு மூன்று வகை சித்ரான்னங்கள் இவ்வளவு சகிதமாக அளிக்கப்படுகின்றன. இவைகளுக்குக் குறைந்தால் ஈனயம் என்பதாக அபிப்பிராயம் முற்றி விட்டது. இது என்ன சாப்பாடா, அல்லது பகாசுரத் திண்டியா? பெண் மக்களுக்கு இத்தகைய விருந்துகளினுல் அருவருப்பு ஏற்படுவது சகஜம்தானே! சமூக வாழ்க்கையில் சீர்திருத்தம் இந்த ஒழுக்கத்தில் ஏற்பட வேண்டும். அப்பொழுது தான் சிறிய கூட்டங்களில் விருந்துகள் அதிகரித்து அந்நியோந்நியங்கள் பெருகி வரும். "சிறுகக் கட்டிப் பெருக வாழ்" என்கிற பழமொழி வீட்டைக் கட்டுவதில் மாத்திரம் அல்ல; வாழ்க்கைத் தத்துவங்கள் அனைத்திலும் பரவி வர வேண்டும். கேவலம் ஜம்பத்துக்காக உணவுப் பதார்த்தங்களைப் பெருக்குவதோ, அல்லது தயாரிப்பவர்களின் சங்கடங்களைப் பெருக்குவதோ, அல்லது புசிப்பவர்களின் சங்கடங்களைப் பெருக்குவதோ, எல்லாம் முற்றிலும் பிசகு. தற்காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியிலும் ஏதாவது ஒரு விருந்துக்குப் போவதென்ருல் பயமாயிருக்கிறது. அதுபோலவே யாரையாவது கூப்பிடுவதென்ருலும் அநேகர் பயப்படுகிருர்கள். ஏன்? நாகரிகத்தின் கோளாறுதான். நாடோடியாகச் சமையல் செய்து அளித்தால், கஞ்சத்தனம் என்பார்களோ என்ற பயந்தான். இதற்கும் பரிகாரம் வேண்டுமே.

* * *

சத்தியாக்கிரஹம் செய்வது, உண்ணு விரதம் எடுப்பது என்பது எவ்வளவு சகஜமாய்விட்டதோ, அதுபோலவே யாசகம் செய்து பணம் சேமிப்பது என்பதும் சகஜமாய்விட்டது. தரித்திர நாராயண விரதத்தை எடுத்துக் கொண்டு மகாத்மாஜி புனிதமான இயக்கங்களுக்காக யாசகத்தில் ஈடுபட்டார். ஆனுல் தற்காலத்திலோ இந்த முறையைப் பலபேர் பலவிதமான இயக்கங்களுக்கும் கைப்பற்றுகிருர்கள். ஏழ்மைப்பட்டுள்ள வகுப்பினருக்காகவோ நோயாலும் பிணியாலும் வருந்தும் ஜனங்களின் மேன்மைக்காகவோ பணவசூல் செய்ய வேண்டியபோது யாசகத்துக்கு முன் வருவது தர்மமாகும். கொடுக்கக்

கூடியவர்கள் இடத்திலும் தைரியமாகக் கேட்கலாம். ஆனால் ஒரு சிறிய வகுப்பினருக்காக அதுவும் செல்வாக்கிலுள்ள வகுப்பினருக்காக ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களின் நிமித்தம் யாசகம் செய்வது அசந்தர்ப்பமான காரியமாகும் அல்லவா? அத்தகைய யாசகம் அந்த வகுப்பிலுள்ள அங்கத்தினர்களிடத்தில் மாத்திரமே செய்தால் பொருத்தமாயிருக்கும். வகுப்பை மீறி வெளியிலிருப்பவர்களிடத்தில் பண வசூல் செய்தால் நிர்ப்பந்தப்படுத்தினதாகவே காணப்படும். அதிலும் ஏதாவது ஒருவித தோரணையிலிருக்கப்பட்ட பிரமுகர்கள் யாசகத்தில் பங்கெடுத்துக்கொண்டால் விபரீதமாகவே முடியும். உதாரணமாக, கிளப் ஒன்றை ஸ்தாபனப்படுத்தவோ அல்லது முன்னேற்றவோ ஒரு பகுதியிலுள்ளவர்கள் யாசகார்த்தமாக முன்வந்தால் தவறுதல் அல்லவா? சாதாரணமாக, கிளப்புகள் (அதாவது சல்லாப சங்கங்கள்) செல்வாக்கிலுள்ளவர்களுக்கே ஏற்பட்ட ஸ்தாபனங்களாகும். அநேக ஜில்லாக்களில் இத்தகைய சங்கங்கள் அழகான கட்டிடங்களுடன், டென்னிஸ் முதலிய ஆட்டங்கள் ஆடவும், சீட்டு முதலிய களிப்புகள் களிக்கவும், வயிறு நிரம்ப வீட்டில் சாப்பிட்டவர்கள் கேவலம்சுவை ருசிக்காக அநாவசியத் திண்டிகள் தின்னவும், ஸ்தாபனங்களாக விளங்கி வருகின்றன. அவைகளில் அநேகங்களுக்குப் பலவித காரணங்களால் சில சமயங்களில் பணநெருக்கடி ஏற்படலாம். அங்கத்தினர்கள் கட்டணங்களைச் செலுத்தாததினால் ஏற்படலாம். அல்லது ஸ்தாபனங்களை விருத்திசெய்யவேண்டி, சில புதிய வசதிகள் ஏற்படுத்த பணம் வேண்டிவரலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில், சங்கங்களில் அங்கத்தினராய் இல்லாதவர்களிடம் போய் யாசகம் செய்து பணவசூல் செய்வதைப்போல அனுசிதமான காரியம் வேறு உண்டோ? "ஊரார் கூத்துப் பார்க்க, ஆவா எண்ணெய் வார்க்கவா?" என்பதாம் பழமொழி. அதுபோல் மோட்டார் கார்களிலும், குதிரை வண்டிகளிலும் வந்து குவியும் பிரமுகர்கள் உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதற்கு யாசகம் எடுத்தும் பணம் சேமிப்பதா? அநேக இடங்களில் இதுவும் நடக்கிறது. இது தவறான காரியம் என்று யோசிக்காமல் பங்கெடுத்துக்கொள்ளுபவர்கள் அநேகர் உண்டு. வீண் ஜம்பத்துக்காகவோ, அல்லது வந்து கேட்பவர்களிடத்தில் உள்ள மரியாதைக்காகவோ, அல்லது பயத்துக்காகவோ பணத்தைக் கொடுப்பவர்களும் அநேகர் உண்டு. இதனால் சமூகத்திற்கு ஏற்படும் தீங்கு பெரிது. நல்ல இயக்கங்களுக்குப் பணம் வற்றிப் போகின்றன. நோயாலும் பிணியாலும் வருந்தும் எளிய மக்களுக்குச் செல்வாக்குக் குன்றிப் போகின்றது. பொது மக்களின் நல் வாழ்க்கையில் ஈடுபட்ட நம் ஸர்க்கார் ஒரு நிபந்தனையிட வேண்டும். அஸந்தர்ப்பமான யாசகத்தில் ஈடுபடுகிறவர்கள் ஆறுமாத கடும் சிக்ஷைக்கு ஆளாவார்கள் என்று சட்டம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் விமோசனம் ஏற்படும்.

* * *

புதிதாக வெளிவந்த பட்ஜெட் ஏற்பாடுகளில் ஒன்று காணவில்லையே என்று அம்மாஞ்சி வருந்துகிறான். என்ன வென்கிறீரோ? கலியாணங்களுக்காகவும், அவைகளுக்குப்பின் ஏற்பட்ட வைபவங்களுக்காகவும், செலவாகும் தொகைகள் மீது வரி விதிக்கப்படும்—உதாரணமாக நூற்றுக்குப் பத்து ரூபாய் வீதம்—என்று ஏற்பட்டால் அநேக கோடி ரூபாய்கள் வசூல் செய்யலாமே! மதிப்பு எப்படி இடுவது என்கிறீரோ? மதிப்புத்தான், நிர்த்தாக்ஷண்யமான மதிப்பு. பந்தல், ஊர்வலம், வெள்ளிப் பாத்திரம், பித்தளைப் பாத்திரம், மற்றுமுள்ள சீர்கள் இவைகளை அனுசரிப்பது; கலியாணத்துக்கு வந்தவர்களைக் கணக்கிடுவது; எவ்வளவு செலவாகியிருக்கும் என்று மதிப்பிடுவது; வரதக்ஷிணை எவ்வளவு என்று வதந்திமூலம் விசாரிப்பது; பழுகப் பார்ப்பது. செய்யலாமே, பேஷாகச் செய்யலாம். தபால் கார்டு ஒன்றுக்குக் காலணா வீதம் வசூல் செய்வதைவிட இந்த மாதிரி வசூல் செய்வது எவ்வளவோ மேலான காரியமாகும்.

தேசீய கவி உலகுக்குத் தந்த செய்தி

வாரன்

புதுச்சேரியில் கடற்கரையோரத்தில் இருந்த ஒரு சிறு வீடு. மேல்சார்பில் பல இடங்களில் மூங்கிலும் காட்டு ஓடுகளும் இற்றும் உடைந்தும் போய்விட்டபடியால் தென்னங்கீற்றுகள் இடப் பட்டுக் குடிசை என்று பெயர் சொல்லவும் அது பொருத்தமாயிருந்தது. குடிசையின் கீழ்த்தளம் ஒரே மண்ணால் பூசப் பெற்றிருந்தது. அதன் மீது விரித்த ஒரு ஓலைப் பாயில் உட்கார்ந்து ஒரு அந்தணன் பழைய உபநிஷதச் சுவடிகளைத் திருத்திக் கொண்டிருந்தான். அவன் உடல் மெலிந்து நிறம் குன்றியிருந்தாலும் முகத்தில் அலாதியான ஒரு ஜோதி விளங்கியது. சுவடியில் வாக்கியத்தைப் படிப்பதும் ஆழ்ந்து சிந்திப்பதும் தோன்றிய போது காதில் வைத்திருந்த எழுத்தாணியால் ஓலையின் ஒரு புறத்தில் சிறு குறிப்பு எழுதுவதுமாயிருந்ததால் அவனுக்கு அந்நேரத்தில் அங்கு உண்டான காலடிச் சப்தம் கூடக் காதில் விழவில்லை.

அப்பொழுது அங்கு வந்தவன் குள்ளச்சாமி. வாரத்திற்கு ஒரு முறையோ இரு முறையோ பசி தோன்றிய போது பிச்சைக்குப் போவது அவன் வழககம். புதுச்சேரிப் பிராந்தியத்தில் அவனைப் பயித்தியக்காரன் என்றே பலர் எண்ணியிருந்தார்கள். மிகக் குள்ளனாயிருந்ததைக் கொண்டு அவனைக் குள்ளச்சாமி என்றழைத்தார்கள், குள்ளச்சாமி ஒரு வேளை காவி உடை உடுத்தியிருப்பான். மற்றொரு வேளை வெள்ளை உடை. சில சமயங்களில் வீதியில் கிழிந்து எறியப் பட்டிருக்கும் அழுக்குடைகளைத் தாறு மாறாக உடுத்திக் கொண்டும் முதுகில் மூட்டையாகக் கட்டிச் சுமந்து கொண்டும் விசித்திரமாகக் காட்சி அளிப்பான். குள்ளச்சாமி இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் அழுக்கு மூட்டையைச் சுமந்து வீதி வழியாகச் சென்ற போது இவ் வந்தணனைக் கண்டான். குள்ளச் சாமியின் தோற்றத்தைக் கண்டு தனக்கு வந்த சிரிப்பையும் அடக்க முடியாமல் ‘ஏனப்பா இந்த அழுக்கு மூட்டையைச் சுமக்கிறாய்? பைத்தியமா உனக்கு?” என்று அந்தணன் கேட்டு விட்டான். அது வரை பிறருடன் அதிகம் பேசும் பழக்கமில்லாத குள்ளச்சாமி பளீரென்று பதில்சொல்லி விட்டான். மிக உரத்த குரலில் கோபம் தோன்ற, “நீ உன் அகத்தே (உள்ளே) அழுக்கை, மூட்டை மூட்டையாகச் சுமந்து கொண்டிருக்கிறாயே! மகா அறிவாளியோ நீ?” என்று சொன்ன போது அந்தணன் பிரமித்துத் தன்னையே மறந்து சிறிது நேரம் அங்கே தலை குனிந்து நின்றான். தன்னுர்ணவு வந்ததும் ‘என்ன அபாரமான தத்துவ ஞானம் இவனுக்கு’ என்று தனக்குள்ளே குள்ளச்சாமியைப் பாராட்டி வியந்து, குனிந்த தலையை நிமிர்ந்து பார்த்தான். குள்ளச் சாமியைக் காணவில்லை. வீதிகளிலும் சந்துகளிலும் அலைந்தலைந்து பல நாட்கள் தேடிப் பார்த்தும் குள்ளச் சாமியைக் கண்டு பிடிக்க முடியவில்லை.. இரண்டு வருஷங்கள்வரை சாமியைப் பற்றிய புலன் எதுவும் கிடைக்கவில்லை.

இச் சம்பவம் நடந்ததிலிருந்து புதுச்சேரி அந்தணனுக்குக் குள்ளச்சாமியின் நினைவாகவே இருந்தது. கனவிலும் நனவிலும் சாமியின் தோற்றத்தையே கண்டு கொண்டிருந்தான். சாமி சொன்ன பொருள் பொதிந்த வார்த்தைகள் எப்பொழுதும் அந்தணன் காதில் ஒலித்த வண்ணமாயிருந்தன. ‘மஹா ஞானியை நேரில் பார்த்தும் பயித்தியம் என்று நிந்தித்து உபதேசம் பெறாமல் இழந்தோமே’ என்று நினைத்து ஏங்கவும் ஆரம்பித்தான். அச் சம்பவத்திலிருந்து தத்துவ ஆராய்ச்சியிலீடுபட்டான். உபநிஷதம், கீதை முதலிய நூல்களைத் தானே படிப்பதிலும் படித்தோரிடம் கேட்பதிலும் பொழுதைக் கழிக்கவாரம்பித்தான். எவ்வளவு படித்தாலும் வாதம் செய்யும் திறமை ஏற்பட்டாலும் அனுபவ ஞானிகளின் உதவியாலன்றித் தத்துவத்தை உணர முடியுமா? அந்தணன் மனம் படிப்பாலும் கேள்வியாலும் திருப்தியடையவில்லை. ‘குள்ளச் சாமியை என்று காண்போம் உபதேசம் பெறுவோம்’ என்று துடித்துக்கொண்டிருந்தது,

இந்த நிலையில்தான் ஒருநாள் குள்ளச்சாமி அந்தணன் வீட்டினுள் தன் காலடிச் சத்தம் திடுதிடு எனக் கேட்கத் திடீர்ப் பிரவேசம் செய்தான். தான் வந்ததையும் கவனியாமல் குனிந்த வண்ணம் சுவடியைப் பார்த்து ஆலோசித்துக்கொண்டிருந்த அந்தணனின் எதிரே போய் நின்றான்; மேல் கூரையின் கீற்றிலிருந்து ஒரு ஓலையைக் கையால் இழுத்தான். அப்பொழுதுதான் குனிந்திருந்த அந்தணன் தலை நிமிர்ந்தான். ஆச்சரியமும் ஆனந்தமும் உள்ளத்தில் அடங்கவில்லை. உடனே விழுந்து சாமியைச் சாஷ்டாங்க வந்தனம் செய்து எழுந்து அன்போடு தழுவிக்கொள்ளப் போனான். சாமி நாலடிகள் நகர்ந்துபோய் நிற்கவே அந்தணன் அவனை நோக்கி நடக்க, சாமியும் சிறிது சிறிதாக விலக ஆரம்பித்தான். சாமியின் கைகளை அந்தணன் ஒரு தாவு தாவிப் போய் இறுகப் பிடித்துக்கொண்டு, 'எனக்கு உபதேசம் செய்யாமல் இப்பொழுது உம்மைப் போக விடமாட்டேன்' என்றான் குள்ளச்சாமி தன் கைகளைத் திமிறிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். அந்தணன் அவனை விடாமல் பின் தொடர்ந்து ஓடினான் பக்கத்தில் இடிந்து விழுந்த குட்டிச்சுவருக்குள் சாமி ஓடி ஒளிய முயன்றபோது அந்தணன் அவனை மறுபடி இறுகப் பிடித்து நிறுத்திவிட்டான். ஓடிவந்த களைப்பினால் தோன்றிய பெருமூச்சு இருவருக்கும் நிற்கவில்லை. பெருமூச்சினால் திணறிக்கொண்டே "உபதேசம் செய்து தானாகவேண்டும். ஏமாற்றி ஓட விடமாட்டேன்" என்றான் அந்தணன். ஓட யத்தனிப்பவன் போல் திருகத் திருக விழித்துக்கொண்டிருந்த குள்ளச்சாமி மனமிரங்கினான். உபதேசம் பெறுவதில் அந்தணனுக்கிருந்த ஆர்வத்தைப் பாராட்டி, உபதேசிப்பதற்காக அவனை ஒரு கிணற்றருகே அழைத்துச் சென்றான். குள்ளச்சாமியார் அங்கிருந்தபடியே ஆகாயத்தில் தெரியும் சூரியனை அந்தணனுக்குச் சுட்டிக் காட்டி உடனே கிணற்று நீரில் தெரியும் சூரியனின் பிரதிபிம்பத்தைக் காட்டினான். இரண்டையும் அந்தணன் பார்த்தபோது சாமி. அறிந்தாயோ?' என்றான். அந்தணனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. ஏன்? அறியாத காரணத்தால் அன்று; உபதேசத்தால் உணர்ந்த உண்மையில் லயித்துப் போனான். பரவச மிகுதியால் சிறிது நேரம் சென்றபின் தான் 'அறிந்தேன்' என்ற பதில் வந்தது. அத்தருணத்தில் உபதேசம் செய்த குரு எதிரே இல்லை எங்கோ சென்று அதற்குள் மறைந்து போய் விட்டான்.

உபதேசத்தால் உண்மையை உணர்ந்த சிஷ்யனால் உண்டான ஆனந்தத்தைத் தன்னுள்ளே அடக்க முடியவில்லை. ஆத்மானுபவத்திற்கு அடுத்தபடியாக உலகில் எல்லோரும் அனுபவித்து அறியலாகும் ஆனந்தம் கவிதானுபவம் என்று சொல்வதுண்டு. அதைத் தானும் அனுபவித்துப் பிறரையும் அனுபவிக்கச் செய்யும் கவித் திறம் வாய்ந்த சிஷ்யனால், உபதேசத்தால் தானுணர்ந்த ஆத்மானுபவத்தை வெளியிடாமல் இருக்க முடியுமா? குரு தனக்கு உபதேசித்த முறையை முதலாவது வெளியிடுகிறான்:

பரிதிகாட்டி அக்கணமே கிணற்றுள் அதன்
விம்பம் காட்டி அறிதி கொலோ?

[பரிதி—சூரியன்]

குள்ளச்சாமி கேட்ட இக் கேள்விக்குச் சாமான்ய சிஷ்யனாயிருந்திருந்தால் 'அறிந்தேன்' என்றுமாத்திரம் பதில் சொல்லியிருப்பான். உபதேசம் கேட்ட அந்தணன் மஹா கவி வர்க்கத்தைச் சேர்ந்தவன்; ஆதலால் உபதேசத்தால் உண்மை கண்டு ஆனந்த பரவசனான நிலையில் வெளிவரும் ஒவ்வொரு வார்த்தையிலும் பொருள் ஆழமும், உணர்ச்சியும், கவிதையும் நிறைந்திருக்கின்றன. பல ஆண்டுகள் பாடுபட்டு உழைத்ததன் பலனாக ஒரு உண்மையை விஞ்ஞானத்தில் கண்ட நிபுணன்கூட இவ்வளவு ஆனந்தத்தோடு பேச முடியாது. உலகினரை முன்னிலைப் படுத்தி அன்புடனும் ஆதரவுடனும் இத்தகைய செய்தியைத் தரவும் முடியாது.

வேதாந்த மரத்திலொரு வேரைக் கண்டேன்
செந்தமிழில் உலகத்தார்க்கு உணர்த்துகின்றேன்.

என்று கவி சொல்லும்போது 'உலகத்திற்கு என்ன செய்தி தரப்போகிறார்? அதை உடனே தெரிந்து கொள்ள வேண்டும்' என்ற ஆர்வம் நமக்கு ஏற்படுகிறது. செய்தி மிக விரிவாக விருக்கும் என்று தயங்க வேண்டியதுமில்லை. மிகச் சுருக்கமாகத் தாமுணர்ந்த உபதேசத்தைப் பிறரும் உணரவேண்டும் என்று இரண்டே வரிகளில் வெளியிடுகிறார்.

தேசுடைய பரிதியுருக் கிணற்றின் உள்ளே
தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக்
காண்பாய்.

[தேசு-ஒளி, பரிதி-சூரியன்.] குள்ளச்சாமியின் உபதேசத்தையும் சிஷ்யனாயிருந்து உபதேசம் பெற்று, கவி உலகினர்க்கு வெளியிடும் ஈரடியில் அடங்கிய பொருளையும் சேர்த்துச் சிந்தித்தால் 'தத்வம்' நன்கு விளங்கும்

உலகத்தில் உள்ளது ஒரே சூரியன் என்பது யாவருக்கும் தெரியும். சூரியனின் பிரதிபிம்பங்களை ஒரே சமயத்தில் கிணற்றிலும்

ஆற்றிலும் குளம் குட்டைகளிலும் கடலிலும் காணலாம். சென்னையில் நீதிமன்றத்துக்கு நேராக ஆகாயத்தில் ஒருவனுக்குத் தெரியும் சூரியன் அதே தருணத்தில் மற்ெருருவனுக்குக் காசியில் ஆலயத்தின் கோபுரத்திற்கு நேராக உச்சியில் தெரிகிறது. கிணற்று நீர் சலனமற்று இருப்பதால் அதனுள் அசைவின்றித் தெளிவாகக் காணப்படும் சூரியன் குளம் குட்டைகளுக்குள் நீரின் அசைவினால் தெளிவாகத்தெரிவதில்லை. சென்னையில் ஒளி குன்றாமல் பிரகாசிக்கும் சூரியின் காசியில் பார்க்கும் பொழுது மேகத்தால் மறைக்கப்பட்டு ஒளி குன்றியதுபோல் தோன்றலாம். அல்லது செறிந்த மேகப் படலங்களால் மறைக்கப்பட்டுத் தோன்றாமலும் இருக்கலாம். இத்தனை விதமான போலிச் சூரியன்கள் தோன்றுவதற்கெல்லாம் மூலகாரணமாயிருப்பது ஒரே சூரியன் தான். அதன் ஒன்றின் இரூப்பே உண்மை. மற்றவையெல்லாம் அதனுடைய போலி உருவங்கள்.

இவ்வாறே நம் உருவத்தின் பிரதிபிம்பங்களை ஒரே சமயத்தில் பல கண்ணாடிகளில் காணலாம். அக் கண்ணாடிகளை நேராகவும் சாய்வாகவும் வைப்பதற்குத் தகுந்தபடி நமது பிரதிபிம்பங்கள் ஒவ்வொரு கண்ணாடியிலும் பலவாகக் காணப்படும், பூதக்கண்ணாடிகளாயிருப்பின் நம்முருவம் பருத்தும் சிறுத்தும் விகாரமாய்ப் பிரதிபிம்பிக்கும், உள்ளதாகிய நம்முடைய ஒரே உருவம் பலவேறு உருவங்களாகப் பிரதிபிம்பித்துத் தோன்றுவதற்குக் காரணமாயிருப்பது, சூரியனைப் பலவாகக் காட்டும் நீர்போல, கண்ணாடியேயாகும்.

சிருஷ்டியும் இப்படியேதான் ஏற்படுகிறது. ஆதியந்தமற்று உருவத்தில் எல்லையற்றதாய், நிர்க்குணமாய், விகாரமின்றி நிற்கும் முதற்பொருளாகிய பிரும்மம் ஒன்றுதான் உண்மையானது. ஆற்று நீர், ஊற்று நீர், கடல் நீர், பொதுவாக நீரின் காரணமாகச் சூரியன் பலவாய் வேறுபாட்டுடன் தோன்றுகிறதல்லவா? அதே போல் மாயை அல்லது அஞ்ஞானம் காரணமாகப் பிரும்மம் அல்லது கடவுளே மரம், செடி, கொடி, மிருகம், பறவை, மீன், பாம்பு மனிதன் முதலிய ஜீவராசிகளாகவும் மண், விண், எரி, கால், நீர் முதலிய பஞ்ச பூதங்களாலாகிய உலகமாகவும் தோற்றுகிறது. நான், நீ, அவன், அல்லது அவள் என்று வியவகரிக்கும்படி பல்வேறு ஜீவன்களாகவும், ஒருவன் துன்பப்படும்பொழுது மற்ெருருவன் சுகப்படுவதாகவும் வேறுபாட்டுடனே பிரும்மத்தைக் காண்பதற்கு மாயையே காரணம். மாயை அகன்றுவிட்டால் தன்னை முன்னே ஜீவனாக வேறுபடுத்திக் கண்டவன் தானே எல்லாமாய் இருக்கின்ற பிரும்மமாய்க் காண்பன். கவி இந்த உண்மையைத்தான் குள்ளச்சாமியின் உபதேசத்தால் உணர்ந்தார். அதைத்தான் உலகினர்க்குச் சுருக்கமாக உவமைகாட்டி, உபதேசச் செய்தியாகத் தருகிறார். 'சூரியனின் பிரதிபிம்பத்தையே கிணற்று நீரில் காண்பதுபோல உன்னுள்ளே பிரும்மத்தையே (சிவத்தையே) ஜீவனாகத் தோன்றுவதாக அறிந்துகொள்வாய்! என்பதே கவி உலகினர்க்குத் தரும் செய்தி.

இவ்வுண்மையைக் கவி தன் வாழ்க்கையனுபவத்திலும் கொண்டுவந்தார். கவிகளில் ஏன் மனிதர்களில் எவருக்கும் இருக்கமுடியாத தீரமும் வீரமும் இக்கவிக்கு உண்டாயிற்று. அஞ்சாமையும் அன்பும் இவரது கவிகளுக்கே ஒரு புதிய சோபையையும் புத்துயிரையும் அளித்தன. 'உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும், நச்சை வாயிலேகொணர்ந்து நண்பர் ஊட்டுபோதிலும் அச்சமில்லை' என்று வேறு யாரால் பாடமுடியும்? 'எந்த நிலையிலும் எவற்றாலும் அழியாத தன்மை வாய்ந்த ஆத்மாவே நான்' என்று குள்ளச்சாமியின் உபதேசத்தால் அனுபவசித்தமாக உணர்ந்த தேசிய கவி சுப்ரமண்ய பாரதியால்தான் பாடமுடியும். அத்தகைய கவியினால்தான் தமிழ் இலக்கியத்திற்கு, ஏன் தமிழ் உலகிற்கே புதிய சகாப்தம் உண்டாயிற்று. எப்படி என்று கேட்கலாம். அதை அடுத்த இதழில் காணலாம்.

ஸ்ரீ. G. S. ஸன்யால் தமது உயர்தரப் படிப்புகளையும் ரேடியோ என்ஜினீரிங் சம்பந்தமான அனுபவப் பயிற்சியையும் முடித்துக் கொண்டு இம்மாத இறுதியில் இங்கிலாந்திலிருந்து திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இந்தியா (ரேடியோ) லிமிடெட்டில் ஐவருஷங்களுக்குமேல் வேலையில் இருந்த ஸ்ரீ G. S. ஸன்யால் கலாசாலை ஸ்காலர்ஷிப்பின் உதவியால் மேல்நாடு சென்றார். திரும்பி வந்ததும் அவர் கல்கத்தாவிலுள்ள I. R. P. (Radio) Ltd. என்ற கம்பெனியின் ஆராய்ச்சி இலாகாவில் (Research Dept.) சேர்ந்து சேவை புரிவார்.

* * *

சென்னை ஜீவான்ஜன் லாபரேடரீஸ் தயாரிக்கும் ஆயிண்ட்மெண்ட் (தைலம்) வரப்பெற்றோம். ஜலதோஷம், தலைவலி, முடக்குவலி மற்றும் சகலவிதமான வலிகளையும் குணப்படுத்துவதில் நிகரற்றதாக இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வைத்துக்கொள்ளலாம். பூரண விற்பனையாளர்கள்;—

K. K. பிள்ளை & கோ.,
15 வெஸ்ட்காட் ரோட்,
ராயப்பேட்டை, சென்னை–14

நமது சர்தார்

புராதன் பூச் — விசாகா நேமி குமார் மொழிபெயர்த்தது

பாரிஸ்டர் ஆனார்

வக்கீல் வேலை செய்தபோது வல்லபாயிடம் இங்கிலாந்திற்குப் போவதற்கு வேண்டிய செலவிற்குப் பணம் இருந்தது. அவர் கப்பல் கம்பெனிக்கு இங்கிலாந்திற்குச் செல்லக் கப்பல் எப்போது வரும் என்பதையும், அதற்கு வேண்டிய சாதனங்களுக்கு எல்லாவற்றையும் வேண்டி, கடிதம் எழுதினார். ஒருநாள் கடிதம் வந்தது: "நீங்கள் இங்கிலாந்து செல்லலாம். ஆனால் எப்போது வருகிறீர்கள் என்பதைத் தெரிவியுங்கள்."

இக் கடிதம் வல்லபாயின் தமையனுராகிய விட்டல்பாயின் கைக்கு வந்தது. அதனால் அவர் "முதலில் நான் பாரிஸ்டராகித் திரும்பி விடுகிறேன். பிறகு நீ போகலாம்" என்றார். அதன்பின் மூன்று வருடம் கழித்து, கி. பி. 1912-ல் வல்லபாய் பாரிஸ்டருக்குப் படிக்கக் கிளம்பினார். வல்லபாய் இங்கிலாந்தில் எந்த இடத்தில் வீடு வாங்கி இருந்தாரோ, அங்கிருந்து அவர் படிக்கப் போகவேண்டிய இடம் 'மிடில் டெம்பிள்" என்பது, 11 மைல் இருக்கும். அவர் தினமும் காலையில் 11 மைல் நடந்து கலாசாலைக்குப்போய், பயின்று வருவார். நடுப்பகலில் அங்குள்ள வேலைக்காரப்பையனைக் கூப்பிட்டு, ரொட்டியும் பாலும் வாங்கிச் சாப்பிடுவார். பிறகு கடைசியில் அந்தி வேளையாகி எல்லோரும் வீட்டிற்குப் போனாலும்கூட, இவர் தனிமையாகக் கற்பதிலேயே ஆழ்ந்திருப்பார். கடைசியில் அங்கு இருக்கும் வேலைக்காரன் எழுந்திருக்கச் சொல்லும்போதுதான் கற்பதில் ஈடுபட்டுள்ள வல்லபாய் எழுந்திருந்து போவார்.

இப்படியாக அவர் நாள்தோறும் பதினேழு மணி நேரம் வாசிப்பார். பரீட்சையில் முதலாவதாகத் தேறினார். அதனால் அவருக்கு 50 பவுனும், நான்கு மாதத்திற்கு ஆன சம்பளமும் தள்ளிக் கொடுக்கப்பட்டது. அந்தக் கலாசாலையிலிருந்த ஓர் ஆசிரியர் சீப்-ஜஸ்டிஸ் கோர்ட்டுக்கு "இந்த மாதிரி திறமையுள்ள மனிதனுக்குக் கோர்ட்டில் ஓர் உயர்ந்த பதவி கொடுக்கவேண்டும்" என்று எழுதினாராம்.

வைத்தியர்கள் ஆச்சரியமடைந்தனர்

இங்கிலாந்தில் சர்தார் படித்தபொழுது ஓர் சிநேகிதர் அவரைக் கேட்டார்: "வல்லபாய், காலில் என்ன ஏற்பட்டிருக்கின்றது?"

"அதுவா, நரம்புச் சிலந்தி ஏற்பட்டிருக்கின்றது"

"அதற்கு ஒன்றும் சிகித்சை செய்து கொள்ளவில்லையா?"

"ஆமாம். சாதாரணமாக வைத்தியம் செய்து வருகிறேன்."

"யாரிடமாவது இதைக் காண்பித்தீர்களா?"

"இரண்டு ஆங்கிலேய வைத்தியரிடம் காண்பித்தேன்; அவர்கள் முழுக்காலையே வெட்டும்படி சொல்லுகின்றார்கள்."

"அப்படியானால், நாம் ஓர் நல்ல ஜர்மன் வைத்தியரிடம் காண்பிக்கலாமே!"

வல்லபாய் சிறிது அலட்சியமாகவே அதற்குச் சம்மதித்தார். வல்லபாய் ஜர்மன் வைத்தியரை அடைந்தார். வைத்தியர் நரம்புச் சிலந்தியைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்.

"உங்களுக்கு வலிக்கவில்லையா?"

"வலிக்கிறது, ஆனால் ஆறிவிடும் என்ற தைரியம் மனதில் இருக்கிறது" வைத்தியர் கொஞ்ச நேரம் அதைப்பார்த்து, "நாம் அதை அறுத்து எடுத்துவிடலாமா" என்று கேட்டார்.

"அதில் எனக்கு ஒரு ஆட்சேபணையும் இல்லை"

வைத்தியர் ஆபரேஷன் செய்வதற்குரிய கருவிகளைக் கொண்டு வந்து வைத்தார். பிறகு வல்லபாய்க்கு மயக்க மருந்து கொடுக்க ஒரு சீசா கொண்டு வந்தார். அதனைக் கண்ட சர்தார் "எனக்கு ஒன்றும் மயக்க மருந்து வேண்டாம்" என்றார்.

"அய்யய்யோ, என்ன சொல்கிறீர்; இல்லாவிட்டால் உங்களால் வேதனை பொறுக்க முடியாது."

"அட, எல்லாம் பொறுக்க முடியும்."

பிறகு நிஜமாகவே வல்லபாய் மயக்க மருந்து இல்லாமலேயே ஆபரேஷன் செய்து கொண்டார். இதைக் கண்டு இங்கிலாந்தில் இருந்த பெரிய வைத்தியர்கள்கூட ஆச்சரியமடைந்தனர். பிறகு பாரிஸ்டர் பரீட்சையில் தேறிவிட்டார் என்று அறிந்தவுடன் மறுதினமே இந்தியாவிற்குப் புறப்பட்டு விட்டார்.

கர்நாடக சங்கீதம்

IV

லயபத்ததி

கலாதாஸன்

நமது ஸங்கீதத்திற்கு "ச்ருதிர் மாதா லய: பிதா" என்று கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். ராகபத்ததியைப் பற்றி நான் சொன்னபோது ச்ருதியைப் பற்றிச் சொன்னேன். ஒரு ஸ்தாயியில் உள்ள சிறிய இடைகளாகிய (Intervals) ச்ருதிகளைக்கொண்டு ஸ்வரஸ்தானங்கள் ஏற்படுத்தி, அவைகளைக்கொண்டு பல வித சேர்க்கையால் ராகங்கள் நிர்மிக்கப் பட்டன. ச்ருதிக்கு மாதாவினுடைய ஸ்தானம் கொடுத்தது மிகவும் பொருத்தமானது. தாய் அன்புடன் பாலூட்டிக் குழந்தையைப் போஷிப்பதுபோல் சுத்தமான ச்ருதியைக் கொண்டுதான் ஸங்கீதத்திற்குப் போஷணை ஏற்படுகிறது. இசைக்கு முக்ய ஆதாரமான போஷணம், சக்தி, சோபை எல்லாம் ச்ருதி சுத்தத்தினால்தான். தாயின் அன்பு மிகுதியால் செல்லம் அதிகமாகிக் குழந்தை கெட்டுப் போகாமல் இருப்பதற்குத் தகப்பன் சில நியதிகளை யேற்படுத்தி ஒரு கட்டுப்பாட்டைக்கொண்டுவருகிறான். அதனால் ஸ்வதந்திரம் குழந்தைக்குக் குறைவு படுவதுபோல் தோன்றினாலும், உண்மையில் நன்மைதான் ஏற்படுகிறது. அதனால்தான் லய: பிதா என்று சொல்லப்படுகிறது. ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளிருப்பதுதான் ஸங்கீதத்திற்கு முக்யமான லக்ஷணம், அழகு, பெருமை. லய கச்சிதமில்லாத ஸங்கீதம் ஒருபொழுதும் சிறக்காது.

லயம் என்ற பதத்திற்குப் பல பொருள்களுண்டு. ஸங்கீதஸம்பந்தமாக இரண்டு வித அர்த்தங்களுண்டு. லயமென்றால் தாளமென்று ஒரு அர்த்தம்; மற்றொன்று வாய்ப்பாட்டு, வாத்யம், நிருத்தியம் இம் மூன்றும் சேர்ந்ததென்பது. ஒரு நியமத்திற்குக் கொண்டு வருவது லயத்தின் குணம். "மனம் லயித்து விட்டது", "பக்தியில் லயித்து விட்டான்" என்று சொல்லும்போது உபயோகப்படுத்தும் லயம் இந்த க்ரம நியமத்தை ஸூசிப்பிக்கிறது. ஒரு கிரமப்படி உண்டாகும் நாதத்தால் மனோலயமேற்படுகிறதென்பது அனுபவ சித்தமான விஷயம். கடிகாரம் "டிக், டிக்" என்று அடிப்பது, புகை வண்டி செல்லும்போது "டடக், டடக்" என்று ஒலிப்பது முதலிய சப்தங்கள் ஒரு கிரமத்தை அனுசரித்தால் சிலபேர்களுக்குத் தூக்கத்தை விளைவிக்கும். ஊஞ்சலையோ, தொட்டிலையோ கிரமமாக ஆட்டினால் குழந்தைகள் தூங்கும். குழந்தைகளுக்குச் சந்தோஷம் அதிகமானால் தன்னையறியாமலே ஆட ஆரம்பிக்கும். அதில் ஒரு முறையைக் காணலாம். சாதாரணமாக மனதில் சந்தோஷம் பொங்கி வரும்போது அது வெளிப்படையாகச் சில கிரமப்படியுள்ள சேஷ்டைகளாக ரூபீகரிக்கும். அதுபோலவே கிரமப்படி ஒரு முறைக்குட்பட்ட தேக அசைவினால் மனதில் சந்தோஷமும், அமைதியும், லயமும் ஏற்படலாம். தாளத்தின் முக்யமான விசேஷமிதுதான். நடனத்தின் முக்ய விசேஷமுமிதுதான். அபிநயமென்பது வேறு. அபிநயமில்லாத ஸாதாரண சாரீரகமான நடனத்துக்குக்கூட ஆடுகிறவர்கள் அந்த ஆட்டத்தைப் பார்க்கிறவர்கள் இவர்களுடைய மனதை ஒரு வழிப்படுத்தச் சக்தியுண்டு. அதனால்தான் சிறு குழந்தைகளுக்கு நடனத்தில் பயிற்சி கொடுக்கவேண்டுமென்று சொல்லுவது. ஒரு Montessori பள்ளிக்கூடத்தில் நடந்த ஒரு ஸம்பவம் இங்கே குறிப்பிடத் தக்கது. ஒரு வகுப்பில் குழந்தைகள் மிக

வும் துஷ்டர்களாயிருந்தார்கள். என்ன சொன்னாலும் வழிக்கு வரக்காணோம். அந்த வகுப்பு உபாத்தியாயினி மிகவும் அனுபவமுள்ளவள், பல வழிகளில் அக் குழந்தைகளைச் சீர்திருத்தம் செய்ய முயன்றாள்; முடியவில்லை. கடைசியாக அந்த வகுப்புக்கு ஆடல் பாடல் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினாள். இதில் குழந்தைகளுக்குச் ருசி ஏற்பட ஏற்பட அவைகளுடைய முரட்டு ஸ்வபாவமே மாற்றமடைய ஆரம்பித்தது. கொஞ்ச காலத்தில் குழந்தைகள் ஸௌம்யமாகவும், மரியாதையுடனும் பழகத் தொடங்கினார்கள். குழந்தைகளின் ஸ்வபாவம் எவ்வளவு தூரம் சீர்திருத்தமடைந்திருக்கிறதென்பது தெளிவாகிறது. நடனத்துக்கு ஆதாரமாக இருக்கும் தாளக்ரமத்திற்கு இத்தகைய பெருங் குணமுண்டென்பதை அநேகர் கவனிப்பதில்லை.

தாள லக்ஷணங்களைப்பற்றி அதிகமாக நான் சொல்லப்போவதில்லை. ஸர்வலகுதான் தாளப்பிரஸ்தாரத்திற்கு ஆதாரமானது. அது சுத்தமாயில்லாமல் இருந்தால் லய கச்சிதம் ஒரு காலும் ஏற்படாது. நமது தாளங்களுக்கு ஆதாரமான அக்ஷரகாலம் ஸர்வலகுவைச் சார்ந்தது. சௌகர்யமாக ஒரு இடையை அக்ஷரகாலமாக நிர்ணயித்துக்கொண்டு பற்பல விதத்தில் லக்ஷணத்திற்குப் பொருந்த அவைகளைச் சேர்ப்பதால் பற்பல தாளங்களுண்டாகின்றன. ஸப்த தாளங்கள், அவைகளொவ்வொன்றிற்கும் 5 ஜாதிகள், ஆக மொத்தம் 35 தாளங்கள் என்பது எல்லோருமறிந்ததே. இந்தத் தாளங்களில் நடையை மாற்றுவதால் 175 தாளங்கள் ஏற்படும். 108 தாளங்களென்றும், 72 தாளங்களென்றும் பல மதங்களுண்டு. ஆனாலிந்த 35 தாளங்களிலேயே சிலவேதான் பிரசாரத்திலிருக்கின்றன. ஆனால் ஸங்கீத அப்யாஸம் பண்ணும்போது 35 தாளங்களுக்கும் அலங்காரங்கள் கற்க வேண்டியதவசியம்.

இந்த 35 தாளங்களைத்தவிர வேறு தாளங்களும் ஏற்படலாம். நமது ராக பத்ததியிலுட்படாத பல புது ராகங்கள் கற்பிக்கப்படலாம் அல்லவா. அதே மாதிரி புதிய புதிய தாளங்களும் கற்பிக்கப்படலாம். அருணகிரியார் தமது இணையற்ற திருப்புகழ் நூலில் நமது தாள சக்கிரத்தில் உட்படாத சில புதிய தாளங்களில் பாடல்களமைத்திருக்கிறார்கள். மிக அழகாகவுமிருக்கின்றன. சுவையும் கலையுணர்ச்சியைப் பெருக்கும் சக்தியும் இருக்குமானால் புதிய புதிய ராகங்களுமேற்படலாம், தாளங்களும் ஏற்படலாம். நமது தாள சக்கிரத்தில் உட்படாததும் அருணகிரிநாதர் உபயோகப் படுத்தியதுமான சில தாளங்களைக் கவனிப்போம். முதலில் 35 தாளங்ளிலும் படாத அக்ஷர காலங்களுடைய சிலவற்றை எடுத்துக்கொள்வோம். நமது 35 தாளங்கள் 29க்குமேல் அக்ஷர காலங்களுள்ளவையல்ல. மேலும், 15 அக்ஷர காலமுள்ளதோ, 19, 20, 26 முதலிய அக்ஷரங்களுள்ள தாளங்களோ நமது சக்கிரத்தில் கிடையாது. இத்தகைய தாளங்களில் திருப்புகழ்களிருக்கின்றன. 15 அக்ஷரங்களுள்ள தாளத்திற்கு உதாரணம்:

(i) 15 : 3—4—4—4

அளகபாரமலைந்து குலைந்திட
வதனம் வேர்வுதுலங்கி நலங்கிட
அவசமோகம் விளைந்து தளைந்திட,
அணைமீதே.

(ii) 15 : 3—3—4—5

தொந்திசரிய மயிரே வெளிற நிரை
தந்தமசைய முதுகே வளைய இதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர்
நகையாடி.

இதுபோல 19 அக்ஷரம், 20, 22, 26, 31, 40 அக்ஷரங்கள் உள்ள பல திருப்புகழ்களிருக்கிறன.

மேலும்இரண்டு வித தாளங்களைக் கலந்த திருப்புகழுமுண்டு; உதாரணம்:

36 : 4 X 5 + 2 X 8

(4 கண்டம், 2 இரட்டைச் சதுரச்ரம்)

அறுகுநுனிபனியனைய (10)
சிறிய துளி பெருகியொரு (10)
வாகமாகியோர் பாலரூபமாய் (16)

அருமதலை குதலைமொழி
தனிலுருகி யவருடைய

வாயிதாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட
மொளுமொளென உடல் வளர
வாரு மாருமாய் வாலரூபமாய்,
அவரொரு பெரியோராய்—

இன்னும் நமது தாளங்களின் அக்ஷர காலங்களையுடைத்தாயிருந்தாலும் அதனங்கங்களின் அமைப்பு வித்யாசத்தால் புதிய பாவமடைகிற தாளங்களுண்டு. உதாரணமாக, நமது தாள சக்கரத்தில் சில தாளங்கள் மொத்தத்தில் ஒரே அக்ஷரங்களுள்ளவை யானாலும் தாளங்கள் வெவ்வேறுதான்; அங்கங்களின் அமைப்பு வேறுபடும். கண்ட ஜாதி ஜம்ப, சதுரச் திரிபுட, திச்ரமட்யம் இந்தத் தாளங்கள் 8 அக்ஷரங்களை யுடையவைகளானாலும் அந்த அக்ஷரங்கள் பிரிக்கப்படுவது பேதப்படும்.

கண்டஜாதி ஜம்ப 5—1—2
சதுச்ரதிரிபுட 4—2—2
திச்ரமட்யம் 3—2—3

இந்தமாதிரி அங்க அமைப்பினால் நமது 35 தாளங்களிலிருந்து வித்யாசப்பட்ட தாளங்களிலும் திருப்புகழ்ப் பாடல்களுண்டு. உதாரணம்: நம்முடைய தாளச் சக்கிரத்தில் 11 அக்ஷரங்களுள்ள தாளங்கள் மிச்ரதிரிபுட, ஸங்கீர்ண ரூபகம், திச்ரத்ருவம் இவைகளே. இவைகளின் 11 அக்ஷரங்கள் 7—4, 9—2, 3-2-3-3 ஆக இருக்கின்றன. இந்த 11 அக்ஷரங்களை 4, 4, 3 ஆகப் பிரித்துள்ள திருப்புகழிருக்கிறது.

11 : 4—4—3

வடிவது நீலங் காட்டி
முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி
விடுபாசம்

மகனெடு மாமன் பாட்டி
முதலுற வோரும் கேட்டு
மதிகெட மாயந் தீட்டி
உயிர் போமுன்.

இந்தமாதிரி அங்கங்களி னமைப்பிலுள்ள வித்யாசத்தால் நமது 35 தாளங்களிலிருந்து வேறுபட்ட பல தாளங்களில் திருப்புகழ்ப் பாடல்களுண்டு.

தாள சம்பந்தமாக நாம் கவனிக்க வேண்டிய வேறு சில காரியங்களுண்டு. ராகபாவமென்று சொல்லுவது போல் தாளபாவமுமுண்டென்று கூறலாம். ஒரே கணக்கில் அக்ஷரங்களுடைய வெவ்வேறு தாளங்களின் பாவங்கள் வெவ்வேறுதான். சில சமயங்களிலிந்த விஷயத்தைக் கவனிக்காமல் ஒரு தாளத்திலமைக்கப் பெற்ற ஒரு பாட்டை அதே அக்ஷரங்களுடைய வேறு தாளத்தில் அமைப்பதுண்டு. உதாரணமாக, "ஸாரஸ தளநயன" என்ற தீக்ஷிதருடைய கமாஸ் ராக கீர்த்தனை சதுரச்ரஜம்பையில் அமைக்கப்பட்டது, 7 அக்ஷரங்களுள்ள தாளம். இதைச் சிலர் திச்ர திரிபுட தாளத்தில் பாடிக் கேட்டிருக்கிறேன். கேட்டால் இந்தத் தாளத்திலது அமையாது என்பது நன்கு விளங்கும். அது போலவே ஸ்ரீவேணுகோபால என்ற குறஞ்சி ராக கீர்த்தனையினமைப்பு திச்ர ரூபகத்தில்தான், ஜம்பை தாளமாக 10 அக்ஷரமெண்ணித் தாளமிட்டால் சரியான அமைப்பில்லை என்று அறியலாம்.

நான் கொஞ்ச காலத்திற்கு முன்பு "ஸ்ரீ கோபாலகிருஷ்ண தேவா தீனஜனாவன" என்ற ஒரு பாட்டு கிராமபோன் ரெகார்டில் கேட்க நேர்ந்தது. 14 அக்ஷரங்களில் அமைந்த தாளம். சிலரிதை திரிபுட தாளம்தானென்றார்கள். ஆனால், என் காதிற்கு அந்தத் தாளம் பொருத்தமாகத் தோன்றவில்லை. அடதாளமும் பொருந்தவில்லை. கவனித்துப் பார்த்தபோது சதுரச்ரத்ருவ தாளம்தான் நன்றாக அமைந்திருந்தது,

நமது தாளங்களில் ஆதி தாளம் மிகவும் பிரசாரமுள்ளது. சில பாட்டுகளுக்கு இதைத் தேசாதியாகப் போட வேண்டியதுண்டு. அப்படிச் செய்வது தான் பொருந்தும். "கலிநருலகு", "ராகஸுதாரஸ", "நனுபாலிம்ப" முதலிய உருப்படிகள் தேசாதியில்தானமைக்கப் பட்டிருக்கவேண்டும். நானிவைகளைத் தேசாதியில் பாடிக் கேட்டிருக்கிறேன். தேசாதியாகத் தாளம் போட்டால் பல்லவி சரியாக 3 தாள வட்டத்தில் நிற்கும். அப்படி யல்லாமல் கணக்கெண்ணி ஆதி தாளமாகப் போட்டால் 1½ ஆவர்த்தத்தில் பல்லவி முடியும். அதற்காக என்ன செய்கிறார்கள் என்றால்,

பல்லவியின் பின் பாகத்தை இரண்டு தடவையாகப் பாடி, அல்லது பாக்கியுள்ள அரை ஆவர்த்தத்தை அகாரங்கள் கொண்டு நிரப்பிப் பல சங்கதிகளைச் சேர்த்து தாள ஆவர்த்தத்தை முடிக்கிறார்கள்.

கடைசியாக ஒரு முக்யமான விஷயம். ஒரு ஸங்கீத க்ருதியினுடைய சோபைக்கு ராகம், தாளம், ஸாஹித்யம் இம் மூன்றும் பொருத்தமாக நன்கு அமைதல் வேண்டும். அதுபோலவே, கால ப்ரமாணமும் அமையவேண்டும். சில பாவங்களுக்குச் சவுக்ககாலம்தான் பொருந்தும். சில ராகங்கள் சில ரஸங்களை வெளிப்படுத்த உதவும், இவைகளையெல்லாம் நன்கு கவனித்தால்தான் ஸங்கீதத்தின் முழுப் பிரயோசனமேற்படும். அதே மாதிரி பாடுகிறவர்களுடைய சாரீரத்தை ஒட்டியோ, அல்லது வாசிக்கப்படுகிற வாத்யத்தை யனுசரித்தோ காலப்ரமாணத்தை நிர்ணயிக்க வேண்டும். வீணைக்குப் பொதுவாக உரியது சவுக்ககாலம், சில சமயங்களில் துரித காலத்தில் வாசிக்கலாம், ஆனால் அதற்கியற்கையில் பொருந்தினது சவுக்ககாலம்தான். அதே மாதிரி புல்லாங்குழலுக்கு இயற்கையில் பொருத்தமுள்ளது மத்யம காலம், துரித காலமும் நன்றாகப் பொருந்தும், நல்ல விருவிருப்பாயும் கணிப்பாயும் இருக்கும். புல்லாங்குழலில் வாசிக்கும் சவுக்ககால உருப்படிகள்கூட கொஞ்சம் காலம் தள்ளினால்தான் அழகுபடும். அதையே வீணையில் வாசிக்கும்போது கொஞ்சம் காலம் இழுத்தால் நன்றாக இருக்கும். அதுபோல, சில சாரீரங்கள் சௌக கால உருப்படிகளுக்கு ஏற்றவை, அதிக துரிதமான பிர்காக்களோ உருட்டல்களோ அவ்வளவு நன்றாகப் பேசாது. அப்படிப்பட்ட சங்கதிகளை அந்தச் சாரீரத்தில் எதிர்பார்க்கக் கூடாது. இது மாதிரியே சில பிர்கா சாரீரங்களில் அதிக சௌக கால உருப்படிகள் மிகவும் சௌகமாகப் பாடினால் சோபிக்காது, காலம்தள்ளித்தான் பாடவேண்டும். இப்படிக் காலப்பிரமாணத்தை ஒட்டின விஷயங்களில் கவனம் கொடுத்தால் பாட்டின் அழகு அதிகமாகிப் பாட்டு நன்றாகச் சோபிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நமது தாளங்களில் எல்லாவற்றிற்கும் ஒரு தனி பாவமும் அழகுமிருந்தாலும் 7 அக்ஷரமுள்ள மிச்ர நடைக்கு ஒரு தனிப் பெருமையிருப்பதாகத் தோன்றுகிறது. முதன் முதலில் இந்தத்தாளம்தான் ஜனங்களுக்கு விசேஷமாக இனிமையைக் கொடுத்து அதிக பிரசாரத்திலிருந்ததாகத் தெரிய வருகிறது. அநேக நாட்டுப் பாடல்கள் மிச்ர நடையிலமைக்கப் பட்டவைகள். "நந்தவனத்தில் ஓர் ஆண்டி," "காயமே பொய்யடா" முதலிய நாட்டுப் பாட்டுக்கள் மிச்ர நடையில் தான் அமைக்கப் பட்டிருக்கின்றன. காவடிச்சிந்துகளில் அநேகம் மிச்ர நடைதான்; உதாரணம்: "பூமி மெச்சிடும்", "செந்தின்மானகர்", "மஞ்சு நிகர்". பெரிய பதங்கள் அநேகமாகத் திரிபுடை தாளத்தில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ச்ருங்கார பரமானதோ பக்தி பரமானதோ உள்ள பாட்டுக்களைப் பொதுவாக மிச்ரத்திலோ திரிபுடையிலோ அமைத்தால் பொருத்தமுள்ளதாகத் தோன்றுகிறது. 7 என்கிற எண்ணிற்கே ஒரு தனி விசேஷ முண்டு. ஸப்த லோகம், ஸப்த ரிஷிகள், வாரத்தில் 7 நாட்கள், சந்திரனுடைய கதிக்ரமத்தில் 7 க்கு ஒரு தனி ஸ்தான முண்டு. 7 மன்வந்தரங்கள், 7 மனுக்கள், சில ரோகங்கள் 7 நாள், 14 நாள் 21நாள் கணக்கையொட்டி கூடியும் குறைந்தும் வருகின்றன; இப்படி ஏழைப் பின்பற்றியிருக்கின்றன. பொதுவாக 7 என்ற எண்ணுக்கே ஒரு தனித்த தன்மை யிருக்கிறது. அந்தப் பெருமை தாள பத்ததியிலும் இருக்குமோ என்னவோ, யார் கண்டார்கள்!

தொடர் கதை

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

இதுவரை நீங்கள் படித்தது:

பட்டண் அரசன் கர்ணதேவன் 'படுத்த படுக்கை' யாயிருக்கிறான். அவனைப் பார்க்க அவன் அண்ணன் மகன் தேவப்ரஸாதும் அவன் மகன் இளைஞன் திரிபுவனும் தேகஸ்தலம் விட்டு வருகின்றனர். தேவப்ரஸாத் தேகஸ்தல மண்டலத்தின் அதிபதி,

கர்ணதேவன் ஜைன மனைவியான ராணி மீனல்தேவி தன் மகனான ஜயதேவன் காலத்திலாவது பலம் வாய்ந்த குஜராத் ராணியாகவேண்டும் என்று விரும்புகிறாள். மந்திரியான முஞ்ஜாலுக்கும் அதுதான் விரதம். ஆனால் அதற்காக அவர் அவசரப்பட்டோ மதத்தின் பெயராலோ ஏதும் செய்யத் தயாராயில்லை,

இதற்கு எதிர்மாறான ஆவேசம் கொண்டவர் ஜைனயதி, ஆனந்தஸூரி, பட்டண் அரசியலில் மதப்பற்றின் சூட்டை ஏற்றி மதத்துக்குச் சாம்ராஜ்யம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் அவர் சிபாரிசுக் கடிதங்கள் கொண்டு சந்திராவதிவிட்டுப் பட்டண் வருகிறார். முஞ்ஜால் 'சந்திராவதிக் கடையை இங்கே அவிழ்க்க வேண்டாம்' என்று சொல்லி விடுகிறார். ஆனால் மீனல் ராணிக்குச் சந்திராவதி யதியின் வார்த்தை இதமாகப்பட்டது.

தேவப்ரஸாத் கர்ணதேவனைப் பிறரறியாமல் பார்க்க ராஜவைத்யர் லீலாதரருடைய மருமகனான வாசஸ்பதியின் உதவியை நாடுகிறான். அவனுடன் சென்று அரண்மனை மாடியறையில் மறைந்திருக்கும் போது ஆனந்த ஸூரியைச் சந்திக்கிறான். ஆனந்தஸூரி 'அபவாக்கு'ச் சொல்லுகிறார்.

இதற்குப் பிறகுதான் ஆனந்தஸூரி முஞ்ஜாலையும் ராணியையும் சந்திக்கிறார்; ராணி இஷ்டப்படி தேவப்ரஸாதின் மனைவி ஹம்ஸாவைப் பட்டணுக்கு வெளியே உள்ள ஜைன மடத்திலிருந்து அரண்மனைக்குக் கொணர்ந்து சேர்க்கிறார்.

தேவப்ரஸாதுக்குத் தன் மனைவி உயிருடன் இருப்பது தெரியாது. அவனிடமிருந்து வெகுநாள் முன்பே பிரிக்கப்பட்ட அவள் கொல்லப்பட்டே விட்டாள் என்று நம்பி வந்தான் ஆனால் இன்று அவன் மாலையில் பட்டண் வரும்போது அவளை மடத்தின் பக்கலில் ஓர் கல்லின்மேல் பார்த்தான்; மீண்டும் ஆனந்தஸூரியுடன் அரண்மனையில் நுழையும்போது அரைகுறையாகக் கண்ணில் பட்டாள். அவனுக்கு ஒரே பிரமையாகப் போய்விடுகிறது.

தந்தையுடன் வந்த திரிபுவன் தன் காதலி வீட்டுக்குச் செல்கிறான். மீனலின் சகோதரன் மகள் பிரஸன்னகுமாரி. அவனுக்கு "ஊடல்கொண்ட கடும் வரவேற்பு' அளிக்கிறாள். கோபம் குளிர்ந்ததும் இருவரும் சாமல்பாரஹட் என்ற கிழ வைதாலிகனிடம் செல்லுகின்றனர். அவன் மூலம் 'பிரஸன்னா மாளவதேச ராணியாவாள், இது மீனல் தேவியின் உத்தேசம்' என்று தெரியவருகிறது. திரிபுவன் ஆத்திரப்பட்டுக்

(ஹிந்திப்பிரதி பிரசுரகர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச்சார்ந்த க. ஸ்ரீ நாதுராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

கொண்டு தடுக்க முயலும் காதலியின் பேச்சையும் மீறி ஓடிவிடுகிறான்.

அங்கே வாசஸ்பதி உதவியால் தேவப்ரஸாத் கர்ணதேவனைப் பார்க்கிறான். லீலாதரரின் மருந்து கர்ணதேவனுக்குப் பேசும் சக்தியை அளிக்கிறது. சாகும் அரசன் அண்ணன் மகனை ஆசீர்வதித்து, ஜயதேவனுக்குத் தீங்குசெய்யாதே என்று வாக்கு வாங்கிக்கொண்டு, ஹம்ஸா உயிருடன் இருக்கிறாள் என்னும் விஷயத்தையும் சொல்லிவிடுகிறான். அதற்குள் ராணி அங்கே வர, அவன் மேலே சொல்லாமலேயே மயக்கம் அடைந்துவிடுகிறான். தேவப்ரஸாத் தூண்டப்பட்ட ஆசையுடன் சின்னம்மாவிடம் ஹம்ஸாவைப் பற்றிக் கேட்கிறான், அவள் மழுப்பிவிட்டு ராஜ்ய விவகாரம்பற்றிப் பேசுகிறாள். தேவப்ரஸாத் சேனாதிபதியாகலாம் என்று ஆசை காட்டுகிறாள். ஆனால் அவன் தன் சுதந்திரத்தையும் தன்னொத்த மண்டலாதிபதிகள் சுதந்திரத்தையும் அந்தப் பதவிக்குப் பணயம் வைக்கத் தயாரில்லை. கோபித்துக்கொண்டு போய்விடுகிறான்.

கிழ வைத்தியர் லீலாதரர் ராணியிடம் 'இந்தச் சிங்கத்துக்குக் கூடு செய்வது கஷ்டம்' என்று எச்சரித்து, பட்டண் சிம்மாசனத்துக்குக் களங்கம் ஏற்படக் கூடாது! என்று புத்திமதி சொல்கிறார்.

ராணி பதில் ஒன்றும் சொல்லவில்லை.

இனி மேலே படியுங்கள்

தந்தையும் தனயனும்

தேவப்ரஸாத் மனதில் பளுவுடன் வீட்டுக்கு வந்தான் கொஞ்ச நேரத்துக்குள் அவனுக்கு ராஜ்ஜியத்தைப் பற்றிய சங்கடம் எல்லாம் மறந்துவிட்டன. அவன் மூளையில் இந்த ஒரு வாக்கியம்தான் சுற்றிச் சுற்றி வந்து இடித்துக்கொண்டிருந்தது, ஹம்ஸா உயிருடன் இருக்கிறாள். ஆழ்ந்து யோசிக்கும் சக்தி அவனுக்குக் கிடையாது. இருந்ததும் தற்போது நசித்துவிட்டது. என்ன செய்வது என்று அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் மனதில் ஒன்றன் பின் ஒன்றாக எண்ணங்கள் எழுந்தன. கொஞ்சம் பழைய ஆசைகளும் சங்கல்பங்களும் பிறகு ஒரு முறை உயிர்த்து எழுந்தன. முதலில் அவன் தன் கண்களையும் சாகும் அரசன் வார்த்தைகளையும் நம்புவதா இல்லையா என்று சந்தேகப்பட்டான். அரசியல் கிளறலில் இது மிகவும் சரியான சந்தர்ப்பம். இந்தச் சமயத்தில் ஹம்ஸாவைப் பற்றிய உள்ளத்தை நெறிக்கும் எண்ணங்கள் அவன் தைரியத்தைக் குலைத்துவிட்டன. அவன் புத்தியும் கலங்கிவிட்டது.

அவன் பட்டண் நகரத்தில் ஒருவரும் அறியாமல் வந்திருந்தான் ஆதலால் பின் வாயிற்படி வழியாய் உள்ளே சென்றான்.

'ஜோராபர்! த்ரிபுவன் எங்கே?"

"மேலே உலாவிக் கொண்டிருக்கிறார், மகாராஜா!"

"தூங்கவில்லை, நேற்று முழுவதும் அலைந்து, களைத்திருப்பானே."

"இல்லை சர்க்கார், தூங்கவில்லையே!"

"சரி. ஒருவரிடமும் சொல்லாதே. வல்லபன் வந்தால் மட்டும் மேலே அனுப்பிவிடு."

மண்டலேசுவரன் மேலே சென்றான். அவன் இதய அரண்யத்தில் த்ரிபுவன்தான் தங்குமிடம். அவன் வருத்தத்துடன் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான்.

"ஏன் அப்பா தூங்க வில்லையா?"

"இல்லை, தூக்கம் வரவில்லை."

தந்தை தனயன் தோள்மேல் கைவைத்து, "அப்பா, இப்படிக் கவலைப்பட உனக்கு இன்னும் வயதாக வில்லையே!"

"அப்பா இது நம் இஷ்டப்படி நடக்கும் விஷயமில்லையே. அது போகட்டும். தாங்கள் அங்கே போயிருந்தீர்களே; அது என்ன ஆயிற்று."

இதயத்தை அசைத்துவரும் ஒரு பெருமூச்சுடன் மண்டலேசுவரன் சொன்னான்: "என்ன சொல்லுவேன்? துக்கத்துக்கு எல்லையையே காணோம்..." மண்டலேசுவரனின் கண்கள் நீருகுக்க ஆரம்பித்தன.

த்ரிபுவன் அப்பாவை அரவணைப்புடன் பார்த்து, "நீங்கள் என்னைக் குழந்தை என்று எண்ணி, என்னிடம் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறீர்கள். ஒவ்வொரு சமயம் என் இருதயம் உங்கள் துயர்க்கதையைக் கேட்டு முடிந்தவரை உதவி செய்யத் துடிக்கிறது. ஆனால் உங்களுக்குத்தான் இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை."

"நம்பிக்கை இல்லை என்பதில்லை. கண்ணே! உன் பூ இதயத்தில் எவ்வளவுதான் சுமத்துவது?"

"என்ன அப்பா, பதினாறு வயது நிறைந்த ஸோலங்கி வீரன் உலகத்தையே தனித்தெதிர்க்கமாட்டானா?"

மண்டலேசுவரன் பெருமிதம் விம்மச் சொன்னான்: "எனக்குத் தெரியுமப்பா, என் கண்மணியே! என் கண்ணெதிரே வளர்ந்து என் தவத்தைப் பூர்த்திசெய்தவனல்லவா நீ"

"பின் ஏன் என்னைத் தங்கள் துயரத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்?"

"சேர்த்துக்கொள்ளவா? என்ன லாபம்? நீ இந்த ராஜ்யத்தின் பின்னல்களை எல்லாம் அறிவாயா?"

'கொஞ்சம் கொஞ்சம் தெரியும், ஆனால் காரணம் என்ன என்று மட்டும் தெரியவில்லை."

"அந்தக் கதை மிகவும் பழையது அப்பா. நான் இதுவரை நீ வருத்தப்படுவாயே என்று எண்ணிச் சொல்லவில்லை. இன்று சொல்கிறேன், கேள்; பீமதேவனுக்கு அதாவது என் பாட்டனாருக்கு மூன்று பத்தினிகள். முதலவள் சிறு வயதிலேயே இறந்துவிட்டாள். அவள் புத்திரன் மூலராஜ தேவன் இறந்ததையும்தான் நீ அறிவாய். பீமதேவனின் இரண்டாம் மனைவி வகுளா தேவி என்ற வணிகப் பெண். அவளுடைய பையன்தான் என் தந்தை க்ஷேமராஜ். மூன்றாவது மனைவி உதயாமதி. அவள் மூலம் பிறந்த பிள்ளைதான் இன்று அரசாளும் கர்ணதேவ சித்தப்பா.

"என் அப்பா பெரியவராயிருந்தாலும் ஏன் அரசைத் துறந்தார் என்று நீ அறியாய் அல்லவா? அவர் புத்திமான்; தாம் சிம்மாசனம் ஏறினால் சிற்றரசர்கள் வெட்டிக்கொண்டு சாவார்கள் என்று தெரியும்,"

"அது எப்படி?"

"முஸ்லிம் அரசர்கள் படையெடுத்துவந்து சிலமாதங்கள் இங்கே அதிகாரம் செலுத்திய போது தேசமே சீர்குலைந்துவிட்டது. சிற்றரசர்கள் எல்லாரும் பயந்து ஒளிந்து திரிந்து கொண்டிருந்தார்கள்; பணக்காரர்கள் சொத்தையும் மனைவியையும் ஒளித்து வைத்துக் கொண்டு திரிந்தார்கள். கடைசியில் பீமதேவர் கந்தகோட்டையிலிருந்து வெளியே வந்தார். அவர் நடுங்கி ஒளிந்து கொண்டிருந்த சிற்றரசர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு உற்சாக மூட்டினார். ஜைனர்களும் பரதேசிகளின் அல்லலுக்குப் பயந்து என் பாட்டனார் பீமதேவனுக்குச் சகாயமாயிருந்தார்கள். தாத்தாவின் சேனை பட்டண் எல்லையில் வந்தவுடனேயே முஸ்லிம் அரசரின் உதவியாளர்கள் ஓடி விட்டார்கள். மறுபடியும் பட்டணில் ஸோலங்கிகளின் விஜய பேரிகை கொட்ட ஆரம்பித்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக "பாம்பு. மூஞ்சூறை" விழுங்கிவிட்டது!"

"அப்படி என்றால்?"

"இந்த முஞ்ஜாலின் சிறிய தந்தை விமல்ஷா நகரசேட். அவர் மூளையில் கோளாறு ஏற்பட்டது. அவர் தம்மைப் பீமதேவனைவிடச் சிறந்த வீரன் என்று எண்ணிக்கொண்டுவிட்டார்."

"விமல் மந்திரியின் வீரத்தைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்களே. அவர்தானே சந்திராவதி நகரம் ஏற்படுத்தியது."

"ஆம், ஆனால் அதற்குக் காரணம், சுய நலம் பொருந்திய வணிகர்களுக்கு நம் ராஜ்யம் பிடிக்கவில்லை. அவர்களுக்கு எங்கேயும் லேவாதேவிக்காரர்கள்தான் வேண்டும்."

"ஆனால் தாத்தா இதை எப்படிப் பொறுத்திருந்தார்?"

"என்ன செய்வது? ராஜ்யத்தின் நிலைமை சரியாயில்லை; பணமும் ஜைனர்களிடம்தான் இருந்தது."

"சிற்றரசர்கள் என்ன செய்தார்கள்?"

"அதில்தான் தாத்தா புத்தி கொஞ்சம் பிசகிவிட்டது. அவர் அவர்களின்மேல் அதிகாரம் செலுத்த முயன்றுகொண்டிருந்தார். அதனால் சிற்றரசர்களுக்கு அவரிடம் கோபம். அவர்கள் பலமும் பெருகியிருந்தது. பணக்காரர்களையும் கஷ்டப்பட்டு வசப்படுத்தி வைத்திருந்தார்கள். அதனால் அப்பா எண்ணினார்: நாம் சிம்மாசனம் ஏறினால் எல்லாச் சிற்றரசர்களும் தம்பி பக்கம் சேர்ந்துவிடுவார்கள். குஜராத்தில் வீணாக ரகளை ஏற்படும். அதைவிட வானப்ரஸ்தத்தை மேற்கொள்வதே மேல். ஆனால் சிற்றப்பா கர்ணதேவரோ அதைவிடப் பலம் குறைந்தவராகப் போய்விட்டார். ஜைன மந்திரிகளின் கைப்பொம்மையாக ஆகிவிட்டார். ஆனால் மீனல்தேவியின் மணம் நடக்கும் மட்டும் எல்லோரும் எனக்குக் கட்டுப்பட்டு இருந்தார்கள். ஆனால் பட்டணின் கெட்ட காலம் மீனல்தேவி வந்தாள். நகர்சேட் முஞ்ஜால் சிற்றப்பாவுக்கு மிகவும் வேண்டியவர், இப்பொழுது புது ராணிக்கும் வேண்டியவராய்விட்டார். பிறகு சிற்றரசர்கள் அதிகா

ரத்தைக் குலைக்க முயற்சிகள் செய்யப்பட்டன. இந்தச் சமயத்தில் நானும் அவர்களுக்கு விரோதி. நம்முடைய மண்டலம் மற்றெல்லாவற்றையும்விடப் பெரியது; அதிக அதிகாரம் உடையது. அது அந்த நிலைமையில் இருக்கும்வரையில் மற்ற சிற்றரசர்களின் மண்டலங்களை ஒன்றும் செய்யமுடியாது. என்றாலேதான் இன்று சிற்றரசர்கள் சுதந்திர புருஷர்களாக இருக்கிறார்கள். இன்று என்னையே அடிமையாக்கப் பிரயத்தினங்கள் நடக்கின்றன. ஆனால் பாவம் அவர்களுக்குத் தெரியாது; நான் சொல்லிக் கொடுக்கிறேன்; நான் இருக்கும் வரை, நம் பிரதேசம் தேஹஸ்தலத்தையோ சிற்றரசர்களையோ இவர்களால் நெருங்கக்கூட முடியாது. ராஜா பீமதேவன் செய்யமுடியாத காரியத்தை இந்தப் பனியாக்கள் செய்துவிட முடியுமா?"

"அது சரி. இவர்கள் என்னதான் செய்ய வேண்டுமென்கிறார்கள்?"

"சிற்றப்பா சாகவேண்டும்; பிறகுதான் தெரியும் எல்லாம். இதுவரையில் நான் தேஹஸ்தலத்திலேயே இருந்ததற்கும் சிற்றப்பாதான் காரணம். அவரிருக்கும்வரையில் பட்டண் அரசர் எனக்குப் பரமேசுவரன் மாதிரி."

"ஆனால், அப்பா, இதில் கவலைக்கிடமேது? வல்லபசேனனிடம்தான், 'சேனையை மேரள எல்லைக்குக் கொண்டுவந்து நிறுத்து' என்று சொல்லி வந்திருக்கிறீர்களே. தாங்கள் ஒரு வார்த்தை சொன்னால் குஜராத்தே பொங்கி எழுமே. மீனல்தேவி என்ன செய்யமுடியும்? தானே சரியாகிவிடுகிறாள்."

பேச்சிலேயே மண்டலேசுவரன் முகம் வியர்வை துளித்தது. அதைத் துடைத்துக் கொண்டு அவன் சொன்னான்: "இப்படி எண்ணித்தான் நானும் வந்தேன். ஆனால் இங்கே இன்னொரு சங்கடம் வழி மறிக்கிறது."

த்ரிபுவன் அவசரத்துடன், "அது என்ன, அப்பா?" என்று கேட்டான்.

தேவப்ரஸாத் பளு நிறைந்த மனதுடன் சொன்னான்: "இது உள்ளே எரிக்கும் துயரம். தோள் வலியால் தூரத் தள்ளத் தக்கதில்லை" தேவப்ரஸாத் மறுபடி மகன் தோளில் கை வைத்துக் கேட்டான்: "உனக்கு உன் அன்னை யார் என்று தெரியுமா?"

"ஆம். நகர் சேட் முஞ்ஜாலின் சகோதரி."

"ஆம். ஆனால் எங்கள் கலியாணம் விசித்திரமாக நடந்தது. அவள் சகோதரனும், தாயும் இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. யாரையும்கேட்காமல் அவளைத் தேஹஸ்தலத்துக்கு இட்டுச் சென்று மணந்துகொண்டேன். எங்கள் சந்தோஷமும் எல்லையற்று விளங்கிற்று......" தேவப்ரஸாத் இதயம் வெடித்து விடும் போன்ற குரலில் மேலே சொன்னான்:

"ஆனால் ஜைனர்களுக்கு என்னிடம் ஆத்திரம்; பொறாமை. நான் அவர்களை நசுக்கியிருந்தேன். அவர்கள் பழிவாங்கச் சமயம் பார்த்திருந்தார்கள். ஒரு தடவை வேட்டைக்குச் சென்று திரும்பினேன். வீட்டில் பார்த்தால், என்னுடைய ஹம்ஸாவைக் காணோம்"

"என்ன? என்ன நடந்தது?" த்ரிபுவன் கண்கள் கலங்கி நின்றன.

"என்ன நடந்ததோ, அறியேன். என் விரோதிகள் ஜயித்துவிட்டார்கள். என் திரு என்னைவிட்டு அகன்றுவிட்டாள்." மண்டலேசுவரன் நம்பிக்கை இழந்த குரலில் தலையை ஆட்டிச் சொன்னான்.

"தாங்கள் தேட வில்லையா? எங்கேதான் கொண்டு போயிருப்பார்கள்?"

"நான் சும்மா உட்கார்ந்திருப்பேனா? சிற்றப்பாவைக் கேட்டேன்; உன் மாமாவிடம் மன்றாடினேன், கையைக் காலை உதைத்துக் கொண்டேன். சல்லடை போட்டுச் சலித்தேன். வதந்தி பரவிற்று. என் ஹம்ஸா, குற்றமற்ற பூப்போன்ற சுகுமாரி. ஹம்ஸா அவர்கள் விரோதத் தீயில் கருகிவிட்டாள்."

"ஆனால் இதில் என்ன கெடுதல்? வகுளாதேவி, தாத்தாவைக் கலியாணம் செய்து கொள்ள வில்லையா? அவளும் வணிகப் பெண் தானே!"

"அது சமயம் வேறு. ஜைனர்கள் பலம் பெறாத காலம். இப்பொழுது அவர்கள் அதிகாரம் படைத்த அகங்காரம் கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள். நான் அவர்கள் முதல் நம்பர் விரோதியாயிற்றே!"

"ஆனால் அப்பா, எனக்கு இந்த ஜனங்கள் இவ்வளவு அநீதம் செய்து இருக்கிறார்கள் என்று தெரியவே இல்லையே! நான் குழந்தையில் பார்த்த என் தாய் இயற்கை யன்னையின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு இவ்வுலகை விட்டு வெளியேறி விட்டார்கள் என்றல்லவோ எண்ணியிருக்கிறேன்!"

தேவப்ரஸாத் பெரு மூச்சுடன் சொன்னான்: "உன் மாமா முஞ்ஜாலல்லவா எமன் போல் வந்தான்!"

"அப்பா! இதற்காகவா இவ்வளவு கவலைப் படுவது? நாம் முஞ்ஜாலுக்கு எமனாக முளைப்போம்."

"ஆனால், குழந்தாய்! கதை இங்கே முடிய வில்லையே!"

"ஏன்?"

தேவப்ரஸாத் விரம்பி வரும் தொண்டை யுடன் சொன்னான்: "அப்பா, உன் தாய் உயி ருடன் இருக்கிறாளடா."

"அப்பா, என்ன சொல்கிறீர்கள்?" த்ரிபு வன் இடிவிழுந்தவன்போல் திடுக்கிட்டுக் கேட்டான். பல்லை நெறித்து உருட்டி விழித்து அவன் தந்தையைப் பார்க்க ஆரம் பித்தான். அவன் இதயத்தில் இறந்த தாய்க் காக எழுந்த அலைகள் வெருண்டு புரள ஆரம்பித்தன.

"ஆம், த்ரிபுவன். நான் நேற்று இரவு இரண்டு முறை பார்த்தேன். ஒரு தடவை விமல்ஷாவின் ஜைன மடத்தில்......"

"ஓ! குதிரை வெருண்டதே, அப் பொழுதா?"

"ஆம், இரண்டாவது தடவையாக அரண் மனையில் மேல் வெளித் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தபோது. ஒரு கண நேரம் நான் அந்த திவ்ய ஜோதியைப் பார்த்தேன். ஆனால் ஒருகண நேரம்தான் த்ரிபுவன்! அதற்குள் அது மறைந்துவிட்டது." அவன் கண்கள் இப்பொழுதும் அந்த ஜோதியை ஆனந்திப் பது போல் ஒளித்து நின்றன.

"அப்பா, பிரமை இல்லையே!"

"நானும் அப்படித்தான் பயந்தேன். ஆனால் சிற்றப்பாவும்......................... சிற்றப்பாவா? "ஆம்! சாகும்போது அவரும் சொன்னார் ஹம்ஸம் ஜீவித்திருக்கிறாள் என்று. ஆனால் அந்தச் சமயம் சின்னம்மா வராமல் இருந்தால் இன்னும் கொஞ்சம் சொல்லியிருப் பார்."

"அப்படியானால் இதுவரை ஒளித்துவைத் திருக்கிறார்கள் என்று அர்த்தமா?"

"ஆமாம் பிறகு வேறு என்ன! இதுதான் என் துயரம். இப்பொழுது என்னசெய்வது?"

"என்ன செய்வது என்று என்னையா கேட்கிறீர்கள்? செய்வதற்கு ஒன்றுதான் இருக்கிறது. இது உண்மையானால் தாய்க் குச் செய்யப்படும் இந்த அநீதத்துக்குப் பழி வாங்க வேண்டியதுதான். தாயை விடுவிப் போம். இந்தச் சண்டாளர்களுக்கு என் தாயின் விரலைத் தொட்டால்கூட எவ்வளவு பூகம்பம் ஏற்படும் என்று காட்டிக் கொடுப் போம்."

"அது சரி, அவள் எங்கிருக்கிறாள் என்று யார் கண்டுபிடிப்பது?"

"ஏன்? ஜைன மடத்தில் இருக்கவேண்டும், அல்லது அரண்மனையில் அங்கேதானே பார்த்தீர்கள்?"

"ஆம். ஆனால் அரண்மனையில் தேடுவது என்ன சுலபமா? நான் சின்னம்மாவைக் கேட்டேன். அவர்கள் வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்ல மறுக்கிறார்கள்"

"ஏன் என்னதான் சொல்லுகிறார்கள்?"

"இது பிரமை என்கிறார்கள். ஒருகால் அவர்களுக்கே தெரியாதோ என்னவோ?"

"பிறகு யாருக்குத்தான் தெரியும்?"

"முஞ்ஜால் மீனல்தேவி வருமுன்னமேயே ஹம்ஸா தேவியை எடுத்துச் சென்றுவிட் டார்கள். ஆனால் ராஜாவுக்குத் தெரியும் போது அவர்கள் எப்படி அறியாமலிருக்க முடியும்? அதல்லவா புரியவில்லை."

"சின்னம்மாவை எப்படிக் கேட்பது, அப்பா? ஒருவழி இருக்கிறது, அனுமதி கொடுக்கிறீர்களா? செய்து பார்க்கிறேன். முஞ்ஜால் மாமாவுடன் நான் பேசியதே இல்லை. போய்ப் பார்க்கிறேன். என் பிரார்த் தனைக்கு மசிகிறாரா என்று"

"த்ரிபுவன், நீ அவரை அறியாய், அவரை வசப்படுத்துவது சுலபமில்லை."

"பார்க்கலாமே இதில் என்ன நஷ்டம்? அதிகம் போனால் இல்லை என்று சொல்லி விடுவார், அவ்வளவுதானே?"

"சரி, போய்ப் பார். ஆனால் நம்முடைய விரதத்துக்குப் பங்கம் வரக்கூடாது. சின் னம்மா என்னை ஆசை காட்டி மயக்க வந் தாள், அதேபோல் அவரும் உன்னை வலை யில் இழுக்க முற்படப் போகிறார்."

"இது சொல்ல வேண்டிய அவசியமில்லை. நான் இதோ திரும்பி வருகிறேன். ஜோராவர், எனக்கும் அப்பாவுக்கும் கை வாய் கழுவத் தண்ணீர் கொண்டுவா"

தண்ணீர் கொண்டு வந்த வேலைக்காரன் சமாசாரமும் கொண்டு வந்தான்: வல்லப சேன் ஆளனுப்பியிருந்தான்.

"என்ன சொல்லுகிறான்."

"வல்லபசேன் மேரளம், வரை வந்து விட்டாராம்."

"நல்லது செய்தான். குழந்தாய்: இதுவும் நல்ல சேதிதான். நீ சென்று வா. பிறகு பார்க்கலாம் என்ன ஆகிறதென்று."

சேனைவந்த செய்தி மண்டலேசுவரனின் வாடிய மனதில் கொஞ்சம் உத்ஸாகத்தை

ஊட்டியது. அவன் முஞ்ஜாலின் பலத்தைக் குறைக்க எண்ணினான். தானும் இங்கே இருந்து, வல்லபசேன் சேனையுடன் மேரளத்தில் இருப்பானானால், தேஹஸ்தலத்தில் சுதந்திரக்கொடி பறக்கும் வரையில் ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ணினான். இந்தச் சமயத்தில் தன்னை ஒருவரும் நெருங்கத் துணியமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தான். அதாவது கர்ணதேவன் சாவின் பின் ஏற்படும் அந்தக் குழப்ப நிலையைப் பயன் படுத்திக்கொண்டு பட்டணில் தன் அதிகாரத்தை நிலைநிறுத்த அவன் திட்டம் போட்டுக் கொண்டிருந்தான்.

மாமாவும் மருமகனும்

மாமாவைப் பார்க்கப் போகும்போது த்ரிபுவனுக்கு ஒரு படபடப்பு ஏற்பட்டது. இன்றுவரை அவன் அவருடன் பேசியதே இல்லை; பேசவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டதில்லை. அவர் பெயர் பெரிய பெரிய பேர் வழிகளைக்கூட அலறவைத்துக்கொண்டிருந்தது. த்ரிபுவன் பயப்படவில்லை. தன் தாய்க்கு நேர்ந்த கஷ்டங்களைக் கேட்டு அவன் இதயம் புண்பட்டிருந்தது; போக்கிரிகளுக்குத் தண்டனை கொடுக்க, அவன் கைகள் துடித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவன் தகப்பனை விட உலகம் அறிந்தவன். அவன் வேண்டுமென்றே தான் ஒன்றும் அறியாதவன் போலத் தந்தையிடம் நடந்துகொண்டு வந்தான். ஆனால் சியாமள பார்ஹட் மற்றவர்களிடமிருந்து அநேக விஷயங்கள் கேள்விப்பட்டிருந்தான். அவைகளுக்கேற்பச் சில முடிவுகளும் செய்து வைத்திருந்தான். இந்தச் சமயமும் அவன் பொங்கி எழுந்து ஆரவாரிக்கும் இதயத்தை ஒருவாறு அடக்கி அமர்த்திக் கொண்டு சென்றான். முஞ்ஜால் போன்ற பெரிய அரசியல் வாதியின் எதிரே நிலையிழப்பது அவமானமடைவதுதான் என்று அவன் கண்டிப்பாய் அறிந்திருந்தான்.

அவன் முஞ்ஜாலின் குமாஸ்தாக்கள் உட்காருமிடத்துக்குப் போய்ச் சேர்ந்தான். அவனைப் பார்த்த எல்லோரும் திடீரென்று ஒரு மோகினியைப் பார்த்தவர்கள் போல் ஆனார்கள். த்ரிபுவனின் இளமை, அவன் முகத்தில் அழகிய பவ்யமான கோடுகள், கண்களில் ஜோதி இவைகளைப் பார்த்து "இது யார், இது யார்" என்று கேட்கத் தொடங்கினர். சாதாரணமாக முஞ்ஜாலைப் பார்ப்பதற்கு இது சமயமில்லை. ஆனாலும் த்ரிபுவன் கேட்கும்போது மறுப்பதற்கு ஒருவருக்கும் தைரியம் ஏற்படவில்லை.

"தங்கள் பெயர்.........?"

"த்ரிபுவன் பால்சோலங்கி."

ஒரு மனிதன் தலையைத் தூக்கிப் பார்த்தான்; திடுக்கிட்டான். அடையாளம் புரிந்துகொண்டு சொன்னான்: "நில்லுங்கள், மகாராஜா! போய்ப் பார்த்து வருகிறேன், ஒருகால் மந்திரி வேலையாயிருக்கிறாரோ என்னவோ?"

"ஆம், ஒழிந்தபோது சொல்லி அனுப்பட்டும். அதுவரை இங்கேயே நிற்கிறேன்,"

குமாஸ்தா சென்று உடனே திரும்பி வந்தான்.

த்ரிபுவன் படபடப்புடன் போராடிக் கொண்டிருந்தான். அவன் உள்ளே சென்று உயர்ந்த ஆசனத்தில் அழகு பொருந்திய உடலையும் ஒளி பொருந்திய கூர்மையான கண்களையும் உடைய ஒரு பெரிய மனிதர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். முகத்தில் பொலிந்து விளங்கும் மரியாதையைக் கண்ட திரிபுவன் மாமாவை அடையாளம் கண்டுகொண்டு, 'மாமா என்னைத் தெரிகிறதா?' என்று கேட்டான்.

மந்திரியின் முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. அது ஒரு கண நேரத்துக்கு அவன்முகம் தத்திக் குதிக்கும் அன்புக்கும் தளதளக்கும் பதற்றத்துக்கும் இடம் தந்து உபசரித்தது. கையை நீட்டினான். அவர் கைகளையும் ஆட்டி வைத்தது அந்தச் சந்திப்பு உணர்ச்சி.

"யார்? ஹம்ஸா மகனா? த்ரிபுவனா?" கொஞ்சம் சுண்டிவிட்ட கம்பிக் குரலில் கேட்டார்.

த்ரிபுவன் மாமாவை நமஸ்கரித்துவிட்டு ஆசனத்துக்கருகே கீழே உட்கார்ந்தான்.

"மேலே உட்கார், குழந்தாய்! வா, உன்னைக் கொஞ்சம் நன்றாய்ப் பார்க்கிறேன். உன் முகத்தைக் கொஞ்சம் இப்படித் திருப்பு. முன்னே வா. வா இப்படி!"

த்ரிபுவன் ஆச்சரிய மடைந்தான். "என்ன? அன்பிலே நனைந்த இந்த உணர்ச்சி உள்ளம் படைத்த இவரா குரூரம் படைத்த மாமா" கொஞ்ச நேரம் இருவரும் சும்மா இருந்தார்கள்.

"நெடுநாள் கழித்துப் பார்க்கிறேனப்பா உன்னை!"

"ஒருவேளை முதல் தடவையே இதுதான் இல்லையா!"

த்ரிபுவனின் வார்த்தைகள் முஞ்ஜாலுக்கு மின்சாரம் ஊட்டின. த்ரிபுவனுக்கும்

எண்டா இப்படி குத்திக் காட்டினோம் என்று தோன்றிற்று.

"சரி குழந்தாய்! எதற்காக வந்திருக்கிறாய்" மந்திரியின் உணர்ச்சிவேகம் பொருந்திய குரல் தணிந்துவர ஆரம்பித்தது.

த்ரிபுவனுக்கும் எப்படி ஆரம்பிப்பது என்று புரியவில்லை. அதனால் எடுத்ததுமே "ஒரு பிச்சை கேட்க வந்திருக்கிறேன்." என்றான்.

"பிச்சையா? என் மருமகன் நான் வாழும் போதே—பிச்சையா?" முஞ்ஜால் கொஞ்சம் சிரித்தார்.

த்ரிபுவன் நடுங்கும் குரலில் மேலே சொன்னான்: "ஆம், மாமா! பிச்சை என்றாலும் சரி. வேறு பெயரிட்டு அழைத்தாலும் சரி. எனக்கு ஒரு வஸ்து வேண்டும் கொடுங்கள்."

"அது என்ன வஸ்து?"

"எனக்கு அம்மா வேண்டும்."

இதைக் கேட்டு வேறு யாராயிருந்தாலும் தூக்கிவாரிப் போட்டிருக்கும். ஆனால் முஞ்ஜால் முகத்தில் ஆச்சரியத்தின் உருவற்ற ஒரு மின்னல் எழுந்து உடனே மறைந்தது.

"நீ என்னவோ சொல்கிறாய்?"

"எல்லாம் சரியாய்த்தான் சொல்கிறேன். பதினேழு வருஷங்களாக என் வாழ்க்கை சுவையற்றுப் போய்விட்டது. அம்மா இல்லாமல் என்னால் இருக்கமுடியவில்லை. தயவு செய்து அவளைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்."

"குழந்தாய்!..." உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? அவள் எப்பொழுதோ கடவுள் திருவடிகளை........."

"மாமா, நீங்களும் என்னிடம் வஞ்சனை புரிகிறீர்களா? என் அம்மா உயிருடன் வாழ்கிறார்கள்."

"யார் சொன்னது?" முஞ்ஜால் அசைவற்ற கண்களைத் த்ரிபுவன் முகத்தில் நிறுத்திக் கேட்டார்; அவருடைய குரலில் ஒரு செயற்கைச் சாந்தம் இனிமை காட்டிற்று. என்றாலும் அவர் மூளை மிகவும் வேலை செய்கிறது என்று அவர் கண்களே காட்டிக் கொடுத்தன.

"யார் சொன்னதா? நான் சொல்லுகிறேன். பார்த்தவர்கள் அவர்களை நன்றாகப் பார்த்திருக்கிறார்கள். சொன்னவர்களும் உண்மையாகவே சொல்லியிருக்கிறார்கள்,"

"யார் பார்த்தார்கள், யார் சொன்னார்கள்?"

கண்களும் உள்ளமும் நனைய த்ரிபுவன் சொன்னான்: "மாமா, நீங்கள்கூட இப்படிச் செய்வீர்களா? மாமா! பிறந்தது முதல் நான் தாயாரின் குளிர்ந்த மடியை அனுபவித்ததேயில்லை. பெற்ற தாயின் அன்பினால் கனிந்த கண்களையும் ஒப்பற்ற மொழிகளையும் கேட்டதில்லை. உங்கள் இதயமும் கல்லல்ல. அழுது கண்ணீர் சிந்திப் பித்துப் பிடித்திருக்கும் ஒரு சிறு பையனிடம் தங்களுக்குத் தயவு வரவில்லையா? தங்கள் உள்ளத்தில் தங்கள் சகோதரிக்குக் கொஞ்சம்கூட இடமில்லையா? ஏன் போனார்கள் என்று நான் அறிய விரும்பவில்லை. ஆனால் இப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்தால் உங்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதம் அளிப்பார்கள்? தாய் தந்தை அவர்களை உங்கள் காலடியில் விட்டுச் சென்றார்கள். இன்று அந்த எளிய சகோதரியின் இந்தச் சிறிய ஆசையைக்கூடப் பூர்த்தி செய்யக்கூடாதா? ஆறு மாதம் நிரம்பாத ஆவல் நிறைந்த குழந்தையிடமிருந்து தாயைப் பிரித்து எடுத்துக்கொண்டு போனார்கள். பிறகு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளவேயில்லை. இன்று குழந்தை பெரியவனாய் விட்டான்; தாய் பார்த்தால் கண்கள் குளிர்வாள். நீங்கள் தங்கை மருமகனின் தீனக் குரலைச் செவி சாய்த்து ஏற்கமாட்டீர்களா? மாமா, பிரிந்து ஏங்கும் தாயையும் அழுது கதறும் சேயையும் ஒன்று சேர்த்து வைக்கமாட்டீர்களா?"

த்ரிபுவன் உள்ளம் கதறிற்று. முகம் கருணைக்கு வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருந்தது. எதிரே மந்திரி அசையாமல் கல்லைப்போல் உட்கார்ந்திருந்தார். கட்டின கைகளின் விரல் நுனிகள் சதையைத் துளைக்க முயன்று கொண்டிருந்தன. அதைத் தவிர இரக்கம் காட்டும் வேறு ஒரு அடையாளங்களும் அவரிடம் காணப்படவில்லை.

"குழந்தாய், ஏன் வீணாக அழுகிறாய்? நான் என்ன நினைத்ததைச் செய்து காட்டக் கடவுளா?" அவர் குரல் உணர்ச்சியற்று வறண்டு இருந்தது.

"இல்லை, ஆனால் நீங்கள் குஜராத் முற்றிலும் புகழும் முஞ்ஜால். தங்கள் சக்திக்கு அளவுமில்லை; வரையுமில்லை. நீங்கள் எதைத்தான் செய்ய முடியாது."

"குழந்தாய் நீ தெரியாமல் பேசுகிறாய்? சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள உனக்கு வயது போதாது. ஜயம்பெற்ற வீரனின் அதிகார கீர்த்திக்குப் பின் என்னென்ன தொந்தரவுப் பிளவுகள் மூடப்பட்டிருக்கின்றன என நீ அறியாய்? முகத்தின் புன் சிரிப்பு ரேகைகள் எவ்வளவு கண்ணீர்க் கோடுகளை மறைத்திருக்கின்றன, இதை எல்லாம் நீ எப்படி அறிந்து கொள்வாய்? நான் என் தங்கைக்கு உயிர் கொடுக்க முடியுமானால் இப்படி சும்மா உட்கார்ந்திருப்பேன் என்று எண்ணுகிறாயா? எனக்கும் என் தங்கை என் உயிரைவிட அதிகமானவள்தான். அவள்தான் என்னை ஏமாற்றிச் சென்றுவிட்டாள். நான் அவளுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை."

"அப்படியானால் அவர்கள் இறந்தே விட்டார்கள் என்றுதான் சொல்கிறீர்களா? அல்லது தங்கள் சக்தி புகத்தகாத விடத்தில் அவர்கள் சிறைப்பட்டிருக்கிறார்களா? தாங்களே இப்படிக் கண்ணீருகுத்தால் நான் என்ன செய்வேன்?"

"ஒன்றும் செய்ய முடியாது. அவள் எங்கே கிடைக்கப் போகிறாள்?" முஞ்ஜாலின் கண்களிலும் துக்கம் நீருரு எடுத்து வெளியேறிற்று.

"அப்படிச் சொல்லாதீர்கள், உண்மையைச் சொல்லுங்கள். அவர்கள் இந்த உலகத்திலில்லையா?"

"பின் என்ன? என் சகோதரியை விதி சதி செய்து விட்டது. இப்பொழுது அவளுக்குப் பிறந்த குழந்தையாவது எனக்குக் கிடைப்பானா? நான் சொன்னபடி கேட்பானா?" முஞ்ஜாலின் குரலில் வாத்ஸல்யம் நனைந்து வந்தது.

த்ரிபுவனுக்குச் சந்தேகம் தோன்றிக் கொண்டிருந்தது, "இது என்ன, தந்தையும் கர்ணதேவரும் பிரமையில் ஏமாந்துவிட்டார்களா?"

'த்ரிபுவனா! நீ என்னிடமே இருந்து விடேன்!" திடீரென்று கேட்டார் முஞ்ஜால்.

"த்ரிபுவன் திடுக்கிட்டுக் கேட்டான்: எதற்காக மாமா?"

"குழந்தாய்! நான் சந்ததியற்றவனாகி விட்டேன். உலகத்தில் எனக்கு வேறுவழியுமில்லை. உருண்டு செல்லும் நாட்கள் கிழத்தனத்தைக் கயிறு கட்டி இழுத்து வருகின்றன. என்னுடன் இரேன். என் இதயத்தைச் சுருட்டி எழும் ஆசைகளைப் பூர்த்தி செய்யேன்.!"

"மாமா, இது எப்படி முடியும்? முதலில் என் தந்தையைச் சமாதானம் செய்யுங்கள்."

முஞ்ஜாலின் உதடுகள் பல்லுக்கிடையே அமுங்கின. கண்கள் சுடர்விட்டன. "உன் தந்தை சமாதானத்துக்கு அனுப்பினாரா?"

த்ரிபுவன் கர்வ விம்மலில் தலை உயர மார்பு விரியச் சொன்னான்: "மண்டலேசுவரருக்குச் சமாதானப் பிச்சை கேட்கத் தெரியாதே! மாமா!"

முஞ்ஜால் மிகவும் இனிய குரலில் சொன்னார்: "த்ரிபுவன். நான் சொல்லும் இந்தச் சிறிய விஷயத்துக்கு மட்டும் ஒப்புக்கொள். பிறகு பார், உனக்குக் கிடைக்கும் நன்மைகளின் இன்பத்தில் தாயார் மறைந்த துக்கம் கூட மறைந்துவிடும்."

"அது எப்படி முடியும்? கற்பனை இன்பத்துக்காகத் தந்தையைத் தனியாக விட்டு வரவா?"

"மண்டலேசுவரர் தம் வேலையைத் தாமே செய்துகொள்வார். இங்கே உன்னைப்போன்றவர்களுக்குப் புகழும், பெருமையும், சம்பத்தும் காத்திருக்கின்றன"

"மேலே?"

"மேலே என்ன? கர்ணதேவ் இறந்த பிறகு உன் தந்தையின் நிலைமை இன்னும்



மோசமாகிவிடும். அங்கே உனக்கு ஒத்து வராது.''

''மாமா, அந்த நிலையைத் திருத்துவதோ, கெடுப்பதோ நீங்கள் எண்ணும் அவ்வளவு சுலபமில்லை. தேஹஸ்தலத்தின் கோட்டை குட்டிச் சுவராகிவிடவில்லை; அதிலுள்ள வீரர்கள் கையில் வளையணிந்து வாழவில்லை!''

''ஆனால் அங்கே ஒன்று மட்டுமில்லை''

''அது என்ன?''

''முஞ்ஜாலின் மூளைத் திறன்.''

''மாமா, மூளையை கடவுள் ஒருவருக்கு மட்டும் ஏகபோக உரிமையாக ஆக்கிவிடவில்லை''

''குழந்தாய், வீண் வார்த்தையாட நேரமில்லை. என் உள்ளம் உனக்காக வருந்திக் கொண்டிருக்கிறது. என் இடத்தை நீ பூர்த்தி செய்ய மறுத்தால் பிறகு யாரிருக்கிறார்கள்?''

''மாமா, ஆசை காட்டிப் பசப்புகிறீர்களா? நீங்கள் சொல்லுகிறபடி முஞ்ஜாலின் மூளை காரணமாகத்தான் பட்டண் என் தந்தைக்குத் திங்கு விளைக்கும் என்றால், நான் உங்களிடம் வந்து உட்கார்ந்துகொள்வேனா? நீங்கள் என்னை என்ன நினைக்கிறீர்கள்? தந்தையின் தாய்க்குச் சமமான அன்பில் வளர்ந்த தாயற்ற குழந்தைக்குக் கொடுமனமுள்ள நீங்கள் ராஜ்யமும் புகழும் சேர்த்து வைத்திருக்கிறீர்களா? மாமா! நன்று, நன்று! என்ன ஒரு பையன் இவ்வளவு கீழ்ப்பட்ட செய்ந்நன்றி கொன்றவனாக ஆகிவிடுவான் என்று எண்ணுகிறீர்களா? சிம்மம் போன்ற தந்தையை விட்டுவிட்டு, இந்த அரிய சந்தர்ப்பத்தில் தங்கள் குளிர்ந்த அழகிய மிருதுவான மடியில் வந்து அமர்வானா? இது என்ன நம்பிக்கை, மாமா? இங்கேமட்டும் தங்கள் மந்திரி—மூளை வெற்றியடையாது.

முஞ்ஜாலின் வாய் மூடியிருந்தது. காதுகள் மட்டும் தம் வேலையைச் செய்துகொண்டிருந்தன. சற்று நேரத்தில் அவர் முகம் கறுத்தது, ''உன் இஷ்டம். நான் உனக்கு நல்லதைத்தான் சொன்னேன்;''

''ஹம்ஸா தேவியைக் கொன்ற பாதகனிடம் அவள் மகன் வேறு என்ன எதிர்பார்க்கக் கூடும்?'' திரிபுவன் திரஸ்காரம் பொங்க எழுந்து நின்றான்.

முஞ்ஜால் கொஞ்சம் வேகம் இழந்த குரலில் சொன்னார்: ''பையா! உறுத்தும் மொழிகளை உபயோகிக்கும் கலையை நன்றாய்க் கற்றுக்கொண்டிருக்கிறாய்?''

''மாமா, வார்த்தைகள் எவ்வளவு கடுமையோ அவ்வளவு உண்மையுமாகும்? நீங்களும் சுகமாயில்லை; உங்கள் இதயமும், ஏனோ அழுதுகொண்டிருக்கிறது. அதை நீங்கள் மட்டும்தான் அறிவீர்கள். நான் போகிறேன். ஆனால் ஒரு எச்சரிக்கை. என் பிச்சையை மறுத்துவிட்டீர்கள். இதற்காக நீங்கள் பின்னால் வருந்த நேரிடும்''

த்ரிபுவன் ஒரு நமஸ்காரம் செய்துவிட்டு வெளியேறிவிட்டான்.

முஞ்ஜால் வெகு நேரம் வரை வாசற்படியையே பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு ஒரு பெருமூச்சு விட்டார், ஜனங்கள் அவரைத் தைரியசாலி என்றே அறிந்திருந்தனர். அநேகர் அவருக்கு இதயமும் உண்டா என்றே சந்தேகித்ததும் உண்டு. முஞ்ஜால் சால்வையின் ஓரத்தால் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்து அவ்விடத்தை விட்டு எழுந்தார். த்ரிபுவன் அவசரமாகப் படியிறங்கி வீட்டுக்குப் போகப் பல்லக்கில் ஏறிக்கொண்டிருந்த சமயம் ஒரு வேலைக்காரி வந்து தடுத்தாள்.

'த்ரிபுவன் அம்பினால் துளைத்த புண்ணை ஆற்றுவது எப்போது?'' என்று சொல்லிக்கொண்டே ஒரு அம்பை எதிரே நீட்டினாள். த்ரிபுவன் பார்த்தான்; அது அவனுடையதே தான். வில்லையும் அம்பையும் பிரஸன்னாவின் அறையில் விட்டு வந்திருந்தது ஞாபகம் வந்தது. அம்பின் முனையில் ஒரு துளி ரத்தமும் இருந்தது. பிரஸன்னாவின் ஞாபகம் வரவே அவளிடம் சென்று ஆசுவாசப்படுத்த வேண்டும் என்ற ஓர் ஆவல் சிறகடித்து எழுந்தது. ஆனால், யார் கண்டார்கள்? பிரஸன்னா யார்? இந்தச் சமயம் எப்படி மாறியிருக்கிறாளோ?!' அவன் தன் உள்ளத்தை அடக்கிக்கொண்டான்.

''தாஸீ, போய்ச்சொல்லு. மருந்து எங்கேயும் கிடைக்கும் என்று'' அவன் அம்பையும் இரண்டாயுடைத்துக் கையில் கொடுத்துவிட்டான்.

பிறகு மறுபடியும் பல்லக்கில் ஏறினான். அதே சமயம் அரண்மனையில் அழுகை அலறி எழ ஆரம்பித்தது. நான்கு பக்கங்களிலும் பேரிரைச்சல் எழுந்தது. த்ரிபுவன் உள்ளமும் குழம்பிற்று: கர்ணதேவ் ஸோலங்கி கண்ணை மூடிவிட்டார்.

(தொடரும்)

ரதம் வாங்கிய பலி

வேங்கடலட்சுமி பி. ஏ.

1

குன்றின் அடிவாரத்தில் வந்துவிட்டோம். அக் குளத்தையும் கண்டோம். ஜலம் நிறைந்து தளும்பிக்கொண்டிருந்த அச் சிறு குளத்தின் மேற்பரப்பு முழுதையும் பாசி படர்ந்து அடர்த்தியாக மூடிக் கொண்டிருந்தது. இடையிடையேயிருந்த வெளிகளில் அல்லியும் தாமரையும் கொடியிட்டுப் பின்னிப் பிணைந்திருந்தன. கரையின் ஓரமாக நெடுகவும் செழித்திருந்த செங்கழுநீர்த் தண்டுகளில் மலர்ந்திருந்த கணக்கற்ற மலர்களின் சுகந்தம் இலேசாகக்காற்றில் தவழ்ந்து போய்க் கொண்டிருந்தது. குளத்தின் நடுவே பாதிக்குமேல் இடிந்துபோயிருந்த நீராழி மண்டபத்தின் மேலும் விதவிதமான ஜல புஷ்பங்கள் மண்டிப் புஷ்பித்திருந்தன.—எங்கும் கணக்கற்ற வர்ண ஜாலங்கள்.

நாங்கள் அங்கே வந்து சேர்ந்தபொழுது காலை மணி எட்டுக்கு மேலிருக்கும். சூரியன் நன்றாய் மேலெழும்பிவிட்டான். பளீரென்ற அவன் கிரணங்கள் இயற்கைக்குப் பொன் மெருகிட்டு முலாம் பூசிக்கெண்டிருந்தன.

நானும் ரஞ்சனும் எங்களுடைய ஸைக்கிள்களை அங்கிருந்த மரத்தடியில் சார்த்தி வைத்துவிட்டு இளைப்பாறுவதற்காக நிழலில் துண்டை விரித்து உட்கார்ந்தோம். ரஞ்சன் சொன்னது நிஜம்தான்.

நைந்துபோய்ச் சாந்தியை யிழந்து தவித்த என் புண்பட்ட மனதுக்கு, அவ்விடத்தில் நிரம்பியிருந்த அமைதி ஆறுதலை அளிக்குமென வெண்ணிய என் அருமை நண்பன் ரஞ்சன் என்னை அங்கு அழைத்து வந்திருந்தான்.—உயிருக்குயிராயிருந்த என் இளமனைவி மைதிலி ஒரு மாதத்துக்கு முன்பு டில்லியில் பரவியிருந்த விஷ ஜ்வரத்துக்குப் பலியாகிவிட்டாள்.—பைத்தியம் கொண்டவன் போல் தவித்த என்னை ரஞ்சன் வந்து அழைத்துப்போய்விட்டான்.

அஸ்ஸாமூக்கப்பால் உருமாட் என்னும் சிற்றூரில் போஸ்டுமாஸ்டராயிருந்தான் அவன். மிகவும் அழகான ஊர் அது. தேவ நதியான பிரும்மபுத்திரையின் சிறு கிளையொன்று சம்பாவதி என்னும் பெயருடன் உருமாட்டைச் சுற்றி வளைத்து உத்தரீயமிட்டாற்போல் ஓடியமையால் வருஷ முழுதும் நீர் வசதிக்குக் குறைவில்லை. பச்சைப் பசேலென்று எங்கே பார்த்தாலும் பசுமை நிரம்பியிருக்கும் வயல் விரிப்புக்களும் அடர்ந்த கிச்சலித் தோட்டங்களும் ஊரைக் கப்பிக் கொண்டிருந்தன. தினம் ஓரிடமாக அழைத்துச் சென்றான் ரஞ்சன்.——அமைதியை விழைந்த என் உள்ளத்துக்கு உண்மையில் அமைதியுடன் சாந்தியும் கிடைத்தது.—ஆருத்துயரத்துக்கு உறைவிடமாயிருந்த என் உள்ளம் சிறிதளவு குளிர்ச்சிபெறத் தொடங்கியது. தத்தன் குன்று—என்னுமிடத்துக்கு மறுநாட்காலை என்னை அழைத்துப் போவதாக முதல் நாள் மாலை என்னிடம் தெரிவித்தான் ரஞ்சன். அத்துடனே நேர்த்தியான கதை ஒன்றுக்கும் அஸ்திவாரம் போட்டுவிட்டான். குன்றைப் பார்ப்பதைக்காட்டிலும் கதையைக் கேட்பதில் எனக்கு ஆவல் அதிகமாயிருந்தது.

ஆகவே மறுதினம் மிக அதிகாலையிலே நாங்கள் தேயிலைப்பானம் அருந்திவிட்டு ஊருக்கு வெளியே ஆறுமைலுக்கு அப்பாலிருந்த தத்தன் குன்றுக்குப் புறப்பட்டுவிட்டோம்.

2

“இதோ பார்த்தாயா, இந்த ரதத்தை. இதுதான் தத்தன் செதுக்கிய ரதம். அதோ அந்தப் பாறை மறைவில் மூன்று சிறிய சிலைகள், அவனுடையதும், அவன் மனைவி வஞ்சியுடைதும், தத்தன் மகனுடையதும்,” என்று தெரிவித்தான், ரஞ்சன்—குளக்கரையில் நின்றிருந்தோம் நாங்கள்.

ஆவலுடன் அருகே சென்று நோக்கிய எனக்குச் சிறிது ஏமாற்றமாயிருந்தது.—“இந்தச் சிறிய சிலை மட்டும் ஏன் இப்படிச் சிதைந்திருக்கிறது?” என்று என் நண்பனைக் கேட்டேன்.

ஆ!—அந்தச் சிலையின் கதையைத்தான் நான் இப்பொழுது கூறப்போகிறேன்”:—என்று சொல்லிவிட்டுக் கதையை ஆரம்பித்தான் ரஞ்சன்.

ஆர்யமன்னன் பிம்பஸாரனின் மகன் அஜாதசத்ரு அஸகாய சூரனாய்ப் பாடலீபுத்திரத்

தில் அரசாண்ட சமயம் அது.—ஆர்யமதத்தின் ஆணிவேராய்த் திகழ்ந்தான் அவன். அரண்மனையின் மண்டபங்களில் ஸம்ஸ்கிருத பண்டிதர்களும், புலவர் சிகாமணிகளும் குழுமி நின்று மன்னன் ஸன்னிதானத்திற்கு மங்காப் புகழைக் கொண்டு வந்தார்கள். ஆர்யமதம் தெற்கில் விந்தியத்திலிருந்து வடக்கே ஹிமாலயம்வரையிலும் பரவித் தழைத்தது.

அஜாதசத்ரு சிவபக்தன்—சக்தி உபாஸனையிலும் அவனுக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. தன் இஷ்ட தெய்வமான தேவி சாந்திதுர்க்கைக்கு அங்கங்கே நேர்த்தியான கோயில்கள் எழுப்பி, அவற்றில் கிரமம் தவறாமல் பூஜைகளும் உற்சவங்களும் நடத்தி வந்தான்.

நெடுநாட்கழித்து அவனுக்குப். பிறந்த மகளுக்குத் தான் வழிபடு தெய்வத்தின் நாமத்தையே சூட்டித் தன்னுடைய சந்தோஷத்தின் அறிகுறியாகச் சம்பாவதியின் கரையில் பிரும்மாண்டமான ஒரு ஆலயத்தையும் தேவிக்கு எழுப்பினான்.

ஆலயத்தின் அற்புதமான அமைப்பு அஜாதசத்ருவின் உள்ளத்தில் இன்னொரு ஆவலையும் எழுப்பியது. அத்துடன் அந்த ஆவல் உருவாகுமாவென்ற கவலையும் கூடவே எழுந்தது.

ஆவணித் திரு விழாவில் தேவியின் திருவுருவைத் தாங்கிப், பாடலீ புத்திரத்தின் பரந்த வீதிகளில் பவனி வரக்கூடிய அற்புதமான ரத மொன்றையும் நிர்மாணிக்க வேண்டுமென விரும்பியது அவன் உள்ளம்.—அதற்காக அனேகம் பெரியோர்களையும் மேதாவிகளையும் தன்னுடைய சபைக்கு வரவழைத்து அவர்களுடைய யோசனைகளைக் கேட்டான் அஜாத சத்ரு.

நேர்த்தியான மரத்தில் நிர்மாணிக்கலாமென அவர்கள் கூறினார்கள். ஆனால் மன்னனின் யோசனை அதற்கு நேர் மாறாகவிருந்தது.

நல்ல உறுதியான பாறையில் ரதத்தைச் செதுக்க வேண்டுமென விரும்பினான் அவன். யாவருக்கும் இது பெரிய வியப்பாயிருந்தது. கனவிலும் நடக்காத விஷயமல்லவா அது! பாறையில் செதுக்கிய ரதத்தை எப்படி நகர்த்த முடியும்? அற்புதமாகச் செதுக்கலாம்; ஆனால் அந்தக் கல்லில் செதுக்கிய ரதம் ஆவணித் திருவிழாவுக்கு உதவுமா? இக்கேள்விக்குப் பதில் கூற ஒருவராலும் முடியவில்லை.

ஆனால் மன்னனும் தன் எண்ணத்தைக் கைவிடவில்லை.

பாடலீபுத்திரத்தின் பரந்தவீதிகளில், தேவியின் திருவுருவைத் தாங்கி வேகத்தில் பவனி செல்லக்கூடிய கல் ரதத்தைச் செதுக்கமுடியுமென்றே நம்பினான் அஜாதசத்ரு.

கணக்கற்ற சிற்பிகள் நகரத்துக்கு வரவழைக்கப்பட்டார்கள். ஆனால் மன்னன் விரும்பியபடி கல் ரதத்தைச் செதுக்க ஒருவனாலும் முடியவில்லை.

நாட்கள் சென்றுகொண்டே யிருந்தன. ஆனி முடிந்து; ஆடி மாதமும் வந்துவிட்டது. ரதம் உற்பத்தியாகும் வகையை ஒருவராலும் கூறமுடியவில்லை. மன்னனுக்குத் தன் ஆவல் பூர்த்தியாகாதோவென்ற ஐயம் எழும்பியது. அத்துடன் சொல்லமுடியாத ஏக்கமும் அவனைப் பற்றலாயிற்று.

இந்நிலையில்தான் முடவனான சிற்பி மாயாதத்தனைக்குறித்து அஜாதசத்ருவிடம் யாரோ செய்தி எட்டவிட்டார்கள். உடனே அவனை அழைத்து வருமாறு உத்தரவிட்டான் அஜாதசத்ரு.

நகர எல்லையில், அகன்ற கிச்சிலித் தோப்பின் நிழலில், ஓரெளிய குடிசையில் வசித்து வந்தான் மாயாதத்தன். பிறவியிலேயே முடவனாயிருந்தும் மிகத் திறமை வாய்ந்த சிற்பியெனப் பெயர் வாங்கி யிருந்தான் அவன். விதம் விதமாகச் செதுக்கிய சிறியதும் பெரியதுமான சிலைகள் பல அவன் குடிசையைச் சுற்றியிருந்த மரத்தினடிகளிற் காணப்பட்டன. ஆனால் அவனுடைய எளிய குடிசையும் அதிலடங்கியிருந்த வறுமைச் சின்னங்களும் மாயாதத்தனிடம் தனலட்சுமியின் கடாக்ஷம் விழவில்லை யென்பதைக் காண்பித்தன.

தத்தனின் மனைவி வஞ்சியும், ஆறு வயதுடைய பாலனான அரவிந்தனுமே அவனுடைய குடும்பத்தினர். வஞ்சி மகா உத்தமி. அவளை மனைவியாகப் பெற்ற தத்தனின் வாழ்க்கை ஆனந்தமாகவே யிருந்தது.

மன்னனிடமிருந்து வந்த ஆட்களைக் கண்டு பேசினாள் வஞ்சி.— அவர்கள் கூறியது அவளுக்கு அதிசயமாகவே யிருந்தது.

"பாறையிற் செதுக்கிய ரதம்!—அதிலும் ஒரே பாறையில் குடைந்தெடுக்கப்பட வேண்டும்!—வாயு வேகத்தில் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும்—அதெப்படி முடியும்?"

தத்தனிடம் விஷயத்தைத் தெரிவித்தாள். தத்தன் தயங்கவில்லை. ஆவணித் திருவிழாவுக்குள்ளாக ரதத்தைத் தயார் செய்துவிடுவதாக உறுதி கூறினான்.

அரசனின் ஆனந்ததுக்கு அளவேயில்லை.— கடைசியில் தன் ஆவல் பூர்த்தியாகுமெனக் குதூகலித்தான்.

தத்தனுக்கு வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்பட்டன.

தன் குடிசையின் அருகிலேயே, தழைத்துப் பரவிய கிச்சிலி மரங்களின் நிழலில், ஒரு நல்ல நாளில் வேலையைத் துவக்கினான் தத்தன்.

அரசன் அடிக்கடி வந்து பார்த்துக்கொண்டிருந்தான். வேலை துரிதமாக நடந்து கொண்டிருந்தது. சூரியோதயத்திலிருந்து இருள் கவியும் வரையில் பட் பட்டென்று தத்தன் கைச்சுத்தியலின் சப்தம் அவ்விடத்தில் எதிரொலி செய்யலாயிற்று.

தகப்பன் வேலை செய்யுமிடத்தில், கை நிரம்ப அள்ளி வரும் சிறு கற் குவியல்களுடன், குதூகலித்துக் குதித்து விளையாடுவான் குழந்தை அரவிந்தன்.—வேலை நடுவே பாலனின் கலீரென்ற சிரிப்பும், அடிக்கடி தன் கழுத்தைச் சுற்றித் தழுவும் மெத்தென்ற சிறு கரங்களும் மாயாதத்தனின் மனதுக்கு அளவற்ற சாந்தியைக் கொடுத்தன. பதினைந்து தினங்களில் ரதத்தின் உட்புறம் அமைந்துவிட்டது. இனிமேல் வெளிவேலையைத் துவக்க வேண்டியதுதான். அதையும் செதுக்கத் துவங்கிவிட்டான். ரதம் உருவாக உருவாகத் தத்தன் மனைவியான வஞ்சியின் மனதில் ஒரு வகையான சிறு கலக்கம் தலையெடுக்கலாயிற்று.

மற்றவர்களால் செய்யமுடியாத ஒரு பணியைத் தன் கணவன் செய்வதில் அவளுக்கு அளவற்ற பெருமிதம். ஆனால் அத்துடன் கூட, அசாத்தியமான ஒரு வேலையைச் செய்து முடித்தால் ஏதாகிலும் உத்பாதம் நேரிடக்கூடும் என்ற சிறு திகிலும் தோன்றியது. சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

அதற்கு உறையேற்றுவதுபோல், அரண்மனைச்சிற்பியான அம்பலதத்தனின் தாயான சோகாயி மாயாதத்தனின் ரதத்தைப் பார்க்க வந்தவள், அங்கிருந்து போகும் பொழுது வஞ்சியின் செவிகளில் இரகசியமாக, ‘அடி பெண்ணே! தத்தனின் புத்தி இப்படிப்போனால் நீயும் அதற்கு அனுசரணையாக இருக்கணுமா? துர்க்கைக்குப் பிரீதியாக ரதம் செய்வதே சிரமமான காரியம்; அதிலும் கல்லிற் செதுக்கவேண்டிய ரதம்,—அதிலும் பவனி வரக்கூடிய ரதம்;......வஞ்சி! ......என்னுடைய வார்த்தையை நம்பு;...... இந்தக் கல்ரதம் இங்கிருந்து நகரவேண்டுமானால் நல்ல பலியாக ஒன்று வாங்காமல் போகாது. நான் வயதான கிழவி. இம்மாதிரி ஒன்றிரண்டு நான் பார்த்திருக்கிறேன். தத்தன் இப் பணியை ஏற்றுக்கொண்டதே பிசகு,'' என்று நெருப்பை வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

வஞ்சியின் மனது சஞ்சலத்தில் ஆழ்ந்தது. இரண்டு மூன்று நாள் தன்னந் தனியே யோசித்துப் பார்த்த பின்பு, கிழவி கூறிய விஷயத்தைக் கணவனிடம் தெரிவித்தாள் வஞ்சி.

தத்தன், ‘‘வஞ்சி! இதெல்லாம், நான் இவ் வேலையைச் செய்து முடிக்காமலிருப்பதற்காக அம்பல தத்தன் கட்டிவிட்டிருக்கும் கதை. அரசன் சன்னிதானத்தில் என்னைப் போன்ற ஒரு முடவன் பெருமையடைவது அவனுக்குச் சம்மதமில்லை. இந்த ரதத்தை நான் செதுக்கி முடித்துவிட்டால் எத்தனையோ வருஷங்களாக அஜாத சத்ருவின் அரண்மனைச் சிற்பியாயிருக்கும் அவன் பெருமைக்கு இழுக்கல்லவா?......ஆகவே என்னை இப்பணியினின்றும் தடுப்பதற்காகத் தன் தாயை ஏவி விட்டிருக்கிறான். வஞ்சி!......... நீ கவலைப்படாதே!.........துர்க்கை நம்மைக் காப்பாற்றுவாள்'' என்று அவளைச் சமாதானப்படுத்திவிட்டு மீண்டும் சுத்தியலைக் கையிலெடுத்தான் மாயாதத்தன்.

ஆனால் வஞ்சியின் மனம் அமைதிபெறவில்லை. தத்தனின் கைச்சுத்தியலின் பட்பட்டென்ற சத்தம் கேட்கும் போதெல்லாம் அவளுடைய ஹ்ருதயத்தின் ஒரு மூலைவிண்டு போவது போன்ற பயம் கலந்த கற்பனையையுணரலானாள் அவள். ஆழ்ந்த நிசப்தமான இரவுகளில் அருகே கிடக்கும் பாலனும் கணவனும் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் போது, வஞ்சியின் மையுண்ட விழிகள் மட்டும் நித்திரையில் அமைதியுறாமல் அகல விழித்துக் கொண்டிருந்தன. அருகே கிடந்த அருமைப் பாலனை ஆவலுடன் அணைத்து அவ்வணைப்பில் அமைதியைக் கண்டாள் அவள்.

* * *

சுக்லபட்சத்து ஸப்தமி. அன்று மாலையில் தான் தேவியின் உருவைத் தாங்கி மாயாதத்தனின் அற்புத ரதம் பாடலீபுத்திரத்தின் வீதிகளில் பவனிவருதாயிருந்தது. வானவீதியில் அகன்ற வெள்ளிக் கீற்றுப் போன்ற மதியின் ரேகைகள் அமுதம் பொழிந்து கொண்டிருந்தன. நகர் முழுவதும் பலவர்ண தீபாலங்காரம்.

விதம்விதமான உடையலங்காரங்களுடன் நகர மாந்தர் சாந்தி துர்க்கையின் கோயி

விற் குழுமியிருந்தனர். நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட தேவியின் உருவம் அற்புதமாக அமைந்திருந்த மாயா தத்தனின் கல்ரதத்தில் வைக்கப்பட்டது. அரசன் அஜாதசத்ருவுடன் அரண்மனையினர் யாவரும் ரதத்தருகில் நின்றிருந்தனர். மன்னனுக்கு மட்டற்ற களிப்பு.

ரதம் கோயிலிலிருந்து கிளம்பியதும் வாரி வழங்குவதற்காகப் பெரிய அண்டாக்களில் பொன்னும் வெள்ளியும் வாரிவைக்கப்பட்டிருந்தன.

ரதத்தின் அருகே நின்ற சிற்பிகள் அதன் நுணுக்கமான வேலைப்பாடுகளையும், அற்புதமான இழைப்புக்களையும் பார்த்துப் பார்த்து வியந்தனர். ரதம் புறப்படுவதற்கான சுபவேளை நெருங்கியது. வடம்பிடித்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆவலுடன் வடத்தையிழுக்கத் தயாராயினர். ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்த தத்தனருகில் நின்றிருந்தாள் வஞ்சி. அவளருகே நின்றிருந்த குழந்தை அரவிந்தன், நாற்புறமும் மின்னிய மணி விளக்குகளையும், குதூகலித்துக் களித்த ஜனக்கூட்டத்தையும், அக்கூட்டத்திலிருந்து எழும்பி அண்ட முகட்டையெட்டிய ஆரவாரத்தையும் கண்டு, அளவற்ற உற்சாகத்துடன் கைகொட்டிக் களித்துக் கொண்டிருந்தான்.

இவ்வளவு குதூகலத்துள்ளும் பேதை வஞ்சியின் மனம் மட்டும் இன்னதென்று விவரிக்கமுடியாத ஆழ்ந்த கலக்கத்துக்குட்பட்டிருந்தது. வெளுத்த முகத்துடன் "தேவி! ஒன்றும் உத்பாதம் நேரிடாமல் ரதம் புறப்பட வேண்டுமே!" என வேண்டிக்கொண்டிருந்தாள் அவள்.

அருகே நின்றிருந்த அம்பல தத்தனின் செவிகளில் ஏதோ கூறினான் அரசன். அவன் புன்சிரிப்புடன் தலையசைத்தான். ரதம் புறப்படும் வேளை வந்துவிட்டது. மன்னனின் உத்தரவும் ஆகிவிட்டது.

மனதிற் பொங்கும் உவகை முகத்திற் பிரதிபலிக்க மனைவியின் கையைப் பற்றியபடி, தன் கையின் அற்புதமான திறமையினால் உருவாகியிருக்கும் ரதத்தைப் பார்த்து வியந்தான் மாயா தத்தன். அவன் உள்ளம் களியிற் கொந்தளித்தது.

மன்னன் கையால் தேர்வடம் முதலில் இழுக்கப்பட வேண்டும் என்பது ஐதிகம். அதையொட்டி, வடத்தைக் கையால் தொட்டான் அஜாதசத்ரு. அரைக்கணத்துக்கெல்லாம் ஆயிரக் கணக்கான பலம் கொண்ட கரங்கள் தேர்வடம் பற்றியிழுத்தன.

ஐந்து, பத்து என விநாடிகள் சென்றன; ரதம் அசையவில்லை.

மன்னன் மனதில் ஒரு கலக்கம். அது மற்றையோர் முகத்திலும் பிரதிபலித்தது. சிற்பி அம்பல தத்தனின் மனதில் மட்டும் ஒரு எல்லையற்ற எக்களிப்பு! சமீபத்தில் உட்கார்ந்திருந்த முடவனை ஒரு வகையான வெற்றிக் குறியுடன் பார்த்தான். தத்தன் முகம் பாறையிற் செதுக்கியது போன்றிருந்தது.

ஹூம்!...... ஹூம்!...... என்ற ஹூங்கார சப்தத்துடன் ரதம் இழுப்போரின் சக்தியும் சேர்ந்து தேர்ப்புரியைப் பற்றியிழுத்தன.

இம்மியளவும் அசைந்துகொடுக்கவில்லை ரதம். அளவற்ற ஏமாற்றமும் வருத்தமும் எல்லார் முகத்திலும் நிழலாடியது.

மனம் சோர்ந்துபோனான் மன்னன். 'என்ன காரணம்? என்ன காரணம்?' என்ற கேள்வி ஆயிரக் கணக்கான உள்ளங்களில் எழுந்தது. ஆயினும் அதை வாய்விட்டுக் கேட்க ஒருவருக்கும் துணிவில்லை.

மீண்டும் ஒரு யத்தனம். ரதம் அசையவில்லை. ஒரு கணம் எங்கேயோ, ஏதோ முறிவதுபோன்ற மளமள வென்ற ஓசை, அதைத் தொடர்ந்து எங்கோ ஓரிடத்திலிருந்து கிரீச்சென்ற ஒரு பெண்ணின் அலறல்......

"ஐயோ! ஐயோ!........."

ரதம் மளமளவென்று வீதியில் உருண்டது ...... அதன் கற்சக்கரங்களுக்கடியில் உருத்தெரியாமல் சிதைந்துபோன பாலனின் உருவமொன்று. யார் அது?...... ஐயோ அரவிந்தன்!...... மாயா தத்தனின் மகன்!...... உற்சாக மிகுதியால் ஓடிவந்த பாலன் கால் தடுக்கிச் சக்கரத்தினடியில் விழுந்தான். அதே விநாடியில் கடகடவென உருண்டன கல் சக்கரங்கள்.

அவ்வளவுதான்;...... ரதம் பலி வாங்கிவிட்டது......!... ஓவென்று அலறியபடியே தத்தன் மடியில் மூர்ச்சித்துவிட்டாள் வஞ்சி.

* * *

மீண்டும் கிச்சிலித் தோட்டத்தின் நிழலில் தத்தனின் உளியின் ஓசை கேட்கலாயிற்று. பைத்தியக்காரனைப் போல் வேலை செய்தான் அவன். வெறிகொண்ட அவன் கைச்சுத்தியல் பாறையில் விண் விண்ணென்று விழுந்தது. இம்முறை அவன் செதுக்கியது மூன்று உருவங்கள். ஒன்று ஆண்; ஒன்று பெண்; மற்றொன்று பாலன். —தத்தன், வஞ்சி, அரவிந்தன்.

சிறிய அவ்வுரு, சிதைந்துபோன மாதிரியில் அமைக்கப்பட்டது, ஏன்?...... ரதத்தின் உருளையில் பலியாக விழுந்த பாலனைப்போல்...

சில நாட்களுக்கெல்லாம் மாளாத் துயரத்தில் மடிந்தாள் வஞ்சி.

வெறிகொண்டவன் போன்ற முடவனை மாயாதத்தனும் அவளையடுத்து மரணமடைந்தான். இக் குளக்கரையில்தான் அவனை அடக்கம் செய்தார்கள்.

அவன் செதுக்கிய அற்புதமான கல்ரதம் அங்கேயே நின்றதுதான், அப்புறம் நகரவேயில்லை. அதைநகர்த்த ஒருவரும் எத்தனிக்கவுமில்லை. அத்துடன் சேர்க்கப்பட்ட தத்தன் கைச்சிலைகளும் அங்கேயே கவனிப்பாரற்றுக் கிடந்தன.

"எப்படியிருக்கிறது கதை?" என்று கேட்டான் ரஞ்சன்.

"கதை நன்றாயிருக்கிறது. நிஜமானதா? உன்னுடைய சரக்கா?" என்று கேட்டேன் நான்.

"எப்படி யானாலென்ன? நன்றாயிருக்கிறதோ, இல்லையோ? அது போதும்; வா போவோம். பசி வயிற்றைக் கிண்டுகிறது" என்று சைக்கிளண்டை சென்றான் ரஞ்சன்.

நானும் அவனைத் தொடர்ந்தேன். தத்தன் குன்று, தத்தன் குளம்! நல்ல கதை! இருவரும் மௌனமாக வீட்டை நோக்கிப் புறப்பட்டோம்.. வெய்யில் பளீரென வடித்தது. 'ரதம் வாங்கி பலி'யை அன்று முழுவதும் நான் மறக்கவில்லை.

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

என்றால்

கீர்த்தி பெற்ற — நம்பிக்கை வாய்ந்த — உயர்தர

கொள்ளேகாலப் பட்டுச் சேலைகளும் பலவூர்
பட்டு & நூல் ஜவுளி தினுசுகளும் நிறைந்த இடம்

★

கல்யாண காலத்திற்கென்று ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்

★

99, பெரிய தெரு
கும்பகோணம்

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

சில்லரை விற்பனையை மொத்த வியாபாரிகளுக்குக் கொடுக்கும் விலைக்கே
கொடுக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்

பகைவரா நண்பரா?

நா.கி. நாகராசன்

"பகைவனுக் கருள்வாய்" என்பது பாரதி வாக்கு. இதையே ஏசுவின் நாள் முதல் காந்தி சகாப்தத் தொடக்கமான இந்நாள் வரை உலகப் பெரியோர் அனைவரும் அறிவுறுத்தி வந்துள்ளனர். ஆனால் மானிட அனுபவத்தில் இதைக் கடைப்பிடிப்பது எவ்வளவு கடினம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். பகைவனாகக் கருதப்படும் ஒருவனிடம் உள்ள நல்லியல்புகளைக் காணும் பெருந்தன்மையும் நம்மில் சிலருக்கே உண்டு. உயிரினங்களில் நமக்குப் பகையானவற்றிலும் சில வகைகள் நமக்குச் செய்யும் தொண்டை நாம் அறிய முயல்வதில்லை. பூச்சிகளை நாம் வெறுப்புடன் நோக்குங்கால் உழவனின் நண்பனான மண் புழுவையும் வேறு சில பூச்சிகளையும், செடிகள் பெருக உதவும் தேனீயையும் மறந்துவிடுகிறோம். பூச்சி வகைகளைக் காட்டிலும் எண்ணிற் பெரிய இன்னொரு உயிரினத்தையும் நாம் நமது பகைவராகக் கருதுகிறோம். பொதுவாய் அவை நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அவற்றை நுண்ணுயிர்கள் (Microbes) என்பர். அவற்றுள் நமக்குத் துணையாகவுள்ளவற்றை அறிவதே இக் கட்டுரையின் நோக்கம்.

உலகில் நுண்ணுயிர்கள் இல்லாத இடமே இல்லையெனலாம். தொட்டதைச் சாம்பலாக்கும் எரிமலைக் குழம்பிலும், புவியின் ஆழத்தேயுள்ள சுரங்கங்களிலும், காற்றில் நூறு மைல் உயரத்திலுங்கூட இவை காணப்படுகின்றன. உயிர் வாழ வசதியற்றதாகக் கருதப்படும் நிலைகளிலும் அவை வாழுந்திறன் பெற்றுள்ளன. இவற்றுள் பல வகையுண்டு. இவை பல்வேறு அளவுடையவை. இவற்றுள் சில வகைகளை ஊனக்கண் கொண்டே பார்க்க இயலும். மற்றப் பெரும்பான்மையானவை மிகத்திறமையுள்ள பெருக்காடியில் (Microscope) மட்டும் புலனாகும். இவையனைத்தும் எளிய உயிர்கள். இவற்றுள் பல ஒரே அணுவால் (Cell) ஆனவை. இத்தகைய உயிர்களுக்கு ஆதியும் அந்தமும் இல்லையெனலாம். ஏனெனில் இவ்வுயிர்கள் பெருக ஆண் பெண்பால்களின் சேர்க்கையே தேவையில்லை. இவற்றுள் ஒருயிர் இரண்டாகப் பிரிந்து ஈருயிர்களாய் விடுகிறது. இவ்வாறு தோன்றும் ஈருயிர்களும் தனியே வாழ்ந்து மீண்டும் பிரிந்து நான்காகின்றன. இவ்வாறே ஓரணுவிலிருந்து லட்சக்கணக்கான உயிர்கள் தோன்ற வழியுண்டு.

நுண்ணுயிர்களில் முதல்வகை பூஞ்சைகள். இவை ஒளியின் உதவியின்றி வாழும் உயிர்வகை. எல்லாப் பயிர்களும் தமது உணவைத் தாமே தயாரித்துக்கொள்கின்றன. ஆனால் பூஞ்சைகளோ வேறு உயிர்களை அண்டியோ, அவை மடிந்து அழுகும்போது அவற்றிலிருந்தோ தமது உணவைப் பெறுகின்றன. பழைய தின்பண்டங்களின் மேலும், அழுகிய எலுமிச்சம் பழத்தின் மேலும் பூஞ்சை படிந்து வளர்வதைக் காண்கிறோம். பாலின் புளிப்புக்கும், கள்ளின் நுரைக்கும் ஒருவகைப் பூஞ்சையே காரணம். இதைப் புரையணு (Yeast cell) என்பர். பூஞ்சைக்கு அடுத்தாற்போலுள்ள பாசைவகைகள் ஈரமான இடங்களில்தான் வாழும், இவை பூஞ்சைகளைப் போலன்றி ஒளியின் உதவியாற் பிழைக்கின்றன. பாசைகள் பெரும்பாலும் தமது உணவைத் தயாரித்துக் கொள்ளும் திறனுள்ளவை. ஆனால் வயல்களில்

உள்ள சில பாசைகள் அழுகிய உயிர்ப் பொருள்களைக் கொண்டு உயிர் வாழ் வதும் உண்டு.

நுண்ணுயிர்களில் ஒரே உயிரணுவைக் கொண்டவை ஓரணுவுயிர்கள் (Protozoa) எனப்படும். மலேரியா சுரத்திற்கும் இன்னும் பல நோய்களுக்கும் காரண மான கிருமிகள் இவ்வகையைச் சேர்ந்த வையே. இவை பல்வேறு வடிவுள்ளவை. விலங்குகளின் உடல்களிலும், நீர் நிலை களிலும், கடலிலும் மண்ணிலும் இவை வாழ்கின்றன. இவற்றினும் சிறிய உயிர் கள் நுண்ணங்கள் (Bacteria) எனப் படும். பெருக்காடி கொண்டு நோக்கின் இவை பல்வகை விநோத வடிவுகள் கொண்டிருப்பது தெரியும்.

இவற்றைவிட நுண்ணிய உயிர் வகை களையும் தற்காலத்தே கண்டு பிடித்துள் ளனர். அவற்றை உயிரினங்கள் என் பதே கடினம். உயிரினங்களின் இயல்பு களோடு சடப் பொருள்களின் தன்மை களையும் இவை கொண்டுள்ளன. உயி ருள்ளவற்றிற்கும், உயிரற்றவைக்கும் எல்லைக் கோடாய் இவை அமைகின்றன. இவை பல கொடிய நோய்களை விளைவிக் கின்றன. ஆகையால் இவற்றை நோய ணுக்கள் (Virus) எனலாம்.

இவற்றுள் பெரும்பான்மையானவை வாழ்க்கைப் போராட்டத்தில் மற்ற உயிர்களோடு போட்டியிட்டு அவற்றை அழிக்க முயல்கின்றன. உணவுப்பொருள் களின்மேல் பூஞ்சை படிந்து அதை உண் ணத் தகாதனவாக ஆக்கி விடுகிறது. பாசைகளால் நீர் நிலைகள் பாழாகின் றன. நுண்ணங்களும், நோயணுக்களும் மற்ற உயிர்வகைகளில் பல நோய்களை விளைவிக்கின்றன. ஆகையால் இவைய னைத்தும் நாம் உயிர் வாழ்க்கை தடைப் படவே பிறந்தனவோ என எண்ணலாம். ஆனுல் நுண்ணுயிர்கள் இல்லா உலகில் நாம் உயிர் வாழ இயலாது.

பட்டுப் போன மரஞ் செடிகள், பழைய உணவுப் பொருள்கள், மாய்ந்த உயிர் வகைகள் இவை யனைத்தும் சிறிது காலத் திற்குள் அழுகிப் போவதை நாம் பார்க் கிறோம். கழிவுப் பொருள்கள் இவ்வாறு அழுகாத உலகைச் சிந்தித்துப் பாருங் கள். அதில் எங்கெங்கும் விலங்கு களின் சடலமும், பட்ட மரங்களும், மற்றக் குப்பைகளும் கிடந்து அது விரை வில் வாழ்க்கைக்குத் தகுதியற்ற இட மாக ஆய்விடும். ஆகையால் அழுகல் என்பது எவ்வளவு இன்றியமையாத விளைவு என்பது தெளிவாகிறது. இதன் காரண கர்த்தாக்கள் நுண்ணுயிர்களே. கரிமப் பொருள்களை உணவாகக் கொண்டு அவற்றைச் சிதைத்து அவை மக்கிப் போகுமாறு இவை செய்கின்றன. இவ்வாறு சிதைந்த உணவுப் பொருள்க ளைத் தாவரங்கள் உட்கொண்டு உயிர் வாழ்கின்றன. ஆகையால் நிலத்தின் வளங் கெடாமற் பாதுகாப்பவை நுண்ணுயிர் களே. ஒரு சிட்டிகை வயல் மண்ணில் கோடிக் கணக்கான நுண்ணங்கள் உள் ளன. அவை பல்வேறு வகைகளானவை. அவை எப்போதும் தம் வேலையைச்செய்த வண்ணமே உள்ளன. இவற்றின் வேலை தடைப்பட எது வாயினும் நேர்ந்தால் இவை அழிந்து போய் நிலத்தின் செ ழுமை கெடுகிறது. தாவர வளர்ச்சிக்கு முக்கிய தேவையான மக்கைத் (Humus) தயாரிப்பது நுண்ணங்கள் தான். விஞ் ஞானி யொருவர் மண்ணைத் தாவரங்க ளின் சமையலறை யென்றும், அதிலுள்ள நுண்ணங்களைத் தாவரங்களின் சமைய லாட்கள் என்றும் குறிப்பிட்டார். தாவ ரத்திற்கு வேண்டிய உணவைத் தயா ரித்துத் தருவதே இக்காணு வுயிர்களின் வேலை.

மண்ணிலுள்ள நுண்ணங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் முதல் வகையை மண்ணின் தோட்டிகள் எனலாம். தாவர வளர்ச்சிக்குத் தீங்கு விளைக்கும் மூத்திரவுப்பு முதலான பல பொருள்கள் மண்ணில் சேர்ந்துவிடலாம். இவை நீக்கப்படாவிடின் தாவரங்கள் விரைவில் அழிந்துபோம். மேற்கூறிய நுண்ணுயிர்கள் இப்பொருள்களை உண வாகக் கொண்டு இவற்றைத் தீங்கற்ற பொருள்களாக மாற்றிவிடுகின்றன. இரண்டாம் வகை நுண்ணங்கள் மடிந்த உயிர்ப் பொருள்களைச் சிதைத்துத் தாவ ரங்களுக்குத் தேவையானபொருள்களாக மாற்றுகின்றன. இவை கரிமம் (Carbon) காலகம் (Nitrogen), கரியிருதீயதை (Carbon-di-oxide) முதலானவை. காலகத்தை நவச்சார ஆவியாகவும்,

வெடியுப்புப்போன்ற பொருள்களாகவும் இவை மாற்றுவதும் உண்டு. இப்பொருள்கள் தாவரங்களுக்குச் சிறந்த உணவாகும். இவற்றைத் தவிரக் காற்றிலுள்ள காலகத்தை உட்கொண்டு அதைத் தாவர உணவாக மாற்றித் தரும் வேலையையும் நுண்ணங்கள் செய்கின்றன. இத்தகைய நுண்ணங்கள் பட்டாணியைப் போன்ற பயிரினங்களில் அதிகமாக ஈடுபடுகின்றன. இப்பயிர்களின் வேர்களிலுள்ள எண்ணிறந்த முடிச்சுகள் ஒவ்வொன்றும் கோடிக்கணக்கான நுண்ணங்களின் தொகுதியாகும். இவற்றைத் தவிர நுண்ணங்களே அழிந்து தாவர உணவாவதும் உண்டு. ஆகையால் உழவனது துணைவர்கள் அவனது கால் நடைகளும், கலப்பையும் என்றால் மட்டும் போதாது. அவனறியாது உழைக்கும் இவ்வுயிர்களே அவனது முதல் துணைவர்கள்.

நீரின் வாயிலாகப் பல்வகை நுண்ண நோய்கள் பரவுவதை அறிந்த நாம், குடி தண்ணீரைச் சுத்தமாக்கும் பணியையும் நுண்ணுயிர்களே செய்கின்றன என்பதை நம்புவது கடினம். குழாய் நீரை வடிகட்ட அது பல மணல் வடிகட்டிகளின் வழியே செலுத்தப்படுகிறது. இவ்வடிகட்டிகள் மிகச் சிறிய நுண்ணங்களைக்கூட நீரிலிருந்து பிரித்து விடுகின்றன. ஆனால் இது நடக்க நுண்ணுயிர்கள் உதவுகின்றன. தண்ணீர் வடிகட்டிகளின் வழியே செல்லத் தொடங்கினால் அவற்றின் மேற்பரப்பில் மெல்லிய பாசைகள் தோன்றி வளருகின்றன. சில நாட்களில் இலேசான பாசைத் தகடொன்று வடிகட்டிகளில் அமைந்து விடுகின்றது. இப் பாசை நுண்ணங்களைக்கூடப் பிரித்துச் சுத்தமான நீரை அனுப்புகிறது.

பட்டணங்களின் அருகிலுள்ள ஆறுகளில் அவ்வூர்களின் கழிவு நீரனைத்தும் கலக்குமாறு செய்யப்படுவது வழக்கம். அப்போது ஆற்றுநீர் அசுத்தமடைந்து விடுமல்லவா? அதைச் சுத்தப்படுத்தும் வேலையையும் நுண்ணங்களும், பாசை போன்ற மற்ற நுண்ணுயிர்களும் மேற்கொள்கின்றன. கழிவு நீரிலுள்ள அழுகிய உயிர்ப் பொருள்களைச் சிதைத்து அவற்றை வேறு எளிய பொருள்களாக இவை மாற்றிவிடுகின்றன. இதனால் கழிவுநீர் சுத்தமாகிறது. கழிவு நீரை இவ்வாறு நுண்ணுயிர்களின் உதவியால் சுத்தப்படுத்தி அதிலுள்ள பொருள்களைப் பயனுள்ள உரமாக மாற்றும் முறைகள் தற்காலத்தில் வழங்கி வருகின்றன. ஆகையால் சாக்கடை நாற்றத்தை உணர்ந்து ஒதுங்கும் நாம் இதில் நுண்ணங்களின் கைவேலையைப்பற்றி எண்ணி இவற்றிற்கு நன்றி செலுத்தவேண்டும்.

நுண்ணங்கள் இல்லாவுலகில் தயிர்ப் பச்சடியும், மோர்க்குழம்பும், மராட்டியர்கள் விரும்பும் ஸ்ரீகாந்த் அல்வாவும் சாப்பிட வகையில்லை. ஏனெனில் நாம் பாலைப் புரைகுத்தும்போது அதற்குள் எண்ணிறந்த நுண்ணுயிர்களைச் சேர்க்கிறோம். இவை புரையணுக்கள் (yeast) எனப்படும். இவை பாலிலுள்ள காடியை உட்கொண்டு வளர்ந்து பெருகி அதைத் தயிராக்குகின்றன. மோர் புளிக்கக் காரணமும் இதுவே. அதில் புரை அணுக்கள் அதிகமாக உள்ளன. இவை தலைசிறந்த உணவாகுமென்றும் இது இல்லாவிடில் உயிர்ச் சத்துக்களில் (Vitamins) ஒன்று குறைந்து அதனால் நோய் வரக் காரணமாகுமென்றும் தற்கால மருத்துவம் கூறுகிறது. பதனியைக் கள்ளாக்குவதும் இவைகளே. ஆகையால் நுண்ணுயிர்கள் இல்லாவுலகில் மதுவிலக்குக்கே அவசியமிராது!

சில நுண்ணுயிர்களை மானிடன் அதிசயமான பயன்களுக்கு உட்படுத்துகிறான். அவற்றை மருந்தாகவும், வாசனைகளாகவும், சாயங்களாகவும் அவன் பயன்படுத்துகிறான். மண்ணின் மணம் அனைவர்க்கும் தெரிந்தது. இதற்கு ஒரு வகை நுண்ணுயிர்களே காரணம். இவற்றை மண்ணிலிருந்து பிரித்துத் தனியே வளர்த்து வாசனைப் பொருள்கள் சிலவற்றில் பயன்படுத்துகிறார்கள். மத்திய தரைக் கடலின் ஒரு பகுதியிலுள்ள பாசை வகை ஒரு பிரசித்திபெற்ற வாசனைத் திரவியத்தில் பயனாகிறது. கடற்பாசைகளிற் சில சாயங்களாகவும் வர்ணங்களாகவும் தொன்றுதொட்டே பயன்பட்டு வந்துள்ளன. "எர்காட்" (Ergot) என்னும் பூஞ்சை பிரசவத்தின் போது இன்றியன்மையாத ஒரு மருந்தாகவும் பயன்படுகிறது. ஆயுர்வேதத்தில்

யாவரும் விருப்புடன் தேர்ந்தெடுத்து வாங்கும் சிறந்த சமையல் சாதனம். பதார்த்தங்களின் சுவையையும், மணத்தையும் பன்மடங்கு பரிமளிக்கச் செய்கிறது. சுத்தமான தாவர எண்ணையில் சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்பட்டு வீட்டுத் தேவைக்காகக் காற்றுப் புகாத லீவர் மூடியுடன், 2, 5 பவுண்ட் டின்களில் எல்லா முக்கிய வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பவர்கள்:

மேட்டூர் கெமிகல் & இன்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை :: சேலம்

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்

திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜெண்டுகள்:

அலைட் இன்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்

120, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்

பூஞ்சைகளையொத்த நுண்ணுயிர்கள் பல மருந்துகளாகப் பயன்படுகின்றன.

சைனாவிலும், ஜப்பானிலும் விநோத உணவுகள் வழங்குவதைப்பற்றிப் பல வேடிக்கைக் கதைகள் உண்டு. அவற்றிற்கேற்றாற்போல் அவ்விடங்களில் நுண்ணுயிர்கள் உணவுகளாக விளங்குகின்றன! அங்கே சில கடற்பாசைகளிலிருந்து ஒரு வகைக் குழம்பு சமைத்து உண்கிறார்கள். நுண்ணங்கள் இல்லாத உணவையே நாம் அருந்த வேண்டும் என்று நல்வழிப் பாட புத்தகங்கள் கூறுகின்றன. ஆனால் ஜப்பானில் எரிமலைப் பகுதிகளில் காணப்படும் ஒரு வகை நுண்ணங்கள் மிக ருசிகரமான உணவாகக் கருதப்படுவதைப்பற்றி அப் புத்தகாசிரியர்கள் என்ன சொல்வார்களோ அறியோம். ஆனால் ஒன்று, பல்வேறு வகைகளில் நமக்கு உதவும் இவ்வுயிர்கள் நம் பகைவர்களா, நண்பர்களா என்ற கேள்விக்கு விடையைமட்டும் உங்களுக்கே விட்டு விடுகிறேன்.

ஜோதிஷ மகுட வர்த்தனர்.

கேள்வி 4-க்கு ரூ2, ஒரு வருட வாரப் பலன் ரூ. 9.

9-5-38ல் சென்னை ஜோதிஷர் மகாநாட்டின் சபைத்தலைவர்

இந்து மன்னர் சமஸ்தான 25ஆவது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர் புஜண்டர், சாஸ்திர நிபுணர், ஜாதகம் கணிக்க ரூ. 3 ஒரு வருஷத்திற்கு ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்ரு, பிரயாணம், சுபம், அதிர்ஷ்டம்:- மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், ஒவ்வொரு காரியம் சித்திபெறும். சந்திரனின் நாட்களும், மணிக்கு மணி பலன் அட்டவணையுடன் மற்றும், பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ. 5 ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் N. V. சுப்ரமணியம், J. M., J. A. மிராஸ்தார்

நெ. 10, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத், P. O., S. I. R., (சென்னை.)

ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம்

12,58,400 ஜனங்கள் போற்றுவது

நவநாயகரின் கொடுமை ஒழியும். ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு, துர்சொப்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும். சத்ரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரீ புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரீகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதக வலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை, பாலாரிஷ்டம், பக்ஷிதோஷம் முதலிய 4,448 தோஷங்கள் தீரும். ரூ. 3-0-0 திக்கு விஜயம் அஷ்ட ஐஸ்வரிய ஜெயவசீகர் சத்ரு சம்ஹாரி. வெற்றீ வெற்றி வெற்றிவேல் ரூ. 9

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (A)

வாலாஜாபாத் P. O., S. I. R., சென்னை.

வீராங்கனை

கே. சுந்தரம்மாள்

“ரகுபதி ராகவ ராஜாராம் பதித பாவன சீதாராம்; ஈசுவர அல்லா தேரேநாம் சபகோ சன்மதி தேபகவான்” என்று மெலிந்த குரல் கட்டைக் குரல் எல்லாமாகச் சேர்ந்து எழுப்பின கீதமானது உலக பிதாவான மஹாத்மா மறைந்த சுக்ரவாரத்தை ரேடியோக்காரர்கள் நினைப்பூட்டுகிறார்கள் என்பதோடு மணி ஏழேகால் என்று திடுக்கிட்டு எழுந்திருக்கச் செய்தது, பங்களூரின் செப்டம்பர் மாதத்துக் குளிரில், மணி ஐந்துதான் என்று நினைத்துப் போர்வையால் மூடிப் படுத்திருந்த என்னை.

காலைக்கடனை முடித்துக் காபி அருந்திவிட்டு, காம்பவுண்டிற்குள்ளேயே மற்றொரு கட்டிடத்தில் ஒத்திகை நடப்பதையும் பார்த்துக் கொண்டு, குளிரில் மரத்த உடம்பில் காலை வெய்யில் படும்படி சற்று உலாவி வரலாம் என்று நினைத்துக் கிளம்பினேன்,

‘‘ரிகபனி, ஸாநிப பகரிஸ’’ என்று ஆர்ச்செஸ்ட்ரா எழுப்பின அம்ஸத்வனி ராகமானது தூரத்தில் கேட்பதற்கு மனோரம்யமாகத் தோன்றினது. அக்கட்டடத்தை மெதுவாக நடந்தவாறு மூன்று முறை சுற்றி, நான்காவதாக மறுபக்கம் திரும்பும் சமயம் அறுபத்துமூன்றாவது தடவையாக, ரிகபநிஸா வாசித்தார்கள். மனோரம்யம் மனோ எரிச்சலாக மாறிற்று. அந்தச் சமயம்,

“எழவு மூளையில் களிமண்ணை வைத்திருக்கான்” என்றார் சங்கீத டைரக்டர்.

“ஏனு ஹேள்ராரு” (என்ன சொல்லுகிறார்) என்றான் ஒரு வாத்தியக்காரன்.

‘‘நிம் சிரசிலே சன்னக்க மூளென்னு ஹேளினாரு’’ (உன் மூளை மிக உயர்தது) என்று பதில் சொன்னான் ம்ற்றொரு ஆசாமி.

‘‘பாவம் பாஷை புரியவில்லை பிழைத்தார்’’ என்று நினைத்த வண்ணம் ரிகபநிஸாவைக் கேட்கப் பொறுமையில்லாமல் என் அறைக்கு வந்து ஈசிச்சேரில் சாய்ந்தேன்.

“என்ன? யோஜனை பலமாக இருக்காப் போலிருக்கிறதே.’’ என்று கேட்ட வண்ணம் உள்ளே வந்தார் உதவி டைரக்டர் தியாகு. கைகுவித்த வண்ணம்,

“நமஸ்தே பாபு! இப்படி உட்காருங்கள்’’ என்று நாற்காலியைச் சுட்டிக் காண்பித்துவிட்டு, ‘‘நம்முடைய யோஜனையெல்லாம் எதைப்பற்றியிருக்கும்?” என்றேன்.

‘‘அது விஷயமாகவேதான் நானும் வந்தேன், நம்முடைய சூர்யகாந்தம் நேற்று ட்ரையல். போட்டுப் பார்த்தோம் ‘வெகு ஜோர்! செட்டிங் அபாரம், மேக்கப் பிரமாதம்’ என்றெல்லாம் புகழ்ந்தார்கள் நண்பர்கள். டான்ஸ்கள் கேட்க வேண்டியதில்லை. கதகளி ஒன்று, நரிக்குறவர் ஒன்று, பர்மிய நடனம் ஒன்று, குடுகுடுப் டான்ஸ் ஒன்று, நடுவில் பெருமாள் மாடு காட்சி ஒன்று, குமாரி வீணாவின் பரதநாட்டியம் வேறு பிரதானம், இவையெல்லாம் சேர்த்தும் பதினெட்டாயிரம் அடிதான் ஆகிறது. இப்பொழுது ஒத்திகை நடக்கும் அசம்பதக்குடி சகோதரிகள் அபிநயத்தைச் சேர்த்தாலும் இருபதினாயிரம் அடிதான் ஆகிறது. எல்லோரையும்விட நாம் முன்னேறவேண்டுமென்றால் இன்னும் இரண்டாயிரம் அடி சேர்த்தேயாக வேண்டும். அதற்குத்தான் யோஜனை கேட்கவந்தேன்.’’ என்றார்.

‘‘ஒரு கதாகாலக்ஷேபத்தைச் சேர்த்துவிடுவோமா?”. என்றேன்.

‘‘சே, அலுத்துப்போன பாணி. மற்றப் பேர்கள் கையாளாத விஷயமாகச் சேர்க்க வேண்டும்’’ என்றார்.

“வேறு ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை. இருபதினாயிரத்துடன் திருப்தியுற வேண்டியதுதான்’’ என்றேன்.

‘‘ஊஹூம். நாம் யாவரையும்விட முன்னேறவேண்டும்; அதுதான் தற்காலத்து நாகரிகம். ஏதாவது நூதன விஷயத்தைப் புகுத்தியேயாகவேண்டும்’’ என்றார் படபடப்பாக.

இருவரும் உச்சிமோட்டைப் பார்த்த வண்ணம் ஆலோசனையில் இறங்கினோம்.

“சாரிக சரிகாரி நீசரி நிகரீஸ” என்ற பைரவி வர்ணத்தின் ஸ்வரமானது காற்றில் மிதந்துவந்து எங்கள் காதைத் தாக்கின.



“இஃதென்ன வாத்யம்? கீழே வரும்போது கிளாரினட் போலவும் மேலேபோகும் பொழுது புல்லாங்குழல் போலவுமிருக்கிறதே எவ்விடம்?” என்றேன்.

“அதுதான் எனக்கும் தெரியவில்லை. ஸ்வர சுத்தமாகவும் தாளக்கட்டுடனும் இருக்கிறது. பிச்சைக்காரனாக இருக்கமுடியாது” என்று முடிக்குமுன்,

“அப்பா! அப்பா! யாரோத்தன் மூக்காலே வாத்யம் வாசிக்கிறானப்பா; இரண்டு மூக்கிலேயும் வாத்யம் வெச்சுக்கொண்டிருக்கானப்பா. அவனை நம்பாத்துக்குக் கூப்பிடு அப்பா” என்று எனது ஐந்து வயது மகன் குமார் என் கையைப் பிடித்திழுத்தான்.

“என்னடா அது உளறுகிறாய்? மூக்காலாவது வாத்யம் வாசிப்பதாவது” என்றேன்.

“பொய்யில்லைப்பா, நிஜமாப்பா” என்று என்னை எழுந்திருக்கும்படி இழுத்தான் கையை.

அந்தச் சமயம் அவன் பின்னால் கறிகாய்ப் பையுடன் உள் நுழைந்த சமையல்காரன் பஞ்சுவை நோக்கி, “என்னடா பஞ்சு! குமார் என்னவோ சொல்லுகிறானே; நீ பார்த்தாயா?” என்றார் தியாகு.

“ஆமாம் சார், இதுவரை நான் கண்டதேயில்லை. வாத்யம் கிளாரினட் போல சாண் நீளத்திற்கு இருக்கிறது. வலது கடைவாயில் ஒன்றும் இடது கடைவாயில் ஒன்றுமாக வைத்துக் கொண்டு, இடது பக்கத்து வாத்தியத்தில் ஸ்ருதிப்பெட்டி போல் நாதம் எழும்ப வலது பக்கத்து வாத்தியத்திலுள்ள துவாரங்களில் விரல் வைத்து மூடி, பாட்டை வாசிக்கிறான். இதேபோல மூக்கிலும்

இரண்டு வாத்தியத்தை வைத்து இதேபோல் வாசிக்கிறான். இதைவிட அதிசயம் ராக்ஷச சாகஸமாக வாசித்தான் ஒருவழி. ஒரு கஜம் நீளத்தில் விரல் பருமனுள்ள தகரக்குழாய் நுனியில் புனல்போல் விரிந்திருக்கிறது. மறு நுனியில் 'ட'னாப்போல் இருக்கிறது. மற்றொரு குழாய் இரண்டு பக்கமும் 'ட'னாப் போல், ஒரு பக்கம் மேலே பார்த்தவாறு மறுபக்கம் கீழே பார்த்தவாறு. இரண்டையும் இரண்டு மூக்கிலும் சொருகிக்கொண்டு வாயில் இரண்டு வாத்தியத்தையும் வைத்துக் கொண்டு வாசிக்கிறான். யாராவது ஒருவன் ஒரு செம்பு ஜலத்தைக் குழாயின் புனலில் விட்டுக் கொண்டிருக்கிறான். மறு குழாய் வழியே ஜலம் கீழே விழுகிறது. அவன் பாட்டிலும் அலக்ஷ்யமாகப் பாட்டை வாசிக்கிறான். வலது மூக்கினால் ஜலம் மண்டையிலேறி, இடது மூக்கினால் வெளிவருகிறபடி அப்பியாஸமாம். பார்த்தால் சாதாரணமாக இருக்கிறான்" என்றான் பஞ்சு.

"இது என்ன அதிசயம்! என்னால் நம்ப முடியவில்லையே" என்றார் தியாகு.

"சரி. அதையும் நேரில் பார்த்தால் போகிறது. பஞ்சு அவனை இவ்விடம் அழைத்து வா, பார்ப்போம். சமையல் மெதுவாக நடக்கட்டும்" என்றேன்.

"சீதோஷ்ண நிலைமையில் பண்பட்ட வஜ்ரம் பாய்ந்த சரீரம், ஆறடி உயரம், சியாமள வர்ணம், நீண்ட நாசி, விசாலமான நெற்றி, வட்டக்கண்கள், அரையில் துல்ய வெள்ளையில் மூலகச்சம் வேஷ்டி, நீண்ட கறுப்புக் கோட்டு, தலையில் ஜரிகைத் தலைப்பாகை. கழுத்தில் ருத்ராக்ஷம் துளசிமணிமாலைகள் இவ்விதத் தோற்றத்துடன் பஞ்சுபின் தொடர வந்து சேர்ந்தான் அந்த ஆசாமி.

அவன் வரவை எதிர்பார்த்து, போர்ட்டிகோவில் நாங்கள் உட்கார்ந்திருந்தபடியினால் வந்தவுடன் எங்களுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, வாத்திய சங்கீதத்தைத் தொடங்கினான். பைரவி, வர்ணம், காம்போதி அடதாள வர்ணம், விடமுசாயா, மத்தாடபாராதேனோ" வலஜி ராகமாலிகை, ஸநீதோடி தேவே, கலீனரு, என்ற கீர்த்தனைகள், எல்லாவற்றையும் வாசித்தான். பஞ்சு சொன்ன வித்தைகளெல்லாம் செய்து காட்டினான். அவன் வாசிக்கும்பொழுதே என் மூளை தீவிரமான சிந்தனையில் இறங்கிற்று. எனது மனக்குறிப்பை அறிந்தாற்போல். அவன் பாட்டை முடிக்கும் சமயம் "இன்று எழுந்திருந்ததும் என் வலக்கண் துடித்தது; கழுதையும் கத்திற்று. அதன் பலன் இதோ கிட்டிவிட்டது" என்றார் தியாகு.

"இருபத்திரண்டாயிரம் அடி நிச்சயம். வெற்றி உமக்கே" என்றேன் சிரித்தவாறு.

நாங்கள் கேட்டதற்கு அவன் சொன்ன வரலாறு:—

"எங்களது ஏழாவது தலைமுறை பாட்டன் பதினெட்டு வயதாக இருக்கும் பொழுது மைசூர் குடகுபக்கம் காட்டில் தனியாளாகத் திரிந்து கொண்டிருந்தாராம், தாய், தந்தை உற்றார் உறவினர்கள் யாருமற்ற நிலைமையில்; காட்டின் நடுவே ஒரு குடிசை கட்டிக் கொண்டு காலையில் எழுந்ததும் பழையவமுதைச்சாப்பிட்டுவிட்டு, விறகு வெட்டி, பக்கத்திலுள்ள கிராமத்தில் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, கிடைக்கும் கூலிக்கு அரிசி முதலியவை வாங்கிக் கொண்டு பகல் ஒரு மணிக்கு, குடிசைக்குத் திரும்பி விடுவாராம். மூன்றுமணிக்குள்ளாக ஏதோ சமைத்து ஸ்னானம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சற்றுநேரம் உறங்குவாராம், ஐந்துமணி சுமாருக்கு எழுந்து, நீர்நிலையின் கரை, மரத்தின் மீது, இப்படியாக உட்கார்ந்து

m211,N41KV
N48.8.8
198048

மூங்கிலில் தாமாகத் துளை செய்து வைத்த வாத்தியத்தை வைத்துக்கொண்டு, சப்தஸ்வரங்களைக் கையாண்டு வாசிப்பாராம். பிறகு இரவு மத்யானச்சாப்பாடு மிகுந்ததைச் சாப்பிட்டுவிட்டு, குடிசையில்உட்கார்ந்து தூக்கம் வரும்வரை வாசித்துக் கொண்டிருப்பாராம். இதுவே தினசரி வாழ்க்கையாக யாதொரு கவலையும் வருத்தமுமின்றி, காலம் கழித்து வந்தாராம், மூன்று வருஷகாலம்.

“ஒருநாள் சாயங்காலம் ஒரு மரத்தின்மீது உட்கார்ந்துகொண்டு, கண்களை மூடியவாறு புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது, ‘சபாஷ்! பைரவிராகம் அற்புதம்’ என்ற குரல் கேட்டுக் கண் விழித்தாராம். ஆஜானபாகுவான சரீரம்; உச்சந்தலையில் சிகையைக் கொண்டை போட்டுக் கொண்டு நல்ல சிவந்தமேனியுடன் தம் வயதொத்த வாலிபன் நிற்பதைக் கண்டாராம், ராகத்தின் பெயரோ விபரமோ அறியாத நிலைமையில்.

“ராகமா அது என்னது?” என்று கேட்டாராம்.

“ஆம், நீ வாசித்தது அருமையான பைரவி” என்றானாம் அவன்.

“எனக்கு அதெல்லாம் தெரியாது. மனதில் தோணினதை வாசிப்பேன். அவ்வளவு தான். நீ யார்” என்றாராம் இவர்.

“இவ்விடமிருந்து அறுபது எழுபது கல்லுக்கடந்து ஒரு மலைச்சாரலிருக்கிறது. அதில் நானும் என் குருநாதரும் வசித்து வந்தோம். நான் சிறு குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரை இழந்துவிட்டதினால் குருநாதரே சகலமுமாக இருந்து வந்தார். அவர் ஒரு அரிய சங்கீத விற்பன்னர். நூதன வாத்தியங்களைக் கண்டுபிடிப்பதில் முனைந்தார். என்னையும் அதில் ஈடுபடுத்தினார். வெளியுலகத் தொடர்பே எங்களுக்குக்கிடையாது. அவ்வனமே எங்களுக்கு ஸ்வர்க்கமாக இருந்தது. மூக்கினாலும் வாயினாலும் வாசிக்கும் விதத்தையும், ஜலத்தை மண்டைக் கேற்றும் அரிய சாதனத்தையும் ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது எதிர்பாராதவிதம் அவரை மரண தேவதை ஆட்கொண்டுவிட்டது. கடைசி காலத்தில், ‘இந்தச் சாதனையில் வேற்றிகாணமுடியும்; நீ பிரயாசைப்படு, இது என் மரண வாக்கு; நிறைவேற்று.” என்று கண்ணை மூடினார். கொஞ்சகாலம் இருந்து பார்த்தேன். தனிமை என்னை மிகவாட்டியது. சாதனைகளைச்செய்ய மனமே தயாராக மாட்டேனென்றது. வேறு எங்காகிலும் சென்று நமது முயற்சியைத் தொடங்குவோம் என்று புறப்பட்டேன். என் குருநாதர் அருளால் நீ தென்பட்டாய்” என்றானாம்.

“அப்படியானால் என்னுடன் தங்கியிரேன்” என்றாராம்.

“உனக்குப் பூர்வ ஜன்ம வாசனையின் பலனாகச் சங்கீத தேவதை உன்னிடம் சாந்நித்யம் செய்கிறாள், நாமிருவரும் குருநாதர் மலைச்சாரலுக்கே செல்லுவோம். நிம்மதியாக நம்முடைய சாதனையைத் தொடங்கலாம்” என்றானாம்.

“சங்கீதத்திலுள்ள பற்றானது, மறுபேச்சின்றி அவனுடன் செல்ல ஒப்புக்கொள்ளச் செய்து விட்டது.

‘இப்பொழுது நான் வாசித்த பாணியெல்லாம் அவர்களால், மிக உழைத்துக் கண்டு பிடிக்கப்பட்டவைகள். ஐந்து வருஷங்கள் உழைத்துக் கண்டுபிடித்ததை உலகிற்குக் காட்டவெண்ணி இருவரும், ஊர் ஊராகச் சுற்றினார்களாம்.

“சில இடங்களில் இதைப் பிச்சைக்காரர் வித்தை” என்பதுபோல் அலக்ஷ்யமாகக் கவனித்தார்களாம். சில இடங்களில் ஆர்வமுடன் வரவேற்றுக் கொண்டாடினார்களாம். என்றாலும், இதன் அபூர்வ சக்தியை அறிந்து அனுபவிப்பவர்கள் கிடைக்கவில்லையாம். கடைசியில் ஒரு சமஸ்தானத்தில் இவர்களுக்கு அமோக வரவேற்பளித்தார்களாம். அவ்விடமே தங்கிவிடும்படி வற்புறுத்தினாராம் சமஸ்தானாதிபதி. சில காலம் தங்குவதாக ஒத்துக்கொண்டபின் சபைகூட்டி இவர்கள் கச்சேரி நடந்ததாம். தம் வித்வான்களில் ஒருவருக்கு இதைக் கற்றுக் கொடுக்கும்படி சொன்னாராம். முயற்சித்ததில் ஒருவருக்கும் பிடிபடவில்லையாம். சமஸ்தானாதிபதியின் ஒரே மகளான விலோசனா தான் கற்பதாகச் சொன்னாளாம். தகப்பனாரும் ஒத்துக்கொண்டு அரண்மனை நந்தவனத்திலுள்ள சிறு ஹாலில் அமர்ந்து கற்பிப்பதாக ஏற்பாடாயிற்று.

“இந்தச்சமயம் பாட்டனார் இரண்டுகுழங்களுக்குத் தகப்பனாக இருந்தபடியினால் குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்பு ஏற்பட்டிருந்ததினால், அவர் சுதாமன் (அது தான் வந்தவரின் பெயர்) இளவரசிக்குக் கற்பிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இருவரும் சமவயதினர் தானென்றாலும், சுதாமன் திடவைராக்கிய சித்தராகக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்துவிட்டாராம். பரஸ்திரீகளைச் சகோதரிபோல் எண்ணும் குணம் படைத்தவராம். அப்படி

ALWAYS LOOK FOR THE NAME



When buying a watch!

வாட்ச் வாங்கும் பொழுது எப்பொழுதும் தயாரிக்கும் கம்பெனியின் பெயரை கவனிக்கவும்!

வெளித் தோற்றத்திலிருந்து ஒரு வாட்சை வாங்குவது எளிது, ஆனால் அதைச் செய்த கம்பெனியின் பெயரை நாம் கவனிக்க மறந்துவிடுகிறோம். இதனால் ஏமாற்றமே கண்ட பயன். ஒரு வாட்ச் வாங்குங்கால் அதன் பெயரைக் கவனிக்க மறந்து விடாதீர்கள்! அப் பெயர் 'வெஸ்ட் எண்ட் வாட்ச்' ஆக இருக்குமானால், நீங்கள் எவ்விலை கொடுத்து வாங்கினாலும் உங்கள் பணத்தின் மதிப்பிற்குரிய பொருளையே வாங்குவதாக உறுதி கொள்ளலாம். தோற்றம், வேலைத்திறன் நாணயம் இவையே வெஸ்ட் எண்ட் வாட்சின் அணிகலன்கள். எங்கள் பிரக்யாதியைப் பற்றியும் நாங்கள் விற்கும் வாட்சுகளை பற்றியும் பெருமையடைகிறோம்.



தி ஸிலிடார்
(கிரிஸ்டல் வடிவம்)
எவர்ப்ரைட் ஸ்டீல்உடன்கூடிய
நிக்கல் ஸில்வர் Rs. 62/-

West End Watch Co.

BOMBAY
CALCUTTA

போதுமான ஸ்டாக்குகள் வராமலிருப்பதால், விளம்பரம் செய்யப் படும் வாட்ச் வகைகள் அனுப்ப முடியாமற் போகவும் நேரிடலாம். ஆனால் முடிந்தவரையில் கைவசமுள்ள ஸ்டாக்குகளினின்று உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்று வருகிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.

பம்பாய் :: கல்கத்தா.

யிருந்தும் விதி அது செய்யும் மாயவித்தையில் மயங்காதவர் யார்? கிட்டத்தட்ட இரண்டு வருஷத்தில் இளவரசி ஜல பந்தனத்தைத் தவிர வாத்தியம் வாசிப்பதைக் கற்றுக்கொண்டு விட்டாள். வித்தை வளர்ந்ததுபோல் சுதாமன் விலோசனா காதலும் வளர்ந்து விட்டது. சமஸ்தானாதிபதியின் காதில் விஷயம் எட்டி விட்டது. இரகசியமாகச் சுதாமனைக் கொல்ல ஏற்பாடு செய்து விட்டான் மன்னன். இந்த விஷயம் விலோசனாவின் அந்தரங்க தாதியின் மூலம் இவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, விடிவதற்கு முன், நந்தவனத்திலுள்ள சுரங்கத்தின் மூலம் வெளியேறி விடும்படி கடிதம் அனுப்பியிருந்தாள் விலோசனா. பாட்டனார் குடும்பத்துடன் சுதாமனும் தாதியின் உதவியினால் சுரங்கத்தில் இறங்கும் பொழுது விலோசனா அவ்விடத்தில் பிரயாணத்திற்கு ஆயத்தமாக நின்றாள்.

''அம்மணி தாங்கள் வருவது நல்லதல்ல'' என்றாராம் பாட்டனார், 'அரண்மனை வாழ்வும் அந்தஸ்தும் எனக்குத் தேவையில்லை. சங்கீதமும் சுதாமனுமே என் உலகம்' என்று நடக்கலானாளாம். எல்லையை விட்டு வெகுதூரம் வந்த பின்பு,

''நரஸப்பா! நீ உன் குடும்பத்துடன் வழக்கம்போல் யாத்திரை செய். நான் விலோசனாவுடன் குருநாதன் ஆச்ரமத்துக்குச் சென்று விடுகிறேன். அதுதான் மன்னனிடமிருந்து தப்பவழி, கலைக்கே என் வாழ்வு என்று நினைத்திருந்தேன் கலைவாணி காதலில் கலையம்சம் காணச்செய்தாள்'' என்று பிரிந்துசென்று விட்டாராம். பிறகு வருஷத்திற்கு ஒரு முறை பாட்டனார் சுதாமன் இருப்பிடத்திற்குச் சென்று வருவார்களாம். மன்னனின் மகள் அரண்ய வாசத்தை அன்புடன் அனுபவித்தாளாம். ஐந்தாண்டுகளுக்குப்பின் ஒருசமயம் போயிருக்கும் பொழுது,

''நரசப்பா! என்ன உலகம்? நன்றி கெட்ட உலகம். மன்னன் மகளாகப் பிறந்த குற்றம் இயற்கையாக அமைந்த காதலைப் புறக்கணிக்கவேண்டுமா? விலோசனா இவ்விடம் எவ்வளவு சந்தோஷமாக இருந்தாலும் அரச வாழ்க்கை இழந்தவளாகிவிட்டாள். அவளும் நானுமாக உலகிற்கு இவ்வித்தையை எடுத்துக் காட்டி மகிழ்வுற எண்ணினோம். ஆனால் விதியோ, மதிகெட்ட அரச வாழ்வோ அவ்வெண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டது. கலையைக் கிரஹிக்கலாமாம். கலைஞனைக் கிரஹிக்கக் கூடாதாம். இதென்ன கொடுமை? நரசப்பா! பலவிதமாக எண்ணி எண்ணி என் மனம் புண்ணாகி ஒருவித முடிவிற்கு வந்துவிட்டேன். குருநாதர், ''கலையினால் நாம்தான் ஆனந்தமடையவேண்டும். பெரிய இடத்தை அண்டி மேலேற முயற்சித்தோமானால், ஒரு சமயம் மேலே செல்ல வசதியளிப்பார்கள். ஒரு சமயம் அதப்பாதாளத்தில் அமிழும்படி செய்தாலும் செய்துவிடுவர்'' என்று சொல்லுவர். அதை நான் சிந்தனை செய்யாமல் மன்னனிடம் சென்றேன். அதன் பலன் மனக் குமுறலுடன் அரண்யவாசம் லயித்தது. என் மட்டில் இது இன்பகரமான வாழ்க்கையே. விலோசனாவின் வாழ்க்கைப் பாதை இப்படி வகுக்கப்பட்டதிற்கு நானேதான் பொறுப்பாளி என்று எண்ணும்பொழுது அரச சமூகத்தையே எரிக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அதனால் நாம் ஒரு கடமையை-சபதத்தை-மேற்கொள்ள வேண்டும். ''இக் கலையைப் பிறர் ஒருவருக்குக் கற்பிக்கவோ இக் கலையைக்கொண்டு நாம் பொருள் தேடவோ, இக் கலைநிமித்தம் ஒருவருக்கு உட்பட்டிருப்பதோ கூடாது. நாம் வழக்கம் போல் யாத்திரை செய்து மனமுவந்து கொடுக்கும் பிச்சையை வாங்கியே காலம் கழிக்கவேண்டும். நமது மக்களில் எவனுக்குச்சிரத்தையுள்ளதோ அந்த ஒருவனுக்குத்தான் கற்பிக்கவேண்டும். அவனும் நமது கொள்கையைப் பின்பற்றும் வாக்குறுதி தர வேண்டும். மக்கட்பேறில்லாமல்போனால் தகுந்தவனைத் தேடி, மகனாக ஏற்று வாக்குறுதி வாங்கிக் கற்பிக்க வேண்டும். நான் மக்கட்பேறு பெற்ற பின்பு தைரியமாக வெளியுலகில் தொடர்பேற்றுக்கொள்ளப் போகிறேன். இல்லையேல் இவ்வரண்யத்தில் இருவரும் ஒன்றாக மடிவோம். என்னைவிட்டு அவளோ அவளைவிட்டு நானோ செல்லமாட்டோம். வித்தையில் எனது வாக்கியத்தை மீறுகிறவர்களுக்குக் குடும்பத்தில் சுகம் அற்றுப் போகட்டும். இது சத்யம். என் குருதேவர் மீது ஆணை'' என்றாராம்.

''சுதாமா! என்ன கடூரமான சபதம் செய்துவிட்டாய்?''

''நரசப்பா! என் உள்ளம் குமுறுகிறது. அரியகாரியத்தை அனாயாசமாகச் செய்தால், அதற்கு ஆயிரம் அவதூறு? பணம் ஒன்றைத் தவிர, அழகு, கல்வி, எதில் நான் மன்னன் மருமகனாகத் தகுந்தவனில்லை? என் சபதம் செய்தது செய்ததுதான்'' என்றாராம்.

''ஐயோ கொடுமை! மறுதினம் பாட்டனார் கண் முன்பாகவே அருவியில் குளிக்கும் பொழுது விலோசனா தவறி விழுந்துவிட்டாள். அவளைப் பிடிக்க ஆழமான நீரில் குதித்துவிட்டார் சுதாமன். இருவரின் சடலங்கூடக் கிடைக்கவில்லையாம். மனமு

டைந்த பாட்டனர் பிறகு அதிககாள் ஜீவ வந்தராக இருக்கவில்லையாம். பதினாறு வய துள்ள அவரது மூத்த மகனுக்கு வித்தை களைக் கற்பித்திருந்தாராம். சுதாமனின் சபதத்தையும் சொல்லி வாக்குறுதி பெற்ரு ராம். கலையின் மூலம் கல்யாணம் என்பது கூடாது என்பது நரசப்பாவின் கட்டளை யாம். கலையின் மூலம் காதல் கொண்ட தினால் சுதாமன் விலோசனா வாழ்க்கை பாழ்பட்டது என்பது நரசப்பாவின் நம் பிக்கையாம்" என்று முடித்தான்.

"தியாகுவும் நானும் ஒருவரை ஒருவர் ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டோம். எங்கள் படத்தில் அவன் வாத்ய சங்கீதத் தைச் சேர்ப்பதற்காகக் கேட்டதற்குத்தான் அவன் அந்தக் கதையைச் சொன்னான்.

"என்ன தியாகு! வலது கண் துடிப்பும் கழுதை கத்தினதும் நேர்மாருன பயனை யன்ரே கொடுக்கிறது" என்றேன் ஆங்கி லத்தில். ஏனென்ருல் அவன் பல தேசங் கள் சுற்றுவதினால் தமிழ், தெலுங்கு, மராட்டி, குஜராத்தி, சிங்களம் முதலிய பாஷை தெரியுமென்றும் கன்னடம் தாய்ப் பாஷை என்றும் சொன்னபடியால்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." பார்க்கலாம் என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னார். பிறகு "நரசப்பா (அதுதான் அவன் பெயர் என்று சொன்னான்.) சுதாமன் நரசப்பா செய்தமாதிரி இது கலையை விற்ப தாகாது. இவ்விடம் மன்னனுமில்லை; மன் னன் மகளுமில்லை. நீயாக நேரே வாசிக்கப் போவதில்லை. உன்னுடைய நிழல்தான் செய்யப்போகிறது. கொஞ்சங் கொஞ்ச மாக யாசகம் செய்வதுபோல் நாங்கள் மொத்தமாகக் கொடுக்கிறோம். உன் சம்சா ரத்துடன் இவ்விடம் வந்துவிடு" என்ருர்.

"அப்படியல்ல சுவாமி, முன்னோர்களின் கட்டளையை மீறலாகாது. ஏதாவது கொடுப் பதானால் கொடுங்கள்; இல்லையேல் நான் போகிறேன்" என்ருனவன்.

"இருப்பா! கொஞ்சம் சிந்தனை செய்து பார். இந்தா, இதை வாங்கிக்கொள் தற்சம யம். அடே, பஞ்சு, இட்லியும் காபியும் கொண்டுவந்து கொடடா நரசப்பாவிற்கு" என்று ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டி னார் அவன் முன்பு.

அதைப் பெற்றுக்கொண்டு இட்லி காபி சாப்பிட்டுவிட்டு, "சுவாமி, என்மீதுவருத்தப் படாதீங்க. நான் போகட்டுமா?" என்ருன்

தியாகுவா விடுபவர், "இருப்பா" இன்று படம் பிடிக்கப் போகிறோம். வந்து பார்த்தா யானால் அப்பொழுது தெரியும் உன் நிழல் தான் வாசிக்கும் என்பது" என்று பலவித மாக எடுத்துச்சொல்லி அன்று ஷூட்டிங் கிற்கு அழைத்துச்சென்று, ராஜோபசாரம் செய்து, அவனுக்கு அந்தக்காலத்தையும், தற்கால விஞ்ஞான நாகரிகங்களையும் எடுத் துச்சொல்லி, ஒருவிதமாக அவனைச் சம்மதிக் கும்படி செய்துவிட்டார் தியாகு.

நான் மனைவியை இழந்து மூன்று வருட மாவதினால், பெற்ருர் உற்ருர் இல்லாத நிலைமையில், நான் சமையல்காரப் பஞ்சு, வேலைக்காரக்கிழவர், குமாரின் செவிலித் தாய் காமாக்ஷி, குமார், இவர்களே எனது குடும்பம். அதனால் என் பங்களாவின் ஒரு பகுதியிலேயே, பதினான்கு வயதுடைய பெண் நர்மதா, பதினாறுவயதைத்தாண்டின குருதேவப்பா, பத்து வயதும், எட்டுவயது மான நஞ்சப்பா, யமுனா, இவர்களைக் கொண்ட நரசப்பாவன் மனைவி குடும்பம் வசிக்கலானார்கள்.

எங்கள் பட ஷூட்டிங்கிற்குத் தவருமல், நர்மதாவும், நரசப்பாவும் விஜயம் செய்வார் கள். குருதேவப்பா அவன் வித்தையைக் கற்பதிலேயே கவனமாக இருப்பான். நர சப்பாவின் வாத்திய வாசிப்பினால், எங்கள் சூர்யகாந்தம் இருபத்து இரண்டாயிரம்அடி நீளமாகி, படம் வெளிவந்த ஒரே வாரத்தில் போட்ட முதலுக்குமேல் கிடைத்துவிட்டது. தொண்ணூறு தியேட்டர்களில் ஒரே சமயத் தில் வருஷக்கணக்காக ஓடிற்று. எங்கள் ஆட்களுக்கெல்லாம் சம்பளம் கூடுதல், போனஸ் எல்லாம் ஏராளமாகக் கொடுத் தோம். நரசப்பாவின் மனைவியும் பெண்ணும் வைரமாகக் காட்சியளிந்தார்கள். பல முத லாளிகள் நரசப்பாவின் மீது வலை வீசினார் கள். நானும் தியாகுவும் நரசப்பாவை, அவன் முன்னோர் சபதத்தை நினைப்பூட்டி இப்படியே இருப்பதுமேல் என்று சொல்லு வோம். அவனும் அப்படிப் போகக் கூடிய வனல்லவல்லவா?

அடுத்த படத்திற்கான ஏற்பாடும், சூர்ய காந்தத்தை ஹிந்தியில் எடுப்பதிலும் நாங் கள் முனைந்ததில் வியப்பில்லை யல்லவா?

நரசப்பாவின் வருகை படஉலகில் மட் டும் வெற்றிபெற்றதுடன் நின்றுவிடவில்லை. எனது குமாரின் உலகத்திலும் அதிசய மாறுதல் உண்டாயிற்று. சீதோஷ்ணத்தை ஏற்று உரம்பெற்ற தளிர்மேனி, நீண்ட அடர்த்தியான பின்னல், எடுப்பான மூக்கு, வேல்போன்ற விழி, குறுகிய இடை, நிதான உயரம், மருண்ட பார்வையும் புன் சிரிப் பும் கொண்ட இயற்கையான முகம், இவ் வளவிலும், நிறம் மாநிறம் என்று சொல்லு

வார்களே அதில் சேர்ந்ததுதான். இருந்தாலும் பார்த்த மாத்திரத்தில் அழகி என்று நினைக்கும்படியாகத் தோன்றின நர்மதாவின் ரூபமும் அமைதியான குணமும் குமாரை வசீகரித்து விட்டன போலும். அவள் வந்த நிமிஷம் முதல் மாமிமாமி என்று அவளைச்சுற்றிவரலானான். அவளும் அன்புடன் அவனை நடத்தி வந்தாள். வர, வர, அவன் என்னிடம் வருவதே அரிதாகி விட்டது. அவனை அழைத்துக் கொண்டு நர்மதா தங்குதடையில்லாமல் எங்கும்வருவாள். முக்யமாக ஒத்திகை நடக்குமிடத்தில், அதுவும் நடனங்கள் ஒத்திகையாகும் பொழுது நிச்சயம் அவ்விடத்தில் ஆஜர்.

அவர்கள் வந்து ஆறு மாதமிருக்கும். அடுத்த படத்திற்கான பரதநாட்டியம் ஒத்திகை நடந்து கொண்டிருந்த சமயம். ஒருநாள் சாயங்காலம் உலாவிவிட்டு வந்தவன்

மாடியிலுள்ள எனது ஹால்பக்கம் வந்த பொழுது ஜல் ஜல் என்ற சதங்கைச் சத்தமும், பாட்டும் காதில் விழவே வாயிற்படுதா மறைவில் நின்று எட்டிப்பார்த்தேன். என்ன ஆச்சர்யம்!

"நடராஜன் நடனங்கண்டு மையல் கொண்ட நங்கையைக் கண்பாராய்" என்று பாடியவண்ணம் நடராஜ பிம்பம்போல் காலைத் தூக்கிய வண்ணம் நின்ருள் நர்மதா. "சபாஷ் மாமி! அவளைப்போலவே ஆடிவிட்டாயே" என்று கைதட்டிச் சிரித்தான் குமார். எதிரிலுள்ள மேஜைமீது உட்கார்ந்தபடி அடுத்த பதம் ஆடத்தொடங்கினுள். பாதி ஆகும் பொழுது நான் நிற்பதைக் கவனித்து விட்டான் குமார், உடனே,

"அப்பா வந்துட்டார்" என்று சத்தம் போட்டுவிட்டான். நான் உள்ளே சென்றதும், லஜ்ஜையினுல் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டாள். சற்றுப்பொறுத்து, சாப்பாட்டிற்கு மேல், குமாரைவிட்டு நர்மதாவை அழைத்து வரும்படி சொன்னேன்.

நர்மதாவைப் பார்த்ததுமுதல் எனது படக் கண்ணுனது, அவள் முக அமைப்பும் அங்கக்கட்டும், வீணுநாதம் போன்ற குரலும் படவானில் ஓர் நக்ஷத்ரமாக விளங்கப் பிறந்தவளென்று மனதிற்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது. நரசப்பாவின் கொள்கைக்குப் பயந்து, அதை வெளியிடவில்லை. இன்று அவள் இயற்கையாக ஒருவரும் சொல்லிக் கொடுக்காத நிலைமையில் பார்த்துக் கொண்டிருந்து இவ்வளவு அற்புதமாக ஆடினதால் என் மனதில் ஓர் மாறுதலும் துணிச்சலும் தோன்றின.

சாப்பிடும்பொழுது நானும் தியாகுவும் இதைப்பற்றிப்பேசி ஒரு முடிவிற்கு வந்தோம். பின் தங்கின என்னை முன்னேக்கிச் செல்லச் செய்தது தியாகுவின் அழுத்தமான தீர்மானம். அவள் வந்ததும்,

"நர்மதா! உன் ஆட்டம் ரொம்ப பேஷ்! எடுக்கப்போகும் படத்தில் உன்னுடைய நாட்டியத்தைச் சேர்க்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். படத்தில் நீ மிகவும் அழகாக இருப்பாய், நாளை முதல் உனக்கு ஆசிரியரைக் கொண்டு பரதநாட்டியம் கற்பிக்க ஏற்பாடு செய்கிறேன். மேலும், தமிழ், இங்கிலீஷ், ஹிந்தி மூன்றும் எழுதப் படிக்கக் கற்பிக்கவும் ஏற்பாடுசெய்கிறேன். உனக்கு விருப்பம்தானே" என்றேன்.

"எனக்கு மிகவும் விருப்பம். ஆனுல் அப்பா சம்மதிக்கவேண்டுமே" என்ருள்.

"தியாகு மாமா உன் அப்பாவைச் சரிப்படுத்தச் சென்றிருக்கிருர். நிச்சயம் சம்மதிக்கச் செய்துவிடுவார்" என்றேன்.

"தங்கள் சித்தம் என் பாக்கியம்" என்ருள்.

"அட, பிச்சைக்காரப் பெண்ணுகத் திரிந்த பெண்ணின் வாயில் எத்தகைய வாக்கியம்? இயற்கையா? அல்லது ஒத்திகை பார்ப்பதைப் பார்த்ததன் பயனு? எதுவானுலும் பெண் நல்ல அறிவாளி" என்றது என் மனம். அதைத் தொடர்ந்து,

"நர்மதா! உனக்கு ஹிந்தி நன்ருக வரும் என்று நினைக்கிறேன்" என்றேன்.

"நன்னுப் பேசுவா. அன்னிக்கி சூர்யகாந்தம் ஹிந்திப் பேச்சு எடுக்கும் பொழுது விமலா நன்ருக உச்சரிக்கவில்லை. இவள் அவளுக்குச் சொல்லிக்கொடுத்தா. அப்படீஒன்னும் நன்னு சொல்லலை, தியாகு மாமா இவள் பேச்சையே ஒலிபண்ணிட்டார்" என்ருன் குமார்.

"அட, தியாகு பலே பேர்வழி" என்று முடிக்கும் சமயம்,

"என்ன சார் செய்துவிட்டேன்" என்று கேட்டவாறு வந்தார் தியாகு.

"போன காரியம்?," என்றேன்.

"வெற்றி" என்ருர்.

குமார் சொன்னதைச் சொல்லி, "நான் சொன்னதில் வியப்பென்ன?" என்றேன்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும்" என்று சிரித்தார்.

பிறகு மறுநாள் முதல் நர்மதாவிற்கு எல்லா உபாத்தியாயர்களும் கற்பிக்கத் தொடங்கினர்கள். 'அபூர்வ ரத்னு' என்ற படத்தில் நர்மதாவின் நாட்டியம் புகழ் ஏணியில் உச்சிக்குச் சென்றுவிட்டது. இதில் ஒரு விசேஷம், நரசப்பாவிற்கு எண்ணிறைற்போல் இரண்டு வர்ணமும் நாலைந்து பாட்டுக்களுமே வாசிக்கவரும். ஆதிகர்த்தாக்கள் பல ராகங்களைக் கையாண்டு வந்திருப்பார்கள். நரசப்பாவின் அறிவிற்குத் தகுந்தபடி கற்பித்தார் போலும் அவர் தந்தை. ஆனுல் ஒரு தலைமுறை தாழ்ந்தால் மறு தலைமுறை மேலோங்குவது சர்வ சாதாரணந்தானே. குருதேவப்பாவிற்குத் தற்காலம், சங்கீத உலகிலேயே சஞ்சரித்ததினுலோ, பூர்வத்தின் புண்ணியத்தினுலோ, பலவித ராகங்களைக் கையாண்டுவரலானுன். அவனுக்கும் சங்கீத டைரெக்டர் நல்ல பயிற்சியளித்து, 'அபூர்வ ரத்னு'வில் ஒரு அருமையான ராகமாலிகை மூக்கினுல் மட்டும் வாசிக்க ஏற்பாடு செய்தார். நர்மதா குருதேவப்பாவினுல், அப்படம் நாங்கள் எதிர்பார்த்த அளவிற்குமேல் புகழும் பொருளும் தந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

சாபம்

வை. சுப்ரமண்யம்

கோயில் பிராகாரத்தில் வெயில் சுட்டெரித்துப் பொசுக்கிக் கொண்டிருந்தது. அந்த வெப்பத்திலும் ஒரு குளுமை அவள் மனதில் விரவியிருந்தது, வெயில் சூட்டுக்குப் பயந்து நிழலைத் தேடி அலைகிறவர்களின் மனப்பான்மைக்கு மாறாக, அவள் மனதில் மட்டும் குளுமை ஏற்படக்காரணம்? அவள் திருஷ்டியில் அந்தக் கோயிலின் கோபுரத்தின் மீதிருந்த கும்பம் பட்டுவிட்டது; அவள் முகம் மலர்ந்தது. கால்கள் எட்டுக்களைத் தள்ளியே போட்டன; வேகம்! மனசிலும்' நடையிலும் ஏககாலத்தில்!

வெயில் அத்தனை தீட்சண்யமாக இருக்கப் போகிறது என்பதை எதிர்பார்க்கவில்லை அவள்; அப்படியே தெரிந்திருந்தாலும், அவள் அதை லட்சியம் செய்யப் போகிறவள் இல்லை. அவள் நடந்துதான் ஆகவேண்டும், நடந்து நடந்து, உடம்பில் நடக்கத் தெம்பு இருக்கிறவரை நடந்து, வாழ்க்கையில் நம்பிக்கை இருக்கிற வரையில் நடந்து, ஊர் ஊராகப் போகவேண்டும். வெயிலைப் பாராட்ட முடியாது. கடும் மழையைக் கண்டு காலத்தை விரயம் செய்ய முடியாது. புயலே அடித்தாலும், சூறாவளி அடித்து உலகமே அதில் அகப்பட்டுத் தத்தளித்தாலும் அவள் இயங்கிக்கெண்டுதான் இருக்க வேண்டும். பசியின் உணர்ச்சி அவள் உடம்பில் இருக்கும் வரை அவள் யந்திரம்போல் இயங்கினால்தான் முடியும்! பிச்சைக்காரி அவள்; இரண்டு கைகளையும் நீட்டி, யாராவது கொடுத்ததை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் அடுத்த வேளை ஏற்படும் பசியைத் தணிக்க, மறுபடியும் இரண்டு கைகளையும் நீட்ட வேண்டும்.

அவள் உடம்பில் ஏற்படக் கூடியது இன்றைக்கெல்லாம் ஒரே ஒரு பசிதான்; வயிற்றிலே தோன்றி கிள்ளிக்கொண்டிருக்கும் ஒரே பசி; அதைத் தணித்துக்கொள்ள அவள் மேற்கொண்டிருந்த சாதனம் யாசகம்!

*　　*　　*

கோயில் பிராகாரத்தை வந்தடைந்தாள் அவள். செங்கல் தளத்தில் அனல் காய்ந்துகொண்டிருந்தது. அந்தத் தளத்திற்கும், உயரே வானத்திற்கும் இடையே காய்ந்த வெயிலின் காரணமாக ஏற்பட்டிருந்த விசித்திர ஒளியாட்டத்தைப் பார்த்துக் கொண்டே யிருந்தாள் அவள். பக்கத்திலிருந்த பிராகாரத்து மதிலையொட்டி நிழல் பரவியிருந்தது. வில்வ மரங்களும், மாமரங்களும் அடர்ந்து வளர்ந்திருந்தன. கீழேபுல் தரை; தரைமேல், உதிர்ந்து சருகாய்விட்டிருந்த இலைகள். இலைச் சரகின்மீது கால்களை ஊன்றி, 'சரக் சரக்' கென்ற சப்தத்துடன் நடந்து, கோயில் கர்ப்பக் கிரஹத்திற்குச் சரியாகப் பிராகாரத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டாள், அவள் முகத்தில் இப்போது பூரண திருப்தியின் அறிகுறி தென்பட்டது. அவள் அப்படி உட்கார்ந்து கொண்ட பிறகு அடிக்கடி திரும்பி யாரையோ எதிர்பார்ப்பதன் தோரணையில் கோவிலின் வெளி வாசல் புறம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்தது வேறு யாரையும் அல்ல; அவளுடைய மகன் பிச்சைக்கு ஊர்த் தெருவுக்குள் சென்றிருந்தவனைத்தான்.

வேறு இடத்திலிருந்து நடந்து அந்த ஊரைக் குறிவைத்துக்கொண்டு வந்தனர் தாயும் சேயும். கோயில் கோபுரம் அவர்களை அழைத்தது; கோபுரத்தின் மீதிருந்த கும்பத்தைக் குறியாக வைத்துக்கொண்டு, 'விடுவிடு' என நடந்துவந்தனர். அவள் உடம்பு அசதியால் அவளைக் கெஞ்சிக்கொண்டிருந்தது; அதனால் மகனை அடையாளம் சொல்லி அனுப்பிவிட்டு, அவனுக்காக அந்தப் பிராகாரத்தண்டை காத்திருந்தாள்.

மகனுக்குப் பன்னிரண்டு வயசுதான் ஆகிறது; காலம் விரித்த கோலத்தில் அவன் ஜன்மம் பிச்சையெடுக்கவென்று ஒதுங்கிவிட்டது: அவளுக்கு உழைப்பதற்கு உடம்பில் இனிமேல் தெம்பில்லையென்று சொல்லமுடியாது. ஆனால், அவளுக்கு உழைப்பதில் இஷ்ட

மில்லை; அவள் மகன் வயசுவந்து உழைத்துப் போடுமட்டில், தானும் அவனுமாகச்சேர்ந்தே பிச்சையெடுப்பது என்றுதான் அவள் தீர்மானித்திருந்தாள். அந்தத் தீர்மானத்திற்குச் சரியான முகாந்தரம் இருந்தது. அத்தனைக்கு அவள் உள்ளம் வைரம் பாய்ந்து இருந்தது.

வயிற்றில் பசி அள்ளியது. வெளி வாசல் புறம் திரும்பிப் பார்த்தாள். அங்கேயும் வெயிலின் ஒளியாட்டம் இந்திரஜால வித்தையைச் செய்துகொண்டிருந்தது. அந்த ஒளியாட்டத்தை ஊடுருவிப் பார்த்ததில், யார் யாரோ மனிதர்கள் போவது தெரிந்தது. அந்தத் தோற்றத்தில் ஒரு விசேஷம்; பூச்சி பறப்பது போன்ற வெயிலின் ஒரு உருவமாக எங்கும் பரவியிருந்த அந்த ஒளியாட்டத்தினிடையே, அந்த மனித உருவங்கள் ஒரே ஆட்டமாக ஆடிக்கொண்டிருந்தது போலத் தெரிந்தது.

இந்த விசித்திரக் காட்சியையும், தன் பசிக் கொடுமையினிடையே, பார்த்து அனுபவித்தாள் அவள். அவளுக்கு இருக்கை கொள்ள

வில்லை. பசிக்குப் போக்குக் காட்டும் உத்தேசத்துடன் எழுந்து மெல்ல நிழலின் ஓரமாகவே நடந்தாள். மேலண்டைப் பிராகாரத்தையடைந்து கொஞ்சம் வேகமாக நடக்கத் தொடங்கினாள். ஏனெனில், அதற்குள்ளாக ஒருவேளை தன் மகன் வந்து தன்னைக் காணமல் விழித்தால் என்ன செய்வது என்ற கவலை.

* * *

மறுபடியும் பழைய இடத்திற்கே வந்து உட்கார்ந்தபோது அவளுடைய மனம் சிந்திக்கவாரம்பித்தது. வாழ்க்கையின் பழைய நாளைய சம்பவங்கள் எது வேண்டுமானாலும், நினைத்த மாத்திரத்தில் மனக் கண் முன்னால் வரத் தயாராயிருந்தன. அவள் அப்போதைய தனிமை நிலையில், அதனுடன் சம்பந்தங்கொண்ட ஒரு பழைய காட்சியைத்தான் நினைத்துக் கொண்டாள். சரசர வென்று அந்தச் சம்பவங்கள் அப்போதே நடப்பது போல அவள் கண் முன்னால் வந்து நின்றன. பசியையும் மறந்தவாக்கில் அவள் கண்களை மூடிக்கொண்டு, குனிந்து உட்கார்ந்த நிலையில் மெய்ம்மறந்து விட்டாள்.

உடலைப் பொறுத்தவரை ஒரு கட்டையாக இருந்தது; மனசில் மட்டும் ஞாபகத்தின் சக்தி இயங்கிக்கொண்டிருந்தது. யந்திரம் போன்று ஞாபகங்கள் எழுந்தன.

பிள்ளைத்தாச்சி என்ற நிலையில் அவள் கணவன் இறந்துவிட்டான், அவளுக்கு வேறு ஆதரவு கிடையாது. மானமாக வாழ்ந்த ஊரைவிட்டுச் சென்று வேறிடத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தாள். வீடு பெருக்கி, பாத்திரம் துலக்கி, வேலை செய்து மாசம் இரண்டு ரூபாய் சம்பளம் வாங்கி வயிற்றைக் கழுவிக்கொண்டிருந்தாள் —

அந்தப் பையன் — இப்போது பிச்சைக்குச் சென்றிருக்கிற பையன் — அப்போதுதான் பிறந்தான். அவன் பிறந்த பிறகு அவன் முகத்தையாவது பார்த்து ஒரு தரம் சந்தோஷப்பட்டுவிட்டுச் செத்துப்போகக் கூடாதா தன் கணவன் என்று எண்ணி வருத்தப்பட்டாள் —

ஒரு வருஷம் ஓடிற்று; இந்த ரீதியில் மெள்ளக் காலத்தை ஓட்டிவிடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தாள் அவள்: தன் மகன் பெரியவனாக வளர்ந்து அந்தமாதிரி கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதினின்றும் விடுதலை அளிப்பான் என்ற ஒரு ஆசையுடனே ஒவ்வொரு நாளையும் பிடித்துப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்தாள். அவள் மனசில் இதைத் தொடர்ந்து சில கவலைகள்; தன் பிள்ளையை எப்படியாவது இரண்டு எழுத்து கற்றுக்கொள்ளச் செய்யவேண்டும் என்பது. (இரண்டு எழுத்துக்கள் கொண்டதுதான் 'விதி' என்பதும், அதைத் தெரிந்தோ தெரியாமலோ சிலர் கற்றுவைத்திருந்தனர். அவளும் விதியைப்பற்றி ஒரு தினுசாக முடிவுகட்டியிருந்தாள்.) விதி அவள் விஷயத்தில் ஒதுங்கி நின்றுவிடவில்லை. முதலில் அவள் கணவன் இருக்கும் இடந்தேடிக் கண்டு பிடித்து, அவனைக் கொண்டுபோய் எமனிடம் சேர்த்தது; இப்போது வேறு ரூபத்தில் அவளைத் தேடிக்கொண்டு வந்திருந்தது. அவள் விதியைப் பற்றிக் கட்டியிருந்த முடிவுக்கும், அது அவள் முன்பாக நடந்துகொள்ளப் போகிற மாதிரிக்கும் வித்தியாசம் எப்படி, தெரியுமா? மலைக்கும் மடுவுக்கும்! அவளுக்கு ஒன்றும் தெரியாது: பாவம் —

பக்கத்து ஊரில் தெப்போற்சவம்; வீட்டில் எல்லோரும் போயிருந்தனர். அவள் வேலைகளைச் செய்து முடித்துவிட்டு வெளியே போவதற்கிருந்தாள். குழந்தையை அது இருந்த இடத்திற்குச் சென்று, எடுத்துக் கொண்டு வந்து, வீட்டுக்குப் போக விடை கேட்கும் தோரணையில் நின்றாள். வீட்டு எசமானி, அவள் சற்றும் எதிர்பாராதவிதமாகச் சொன்னாள்; 'இந்தா, அம்மனூரா, கொஞ்சம் சோறு போடறேன்; சாப்பிட்டுட்டு இங்கேதானே இரு; ராவிக்கி நாங்க வந்ததும் வூட்டுக்குப் போவலாம். ஊட்டுக்குக் காவல் இருக்கணம். நாளைக்கு நீ கூடப் போவலாம் தெப்பத்துக்கு'' என்றாள். அவள் பெயர் வேறு; அந்தப் பெயரால் கூலி வேலை செய்துகொண்டு வாழ்ந்தால் இறந்துபோன தன் கணவனுக்குப் பிரீதியாக இருக்காது என்று எண்ணினாளோ அல்லது வேறு என்னவோ தான் பிறந்த ஊரின் பெயரால் தன்னை மற்றவர் கூப்பிடுவதைத்தான் விரும்பினாள் அவள் 'அம்மனூரா' என்று. அவர்கள் எல்லோரும் தெப்பத்துக்குச் சென்றனர். வீட்டு ரேழியில் அவள் படுத்துக் கொண்டிருந்தாள். மற்ற அறைகளை எல்லாம் பூட்டிக்கொண்டு சென்றிருந்தனர். மணி ஒன்பது இருக்கும். சார்த்தியிருந்த வாசல் கதவு தடதடத்தது. அவளுக்கு முழிப்புக் கொடுத்தது. ''அதற்குள்ளாகவா தெப்பத்துக்குப் போனவர்கள் வந்துவிட்டார்கள்' என்ற சந்தேகத்துடன் கதவைத் திறந்தாள். பின்னால் நிலைத்துக் கிடந்த இருளை ஊடுருவிக்கொண்டு அவள் எதிரே நிலைப்படியருகே நின்றிருந்தது ஒரு உருவம், அவள் கூர்ந்து நோக்கினாள். வீட்டு எஜமானன்! தனித்து நின்றிருந்த அவன் தோற்றம் அவள் உடலைக் கடகடக்கச் செய்தது. ஸ்தம்பித்திருந்த நிலையினின்றும் அவசரமாக விடுவித்துக்கொண்டு, ''அவுங்கள்ளாம் வல்லியா?'' என்று கேட்டாள். அவன் உள்ளே

"இதுவே புதிய லக்ஸ் டாய்லட் சோப்!"
LUX TOILET SOAP
"மனோரஞ்சிதமான புதிய பரிமளம்!"
"புதிய ரோஜாநிற காகிதத்தில் சுற்றப்பட்டது!"
LTS. 194-23 TM.
☆ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ☆

நுழைந்தான். "அவுங்களை வேறே துணை சேர்த்துவிட்டுத் திரும்பிட்டேன் அம்மனூரா......" அவள் உள்ளம் கலகலத்துக் கொண்டிருந்தது. படுத்துக் கொண்டிருந்த குழந்தையை எதற்காகவோ இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டாள். வாசல் கதவைத் தள்ளிவிட்டு அதன்மீது சாய்ந்து கொண்டே அந்தப் பாவி சொன்னான்: "நிசமாச் சொல்றேன், அம்மனூரா! எத்தினி நாளா இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தேன், தெரியுமா? உன் அழகு என்னையே கொண்ணுகிட்டிருக்குது பொண்ணு; ஓம்மேல் எனக்கு ஆசைண்ணு தெரிஞ்சா உனக்குச் சந்தோஷம் வருமா இல்லியா........." அவன் பேசிக்கொண்டே இருந்தான். அவள் கீழே சடாரென்று குனிந்து எதையோ எடுத்தாள்......தலைக்கு உயரமாக வைத்துக்கொள்ளும் ஒதிய மரத்தால் செய்திருந்த கட்டை! அவன் மண்டையில் அதை வீசிவிட்டு, அவன் நெகிழ்ந்து விழுந்தவுடனே கதவைச் சடாரென்று திறந்துகொண்டு வெளியே ஓடிவிட்டாள். ஓடினாள்; ஓடினாள்..............வாழ்க்கையில் அதற்குப் பிறகு தங்கு தடங்கல் இல்லாத ஓட்டம்! ஒருவரை அண்டிப் பிழைப்பதனால் தானே அவள் வாழ்க்கையில் திடீரெனத் தேக்கம் ஏற்பட்டுவிட இருந்தது! தன் மனிதத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள அவளுக்குச் சிறந்த வழி தோன்றிவிட்டது! நெருக்கம்தான் மனிதனைக் காட்டிக்கொடுத்துவிடும்; அழகை—உணர்ச்சியை—காட்டிக் கொடுத்துவிடும்; விலகி இருந்தால் தப்பித்துக்கொள்ள முடியும்! அதன் பிறகு, அவள் விலகித்தான் இருந்தாள். மனித இனத்தினின்றும் விலகித் தனி வாழ்வு வாழ்ந்தாள். பிச்சைக்காரியாக மாறியும், இறந்துபோன தன் கணவனுக்குத் துரோகம் நினைக்காமல் வாழ்ந்து வந்தாள். அந்த நிலையில் மாறிவிட்ட எத்தனையோ பேர்களுக்கு அந்த வாழ்க்கை சாத்தியமாயிராமல் போவதைக் காண்கிறோம். ஆனால், அவளைப் பொறுத்தவரை அது முற்றிலும் சாத்தியமாகத்தான் இருந்தது. ஏனெனில், விஷம் கக்கும் பாம்பு போன்ற 'அந்தப்' பசியுள்ள மனிதர்களினின்றும் அவள் தனித்து நின்று வாழ்கிறாளே, அப்புறம் என்ன? ஆனால், அவளுக்குத் தோன்றியது என்ன, அந்த இக்கட்டான சமயத்தில்? அந்தப் பாவியின் கையினின்றும் தப்புவதற்கு வேறு துணையில்லை: அவளுடைய ஒரே துணை அன்றும்—இன்றும்—அந்தப் பிள்ளைதான். ஆண் பிள்ளையானாலும், சாண் பிள்ளைதானே என்ற தீவிரமான எண்ணத்துடன் அந்தக் குழந்தையை அந்த நிலைமையில் சரேலென்று பாய்ந்து எடுத்துக் கொண்டாள். உண்மையில் அப்போது அவன் காப்பாற்றாவிடினும், அவளுடைய பரிசுத்தத் தன்மைக்குப் பிரத்தியட்சமான சாட்சியாய் நின்றான் அவன்; இன்றும் நிற்கிறான். மனசில் கல்மஷம் ஏற்படாத அளவுக்கு அவன் அவள் கூடவே இருந்து வருவதன்மூலம், அவளைப் பேராபத்தினின்றும் காத்து வருகிறான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதற்குப் பிறகு அவள் விஷயத்தில் சிரமம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆண் இனத்தின்மீது அசைக்க முடியாதவாறு அவள் மனசில் ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. திருஷ்டியிலே எந்த ஆண்பிள்ளை எதிர்ப்பட்டாலும், ஒரு துரும்பை மதிக்கும் அளவிலேதான் மதிக்கத் தலைப்பட்டாள். அவள் மனசில் அந்தச் சம்பவமட்டில் அழித்துப் பெயர்க்கமுடியாது நன்றாகப் பதிந்துவிட்டது. இந்த அபவாதமே அவள் மனதை மிகவும் அலைத்தது. செத்துப்போய், கணவனின் ஆவியின்முன்னால் தன் ஆவி எப்படி விழிக்கப்போகிறது என்று பயந்தாள். எல்லையைமீறி ஒன்றும் நடந்துவிடவில்லையாயினும், தன் வாழ்க்கையில் கறைபட்டுவிடத்தானே ஆஸ்பதமாக இந்தச் சம்பவம் நடந்துவிட்டது என்று நினைத்து வருந்தினாள். புனிதம் என்பதன் முழுப் பொருளையும் உணராது போனாலும், அவள் அதன் மகிமையை, சூக்ஷ்மமாக அறிந்து அந்த லட்சியத்தை நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தாள். அவள் காதுகளில் எப்போது நினைத்துக் கொண்டாலும் கேட்கும் ஒரு குரல்; அது அவளுடையதேதான். அந்தப் பாவியின் முன்னால் நின்று அவனுக்கு அவள் இட்ட சாபம். "பாவி, துரோகமா நெனைச்சே! எம் மவன் கணக்கு வளந்து பெரியவனா ஆய்ட்டா, அவன் கையிலே துடப்பத்தைக்கொடுத்து உன்னை அடிக்கச் சொல்றேன். அவன் கையாலே செத்தேண்ணு தெரிஞ்சா மறு நிமிசம் நான் உசிரை வுட்டுக்கறேன்" என்று சாபம் இட்டாள் —

* * *

இந்த எல்லாச் சம்பவங்களும் அவள் நினைவுக்கு வந்தன. தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தாள். இன்னும் மகனைக் காணோம். அவள் வயிறு சத்தமிட்டுக் கொண்டேயிருந்தது. இத்தனை நேரம் இந்தத் தொடர் காட்சிகளை நினைத்துப் பார்த்த அவள் மனம் எதிர் காலத்தைப் பற்றியும் நினைத்தது. எத்தனை காலத்துக்கு இப்படி வாழ்க்கை நடத்துகிறது என்ற பிரச்னைதான் அது. உடனே தன் மகனுடைய எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்தாள்.

தன் வாழ்நாளில் அவனுக்காக உழைத்து இரண்டு எழுத்துக்கள் படிக்க வைத்து நாலுக்காக நடந்துகொள்ள அவனுக்கு வழி காட்டாமல் கையேந்திப் பிச்சை எடுக்க வைத்தோமே என்று வருந்தினாள்.

இலைச் சருகுகள் புரளும் சப்தம் கேட்டுத் தலையைத் தூக்கிப் பார்த்தாள். தன் மகனுக்குப் பதில் வேறு யாரோ வருவது தெரிந்தது. அவனும் அவளுடைய இனத்தினன் தான்; கையேந்திப் பிச்சை எடுப்பவன். பிச்சை எடுக்கும் கூட்டத்தாரைத் தவிர, மனித உறுப்பில் வேறு யாரைக் கண்டாலும் பற்றிக்கொண்டுதான் வரும் அவளுக்கு. "இந்தா" என்று இரண்டு கைகளாலும் அவளுடைய பசிக்குக் கொடுப்பவர்களைக் கூடப் பிடிக்காது அவளுக்கு; அத்தனை துவேஷம் மூளும்படி 'அந்தப் பாவி' செய்திருந்தான் அந்தக் காலத்தில்,

அவள் எதிரே வந்து உட்கார்ந்த அவனுக்கு, அவள் முன் கிடந்த வறண்டிருந்த அந்தப் பிச்சை ஓடு அவளை அறிமுகம் செய்து வைத்தது.

"இந்த ஊரிலே புண்ணியவாங்க ரொம்ப சாஸ்திபோல இருக்கு" என்றாள் அவளாகவே.

"என்னா?" என்றான் அவன். அவன் உடல் தள்ளாடிப் போயிருந்தது. மூப்படைந்திருந்த உடலில் வாழ்க்கையை அனுபவித்து விட்டதற்கு அத்தாட்சியான சுருக்கங்கள் காணப்பட்டன.

"இல்லை; நானா ஒரு முடிவு கட்டினேன்" என்றாள்.

அவளுடைய பூர்வாசிரமத்தைப் பற்றிக் கேட்டான் அவன். அவள் தன் கதையைத் திரித்துக் கூறினாள். தன் வாழ்க்கைத்திரையில் மறையாமல் நின்றிருந்த அந்தக்கறையைப்பற்றி அவள் சொல்லவேயில்லை; தன் 'அருமந்த' மகனுக்குக்கூடச் சொல்லவில்லை அவள்; இவனிடம் என்ன?

அவனுடைய கதையைக் கூறினான் அவன். அதை முடித்துவிட்டு அவன் வேறே எதற்கோ தயங்கினான். அந்தத் தயக்கம் பின்னர் உடனே மறைந்தது. அவனுள்

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ. 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ. 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ. 8

(V. P. Charges Extra)

தயாரிப்பவர்கள்:-

MRS. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு, மதராஸ்
2. ராஜா மெடிகல் ஹால், தர்மராஜா தெரு, பெங்களூர் கண்டோன்மெண்ட்.
3. நாதம் & கம்பெனி, மட்டஞ்சேரி, கொச்சி
4. ஷா கம்பெனி, மங்களூர் (S K)
5. L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தராம்தோலா தெரு, கல்கத்தா.
6. K. C மாத்யூ & Co., கோஸாஞ்சேரி, திருவாங்கூர்.
7. பயனீர் பார்மஸி, 183, மெயின் ரோடு, கொழும்பு (ஸிலோன்)

ஏதோ ஒரு நினைவின் எதிரொலியாக ஒரு பார்வை அவள்மேல் ததும்பியது. அவளை வெறிக்கப்பார்த்தான்.

"இப்படித்தனியா இங்கே இருக்கியே, உனக்குப்பயமா இல்லையா?" என்று கேட்டான்.

"தனி என்ன, தனி? பிச்சைக்காரிக்குத் துணை என்ன தனி என்ன?" என்றாள் அவள்.

"அப்படியில்லே; பிச்சைக்காரியென்றாலும் துணை வேணும், அம்மா".

"பிச்சைக்காரிக்குத் துணை பிச்சைக்காரன்தான்" என்றாள். அவள் மனதில் வேறு எந்தவித அர்த்தத்துடனும் சொல்லவில்லை. சாதாரணமாக வெள்ளை உள்ளத்துடன் சொன்னாள். இந்த வார்த்தைகள் அவன் கண்களில் ஒரு உணர்ச்சியைக் கொண்டு வந்து நிரப்பின. "அதான் நெனைச்சேன். பிச்சைக்காரிதான் நீண்ணாலும், நல்ல அளகுதான்!" என்றான். கறுத்து அடர்ந்திருந்த அவன் தாடியினிடையே, சபலத்தால் எழுந்த உணர்ச்சியுடன் சிரிக்கும் அசட்டுச் சிரிப்புத் தெரிந்தது.

அவள் விழித்துக் கொண்டாள். அவனுக்குச் சூடாகப் பதில் சொன்னாள்:

"அட, சே; பதம் கெட்ட மனுசா; நான் இத்தினி நாள் நம்ம இனத்தார் கிட்ட மாத்திரம் அனுதாபம் கொண்டிருந்தேன்; இன்னக்கோட போச்சு அந்த எண்ணமும்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

அவனும் எழுந்தான்.

"எங்கே போகப்போறே; அட, என் கூடவே வரவாணும் நீ; நீதான் என்னென்னமோ பேசறியே. அதுபொவுது. இப்போ தனியாத்தானே இருக்கோம்..............நல்ல சமயம்னு நான் நெனைக்கிறேன்...உனக்கும் சமயம் கெடைக்கணுமில்லே......என்றான்".

அவள் கண்கள் கலங்கின; இதயம் வெடித்துவிடும்போல அடித்துக்கொண்டது. அந்தப் பாவியின் நினைவு வந்தது அவளுக்கு. அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சரேலென்று பாய்ந்து ஓட எத்தனித்தாள், குழந்தைகளை மடக்கக் கை நீட்டுவது போல, இரண்டு கைகளையும் நீட்டி விரித்தான் அவன். வேதனை தாங்காத முகத்துடன் அவள் வெளி வாசலை நோக்கினாள்.

தற்செயலாய்க் கையில் ஓட்டுடன் வந்து கொண்டிருந்தான் மகன்: அவன் கை சரசரவென்று கீழே குனிந்து எதையோ எடுத்தது. மறு விநாடி அந்த மிருக இச்சைக்காரன் தலையில் பின்புறமாக வந்து தாக்கியது ஒரு கருங்கல். பதைத்து நின்றிருந்தாள் அவள்.

சுருட்டிக்கொண்டு கீழே விழுந்த அவனுடைய உடல் மேல் மூச்சுக் கீழ் மூச்சினால் இழுத்துக் கொண்டிருந்தது. கண்களைக் கொண்டு சொருகியது.

"மவனே காப்பாத்தினியே; அண்ணக்கி நீ குழந்தை.........நானே தப்பிச்சுட்டேன்; தலைக்கட்டை காப்பாத்திச்சு. இண்ணக்கி நீதான் என் மானம் காத்தே. அப்பா! நம்ப இனம்னு நம்பி மோசம்போகப் பாத்தேன்" என்றாள்.

கீழே கிடந்தவன் உடல் நெளிந்தது.

"அம்மனாரா........."என்று முனகினான்: "நான்தான்...............உன் சாபம் பலிச்சுது........." என்றான்.

அதிசயித்துக் குனிந்தாள் அவள்: திறந்த வாய் மூடவில்லை. ''பாவி, நீயா?'' என்றாள்.

''ஆமாம்.........'' என்று முணகினான். அவன் உயிர் பிரிந்தது, அவள் திகைத்து நின்றாள். மகனும் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றான். அவள் இட்ட சாபம் நிறைவேறியது; அது மட்டுமல்ல; தன் மகன் கையால் நிறைவேற்றப்படவேண்டும் என்று அவள் கோரியபடியேதான் அந்தச் சாபம் நிறைவேறியது. அவள் மனம் அதற்காகச் சந்தோஷப்பட்டது. ஆனாலும் அவள் உள்ளம் அந்தப் பாவியின் பிரிவுக்காகப் பச்சாத்தாபப்படத்தான் செய்தது! அவன் மனிதத் தன்மையை இழந்துபோய் மிருக வடிவிலே தன் உணர்ச்சியைக் காட்டினாலும் அவள் இன்னும் மனுஷத் தன்மை கொண்டுதான் விளங்கினாள்!

தெய்வப் பிறவி

கி. சந்தானம்

மீனா மின்னற் கொடிபோலிருந்தாள். பாவம்! பச்சைப் பசுங்கொடியைப் பட்ட மரத்திலா சுற்றிவிடவேண்டும் என்று பலருக்கு ஏச்சுப் பேச்சாயிருந்த காலமும் ஒன்றிருந்தது. ஆனால், இன்றோ அவளைத் தெய்வப் பிறவியாகக் கருதினர் அவ்வூரார்.

சிற்றூர் தன் பெயருக் கேற்ப ஒரு சிறு கிராமம்தான். கோவிலும், குளமும், குளத்தங்கரை அரச மரமும் தவிர அங்கு ஒன்றுமில்லை. ஆனால் மீனா பிறந்ததுமே அவ்வூர் சோபை யடைந்தது என்னலாம். ஒரு ஏழை உபாத்தியாயருக்குப் பிறந்தவள்தான் அவள். இருந்தாலென்ன, சேற்றிலே பிறந்தால் செந்தாமரை சோபிக்காதா? உருவமும் உள்ளமும் ஒருங்கே நலன்பெற அமைவது துர்லபம். முழுமதி வதனமும் குழந்தை மனமும் படைத்திருந்ததால்தான் மீனா ஊருக்கே செல்வமாய் வளர்ந்தாள்.

சுக்கில பட்சத்துச் சந்திரன்போல வளர்ந்து அவள் பதினாறு கலையும் பெற்றுவிட்டாள். அப்புறம் கிருஷ்ண பட்சம் ஆரம்பித்தது—அவளுக்கல்ல அவள் பெற்றோர்களுக்கு. பெருவாழ்வு வாழவேண்டாம், பதினாறு பேறும் பெற வேண்டாம், கண்ணுங் கண்ணீருமாய் நில்லாமல் எங்கேயாவது தங்கள் குழந்தை, சோற்றுக்குத் துணிக்குக் கஷ்டப்படாமல் சௌக்கியமாயிருந்தால் போதும் என்று எண்ணாத தாய் தந்தையரும் உண்டோ? வேற்றிடம் போக வேண்டிய அவசியமின்றி ஊரும் குடித்தனமுமாய், தம் வாழ்வின் பெரும்பாகத்தைக் கழித்துவிட்ட சுந்தரமய்யருக்குக் கடைசியில் சகடயோகம் பிறந்தது. ஜாதகமும் கையுமாய் அவர் சுற்றாத ஊரில்லை, படியேறாத வீடில்லை, கேட்காத ஜோஸ்யரில்லை; ஆனால் ஆகுநாளன்றி எதுவும் ஆவதில்லை. ஆவதும் நம் இஷ்டம்போல் அமைவதில்லை. ஜாதகம் பார்த்த பேரெல்லாம் ஒருபடியாகப் புகழ்ந்தனர்—மகோந்நதமான ஜாதகம். யோகத்தின்மேல் யோகம், தெய்வப்பிறவி! ஆனால் நாளும் கோளும் என் செய்யும்?

மனவெழுச்சிக்கு ஒத்தபடி தளர்வும் இருப்பது சகஜம். அன்பின் குழைவிலே, உத்ஸாகப் பெருக்கிலே, தம்முடைய நிலைமைக்கு மீறிக்கூட முயன்ற சுந்தரமய்யர், காரியம் கைகூடாததால் நாளடைவிலே சோர்வு எய்தினார்: மனம் மாழ்கவே சரீரமும் ஒடுங்கிற்று. இனி காலம் தாழ்க்கக் கூடாதென்று பக்கத்து ஊரில் நாற்பத்தைந்து வயதுள்ள வைத்யநாதய்யர் என்பவருக்கு மீனாவை இரண்டாந்தாரமாகக் கொடுத்தார்.

பெண்ணைப்பெற்று அதைக்கண்ணினுள் மணிபோல் வைத்துக் காப்பாற்றியவர்களுக்குத்தான் தங்கள் அருமைக்குழந்தையைப் புக்ககம் அனுப்பும்போது ஏற்படும் துக்கம் அறியமுடியும்.

இதனாலோ அல்லது "கண்நிறைந்த காளைக்கு வாழ்க்கைப் படுத்தாமற்போனோமே" என்ற துயரத்தாலோ சுந்தரமய்யர் படுத்துவிட்டார். குதிரை படுத்தால் எழுந்திருப்பதும் உண்டோ?

நல்லது என் பங்கு, அல்லதெல்லாம் அவன் பங்கு என்பதுபோல மீனா சின்னஞ்சிறு குழந்தையாய் உல்லாசமாய் ஓடிவிளையாடிய போதல்லாம் ஊரில் ஒருவர் பாக்கியின்றி எல்லாரும் "எங்கள் மீனா" என்று பெருமை பாராட்டினர். அவளுக்கு வயது வந்தவுடன் பொறுப்பு பெற்றோரைச் சேர்ந்து விட்டதல்லவா? ஆகவே "நன்றாயிருக்கிறது! குதிர் போலப் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு எப்படித்தான் அவர்களுக்குத் தூக்கம் வருகிறது?" என்று அவர்கள் பேசினர். ஓடியாடிப் படாதனபட்டு, கடைசியில் எப்படியோ மீனாவுக்குக் கல்யாணம் என்று ஒன்று செய்து வைத்தும் அவர்கள் சும்மா இல்லை. "அட பாவமே! கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பதுபோலப் போயும் போயும் ஒரு கிழவனிடமா கொண்டுபோய்த் தள்ளவேண்டும். ஆற்றிலேகுளத்திலே தள்ளினாலும் பாதகமில்லையே" என்று ஏசினர்.

டால்டாவில் செய்த குலாப் ஜாமூன்கள்

1 பவுண்டு சர்க்கரையில் நீர்க்க பாகு தயாரித்து அதில் சில துளிகள் பன்னீர் ஊற்றி சூடாக வைத்திருக்கவும். 1 அகப்பை மைதாமாவில் 1 தேக்கரண்டி டால்டாவை தேய்க்கவும். ½ பவுண்டு திரட்டுப்பாலை பொடிசெய்து அரித்து மைதாமாவுடன் நன்ருய் கலக்கவும். சிறிதளவே ஜலம் சேர்த்து கலவையை நன்ருக பிசைந்து கெட்டியாகச் செய்துகொள்ளவும். பிசைந்த மாவை சிறிய நீண்ட உருளைகளாக பிடிக்கவும். டால்டாவை சூடாக்கி மிதமான சூட்டில் பொரிக்கவும். குலாப் ஜாமூன்கள் சுற்றிவர சிறுசிவப்பானதும் தனியாக எடுத்து, வடித்து, பிறகு சூடான பாகில் ஊறவைக்கவும்.

குடும்பத்திற்கு ஊட்டமளிக்கின்றன!



மூளைக்கு விசேஷமான உணவுகள் எவை?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 98-23 TM

சுந்தரமய்யர் உயிர் நின்றும் அவர்கள் வாய் நிற்கவில்லை. "அடபாவி! மோசம் செய்து விட்டானே! குதிரை ஓடுமே தள்ளியது மல்லாமல் குழியும் பறித்ததாம் என்றபடி" என்றெல்லாம் பலபடியாகப் பேசினர்.

ஆனால் இந்த ஊர்வம்பெல்லாம் மீனுவின் உள்ளத்திலே பதியவில்லை. தானும் தன் மனதுமாக அவள் தனித்து நின்றாள்.

அவள் உள்ளத்தில் ஓடிய எண்ணங்கள் எவை என்று இயம்பமுடியும்? தன் யௌவன எழிலை அவள் உணரவில்லையா? பருவத்திற்கேற்ற உணர்ச்சி எங்கே சென்றொளிந்தது? யௌவனம் கடந்த ஒருவனை அவள் எங்ஙனம் மணக்க இசைந்தாள்? இப்படிக் கேள்விமேல் கேள்வி நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். ஏனெனில் பதில் அளிக்கவேண்டிய பொறுப்பு நமக்கில்லை. ஆனால் ஒன்றுமட்டும் கூறலாம்.

தெருக்கூத்தென்பது முற்காலத்தில் அநேகமாய் எல்லாக் கிராமங்களிலும் நடக்கும் ஓர் விழா. இந்நாளில் அது அநேகமாய் மறைந்துவிட்ட தென்றே சொல்லலாம். சினிமா வந்த பின் நாடகங்களின் மவுசு கூடக் குறைந்துவிட்டது. ஆனால் அந்நாட்களில்—அதாவது சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு—தெருக்கூத்துப் பார்க்க ஊரே திரண்டு வரும். அதுமட்டுமல்ல. சுற்றுவட்டக் கிராமங்களிலிருந்துகூட ஜனங்கள் திரள் திரளாய் வந்து கூடுவார்கள். இப்படிப்பட்ட நாடகங்கள் இரண்டு மீனு பார்த்தாள்—ஒன்று அரிச்சந்திர நாடகம். மற்றொன்று சுகன்யா சரித்திரம். இவை இரண்டும் அவள் இளகிய மனதில் அழியாது பதிந்துவிட்டன. பதியிழந்தும், பாலனையிழந்தும், படைத்த நிதி இழந்தும், இனித் தன் கதியே இழக்க நேரிடினும் 'கட்டுரை இழக்கிலோம்" என்றியம்பிய அரிச்சந்திரன் மாண்பும், ராஜாதிராஜனுக்குப் பிறந்து, சீரும் செல்வமுமாய் வளர்ந்து, சௌந்தர்ய லாவண்யாதிகளாலே சோபித்த தன் யௌவனதசையிலே, கண்ணிழந்த கிழ ரிஷியாகிய ச்யவனரை மணக்கத் துணிந்த சுகன்யாவின் தியாகமும் யார் மனதைத்தான் உருக்கமாட்டா?

மீனு புக்ககம் சென்றாள். சுகன்யாவுக்கு நேர்ந்த கதியைக் காட்டிலும் தன்னுடையது எவ்வளவோ மேம்பட்டதென்று அவள் கருதியிருக்கவேண்டும். உண்மையில் அவளுக்கிருந்த மன நிலையில் தன்னுடைய கணவன் ச்யவன ரிஷியைக் காட்டிலும் கேவலமான நிலையில் இருந்திருந்தால்கூட அவள் அலக்ஷியப்படுத்தியிருக்கமாட்டாள். கேவலம் சரீர அழகிலே என்ன இருக்கிறது? கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன், மண் என்றாலும் மணவாளன். தனக்குக் கிடைத்த நாயகனிடத்திலே மாறாத அன்பு செலுத்தி அவன் மனம் கோணாது நடக்க வேண்டியதுதான் தன்னுடைய தர்மம் என்று அவள் நினைத்திருக்க வேண்டும். நம் பாரத தேசத்தில் பொதுவாக ஒவ்வொரு பெண்மணியின் மனோபாவமும் இதுதான் என்று சொல்லிவிடலாம்.

மீனு புக்ககம் சென்றாள். அவள் வாழ்விலே ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. வேற்றிடம், வேற்று முகம், மான்போல் துள்ளி விளையாடிய சுயேச்சை யொழிந்து, பிறர் மனம் நோக்கி நடக்க வேண்டியிருந்தும் வீட்டிற்கு யஜமானி என்ற பொறுப்பை வகிக்கும்படியான அபூர்வ ஸ்தானம்—இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவள் சகஜமாய்ப் பிரவேசித்தாள். குடும்பம் அப்படியொன்றும் பெரிதல்ல. அவள் கணவன், அவருக்குத் தூர உறவும், தாய் தந்தையற்று அவருடைய சம்ரக்ஷணையிலிருந்து வருபவனுமான சந்திரன் என்ற வாலிபன், அவர் முதல் தாரத்துப் பத்து வயதுப்பையன் சந்துரு, அவருடைய அத்தை இவர்கள்தான்.

"இதோ வெந்நீர் எடுத்து வைத்திருக்கிறேன், ஸ்நானம் செய்யுங்கள், பச்சைத் தண்ணீர் வேண்டாம்; உடம்பிற்கு ஆகாது இந்நாளில்"

"சந்துரு! வாடா கண்ணு! சுருக்க எண்ணெய் தேய்த்து விடுகிறேன், அண்ணுவுக்குப் பள்ளிக்கூடம்போக நேரமாய்விடும். சாதம் போடவேண்டும் என் அம்மாவோல்லியோ!"

"வெறுமனே சமையலறையைச் சுற்றுகிறீர்கள். 9-30மணி வண்டிக்கு 8-30மணியே பிடித்து என்ன அவசரமாம். சற்றுநேரம் புத்தகத்தை வைத்துக்கொண்டு நிச்சிந்தையாய்ப் படித்தாலென்ன? பரீக்ஷையோ கிட்டிவிட்டது"

"அத்தை! நீங்கள் எனக்குக் காய்கறி நறுக்கித்தரவேண்டாம். இத்தனைநாள் பட்ட கஷ்டம்போதும். அதோ ஜபமாலை எடுத்து வைத்திருக்கிறேன். அக்கடா இன்னு ராம ஜபம் செய்யுங்கள், போகிற வழிக்கு ஆகும்' இப்படியாகத் தன் வேலையில் ஜரூராக இறங்குவாள்.

"அத்தை! நீ பூச்சி, புழு, ஒன்றையும் பார்க்காமல் காய் கறிகளை நறுக்கிப் போட்டு விடுகிறாயாம். அதனால்தான் மன்னி உன்னை இப்படி நாசுக்காக விலக்கப் பார்க்கிறாள்" என்றான் சந்திரன்.

"ஆமாண்டாப்பா! இத்தனை நாளாய்ப்பூச்சி புழுக்களைத்தான் உங்களுக்குச் சமைத்துப் போட்டேன்................."

"அவர் கிடக்கிறார் அத்தை! குறும்புக் காரர்"

"மன்னி! அத்தையின் சாமர்த்தியம் உனக்கு வராது. மோரில்கூடத்தான் இருக்கும்."

"உங்களுக்குத் தெரியாது. எறும்பு கண்ணிற்கு நல்லதாக்கும்." இப்படியாக அவள்—மீனா-அந்தக் குடும்பத்திலே புகுந்து யஜமானித்வம் வகித்துவிட்டாள். அதிகாரத்தில் எழுந்த கட்டளை கசப்பாயிருக்கலாம், அன்பின் கட்டளையைப் புறக்கணிக்க முடியுமா?

ஆனால் என்ன இருந்தும் மீனாவின் கணவருக்கு மன நிம்மதியில்லை. அவள்—மீனா—தனக்கே முழுக்க முழுக்க உரியவள்தான் என்று அவரால் உணர முடியவில்லை. தன் மகனிடத்திலே அவள் காண்பித்த பிரேமைகூட அவரால் பொறுக்க முடியவில்லை யென்றால், சந்திரனிடத்திலே அவள் சகஜமாய் நடந்துகொண்டது, அவர் பொறுமைத் தீயை மூட்டிவிட்டது என்று சொல்ல வேண்டியதில்லை. பார்க்கப் போனால் தன் அத்தையை உட்காரவைத்து அவள் உபசாரம் செய்வது கூட அவருக்குக் கசப்பா யிருந்தது!

அதிர்ஷ்ட வசத்தாலோ, துரதிர்ஷ்ட வசத்தாலோ அவருடைய ஜாகையைக் குடும்பத்தோடு அருகிலிருந்த நகரத்திற்கு மாற்ற வேண்டிய அவசிய மேற்பட்டது. சந்திரனுக்குக் காலேஜுக்குப்போக சௌகரியமாயிருக்கும் என்பது ஒன்று. அவருக்கு ரூபாய் 100 சம்பளத்தில் வேலை கிடைத்தது மற்றொன்று. ஆனால் இந்த மாறுதலினால் அவர் மனம் மாறவில்லை. நாள் முழுவதும் ஆபீசில் உழைக்கவேண்டி யிருந்ததால் வீண் மனோ ராஜ்யத்திற்கு அவகாசமிராது என்று எண்ணலாம். ஆனால் உண்மையில் இப்படிப் பட்ட நிலைதான் சந்தேகத்தை இன்னும் தூண்டி விடுகிறது என்று சொல்லவேண்டும். 'வைத்தி' கூட ரூ. 100 சம்பாதிக்கிறானே என்பதில் அத்தைக்கு எவ்வளவோ பெருமை தான். இது மீனாவின் அதிர்ஷ்டம்தான் என்று அவள் மனமார வாயார மீனாவைப் புகழ்ந்தாள். ஆனால் 'வைத்திக்கு' உத்தி யோகம் வேம்பா யிருந்தது.

மனங்குரங்கின் சேஷ்டையை விஸ்தரிக்க வேண்டியதில்லை. சந்தேகம் என்னும் பேயும் அதைப் பிடித்துக்கொண்டு விட்டால் கேட்பானேன். "ஸம்சயாத்மா விநச்யதி" என்பது பகவான் வாக்கு. பேய்க்கு இடங்கொடுத்தால் பேய்க்கூத்து ஆடித்தானே யாக வேண்டும்?

வைத்தியநாதய்யர் ஒரு நாள் நான்கு மணிக்கே வீடு திரும்பி மடமட வென்று வாயிற் கதவைத் தட்டினார்.

"இதோ வந்தேன்! வரசமயமாயிற்றே என்று பஜ்ஜி போட்டேன். அது அடுப்பில் வெந்து கொண்டிருக்கிறது, அதைப் புரட்டிப்போட்டு விட்டு வருவதற்குள் என்ன அவசரம். காலேஜுக்குப் போகிற அவசரத்திற்குமேலே இருக்கிறது வருகிற அவசரமும். கதவு இரண்டுபட்டுவிடும் போலிருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டே மீனா ஓட்டமும் நடையுமாய் வந்து கதவைத் திறந்தாள். எதிர்பாராதவிதமாய்த் தன் கணவனைக் கண்டதும் அவள் திகைத்துவிட்டாள்.

'ஏன் சீக்கிரம் வந்துவிட்டீர்கள்? உடம்பிற்கு ஏதாவது அசௌகரியமா? மத்தியானம் பருப்பு சரியாய் வேகவில்லை. அப்பொழுதே நினைத்தேன். உங்கள் உடம்பிற்கு ஆகாதென்று. இராத்திரி பத்தியமாய்......"

அவள் மேலும் சொல்லிக்கொண்டே போயிருப்பாள், ஆனால் எள்ளும் கொள்ளும் வேதனையும் வெடித்த அவர் முகத்தைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள்.

"ஏன்? என்ன சமாசாரம்? என்ன நேர்ந்து விட்டது? உடம்பிற்கு ஒன்றுமில்லையே......"

"ஆமாம்! உடம்பிற்கு ஒன்றும் வராத குறைதான்!"

மீனாவிற்கு இதன் அர்த்தம் விளங்கவில்லை. ஆபீசில் ஏதாவது மனஸ்தாபமாயிருக்கும் என்று அவள் எண்ணினாள். தன்புத்திக்கு எட்டிய வரையில் அவருடைய மனத்தாங்கலைப் போக்கக் கருதி அவருக்கு உகந்த பணிவிடை செய்வதில் முனைந்தாள்.

* * *

"மன்னி! ஒரு விஷயம் எனக்குப் புரியவே யில்லை"

"என்னவாம்"

"நீ எப்படித்தான் என் அண்ணாவை மணக்கத் துணிந்தாய்?"

"இது என்ன அசட்டுக் கேள்வி?"

"நீ மின்னொளி. 18 வயதெங்கே நாற்பத்தைந்து வயதெங்கே? உனக்கும் அவருக்கும் நக்ஷத்ர மண்டல தூரமிருக்கிறதே!"

"அப்படியொன்றும் தூரமில்லை. எங்களிருவருக்கும் ஒரே நக்ஷத்திரம்" என்று சொல்லி மீனா சிரித்தாள்.

"இதை மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த வைத்யநாதய்யருக்குச் சீற்றம் உச்சநிலையை அடைந்தது. இது முதல் அவர் செய்கைகளெல்லாம் விநோதமாயிருந்தன. காரணமில்லாமல், வீட்டில் வேலை செய்பவளை மாற்றினார். சமயத்தில் அவர் திடீரென்று ஆபீசிலிருந்து வீட்டிற்கு வந்தார். ஊருக்குப் போவதாகச் சொல்லி, பெட்டி படுக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டுப் போவார். ஒரு மணி அவகாசத்திற்குள் திரும்பிவிடுவார். வழக்கம்போல் காலையில் எழுந்ததும் தம் மனைவி ஒருநாள் தம்மை நமஸ்காரம் செய்ய வந்தபொழுது. போதும் இந்தப் பாசாங்கெல்லாம், இனி வேண்டாம். என் முகத்திலேயே இனி நீ விழிக்காதே." என்று கடிந்தார். அத்தைதான் இனி சமையல் செய்து பரிமாறவேண்டுமென்று உத்தரவிட்டார். எல்லாவற்றிற்கும் மேலாகச் சந்திரனை இனிமேல் தன்னால் போஷிக்க முடியாது, அவன் வெளியே போகவேண்டியதுதான் என்று அவர் சொன்னபொழுது மீனாவால் பொறுக்கமுடியவில்லை.

எதிர்த்து வாதாடும் சுபாவம் அவளுக்கில்லை. தன்னால் இந்தக் குடும்பம் சீரழிவதிலும் அவளுக்கு விருப்பமில்லை. என்ன செய்வது? கொண்ட கணவனைவிட்டு எந்தக் குலமகள் வெளியேறுவாள்? தற்கொலை பாபமன்றோ? இப்படிப்பட்ட தர்ம சங்கடத்தில்தான் உண்மையாய் நடந்துகொள்கிறவர்களுக்குக் கடவுள் கைகொடுக்கிறார்.

"எனக்கு உடம்பு என்னவோ செய்கிறது" என்று ஒருநாள் மீனா படுத்துக்கொண்டாள். அவள் கணவன் எட்டிப் பார்க்கவில்லை. "தூத்தம் வேணுமாடி மீனா? என்று தன் இடத்தை விட்டு எழுந்திருக்காமலே அத்தை வினவினாள். "வேண்டாம்" என்றாள் அவள். "அம்மா! உடம்புக்கு என்ன செய்கிறது? உனக்கு என்ன வேணும்" என்றான் குழந்தை சந்துரு.

"சமையலறையில் சுவாமி படத்தினருகில் ஒரு சிறு சம்புடம் இருக்கிறது; அதைக் கொண்டாடா கண்ணா" என்றாள் மீனா. வைத்தியநாதய்யர் இதைக்கேட்டுக் கொண்டிருந்தார். பிரதிதினம் காலையில் தம்மை நமஸ்காரம் செய்வதை அவர் தடுத்ததிலிருந்து அவள் சுவாமி ஸந்நிதியில் ஒரு சம்புடத்தைத் திறந்துவைத்து நமஸ்கரிப்பதை அவர் பலமுறை கண்டிருக்கிறார். அதில் என்ன இருக்கிறது என்றறியும் ஆவல் அதிகமிருந்தும் அவருக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

குழந்தை சம்புடத்தை மீனா கையில் கொடுத்தான். அவள் அதைத்திறந்து தன் கண்குளிர நோக்கினாள். நோக்கிய விழிகள் நோக்கியபடியே இருந்தன. வைத்தியநாதய்யர் ஓடிவந்து சம்புடத்தை வெடுக்கென்று அவள் கையிலிருந்து பிடுங்கினார். அதில் வேறொன்றுமில்லை. அவருடைய பழைய கிழிந்த வஸ்திரத்தின் துண்டு ஒன்றிருந்தது! அவர் திரும்பி மீனாவைப் பார்த்தார், மீனா மின்னற்கொடியாய் விட்டாள்.

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள் நாடு	ஸிலோன், பர்மா & மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

கலை உள்ளம்

வே. ரங்கராஜன்

"தர்மம் தழைக்கவேண்டும். நியாயம் நிலைபெறவேண்டும். அதைத்தான் நான் வேண்டுகிறேன். தாங்கள் மந்திரியாய் இருக்கிற சாம்ராஜ்யத்திலே அறத் தேவதை தலை கவிழும்படியான மறச் செயல்கள் எதுவும் நடக்கவிடாதீர்கள்!"

"ஆமாம், சுப்பா சிற்பி! நீ சொல்லுவது உண்மைதான். ஆனால் என் நிலைமையை நீ உணரவேண்டும். தர்மத்தை எடுத்துச் சொல்வதும் அரசனை அதன்படி செய்யத் தூண்டுவதும்தான் மந்திரியின் கடமை. அதன்படி நடப்பதும் நடக்காததும் அரசனின் இஷ்டம். சுல்தான் தானிஷாவின் குணம் உனக்குத் தெரியாததல்ல. கோபண்ணாவைச் சிறையில் அடைத்து மூன்று வருஷங்கள் ஆகின்றன. அவன் சொந்த மாமனாக இருந்தும் என்னால் என்ன செய்ய முடிகிறது? உன் மகன் வழக்கிலே அரசனது சொந்த விவகாரமும் கலந்திருக்கிறது. நான் அதிகம் தலையிட்டுச் சொன்னால் விபரீதமாக எண்ணிவிடுவான். நீயே சபையின் முன் எடுத்துச் சொல். உன் இதயத்தில் எழும் உணர்ச்சி மிக்க சொற்களால் வாதாடிப் பார். ஒருவேளை நியாயம் கிடைத்தாலும் கிடைக்கலாம்."

"நான் வாதாடுவதா? இல்லை. அரச நீதி முறைகளை எடுத்து வாதாட எனக்கு என்ன தெரியும்? செம்பு, வெள்ளி, தங்கம் இவைகளில் சிலை செய்யக் கற்றுக்கொண்டேனே தவிர, தர்க்க சாஸ்திரமா பயின்றேன் நான்? தானிஷாவின் மனதில் சென்று தைக்கும்படியான ஒரு சொல் இந்த நாவிலிருந்து எழ முடியுமா என்ன? ஊஹூம்! அதில் எனக்கு நம்பிக்கையில்லை.........

"என் மகன் ஒருவன் கொலைத் தண்டனை அடைவதனால் உலகம் அழிந்துவிடப் போவதில்லை. ஆனால் பரம்பரையாக வளர்ந்து வந்த எங்கள் சிற்பக் குடும்பம் அழிந்து மறைந்துவிடும். பின்பு தானிஷா அல்ல, ஔரங்கசீப் அல்ல, வேறு யார் முயன்ற போதிலும் அது துளிர்க்கப் போவதில்லை......

"சரி இந்த அர்த்தராத்திரிப் பொழுதில் தங்கள் நித்திரையைத் தடைப்படுத்தியதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள். நான் போய்வருகிறேன்!........."

"சுப்பா சிற்பி, கோபப்படாதே! சிந்தித்துப்பார். என் நிலையில் நீ இருந்தால் எதைச்செய்வாயோ அதை நான் கட்டாயம் செய்வேன்!"

"அதை நான் அறிவேன். அது தங்கள் கடமை. எனது வேண்டுகோளுடன் சம்பந்தம் கொண்டதல்ல."

"இருக்கலாம். அதைச் சரிவரச் செய்து விட்டாலே எனக்குத் திருப்தி. கடமை வழுவாத கண்ணோட்டமே மந்திரிக்கு அழகு."

"சரி. செய்யுங்கள். விதி வலிது. என் ஒரே மகன் என்ற பாசத்தால் இந்த மனம் ஊசலாடுகிறது. பத்ராசல ராமன் விட்ட வழி யாகட்டும்!"

"ஆமாம், ராமலக்ஷ்மண சிதா விக்கிரகங்களைச் சிருஷ்டித்தவன் நீதானே! உனக்கும் அந்தச் சபலம் இருப்பது நியாயந்தான். கோபண்ணாவுக்கு ராமன் காட்டிய வழியைத்தான் கண்டோமே! கேள், சுப்பா சிற்பி! உன்னை நம்பு! உன் அறிவில் உறுதிகொள்; எதிர்த்து நில். அச்சத்தை விட்டு அரச அவையிலே வாதுக்கு நில். உனக்கு உயர்வாகப்படும் நியாயங்களைத் தைரியமாக எடுத்துச் சொல்!"

"செய்கிறேன். நான் எதற்கும் அஞ்சப் போவதில்லை. என் மகன் அமர சிருஷ்டி செய்ய விழையும் அபூர்வ சிற்பி; எங்கள் சிற்ப பரம்பரையை ஒளிரச் செய்ய வல்ல உன்னதப் பிறவி!"

"அதனால்தான் சொன்னேன். உன் உயிரைக்கூட லக்ஷியம் செய்யாது வாதுக்கு நில்"

“நல்லது. உங்கள் வாய் மொழிகளை எனக்கு மனோதிடம் அளிக்கின்றன. நமஸ்காரம், போய்வருகிறேன்!”

“போய் வா, நீ இங்கு வந்து சென்றதை யாரும் அறிந்துகொள்ள வேண்டாம். ஜாக்கிரதை!”

‘‘அறிவேன்: தாங்கள் அஞ்சவேண்டாம்!’’

* * *

கோல்கொண்டா சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரி மாதண்ணாவின் மாளிகையிலிருந்து மெள்ள வெளியேறி, சூழ்ந்து நிலவிய இருளிலே மறைந்தான் சிற்பி சுப்பாராவ்.

திரும்பிப்போகும்பொழுது உலகப்போக்கையும், பிரகிருதி நியதியை வகுத்த அந்தக் ‘குருட’னையும் சபித்துக் கொண்டே சென்றான். அவன்மேல் பிசகில்லை. அவன் கலை உள்ளம் தெளிந்த நீதியை விரும்பியது; தர்மத்தை அவாவிற்று. அவைகளின் படியே உலக காரியங்கள் ஏன் நடக்கக் கூடாது? என்பதுதான் அவனுடைய ஆதங்கம்.

அவனுக்கு இப்போது வயது அறுபது முடிந்து அறுபத்தொன்றாவது நடக்கிறது. சிற்பச் சக்கரவர்த்தி என்று விருதுப்பெயர் பெற்ற அவன், தன் வாழ்நாளிலே தன் கொள்கைகளில் சிறிதும் வழுவாமல் நடந்திருக்கிறான். நியாய விரோதமானதோ தர்மத்திற்கு ஒவ்வாததோ அவன் செய்ததில்லை. இத்தகைய சீரிய ஒழுக்கத்தால்தான், அவன் கலைத்தேவியின் பூரண கிருபா கடாக்ஷத்திற்குப் பாத்திரனாய், கலாசிருஷ்டியின் சிகரத்தை எட்டித் தொடமுடிந்தது. அப்படி எட்டித் தொட்டதின் விளைவால் தன் மகன் தூக்குத் தண்டனைக்கு ஆளாவதென்றால் உணர்ச்சி ஊற்றாகிய கலை உள்ளம் எப்படிப் பொறுக்கும்?

தன் மகன் கொலைக் குற்றத்திற்கு ஆளானதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி எவ்வளவு அற்பமானது! தன் மகனது விதிதான் அத்தகைய வழிவகுத்துக் கொடுத்ததா? அல்லது சந்தர்ப்பங்களின் விபரீதக் கூட்டுறவால் அது உருவாயிற்றா என அவனால் நிர்ணயிக்கக் கூடவில்லை. எப்படியிருந்தபோதிலும் தானும், தன் மகனும் நிரபராதிகள் என்பதில் அவனுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. தண்டனையோ மிகப் பெரிது; தன் குலமே நிர்மூலமாகும்படியானது. பத்ராசல ஆலயத் திருப்பணியில் பங்கு கொண்டதற்குத் தெய்வம் அளித்த பரிசோ இது? தன் நாட்டின் சிறந்த சிற்பிக்கு அரசன் அளிக்கும் தோடாவோ இத்தண்டனை!

* * *

கோலாகலப் பிரியனான தானிஷா தன் பொக்கிஷத்தின் ஒரு செம்பாகத்தைப் பத்ராசல ராமனின் திருப்பணியில் செலவிட்டுவிட்ட கோபண்ணாவின்மீது சினம் கொண்டான். பொன் வறண்ட பொக்கிஷம் சினத் தீயைக் கிளறிவிட்டது. பத்ராசலத்தில் ராமன் பெயரால் செலவான தொகையை நேரில் நிர்ணயிக்கவும் கூடுமானவற்றை மீட்கவும் தண்டெடுத்துச் சென்றான். அவன் பத்ராசலத்தை அடைந்ததும் பிரமித்துப் போனான். என்ன மாறுதல்! என்ன புதுமை! கண்கள் குளிரும் நவநவமான காட்சிகளுடன் நகரே புத்துயிர் பெற்றிருந்தது! ஆலயத்துள் நுழைந்த அவன் தகதகவெனப் பளபளத்த தங்கச் சிலையின்முன் குத்திட்டு நின்றுவிட்டான். ராம லக்ஷ்மண சீதா சமேதராய்க் காட்சியளித்த அந்த தங்கச் சிலைகள் பேசாது பேசின. அவைகளின் முகத்தில் நிலவிய தேஜஸ் தானிஷாவின் சினத்தைத்தான் கிளறிவிட்டது!

பத்ராசல ராமன் கோவிலிலே சரித்திரம் வெட்டும்படியான விபரீத காரியங்களைச் செய்துவிட்டுத் திரும்பிய தானிஷா, அந்தத் தங்கச்சிலைகளின் முகத்தில் வீசிய தேஜஸை மட்டும் மறக்கவே இல்லை. நுண்கலைகளில் ஆர்வம் மிகுந்த அவன் அச்சிலைகளை உருவாக்கிய சிற்பியைக் காண விழைந்தான். நவாபின் கட்டளை சென்றது. சிற்பி சுப்பாராவ் அரசசபையை அடைந்தான்.

தானிஷா தன் கையிலே ஒரு சித்திரச் சுருளை எடுத்தான். அதன்மீது மாசுபடியாதிருக்கச் சுற்றிக் கட்டியிருந்த காஷ்மீர் பட்டை அவிழ்த்து வைத்துவிட்டு, உருளவிட்டுத் தூக்கிப் பிடித்தான். பாரசீக ஓவிய பாணியிலே தீட்டப்பட்ட ஒரு அழகிய இளவரசியின் சித்திரம் அது. ஆம்; தானிஷாவின் காதலுக்குப் பலியான முதல் இளவரசியின் சித்திரம். அச்சித்திரத்தில் கண்ட தன் காதலியைத் தங்கச்சிலையில் வடித்துக்கொடுக்கும்படி சுப்பா சிற்பிக்குக் கட்டளையிட்டான் தானிஷா.

டங்காரம் செய்யும் கோதண்டதாரியான ராமனையும், தண்டாமரைச் செல்வியாகிய சீதாபிராட்டியையும் உருவாக்கிய கைகளால் தானிஷாவின் காதலியை உருவாக்க வேண்டும்! தங்கச்சிலைக்கு உரியபொருள் இதுவா?

பண்பட்ட கலை உள்ளத்திற்கு அது உடன்பாடான செயலா? தெய்வீக தேஜஸ் எங்கே, சிருங்கார முகபாவம் எங்கே? சுப்பா சிற்பி தயங்கினான். ஏதோ சொல்ல வாயெடுத்தான். சொல் தொண்டையுள்ளேயே நின்றுவிட்டது. அவனது மௌனத்தையே சம்மதமெனக் கொண்டு சிலைக்கு வேண்டிய தங்கத்தை அளித்தனுப்புமாறு கட்டளை பிறப்பித்தான், தானிஷா.

2

பொன்னும் சித்திரச் சுருளும் உடன் கொண்டு அரசாங்கப் பல்லக்கிலே இல்லம் சேர்ந்த சுப்பாராவ், இதயத்தைக் கவ்விப் பிடிக்கும் கவலையில் ஆழ்ந்தான். தெய்வச் சிலைகளையே செய்து பழகிய கைகளால் ஒரு நங்கையை உருவாக்குவதா? அதில் ஜீவகளை ததும்பவேண்டுமே! தானிஷா விரும்பும் சிருங்கார ரசம் நிலவ வேண்டுமே! இரண்டு இரவுகள் நித்திரையின்றிப் புரண்டான் அவன். இரண்டாம் நாள் கனவு அவனுக்கு வழி காட்டியது; பளிச்சென ஒரு புது யோசனை உதித்தது. கோதண்டராமனை நினைத்து அஞ்சலி செய்து மன அமைதியடைந்தான்.

"காதல் உலகைக் கடந்து பக்தி உலகிலே சஞ்சரிக்கும் நான் இந்தச் சிலை செய்வது சரியல்ல. நீ இளைஞன்; காதல், சிருங்காரம் ஆகிய ரஸங்களை உணர்ந்து ரசிக்கும் பருவம் இது. ஆகவே நீதான் இந்தச் சிலையைச் செய்து முடிக்கவேண்டும். சில்லுண்டி சிற்பங்களிலே பொழுதைச் செலவிட்டு காலவிரயம் செய்வதை விட்டு, மெல்ல மெல்ல, கண்ணும் கருத்துமாக முயன்று ஓவியத்தில் கண்டபடி சற்றும் பிசகாமல் இச்சிலையைச் செய்துமுடி. அவ்வப்போது நானும் உனக்குத் துணையாக இருக்கிறேன்!" என்று தன் மகன் கங்காராவிடம் சொன்னான். தன் கலைத் திறமையை நாடறியச் செய்ய, சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த அவனும் அதற்குச் சம்மதித்தான்.

சிலை உருவாகியது. சுப்பாராவ் அவ்வப்போது தன் மகன் செய்யும் வேலையைக் கவனித்தான்; சில கலை நுட்பங்களைக் குறிப்பாகச் சொல்லி, சீர்திருத்திக் கொடுத்தான்.

கங்காராவ் பரம்பரையாக வந்த தெளிந்த கலையறிவுடையவன். தன் தந்தையின் கலைத் திறமையில் ஓரளவைக் கிரகிக்க அதுவே தக்க சந்தர்ப்பமென உணர்ந்து, அவன் குறிப்பாகச் சொன்னவைகளை மனதில் நிறுத்தி, சிலைச் சிருஷ்டியில் முழுக்கவனத்துடன் ஈடுபட்டான். இரவு பகலாகச் சிலையைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கிப் போயிருந்தான். அதனால் அவனுக்கு விசித்திரமான கனவுகள் உண்டாயின.

சித்திரச் சுருள் தானே அவன் முன் அவிழ்ந்து விரியும். ராஜகுமாரி கல கல வெனச் சிரிப்பாள். மறுகணம் அவள் முகத்திலே சோகத்தின் சாயை படரும். கருவண்டு களெனப் பிரகாசித்த மை விழிகளிலிருந்து கண்ணீர் பொல பொலவென விழும். இன்னும் விவரிக்க முடியாத பல வேறு விசித்திர ரூப பேதங்களில் அகால மரண மடைந்த அவ்விளவரசி தோன்றினாள்.

இளஞ் சிற்பி கங்காராவ் ஆரம்பத்தில் இக் கனவுகளால் மன நிம்மதி யிழந்தான். சிலை செய்ய உட்காரும் பொழுதெல்லாம் அந்தக் கனவு முன் நின்று அவன் செயலில் இருந்த நிதானத்தைக் குலைத்தது. இருந்த போதிலும் அழகுமிக்க அவ்விளவரசியின் முகத்தை மீண்டும் ஒரு முறை காணவேண்டும் என்ற சபலம் வளர்ந்துகொண்டே வரும். அகமனதுள் நிலவும் இந்த நுட்பமான ஏக்கத்தின் விளைவால்தான் போலும் ராஜகுமாரி தினசரி அவன் கனவில் தோன்றினாள். கங்காராவ் ஒவ்வொரு கனவிலும் அவள் அழகிலே புதுமையைக் கண்டான். தான் செய்யும் சிலைக்கும் கனவில் காணும் எழில் நங்கைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தான். எங்கே! கனவில் கண்ட அந்த ஜீவ எழிலின் சில ரேகைகள்கூட சிலையில் ஊன்றி அதற்கு ஜீவன் தரவில்லை!

கங்காராவ் இதை நன்கு உணர்ந்தான், சின்னஞ்சிறு காரியத்தையும் மிகக் கவனமாகச் செய்தான். அதற்கு ஏற்றபடி மிக நுட்பமான ஆயுதங்களைச் செய்து உபயோகித்தான். சிலையை அணுகும் பொழுதெல்லாம், தன்னுடன் ஆத்மீகத் தொடர்பு கொண்ட ஒரு ஜீவப் பொருளைத் தீண்டும் உணர்ச்சி உண்டாகியது கங்கா ராவுக்கு. சிலைக்கு அழகளிக்கும் நுண்ணிய ரேகைகள் உருவாக ஆக, தன் கனவை மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொள்ள விரும்பினான் அவன். ஒரு முறை இளவரசியைக் கனவுலகில் கண்ட பிறகு அவன் கண்கள் அந்தப் பாரசீக ஓவியனின் சித்திரச் சுருளைப் பார்க்க மறுத்தது. வெறும் வர்ணச் சேர்க்கைகளில் உருவாகிய அதில் ஜீவத் துடிப்பு இல்லை. ஆகவே அதைச் சுருட்டி ஒருபுறம் வைத்து விட்டான்.

கதிரவனுடன் துயிலுணர்ந்து எழுந்து காலைக் கடன்களை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு, சிலா சிருஷ்டியில் ஈடுபட்டானால், கங்கா ராவ், தன்னை மறந்த லயத்தில், அதீத கலைப் போதையில், சிலைச் சிருஷ்

டியில் ஈடுபட்டுவிடுவான். பகலவன் மலைவாயில் விழும்வரை சிலைச் சிருஷ்டி நடக்கும்.

இரவு சயனிக்கச் செல்லும்போது, ஏதோ ஒரு அழகுப் பிழம்பை மீண்டும் காணவேண்டும் என்ற ஒரு ஏக்கம் அவனுள் எழும். மீண்டும் கனவு காணமாட்டோமா என்ற மறைமன ஆசையுடன் சயனிப்பான். இளவரசி புத்துடையும், நவ எழிலும் மென்னகையும் தோன்ற அவன்முன் தோன்றுவாள்.

மறுநாள் சிலைச் சிருஷ்டியில் ஈடுபடும்பொழுது இத்தோற்றம் அவனுக்குதவியாக இருக்கும். கனவுத் தோற்றம் கண்முன்னே நிற்க விரல்களிலே கலை ஆர்வத் துடிப்பு விரவில் பாய்ந்து நவஜீவகளையைச் சிருஷ்டிக்கும்.

இப்படி, தனக்கே தனக்கு உரித்தான ஒரு விசித்திர அனுபவத்துடன், கனவும் கற்பனையும் கலந்து மருவி, சிலா சிருஷ்டியாகி உருவெடுத்து நிற்கச் சிலையை முடித்தான் கங்காராவ்.

3

வித்து முளைக்கும் தன்மைபோல் மெல்ல மெல்ல, பரிபூரண எழிலை வெளியிட்டு வளர்ந்து சென்ற சிலையைக்கண்ட சுப்பா சிற்பி தன் மகனது சிருஷ்டியிலே குறுக்கிடவில்லை. இப்போது சிலை முழுமையடைந்து நிற்கையில் அவன் உள்ளம்பூரித்தது: தன் சிற்ப பரம்பரைப் பெருமையை தன் மகன் நிலைநாட்டுவான் என்ற நம்பிக்கையில் இதயம் விம்மிதமடைந்தது. விரைவில் அதைத் தானிஷாவிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்று நினைத்தான்.

‘சிலை முடிந்துவிட்டது’ என்று தன் மகன் ஒரு வார்த்தை சொன்னதும் அனுப்பிவிட வேண்டுமெனக் காத்திருந்தான். அந்தத் தங்கச் சிலை அவன் வீட்டில் இருக்கும் வரையில் அவன் மனதில் நிம்மதி இருக்காதுபோல் தோன்றியது.

ஆனால் அவன் எதிர்பார்த்தபடி கங்காராவ் சொல்லவில்லை. சிலையில் மேலும் மேலும் ஏதோ செய்ய வேண்டுமென்று அவன் மனம் சுட்டிக் கொண்டிருந்தது. சின்னஞ்சிறு நுண்ணுளியும் கையுமாக அவன் சிலையைப் பல கோணங்களிலிருந்து நாள் முழுதும் ஏதோ புதுப் புதுத் திருத்தங்களைச் செய்து கொண்டிருந்தான். முப்பத்திரண்டு எழில்களில் ஒரு குறையும் இல்லாமல் இருக்கிறதா என்று ஆராய்வதிலேயே நாட்கள் சென்றன.

ஒருநாள், இரண்டு நாட்கள், ஒருவாரம், நாட்கள் ஓடின. கங்காராவ் சித்தப் பிரமை கொண்டவனைப்போல் நாள் முழுவதும் சிலையைப் பல கோணங்களிலிருந்து பார்த்தவண்ணமே இருந்தான். நீர், ஆகாரம் இவைகளைக் கூட அவன் மனம் அதிகம் நாடவில்லை. பேரவஸ்தைப் பட்டுப்பெற்ற மகவைக் கண்களால் கண்டு சந்தோஷத்தால் பூரித்து மயங்கித் துவளும் தாயைப்போல் தன் சிருஷ்டியின் எழில் பிழம்புகளிலே சொக்கி மயங்கி நின்றான் கங்காராவ். அதன் விளைவால் சிலைமாயமாய் மறைந்துபோயிற்று. ஒரே நாள் இரவில் இந்த மாயம் நடந்து விட்டது. “அப்பா! சிலையைக் காணோம்! திருட்டுப்போய்விட்டது. அரசரிடம் சொல்லிப் புலன் விசாரித்து மீட்கச்சொல்லுங்கள்!” என்று மிக நிதானமாகச் சொன்னான் கங்காராவ்.

சிற்பி சுப்பாராவ் வெல வெலத்துப் போனான். இதுஎன்ன மாய்மாலத் திருட்டு? முழு உருவத் தங்கச்சிலை களவு போவதென்றால் அது இலேசான காரியமா? தானிஷாவிடம் அதைச் சொல்லித் தப்பிக்க முடியுமா? கோல்கொண்டா நவாப்பா கொக்கா? ‘அடடா சிலை முடிந்தவுடனேயே அனுப்பாதது எவ்வளவு மகத்தான தவறு?’ அவன் தன் மகனின் முகக்குறியைக் கூர்ந்து பார்த்தான். அதில் சலனமற்ற தெளிவுதான் இருந்தது. இது என்ன, சிலை பறிபோய் விட்டதே என்ற ஆழ்ந்த துக்கத்தால் அவன் மனம் நிலைகுலைந்து விட்டதோ! இல்லையாயின் வரம்பு கடந்த இந்த நிதான நிலைக்குக் காரணம் என்னவாக இருக்கலாம்? தலையை இரு கைகளாலும் தாங்கிய வண்ணம் அப்படியே உட்கார்ந்து விட்டான் அவன்.

* * *

அப்போது கங்காராவ் இல்லத்தினின்றும் வெளியேறி, கால்போன போக்கில் சென்றுகொண்டிருந்தான். அவனது உள்ளம் எதையோ நாடியலைந்தது, தன் சிலையில் உற்பவித்த எழில் ரேகைகளை உலக அரங்கங்களிலும் காணவேண்டுமென அவன் அக மனதில் ஆவல் நிரம்பியிருந்தது. அழகின் இருப்பிடம் எது? மங்காத கலையழகு வாய்ந்த நிலைக் களம் எங்குள்ளது?—நகர எல்லையைக் கடந்து சென்றான். பலதுறைகளிலும் சென்ற கொடிப் பாதைகளிலே சிறு குன்ற மலைக்காட்டிற்கு இட்டுச் செல்லும் அதன் வழியேகினான், அங்கு அவன் விழையும் அழகைக் காணக்கூடுமோ? சிலையின் எழில் உருவம் கண்முன் நிலவியதால் யாவும் பேரழகின் இருப்பிடமாகத் தோன்றியது அவனுக்கு. காட்டு மல்லிகை மலரிலே ஒரு தனியழகைக் கண்டது அவன் கலையுள்

வீட்டிற்கு விரைந்து
செல்லுகிருர்

ஹமாம் ஸோப்புத் தேய்த்து
குளுமையுடன் ஸ்நானம் செய்ய



ஹமாம் ஸோப்பு

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ளம். சிறுமலைக் காட்டில் வெட்டிய விறகுச் சுமையுடன் நகரை நோக்கிச் சென்ற மறப் பெண்ணின் முகத்திலே கவிதைக்கு எட்டாத கலையழகு உள்ளதாக அவன் பிரமையடைந்தான்!

பகல்வேளை மெல்ல நழுவி மருள் மாலை தவழ்ந்து வந்தது. அவன் இதை உணர்பவனாக இல்லை. மேலும் மேலும் நடந்துசென்று ஒரு குன்றத்தருகே அமர்ந்தான். மாலை மயங்கிச் செம்மை கலந்த முத்தொளி அம்மலைக் குன்றின் ஓர் பகுதியிலே பட்டு அதைச் சோபிக்கச் செய்தது. கங்காராவின் கலைக் கண்கள் அங்கே நிலைத்து நின்றன.

இரவு பகலாக, சரியான உறக்கம்கூட இல்லாமல், நனவும் கனவுமாக இருந்து பொன்னில் பொலிவையும் சிலையில் உயிர் எழிலையும் சிருஷ்டித்து என்ன பலன்? சிலையைக் கோல்கொண்டா நவாப் தானிஷாவிடம் ஒப்படைத்திருந்தால் அந்தப்புரத்திலே பிரதிஷ்டை செய்வான். காமத்தை மிகவைக்கும் மது, மோகலேகியம், இவைகளைப் போல் அவன் மனதைக் கீழ்நிலைக்கு இழுத்துவிட இது உதவியாக இருக்கலாம். அத்துடன் ஸெனானாவில் உள்ள மற்ற எழில் நங்கைகள் பொறாமைப்பட ஒரு கருவியாகவும் இருக்கும். அதன் விளைவால் நாளடைவில் சிலையின் எழில் சிதைக்கப்பட்டுவிடலாம்; அவ்வளவுதான்! அதன் பிறகு அந்தப்புரத்திலே அகல்விளக்கைத் தாங்கும் வெண்கலச் சிலைக்கும் அதற்கும் என்ன வித்தியாசம்? உயிரைக்கொடுத்து அதைச் சிருஷ்டித்த சிற்பியை யார் நினைக்கப் போகிறார்கள்? தானிஷா மடிவான்: பிறகு வேறு எவனாவது நவாப்பாவான். அவனுக்கு அந்தத் தங்கச் சிலை வெறும் பொன் கட்டியாகத்தான் தோன்றும். அதை உருக்கி நாணயங்களாக வார்த்தெடுத்துப் பொக்கிஷத்தில் நிரப்பு என்பான். சிலை செத்துவிடும்! அப்போது கலையெழில் எங்கே? சிருஷ்டித்த சிற்பியின் பெயரும் புகழும் எங்கே?”

ஆகவே, என்ன ஆனபோதிலும் சிலையைத் திருப்பிக் கொடுப்பதில்லை என்ற திடமான முடிவுக்கு வந்தான் கங்காராவ். தங்கம் அளித்தவன் தானிஷாவாக இருந்தபோதிலும் அதற்கு உயிரையும் எழிலையும் சிருஷ்டித்தவன் தான் என்பது அவன் துணிவு. அதில் துள்ளி விளையாடும் முப்பத்திரண்டு எழில்களையும் உருவாக்க அவன் பட்டபாட்டிற்கு அந்தத் தங்கம் எம்மாத்திரம்! தங்கத்தைப் பெறலாம், இழக்கலாம். ஆனால் அவனது முயற்சி மீண்டும் எழுமோ? எத்தனை கோடிப் பவுன்களை அளித்தபோதிலும் அத்தகையதோர் சிலையை மீண்டும் அவனால் சிருஷ்டிக்க முடியுமா? இல்லை, இயலாது. அதென்னவோ, அப்போது அவன் கனவிலே கண்ட அந்த மங்கையின் தோற்றம் அவன் கண்களிலே ஆழ்ந்து, கைவிரல்களின் மூலம் சென்று சிலைக்கு உருவளித்தது. சிலையை முடித்துவிட்ட பிறகு கனவு தோன்றவில்லை. தப்பித் தவறி, கனவு கண்டால் அவன் சிலை தான் தோன்றியது. அழகின் சிகரமான அதற்கு ஒரு பெரு மாளிகை எழும்பியிருப்பதைப் போலவும், உலகின் பல பாகங்களிலிருந்து யாத்ரிகர்கள் வந்து அதைப் பார்த்துச் சிற்பியின் திறமையை வியந்துவிட்டுப் போவதாகவும் கனவு கண்டான்.

ஆனால் அதை யார் கண்ணிலும் படாமல் மண்ணிலே புதைத்துவிட்டு வந்துவிட்ட கங்காராவ் பளபளத்த மலைப் பாறையைக் கண்டதும் சிந்தித்தான். சிலை காலத்தைக் கடந்து சிரஞ்சிவியாக இருக்கவேண்டும்; அழிவுக்கு ஆளாகாமல், கொலைஞர் கைக்குத் தப்பி, விழைவோர் கண்டு களிக்கும்படி இருக்க வேண்டும். அதற்குக் கல்லே சரியான நிலைக்களம், என முடிவு செய்தான் அவன். தன் கரங்கள் மீண்டும் அத்தகைய தெய்வீக எழிலைச் சிருஷ்டிக்குமா எனச் சற்றே ஐயுற்றான். இருந்தாலும் ஆர்வம் தூண்டியது.

4

எழுந்து சென்று அம்மலைப் பகுதியைச் சோதித்துப் பார்த்தான். சிலையை உளித்தெடுக்க அது தகுதியான பாறையாக இருந்ததைக் கண்டு அவன் உளம் குளிர்ந்தான். ‘சரி; இனி எது எப்படி நடந்தபோதிலும் அந்தச்சிலையின் பிரதி ரூபத்தை இங்கே சிருஷ்டித்துவிட்டுத் தான் மறு காரியம்’ என்ற சங்கற்பம் அவன் மனதில் எழுந்தது. அவனிடம் உளியும் சுத்தியும் இருந்திருந்தால் அப்போதே தொடங்கியிருப்பான். ஆனால் மாலை மேலும் மயங்கி இருளரக்கனை மருவச் சென்றதை உணர்ந்த அவன் நகரை நோக்கி விரைந்து நடந்தான்.

உஷையின் வரவுநோக்கி நாளைக்குத் தொடங்கலாம் என எண்ணிக் சென்ற அவன் எதிரே எமகிங்கரர்களைப்போல் தானிஷாவின் ஒற்றர் படையினர் வந்தனர். தங்கள் குறி சரியான இலக்கை நாடிப் பற்றியதைக் கண்ட அவர்களின் குதூகலம் நகையொலியாக வெளியாயிற்று.

“இதோ சிற்பி! இதோ சிலைத்திருடன்!” என்ற அட்டகாசக் குரலுடன் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கங்காராவ் தலை கவிழ்ந்தான். தப்பிக்க முயல்வதும் அவர்களுடன் வார்த்தையாடுவதும் வீண் என

உணர்ந்து கைகளை நீட்டி விலங்கை ஏற்றுக் கொண்டு பின்னே நடந்தான். சிலை சிருஷ்டித்த கைகளுக்கு நவாப் அளித்த தோடாவோ அவ்விலங்குகள்? புகழை விரும்பிய அவனை விலங்கிட்டு நகர் வழியே அழைத்துச் சென்று இகழ்வதோ அரசப் பெருந்தகைமை!

கங்காராவ் மீண்டும் காண விரும்பி ஏமாற்றமடைந்த கனவு சிறையுள்ளே அவனுக்குக் கிட்டியது. முன்பு கண்ட அதே தோற்றம்! நிலவொளி வீசும் அதே அழகுத் தெய்வம்! அவள் அவனைப் பார்த்து நகைத்தாள். கங்காராவுக்குக் கோபம் வந்துவிட்டது. அவளை எட்டிப் பிடிக்கத் தாவினான். 'டங்' கெனச் சிறைச்சாலைக் கருங்கல் சுவரிலே தலையை இடித்துக்கொண்டான்! நல்ல இடி; நீண்ட நேரம் வலி தாளமுடியவில்லை; மீண்டும் உறக்கம் வரவில்லை. அந்தகாரம், கீழ் வானம் வெளுத்தபோது விலங்கு பூட்டியிருந்த தன் கால்களை மெல்ல மடக்கி எழுந்து உட்கார்ந்து சிந்தித்தான். அவனுக்கு இப்போது தன் தவறு தெளிவாகத் தெரிந்தது.

''சிருஷ்டிக்கும் கலை உள்ளம் படைத்த கலைஞனுக்கும் என்ன சம்பந்தம்? அழகிய மலரைச் சிருஷ்டிப்பதுடன் செடியின் கடமை நின்றது. கலைஞனின் கடமை சிருஷ்டி. அதன் போக உரிமை உலகைச் சேர்ந்தது. அது தனி மனிதனாக இருக்கலாம், உலக மக்களாகவும் இருக்கலாம். அதன் மூலம் அவனுக்குப் புகழ் வரலாம் இகழும் எழலாம். அவையெல்லாம் அவன் கவனத்திற்கு உரியன அல்ல. பிரம்மாவின் தொழில் சிருஷ்டி; அது பூர்த்தியானதும் அதைக் காலனின் கையிலே ஒப்படைத்து விடுகிறான் அவன்! அதைப்போலச் சிற்பியின் கடமை சிருஷ்டி; சிருஷ்டி முற்றுப்பெற்றதும் உரிமை மாறுபடுகிறது!'

சிறைச்சாலைக்கு வந்தபிறகே கங்காராவ் இதைச் சிந்தித்து உணர்ந்தான். இப்போது என்ன தெளிவு வந்தபோதிலும் நவாப் தானி ஷாவின் தண்டனைக்குத் தப்பமுடியுமா? வீடு தோட்டம் இவைகளைச் சோதனையிட்ட ஒற்றர் புதைக்கப்பட்டிருந்த சிலையைக் கண்டு எடுத்துவிட்டனர். சினமுற்ற கோல் கொண்டா நவாப் கங்காராவுக்குத் தூக்குத் தண்டனை விதித்துவிட்டான்.

நாளைமறுநாள், அமாவாசையன்று, உதய சமயத்தில் தூக்குத் தண்டனையை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்பது கட்டளை. இதைக் கேள்வியுற்ற தந்தையுள்ளம் துயர்க் கடலில் மூழ்கியது, ''சிறு பிள்ளைத்தனமாக'' கலையின் மீது உள்ள ஆசையின் விளைவால் செய்துவிட்ட இச்சிறு பிழைக்கு அதுவா தண்டனை?'' என்று அவன் அங்கலாய்த்தான். பிறகு, ஏதோ ஒரு அற்ப நம்பிக்கை மனதில் ஊசலாட, பிரதம மந்திரி மாதண்ணாவைப் பார்க்கச் சென்றான். அவரைப் பார்த்துப் பேசியபிறகு அவன் மனநம்பிக்கை மேலும் கொஞ்சம் பலமடைந்தது.

* * *

மறுநாள், கோல் கொண்டா நவாப் தானி ஷாவின் தர்பார் அறையிலே சிற்பி சுப்பா ராவ் விஞ்ஞாபித்தான்; ''என் ஒரே மகன் கங்காராவ் மீது நவாப் கருணைகாட்ட வேண்டும். அவன் கள்வனல்ல; அரசரை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணம் உடையவனுமல்ல; இருபது வயது நிரம்பாத அந்த இளைஞன் உலகமறியாதவன்; பரம்பரையாக வந்த சிற்பக்கலைக் கல்வியின் அறிவுமுழுவதும் உடையவன். அரசர் செய்யப் பணித்த சிலையே அவனது முதல் சிற்பம். இரவு பகல் என்று பாராமல், உணவு உறக்கத்தைக் கருதாமல். உயிர்த்துடிப்புடன் அவன் சிலையைச் செய்வதில் முனைந்து நின்றான். அதன் விளைவால்தான் சிலை பேரழகுடன் துலங்குகிறது. தலைச்சன் கன்றை ஈன்ற பசு தனக்குப் புல்லிடுபவனைக்கூட அருகே விடாது முட்ட வருவதுபோல், சிருஷ்டியின்மீது இருந்த பேரவாவினால். இக்குற்றத்தைச் செய்துவிட்டான். என் மைந்தனின் உள்ளம் கலையுள்ளம்; மாசற்ற இளைஞன் இதயம். அவன் எனக்கு ஒரே மகன். அவன் மாண்டால் கோல்கொண்டா சிற்ப பரம்பரையே நசித்துவிடும். அரசர் கருணை காட்டினால் கலையுலகம் அவரைப் போற்றும்; எங்கள் எதிர்காலச் சந்ததியும் மனமார வாழ்த்தும்!''

ஒவ்வொரு வார்த்தையும் அவனது இதய ஆழத்திலிருந்து எழுந்து கணீரென ஒலித்தது. அவன் தன் இரு கரங்களையும் அகல விரித்து, கண்ணீர் வழியும் கண்களுடன் தன் மகனது விடுதலையை யாசித்து நின்ற தோற்றம் அனைவர் உள்ளத்தையும் உருக்கியது.

நவாப் சிந்தித்தான்; மனம் மாறியது. கங்காராவ் விடுதலையடைந்தான்.

மறுநாள் காலை இல்லம் சென்ற அவன் விடுதலையை மறந்தான், உணவை மறந்தான். கல்லுளிகளைச் சுமந்துகொண்டு சிறுமலைக் காட்டை நோக்கி நடந்தான். அவனது கலையுள்ளத்திலே சிருஷ்டியின் ஆர்வம் ததும்பிக்கொண்டிருந்தது. அந்த ஆர்வம் சிறுமலையிலே மோகினிச் சிலையாக உருவாகியது.

பிரமை

கே. வி. கே

வாழ்க்கையில் பல காரியங்களைச் செய்கிறோம். இல்லை, செய்வதாக எண்ணிக் கொள்ளுகிறோம். சிலவற்றைத் தெரிந்து, சிந்தித்துச் செய்கிறோம். சிலவற்றை அறியாமலேயே செய்து வருகின்றோம். அப்பொழுது அதைப்பற்றி அதிகமாகச் சிந்திப்பது கிடையாது. அதை எதற்காகச் செய்கிறோம் அல்லது செய்தோம் என்பதுகூட நமக்குப் புலனாவதில்லை. ஆனால் பின்னால் ஏதேனும் நன்மை தீமைகள் ஏற்படும்போது, நாம் முதலில் அறிந்தோ அறியாமலோ செய்த அந்த நல்வினை தீவினைகளின் விளைவுதானோ இவை என்றெண்ணி மனம் அங்கலாய்க்கிறோம். உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் எதிர் நிகழ்ச்சி நடந்துதான் வருகிறது என்ற நியதி அடிப்படை வாழ்க்கையில் எவ்வளவு தூரம் உண்மை அல்லது சாத்யம் என்று திட்டமாக அறிந்துகொள்ள முடிவதில்லையே அன்றி, துன்பம் என்று ஒன்று வரும்போது மட்டும் அதை எதிர் நிகழ்ச்சியாகக் கொண்டு அதன் காரணமான நிகழ்ச்சியை ஆராய முயலுகிறோம். ஸ்தூல அறிவுக்கு எட்டாதவைகளை நீக்கி, அவைகள் 'பூர்வ ஜன்ம பாபம்' என்று தீர்ப்புக் கூறிவிட்டு, அறிவுக்குப் புலனாகும் காரணங்களுக்குப் பிராயச்சித்தம் செய்துவிடுகிறோம். நமக்கு ஏற்பட்டுள்ள துன்பமும் அதனால் சற்று விலகிவிட்டது போன்ற பிரமையும் ஏற்படுகிறது. அநேக சந்தர்ப்பங்களில் விலகிக்கூட விடுகின்றது.

இந்தப் பிரமையிலேதான் வாழ்வே பொதிந்து கிடக்கிறதா? உண்மை என்று இன்று தோற்றமளிப்பது நாளைக்கு வீண் பிரமையாகவல்லவோ மாறி விடுகிறது! பெரும் பிரமையாகக் காணப்படுவது சற்று நேரத்திலேயே அற்பமாக மாறிவிடுவதில்லையா? இதற்கெல்லாம் காரணம்............! நாம்காணும் தோற்றமா, அல்லது அத்தோற்றங்களைத் தோற்றுவிக்கும் நம் உள்ளமா......................? நம் உள்ளமானால், ஒரே தோற்றத்தைப் பலவிதங்களில் தோற்றுவித்து, அர்த்தமற்ற பிரமையை ஏற்படுத்துவானேன்! "தோற்றமும் நானே; தோற்றுவிப்பனும் நானே" என்று பகவான் கூறியபோது உள்ளத்தைக் குறிப்பிட்டாரா, அல்லது உள்ளத்தில், உள்ளதை யுள்ளபடி தோற்றுவிக்காமல் தடுத்துக்கொண்டு கவிந்திருக்கும் மாயா சக்தியைத்தான் குறிப்பிட்டாரா? உள்ளம் உண்மையா அல்லது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி உண்மையா? "கடவுளின் கட்டளையை நிறைவேற்றத்தான் மக்கள் படைக்கப்பட்டிருக்கின்றனர்" என்று கூறும் சாத்திரங்கள், அம்மக்களுக்கு அவர் ஏன் இந்தப் பிரமையையும் கொடுத்திருக்கிறார் என்று விளக்குகின்றனவா?

"திடுக்கிட்டுத் தூக்கத்தினின்றும் விழித்துக் கொள்வது போன்றது வாழ்வின் லட்சியத்தை அறிந்துகொள்வது" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளதுதான் அப்பொழுது என் கவனத்திற்கு வந்தது. அப்படியானால் அது அவ்வளவு பயங்கரமானதா...! 'நித்திரை விழிப்பே' மனிதனை உடல் வியர்க்கச் செய்து, கை கால்களை நடுங்கவைக்குமானால், 'வாழ்க்கை விழிப்பு' நிச்சயம் அவனைக் கொன்றுவிடாதா?

படுக்கையில் துள்ளி எழுந்து உட்கார்ந்தவன் கற்சிலையாகவே அமர்ந்து விட்டேன். துரிதமாக வெளிப்போந்த பெருமூச்சும், மும்மடங்கு வேகத்தில் துடித்துக் கொண்டிருந்த இருதய ஓட்டமும்தாம் அந்நிசப்தத்தைக் கிழித்தன!

ஒரே பிரமை! நாற்புறமும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடலாகவே தோன்றி நடுவில் தத்தளிக்கும் கலத்தின் பிரமை! கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட சவம் மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்து அக்கல்லறையைச் சுற்றிச்சென்றது போன்ற பிரமை! அச்சவம்தான் என்னை எழுப்பிற்றோ ஒருவேளை! அப்படியானால் என் உடல் நடுங்குவானேன்! சவம் என்றால் உடல் நடுங்கவா வேண்டும்! உடலுக்கும் சவத்துக்கும் சம்பந்தம் கிடையாதா? ஒன்று மற்றொன்றைத்

தொடுவதற்கு ஏன் கூச வேண்டும்? ஒன்று உயிரின் உஷ்ணத்தோடும், மற்றொன்று மரணத்தின் தண்மையோடு இருப்பதினாலா......!

நான்கு வருடங்களுக்கு முன் நடந்த அச் சம்பவம்கூட எனக்கு அப்பொழுது இதே சஞ்சலத்தைத் தானே ஏற்படுத்திற்று? ரோஜியின் தந்தை இறந்து விட்டிருந்தார். அவள் தாய்—வாழ்வில் அவருக்கு இணையற்ற தோழியாய் விளங்கிய அவர் மனைவி—புரண்டு புரண்டு அழுதபோது ஒரேவார்த்தையைத்தானே திரும்பத் திரும்பக் கூறிப் புலம்பினாள்.

''எனக்குப் பயமாய் இருக்கே! எனக்குப் பயமாயிருக்கே!''

எதற்காக அவள் பயப்பட்டாள்? தன் வாழ்க்கைக்கொடி படர்வதற்குத் தண்டு போல் இருந்த அவர் சவமாய்க் காட்சியளித்ததைக்கண்டு, தான் ஏமாந்துபோய், சவமாகும் ஒருவருடன் வாழ்வைப் பிணைத்து விட்டோமே என்று பயந்து அலறினாளா! அவர் உயிர்போகுமளவும் அவர் அருகிலேயே நின்று அவரைத் தாங்கிக்கொண்டிருந்தவள், அவர் ஆவி பிரிந்ததும், அப்படியே போட்டு விட்டு, தூரத்தில் சென்று மறைந்தாளே அதுவும் இந்தப் பயத்தினால்தானா? அல்லது சவம் என்று தெரிந்ததும் அது தீண்டுவதற்குத் தகுதியற்றது என்ற எண்ணத்தினாலா.........!

அன்றுதான் முதல் முதல் ரோஜி என்னுடன் பேசினாள். தெருவாயிற்படிக்கு வெளியே நின்று கொண்டிருந்த என்னிடம் மெதுவாக வந்து வெறித்துப் பார்த்தாள். 'திக்' கிட்டுப் போய், வெளுத்துக் கலவரமடைந்திருந்த அம்முகம் என்னை எவ்வளவு வேதனைப் படுத்தியது...........!

''இட்டி, அம்மா ஏன் இப்படி அழறா......!''

''உங்கப்பா செத்துப் போயிட்டா, அம்மா அழாமே எப்படி இருப்பா, ரோஜி.........!''

''எனக்கு அந்தமாதிரி அழுகை வரமாட்டேங்கறது...........அழனும்னு நெனச்சாக் கூட.........!''

நாகரிகமான

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

வீட்டுக்குத் தேவையான சகல பாத்திரங்களும்
விதம் விதமான ரகங்களில் கிடைக்கும்

●

சாப்பாட்டுத் தட்டுகள், பிளேட்டுகள், டிபன் செட்டுகள்.
அடுக்குச் சட்டிகள், ஸாஸ்-பான்கள், கரண்டிகள், டவரா,
டப்பா டம்ளர்கள், கிண்ணங்கள் மற்றும் ஏராளமானவை.

●

'' ஸன் '' பிராண்டு பர்க் ஸ்டேபிரைட் ஸ்டீல் பாத்திரங்கள்,
கிரௌன் ப்ராண்டு அலுமினியப் பாத்திரங்கள், மற்றும்
பித்தளை, தாம்பரம் பாத்திரங்கள் மொத்தத்திலும்,
சில்லறையிலும் மலிவாகக் கிடைக்கும்.

●

எம். ஏ. எதிராஜுலு நாயுடு

7/4 ஈவினிங் பஜார், பார்க் டவுன், மதராஸ்-3,

"நீ, சின்னவள் ரோஜி. பதினைந்து வயது தானே ஆகிறது.........உனக்கு இது புரியாது.........!"

"அப்படீன்னா, உனக்குத் தெரியுமா, கிட்டி. செத்துப்போனா எதுக்காக அழனும்னு.........?"

உண்மையில் நான் அசந்துவிட்டேன். அவளுக்குத் திட்டமாக என்னால் பதில் கூற முடியவில்லை! வாஸ்தவம்தானே! இறந்தவர்களைப் பார்த்து ஏன் அழுகிறோம்? நாம் அனுபவிக்கும்—அனுபவிக்கப் போகும்—ஒரு இன்பத்தை அவர்கள் அனுபவிக்காமல் இவ்வுலகை விட்டுப் போய்விட்டனரே என்ற பரோபகாரச் சிந்தனையுடனா......! அல்லது நம் வாழ்வின் நலன் அவர்கள் மரணத்தால் வெகுதூரம் பாதகமாகிறதே என்ற உணர்ச்சிக் கொந்தளிப்பினாலா..............!

ஏதோ ஒரு பதிலைத்தான் அன்று அவளுக்குக் கூறிவிட்டு வரும்படி இருந்தது.........! அதைப்பற்றி இப்பொழுது என்ன! இன்று என்னைத் தட்டி எழுப்பியது எதுவாக இருக்கலாம் என்ற எண்ணமே அல்லவா எல்லாவற்றிற்கும்மேல் தலை தூக்கி நிற்கிறது.

ஆம்! சட்டென்று எனக்கு நினைவு வந்தது. மரணத்தின் உருவம்தான் என்னைத் தீண்டி எழுப்பி இருக்க வேண்டும்...! என் உடலில் அதன் கரம்பட்ட இடம் கூட ஜில்லிட்டு உறைந்து விட்டது போன்ற பிரமை இன்னும் அகலாமலே இருந்தது! சீ! என்ன பேதைமை! சவம் தீண்டினால் என்ன? அது தீண்டிய இடம் சவமாகி விடாதே...! ஆனால் அது தீண்டியது உண்மைதானா! சவம் தீண்டுமா...! அல்லது அதுவும் பிரமைதானா...! அப்படியானால் என் உடலில் ஏற்பட்டிருக்கும் குளிர்ச்சிக்குக் காரணம்...?

ஜில்லென்று முகத்தில் குளிர்ந்த காற்று வீசி உடலை ஒரு கணம் உலுக்கியது. திரும்பிப்பார்த்ததில் ஜன்னல் கதவு பாதி திறந்திருந்தது. அதை யார் திறந்தார்கள்...? யோசித்துப் பார்த்ததில் அன்றிரவு படுக்கப் போகுமுன் அது நன்றாகச் சாத்தப்பட்டுத் தானே இருந்தது!

எழுந்து சென்று அதன் முன் நின்று தோட்டத்தை நோக்கினேன். மௌனம். எங்கும் மௌனந்தான் நிலவி இருந்தது. மேகத்திரையின் மத்தியிலிருந்து அரைவட்டச் சந்திரன் மங்கலாகப் பார்த்துக் கொண்டிருந்தது கூட மரணத்தின் மௌனத்தைத் தோற்றுவித்தது. கண்ணுக்கெட்டும் தூரம் வரை இருள் கவிந்திருந்த கட்டிடங்களும் மரங்களும் சவத்தின் கோர மௌனத்தின் உருக்கொண்டு ஓங்கி நின்றன.

மரணம் இப்படித்தான் இருக்குமா? மரணத்துக்கும் மௌனத்துக்கும் தொடர்பு என்ன இருக்கும்? 'மரணத்தைக் கண்டு அஞ்சாதே' என்று கூறுபவர்கள் இந்த மௌனத்தில் இன்பம் கண்டவர்களா? மௌனத்தில் பயங்கரந்தானே தெரிகிறது...! ஒருகால் இன்பம்கூட இருக்கிறதா...? அப்படியானால் ஏன் யாவரும் இந்த இன்பத்தை அடைய முயலுவதில்லை...! மரணம் ஒன்றினால்தான் இந்த இன்பம் கிடைக்குமா...? ஒருவேளை மரணத்திற்குப்பின் இன்பமே இல்லாமல் போய்விட்டால்...! சென்ற உயிரை மீண்டும் உடலிலேயே புகுத்த வேண்டும்போல் ஆகிவிட்டால்...? அது சாத்தியமாகுமா.........? உடலும் உயிரும் பிரிந்து விட்டால் அவை மறுபடியும் ஒன்றுசேர இச்சை கொள்வதே கிடையாதா இளம் காதலர்களைப்போல...........! ஏன் கூடாது? துர்மரணமாக உயிரையும் உடலையும் பிரித்துக் கொள்ளுகிறவர்கள், ஆவியாக உடலைத் தேடுகிறார்களாமே......! எது தேடுகிறது? உடலிலுள்ள உள்ளமா? அல்லது உயிரிலுள்ள ஒளியா...? இல்லை, இரண்டும் தானா.........?

நடுங்கிய கரங்களுடன் ஜன்னலை இழுத்துச் சார்த்திவிட்டு, சிறிதாக எரிந்து கொண்டிருந்த விளக்கைத் தூண்டி, நாற்புறமும் அச்சத்துடன் நோக்கினேன். அலமாரியில் வைத்திருந்த புத்தகம் சரிந்து விழுந்து, அட்டை திறந்து கிடக்க அதன் தலைப்பு, கொட்டை எழுத்துக்களில் என்னை நோக்கி மிரட்டியது!

"பேய் ஜன்மம்" ஆம்! உடலும் உயிரும் அற்றதன்மையில் வாழும் ஜீவன்களின் வாழ்க்கைப் புத்தகம்......! அது எப்படி கீழே விழுந்தது...? அதிலுள்ள பேய்கள் உயிர் பெற்று விட்டனவா...? பேய்களிலும் உயிருள்ளது உயிரற்றது என்று இருக்காதா? பாட்டி சொல்லுவாள், தான் ஒரு குழந்தைப்பேயைப் பாத்திருப்பதாக...! அப்படியென்றால்...? பேய்களுக்குக் குழந்தைப் பருவம், வாலிபப் பருவம் வயோதிகப் பருவம் முதலியன இருக்கின்றனவா என்ன? இருக்குமானால் அவைகளுக்குப் பிறப்பும், இறப்பும்கூடத்தானே இருக்கவேண்டும்? பேய்களும் மணம் செய்து கொண்டு பிள்ளை குட்டிகளைப் பெறுகின்றனவா.........! ஏன் கூடாது......? பேய் உலகத்தைப் பார்க்காதவரையில் எதைத்தான் திட்டமாகக் கூற முடியும்? ஆனால் பேய்களுக்குப் பிறப்பிடம்

மனித உலகம்தான் என்று சிலர் கூறுகிறார்களே! கடவுள் மனிதனைப் படைத்தால், மனிதன் பேயைப் படைக்கிறானா......!

சீ! இதெல்லாம் என்ன நினைவு! மனிதனுக்கு உள்ளத்தில் கொஞ்சம் பயம் ஏற்பட்டால், அவனுடைய பிரமை அந்த உள்ளத்தைப் பைத்தியம் பிடிக்கும் அளவுக்கு ஓட்டி விடுகிறதே! பயம்! பயம்! வாழ் நாள் முழுதும் பயம்தானா! எதற்காக இந்தச் சித்தம் சுவாதீனம் அற்றுப் போய்ப் பயப்படுகிறது? ஆத்மாவின் சொரூபத்தில் மனம் பயப்படுகிறதா, இல்லை மனதின் பிரமையில் ஆத்மா அஞ்சுகிறதா......? ஒரு அவதியும் புரியமாட்டேன் என்கிறதே.........!

மூன்றாம் வருஷம் ரோஜியும் இதைத்தானே சொன்னாள். மலர்ந்த ரோஜாவின் மேல் பனிநீர் தங்கி நின்றது போல் கண்ணீர் பளபளத்த கன்னத்துடன் குழாய்டியில் நின்றுகொண்டு என்னவெல்லாமோ சொன்னாளே............!

'கிட்டி, நீ ஏன் இப்படி இருக்கே.........! எங்கேயாவது போயிடேன்......! உன்னை நெனச்சாலே எனக்கு ஒண்ணும் புரியலையே......! வாழ்க்கையிலே துன்பம்தான் மனுஷாளைப் பயமுறுத்தும்னு நெனெச்சேன்......! அன்பும் பாசமும் அதுக்குமேலே இருக்கே......! உன் கண்ணைப் பார்த்தால் எனக்கு அழுகை வரது.........!

இதெல்லாம் எதற்காகக் கூறினாள்? என்னைப் பற்றி நினைத்து அவளுக்கு என்ன புரியவில்லை? அவள்—உள்ளத்தினால் உள்ளத்தைப் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கமா......? அல்லது என் ஆத்மாவை அவள் ஆத்மா அறிந்துகொண்டு அதை மனதில் இரகித்துக்கொள்ளச் சக்தியற்ற நிலைமையா........? காதல், இன்பம், வாழ்வு, மணம் என்பதெல்லாம் அதற்கு முன் பேசி இருக்கிறாளே, அப்பொழுது என்னைப் பற்றி என்ன புரிந்துகொண்டாளாம்......? அன்பும் பாசமும் பயத்தை உண்டுபண்ணுவானேன்......! யாருக்கு யார் துக்கப்படமுடியும்? என் கண்களின் ஒளி அவள் ஹ்ருதயத்தைச் சோகமுறச் செய்கிறதாம்! அவ்வளவு கொடிய கண்களா இவை! அதே கண்கள் அவளுக்கு வேறொரு சமயம் வேறொரு மாதிரியாகத் தோன்றினவே, அன்றைக்கு இப்படியெல்லாமா பேசினாள்...!

பங்குனி மாதத்துக் கடும் வெய்யிலில் அந்தக் கிராமத்து வீட்டிற்குள் காற்றாடப் படுக்க இடமில்லாததால், தகிக்கும் கதிரவனைக்கூடப் பொருட்படுத்தாமல் பக்கத்துத் தோப்புக்குள் சென்று அந்த மாமரத்தின் கீழ் இரண்டு தென்னம் கீற்றுகளைப் பரப்பி அதன்மீது படுத்துக்கொண்டு புஸ்தகம் வாசித்துக் கொண்டிருந்த என்னை அவள் எப்படியோ தேடிக்கொண்டு வந்துவிட்டாள். அப்பொழுது மட்டும் என்ன கூறிவிட்டாள்...!

"என்னை ஏன் அப்படிப் பார்க்கறே, கிட்டி! நான் ஒன்றும் உன்னைத் தேடிண்டு வரலை......... சும்மாத்தான் வந்தேன்......... நான் போறேன்.........!"

"என்னைத் தேடிண்டு வராட்டா, எங்கிட்டே ஏன் சொல்லிண்டு போறே, ரோஜி.........! நெருப்பா கொதிக்கிற புழுதி மண்ணுலே நடந்து ஏன் வந்தே......... ஏன் போறே.........?"

போகப் புறப்பட்டவள் சட்டென்று திரும்பி, ஒரு வெட்டு வெட்டினாளே, அப்போது, அதன் அர்த்தம் இன்னும் எனக்கு விளங்கவில்லை. கால் கொப்புளிக்க இவ்வளவு தூரம் வந்து விட்டு, என்னைத்தேடிக் கொண்டு வரவில்லை என்று வேறு சாதிக்கிறாள். அதில் அவளுக்கு என்ன திருப்தி? நிச்சயம் திருப்தி தானா அது! அல்லது தூய ஆத்மாவின் அன்பு வெள்ளத்தை அணையிட்டுத் தடுக்கும் மாயா கௌரவமா.........! அவள் உள்ளம் என்னைக்காணத் துடித்துக் கொண்டு அவள் முகத்தைப் பிளந்து வர முயலும் போது, அவள்வாய் மட்டும் ஏன் அதை ஒப்புக்கொள்ள மறுக்க வேண்டும்...!

ஏன் வந்தாள் என்றுகூட நான் கேட்கவில்லை. நான்தான் ஒன்றுமே அவளைக் கேட்பதில்லையே! என் பார்வையை வைத்துக் கொண்டே அவள் ஏதேதோ அர்த்தம் செய்து கொள்ளுவாள். "ஏன் அப்படிப் பாக்கறே?" இதேதான் அவள் ஜபம். எப்படிப் பார்க்கிறேன்? பார்வையில் அவளுக்கு என்ன புரிகிறது! "எவருடைய அபாயம் என்னை என்ன செய்யும்! உன் கண்களில் தான் அதிக அபாயம் இருக்கிறது! எங்கே, கொஞ்சம் கனிவுடன் பார்!" என்று தன் காதலி ஜூலியட்டைப் பார்த்து ரோமியோ கூறினானே, அவ்ள் கண்களில் என்ன அபாயத்தைக் கண்டான் அவன்......? இரண்டு ஆத்மாக்கள் ஒன்றையொன்று கண்கள் மூலமாகத்தான் சந்தித்து அறிந்துகொள்ள முடியும் என்று நம்பினார்களா அக் காதலர்கள்......! ரோஜியும் அதைத்தான் நம்பினாளா......!

"நான் போகப் போவதில்லை. இங்கேதான் இருக்கப் போறேன்! நீதான் என்னமோ போல் பார்க்கிறாயே!"

இதுவும் அப்பொழுது அவள் கூறினது தான். நான் முதலில் பார்த்த பார்வை அவளைப் போக வைக்கும்போல் இருந்தால், இப்பொழுது என் பார்வையில் எதைக் கண்டு அவள் அங்கே இருக்க விரும்பினாள்! அவள் போக்கே அலாதிதான். அந்தச் சிறிய தலைக்குள் என்னென்ன எண்ணங்கள் சுழன்று கொண்டிருந்தனவோ யார் கண்டார்கள்!

'வெய்யில் வேளை, ரோஜி, கொஞ்சம் நகர்ந்துதான் உட்கார்ந்து கொள்ளேன்...!"

அவள்காதில் இது விழுந்ததோ என்னமோ, எனக்குத் தெரியவில்லை. அவள் என் கண்ணைத்தான் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"கிட்டி, என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்க வில்லையே......!"

"இதென்ன கேள்வி, பைத்தியம்! நான் அப்படிச் சொன்னேனா?"

"பின்னே ஏன் இப்படி இருக்கே......?"

"எப்படி இருக்கேன்?"

"என்னோடே பேசாமெ.....மௌனமா!"

"இப்பொ நான் பேசறதெல்லாம் பேச்சாகத் தெரியவில்லையா.........!"

'எங்கே பேசறே...! உன் உதடுதானே அசையறது......!"

"என்ன பேத்தல் இது ரோஜி! பேசினா உதடு அசையாமே என்ன பண்ணும்......! உதடு அசைஞ்சா பேசறதாக அர்த்தமில்லையா.........!"

"ஐயோ, கிட்டி! உனக்கு ஏன் ஒண்ணுமே தெரிய மாட்டேங்கறது? என் கண், என் முகம், என் உடல் எல்லாம் உன்னோடே பேசறதே......! அது உனக்குப் புரியலையா!"

நான் ஒன்றுமே கூறவில்லை. நிச்சயமாக எனக்கு அது புரியவில்லைதான். அவள் உள்ளத்தில் என்னதான் இருந்ததோ, அதை அவள் வெளியிட வில்லை. அவள் ஒருத்திதான் அப்படியா, அல்லது ஸ்திரீ வர்க்கம் முழுதுமே அப்படித்தானா! கொடுப்பதெல்லாம் கொடுத்துவிட்டு, உள்ளத்தை மட்டும் பூடகமாக மூடி வைத்து, தம்மையும் பிறரையும் ஓயாச் சஞ்சலத்தில் ஆழ்த்தும் மாயப் பிறவிகளா இவர்கள்.........! தம் ஆத்ம மாயையினால் பிற ஆத்மாவை மயக்கி, அப்போதையிலேயே தம் ஆத்மாவின் உய்வை உணர்கின்றனவா?

"ரோஜி" என்று நான் அழைப்பதற்குள் அவள் சிட்டாகப் பறந்துவிட்டாள். அவள் சென்ற திக்கிலிருந்து வந்த விசும்பல் மட்டும் அர்த்தமற்ற குழப்பத்தை என் மனதில் உண்டாக்க ஆரம்பித்ததே.........? அவள் கூறியதுபோல் பெண்களின் விசும்பல் கூட ஆண்களின் அகத்தில் பேசுமா.........! அல்லது அதுவும் பிரமையா.........!

அலமாரியிலிருந்து சரிந்து விழுந்திருந்த அந்தப் புஸ்தகத்தைக் குனிந்து எடுத்தேன். ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் ஒவ்வொரு பேயுருவம் வெளிக்கிளம்புவது போன்ற ஒரு பிரமை.........! திடீரென்று என் இரண்டு கால்களும் என்னைத் தாங்கக்கூடச் சக்தியற்றனவாய் மாறி, மேஜையின் அருகில் நின்ற நாற்காலியில் 'தொப்' பென்று தள்ளின. இருண்டிருந்த கண்களுக்குக் கரத்தில் பற்றி இருந்த புஸ்தகத்தில் எதுவுமே தெரியவில்லை. அட்டையின் உட்புறத்தில் பொறித்திருந்த இரண்டே எழுத்துக்கள் கோரஸ்வரூபத்தில் சண்டிகா நர்த்தனம் புரிந்தன!

"ரோஜி"

அவள் எதற்காக இதைக் கொடுத்தாள்? எதற்காகத் தன் பெயரை எழுதினாள்? எனக் களிப்பதற்கு இந்தப் புஸ்தகம்தானா அவளுக்குக் கிடைத்தது.........? இதைக் கொடுக்கத்தான் வேண்டுமா.........? இதில் அவளுக்கு என்ன சாந்தி? சாந்திதானா...! இதைக் கொடுக்காவிட்டால், என்ன செய்திருப்பாள்.........? ஆம்! வேறு என்ன செய்திருப்பாள்............? என்ன செய்திருக்கமுடியும்..................? 'கொடுக்க வேண்டும்' என்ற எண்ணத்தின் தாப வேகத்தைப் பூரணமாய் அடக்கச் சக்தியற்று, பொங்கி வரும் பாலைத் தண்ணீர் ஊற்றிச் சிறிது சிறிதாய் அடக்குவதுபோல், இவ்விதமாகக் கொடுத்து அவ் வேகத்தைத் தணித்துக் கொண்டாளா......! 'கொடுக்கும் தாபத்தைத்' தணித்துக் கொள்வதில், 'கொள்ளும் தாபத்'தைப் பிறர் உள்ளத்தில் ஓங்க வைப்பதுதான் ஒரே வழியா......! அதுதான் ஸ்திரீ சாகசமா.........! அல்லது ஸ்திரீ தர்மமா......!

"இந்தப் புஸ்தகத்தை ஏன் கொண்டு வந்தே, ரோஜி? நான் உன்னைக் கேட்டதாக ஞாபகம் இல்லையே......?"

"நீ கேட்காவிட்டால்கூட உனக்கு இது வேணும்னு எனக்குத் தெரியும், கிட்டி......!"

"ஓகோ!"

"சிரிக்காதே, கிட்டி! நீ இதைப் படிச்சு இதுலே எழுதி இருக்கறதைப் புரிஞ்சுக்க

இண்டோ கமர்ஷியல் பாங்க்
லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:- மாயவரம்

செண்ட்ரல் ஆபீஸ்:- மதராஸ்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு	ரூ. 10,00,000

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 ***SUNDARI ELIXIR***
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 ***PHOSPHORUS OIL***
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 ***MASTANA PILLS***
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.
250, China Bazaar, MADRAS.

உங்களுடைய விவசாயப் பிரச்னைகளை

நாங்கள் தீர்த்து வைப்போம்

WE CAN SOLVE YOUR AGRICULTURAL PROBLEMS



USE **Fordson**

MAJOR TRACTORS

எத்தகைய வேலையாயினும், எதற்கும் உதவும் போர்ட்ஸன் மேஜர் அதைச் சாதிக்கும். அதன் பலதிறப்பட்ட சக்தியை நீங்கள் பரிபூரணமாக அடைய நாங்கள் உதவ இயலும். ஏனெனில் எத்தகைய கருவிகள் தேவையாயினும் — விவசாய சாஸ்திரக்ஞர்களால் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டவை— எங்கள் மூலம் நீங்கள் தருவித்துக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான கருவிகளைச் சீரிய முறையில் அமைத்துக் கொடுப்பதற்கு நாங்கள் உதவத் தயார்.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபத் (டெக்கான்)

ணும்னு நான் கொடுக்கல்லே......! ஆனா...... நீ இதைப் படிக்கணும்னு மட்டும் எனக்கு இருக்கு......!"

"இதெல்லாம் என்ன பேச்சு, ரோஜி? விஷயத்தைப் புரிஞ்சுக்காமே எப்படிப் படிக்கறது......!"

"கிட்டி, உனக்கு ஒண்ணும் தெரியாது...! விஷயத்தைப் புரிஞ்சுக்கவா புஸ்தகம் படிக்கிறது......! ஏற்கனவே புரிஞ்சுண்ட விஷயங்களை யெல்லாம் மறக்கறதுக்குத் தானே படிக்கணும்......! முக்கியமா நீ மறக்க வேண்டியது நிறைய இருக்கு.........துஷ்யந்தன் சகுந்தலையை மறந்தாப்பலே......!"

"சம்பந்தமில்லாமெ ஏன் இப்படிப் பேசறே, ரோஜி!"

"அதுக்குமேலே உன் இஷ்டம் கிட்டி! இதை நீ படிச்சிண்டிருந்தயானா ஒரு நாளைக்கு நூறு தடவை என்னைக் கூப்பிடாமெயாவது மறந்து இருப்பேன்னு நெனச்சேன்.........!"

"என்ன! நூறு தடவை கூப்பிடறேனா...! இதெல்லாம் என்ன கலக்கம்.........! நான் எப்போ.........?"

"இல்லை கிட்டி! நீ என்னைக் கூப்பிடறது உனக்குத் தெரியாது! எனக்குத் தெரியறது! அதுதான் இங்கே அடிக்கடி வரேன்.........! இப்போ........ நான் போகணும். உனக்குப் பிரியமில்லாட்டா இந்தப் புஸ்தகத்தை நான் எடுத்துண்டு போறேன்.........!"

"ரோஜி.........!"

"ஹூம்!"

"அதை வச்சுட்டுப் போ.........!"

"வேண்டாமனு சொன்னையே........."

"இப்போ வேணும்.........!"

"பார்த்தாயா.........! நான் மொதல்லியே சொன்னேனே.........!"

அவள் உண்மையிலேயே தன் மனப்போக்கைப் பிரதி பலித்தாளா, அல்லது தன் பேச்சு வன்மையால் என்னை வாட்டினாளா......? அவள் பேசுவதின் விவரமெல்லாம் எப்பொழுது தான் என் மனதிற்கு எட்டப் போகின்றன......? இரண்டு உள்ளங்கள் ஒன்றை யொன்று கண்ணாடிபோல் பார்த்துக்கொள்ள முடியாதா......! இல்லை முடியுமா......! சில உள்ளங்கள் மட்டும் மற்ற உள்ளங்களை ஊடுருவிப் பார்க்கின்றனவே......! அவளும் இதைத்தானே சொன்னாள்......

"கிட்டி, உன் உள்ளம் உனக்குத் தெரியறதைவிட எனக்கு இன்னும் நன்னாத் தெரியறதே......! நீ ஏன் இப்படி இருக்கே......! எங்காவது போயிடு......! இந்த ஊரை விட்டுப்போயிடு......! இந்தத் தேசத்தை விட்டுக் கூடப் போயிடு......! அந்த உள்ளம் பாலைவனமா ஆகிறதுக்குமுன் அதைக் காப்பாத்து......!"

இதெல்லாம் எப்படிக் கூறினாள்? கூறும்போது உணர்ச்சி வேகத்தால் பேசக்கூட முடியாமல் ஏன் அப்படி தத்தளித்தாள்? என் உள்ளத்தில் அவள் என்ன கண்டாள்? அதில் எந்தப் பாலைவனத்தைப் பார்த்தாள்? ஒருவேளை பார்த்தாளோ.........! என்னைவிட அவளுக்குத்தான் நன்றாகத் தெரிகிறது என்று கூறினாளே......! அது ஏன் உண்மையாய் இருக்கக் கூடாது!

"ரோஜி, என்னைப் போகச் சொல்றயே... நீ மாத்திரம் இங்கே என்ன பண்ணப் போறே......? இந்தமாதிரி யெல்லாம் யாரோடே பேசுவே......?"

அவள் கண்களில் கண்ணீர் திமிறிக் கொண்டிருந்தாலும் அவள் இதழ் புன்னகையால் விரிந்தது.

"கிட்டி, நீ வரவர குழந்தையா போயிட்டே நீபோ...! நீ எங்கே இருந்தாலும் உன்னோடு நான் பேசிண்டே இருப்பேன்...! இந்த ஜன்மாவிலே என் வாழ்வு பூரணமாயிற்று! ஆனா, ஒரே ஒரு ஆசைதான் இருக்கு! உனக்கு இன்னொரு ஜன்மம் இருக்குமானால் நீ என் குழந்தையாய் வந்து பிறக்கணும்...!"

ஈச்வரா! இது என்ன பிரார்த்தனை! பிறவியிலேயே ஞானயோகியாய்ப் பிறந்து விட்டாளா அவள்...! அல்லது நிராசையால் விரக்தி மேலிட்டுப் பேசினாளா...! அதி அன்பு காதலாக மாறும் என்றால், எல்லை கடந்த காதல் தாய்மை ஸ்தானத்தை வகிக்க இச்சை கொள்ளுமா...! என் உள்ளம் முழுவதும் ஒருநொடியில் அறிந்து கொண்டுவிட்டதாகக் கூறும் அவள் உள்ளத்தின் ஒரு பகுதியைக் கூட உணர என்னால் சக்தியற்று போய் விட்டது......! இதெல்லாம் என்ன பிரமை! காதலும் பாசமும் எத்தனை நாளைக்கு......! வாழ்வில் யார் யாரை எவ்வளவு காலத்துக்குக் காதலிக்க முடியும்...! ஒருவரின் காதல் மற்றொருவரை உய்விக்குமா! காதல் இல்லாமல் உலகம் நடக்காதா? காதல். காதல் என்று வாழ்நாள் முழுதும் கற்பனை உலகில் கலந்து அல்லலுறும் உள்ளம் உண்மையில் அதை இன்பமாகக் கருதுகின்றதா? அல்லது உண்மை இன்பம்தானா!

ஜன்மாவின் லட்சியம் காதலினுல் நிறைவேறிவிடுகிறதென்று கூறுகிறவர்கள் உண்மையில் காதல் மூலம் ஞானமடைந்தவர்கள் தானு? ஞானத்திற்கு வழிகாட்டி காதலானுல் அந்தக் காதலை எப்படி அடைந்தால்தான் என்ன?- இளம் ஆண் பெண் உள்ளங்கள் தாம் ஒன்றையொன்று காதலிக்கவேண்டுமா? வயோதிகர்கள் காதலித்து ஞானமடைய முடியாதா? குழந்தைகள் காதலுக்குப் புறம்பானவர்களா? சகோதரர்கள், சகோதரிகள், தாய் தந்தையர் இவர்களையெல்லாம் காதலிப்பது தவரு! காதலுக்கு ஏற்றவள் மனைவி ஒருத்திதானு! காதலியைத்தான் காதலிக்க வேண்டுமா? அதுதான் உண்மையா.........! நிச்சயம் உண்மைதானு.........! காதல், சத்தியத்தைத் தோற்றுவிக்குமானுல் அது உலகிலேயே தூய்மையாகத்தானே இருக்க வேண்டும்? தூய்மை பொதுப்படையான வாழ்க்கை லக்ஷியம் இல்லையா?. கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் அதை யேன் தனியுரிமை ஆக்கவேண்டும்! ஒவ்வொரு காதலியிடமும் அவள் காதலன் இத் தூய்மையைப் பிரதிபலிக்கிருனு, அல்லது காணத்தான் செய்கிருனு.........? உண்மையில் இரு உள்ளங்களும் தூய்மையை நாடுகின்றனவா.........! அல்லது தூய்மை என்று மயங்கி மாய இன்பத்தைப் பின் பற்றி ஏங்குகின்றனவா......! எது எதை நாடுகின்றது.........? ஸ்தூலம் சூக்ஷ்மத்தையா அல்லது சூக்ஷ்மம் ஸ்தூலத்தையா.........! அல்லது இரண்டும் இரண்டையுமா.........! காதல் ஞானத்துக்குச் சரீரம் அத்யாவசியந் தானு.........! அதற்காகவா சரீரம் படைக்கப் பட்டுள்ளது. இல்லை, சரீரத்தை உத்தேசித்துக் காதல் பிறக்கிறதா......! மனைவிக்கும் கணவனுக்கும் அதனுல்தான் அது தனியுரிமையாகக் கொள்ளப்படுகின்றதா......? சரீரத்தைப் பற்றியது என்ருல் அப்பொழுது அது எப்படி தூய்மை யாகும்? சரீரத்தைப் பற்றியது எதுதான் தூய்மை? இல்லை, தூய்மையின்றி வாழ்க்கை பூரணத்துவம் அடைவது சாத்தியமா......!

"இந்த ஜன்மாவிலே என் வாழ்வு பூரணமாயிடுத்து" என்ருளே அவள், அதன் அர்த்தம் என்ன! ஜன்மம் என்று எதைச் சொன்னுள்? பூரணம் என்று எதைக் குறிப்பிட்டாள்? அவள் வாழ்வில் காதலே ஏற்படவில்லையா......! அல்லது ஏற்பட்டுத்தான் இருந்ததா......! இருந்தால் அதன் முடிவு? முடிவில்லாமல் பூரணத்துவத்தை எப்படிப் பெற்ருள்? ஒருகால் பெற முடியுமோ......! அப்படியானுல் அவள் காதல் எத்தகையது? அவள் யாரைக் காதலித்தாள்......? யாரைக் காதலிக்க முடியும்......? முடிந்தது.........? என்னையே காதலித்தாளா.........! அப்படியானுல் ஒரு காதலியைப் போலவா அவள் பழகினுள்.........! காதலிகள் எல்லாம் இப்படித்தான் பழகுவார்களா......? என் வாழ்வுடன் அவள் வாழ்வு இழைந்தோடும் என்று அவள் எண்ணி யிருப்பாள்! பின் ஏன் என்னிடம் அதை யெல்லாம் கூறவில்லை.........? அவள் வாழ்வில் காதல் இருந்தால் அதற்குப் பூரணம் இல்லாமல் அவள் வாழ்வு மட்டும் எவ்விதம் பூரண மடைந்தது......!

"நீ எங்கே இருந்தாலும் நான் உன்னேடு பேசிண்டே இருப்பேன்........." என்ருளே அது என்ன? தன் ஆத்மத் தூய்மையினுல் என் ஆத்மாவைத் தன்னுள் அடக்கிக் கொண்டு தன்னில் தானே வாழ்கிருளா......! இதுதான் அவள் கண்ட பூரணமா.........? அது பூரணம் தானு......!

அப்படியானுல் அவள் விவாகம்? அதையும் அவள் சாதாரணமாகத் தானே வரவேற்ருள் போல் தோன்றிற்று.

பல இன்னல்களுக்கு மத்தியில் சென்ற வருஷம் ஒரே கணம் ஓட்டமாக ஓடிவந்து அதைக் கூறிவிட்டுச் சென்ருளே. அப்பொழுது அவள் முகம் எவ்வளவு மலர்ந்திருந்தது......! நிச்சயமாய் அது குதூகலம் தானு.........? எதற்காகக் குதூகலம்.........? தன் புதிய வாழ்க்கையிலா, இல்லை அதை என்னிடம் கூறியதிலா.........? அல்லது இரண்டிலுமா......!

"கிட்டி......! கல்யாணம்......!"

"யாருக்கு, ரோஜி?"

"யாருக்கோ......! எனக்குத்தெரியாது.../"

"இதென்ன விளையாட்டு...! கல்யாணம்னு தெரிஞ்சிருக்கச்சே யாருக்குன்னு தெரியாதாவது......!"

அவள் சிரித்தாள் வெள்ளி மணியை அசைத்தாற்போல.

"கிட்டி, உனக்கு ஏன் ஒண்ணுமே தெரிய மாட்டேங்கறது......! மாடி வீட்டு ரகுவுக்குக் கல்யாணம்......!"

"அடேயப்பா......! இதைத்தானு பிரமாதமா......! இரு! இரு! ரோஜி! கல்யாணப் பொண்ணு யாரு?"

அவள் கண் இமைகள் படபடத்தன பட்டுப்பூச்சி இறக்கைபோல.

"ரோஜி......! நீதானு......!"

"இல்லை! நிச்சயமா நானில்லை......! நான் இருக்கவேமாட்டேன்......!"

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு.
தெப்பக்குளம் போஸ்ட்.

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	,,	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி.



தி
இந்தியன் பாங்க் லிட்.

"அப்படின்னா உன் கண்ணுலேர்ந்து ஏன் கண்ணீர் வரது, ரோஜி......?"

"சந்தோஷத்தினுலே தான்! ரகுவாலே என்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது,- தாலி கட்டினுக்கூட!"

"என்ன சொல்றே, ரோஜி? ஒண்ணுமே புரியமாட்டேங்கறதே......!"

"உனக்கு எதுதான் புரியறது.........! நீ எங்கேயாவது போயிடேன்......! எனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆயிடுத்து, நூறு வருஷம் நான் வாழ்ந்தாச்சு, அதுக்கப்புறம் நான் செத்துக்கூட போயாச்சுன்னுதான் சொல்றேன்.........!"

இப்படியெல்லாம் அவள் பேசினளே இதற்கெல்லாம் அர்த்தம் இருக்கிறதா......! அவள் உள்ளத்தின் உண்மை நிலைதான் என்ன? ரகுவை விவாகம் செய்துகொண்டு போனபின் அவள் மன நிலையில் மாறுதல் ஒன்றும் நேரவில்லையா? பிருதிவி யந்திரத்தில் அவள் எந்தப் பகுதிக்குப் பொருந்தியவள்.........?

"போ! போ!" என்று என்னைக் கூறிக்கொண்டே இருந்தாளே, எங்கே போகச் சொன்னுள்! "நீ எங்கே இருந்தாலும் நான் உன்னிடம் இருப்பேன்" என்று கூறினுளே, அதன் உண்மை என்ன.........! ஒருவேளை புத்தி சுவாதீனமற்றுப்போய் இதையெல்லாம் பிதற்றினுளா......! இல்லை, நான்தான் பைத்தியமா.........! ஒருகால் இரண்டு பேரும் பைத்தியமாக இருந்திருந்தோமா......!

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் யார் பதில் கூறுவார்கள்...! ரோஜியாலேயே ஒருவேளை முடியுமோ.........! அவள் இப்பொழுது என்ன செய்கிருள்.........? எப்படிக் காலத்தைப் போக்குகிருள்.........! ரகுவுடன் எவ்விதம் பேசுகிருள்.........! பழகுகிருள்......!

* * *

கையிலிருந்த "பேய் ஜன்மம்" நழுவி மேஜை மீது விழுந்தது. சிந்தனையோடு தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டேனு......! திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். மேஜையின்மேல் அது அலங்கோலமாகக் காட்சியளித்தது. புளித்த மனதுடன் அதை எடுத்து வீசி யெறிந்தேன். அதனடியில் 'ரோஜி' தலைவேறு உடல் வேறுகக் கிடந்தாள்! ஆம்! ரோஜிதான்! கடைசித்தடவையாக வந்தபோது அவளேதான் தன்னை அங்கு வைத்துவிட்டுச் சென்றிருந்தாள். சலவைக் கல்லில் தன் உருவத்தைச் செதுக்கி அதை அம்மேஜையின் மீது வைத்துவிட்டு ஏனே அன்று அதைப் பார்த்து விசித்து விசித்து அழுதாள்...! ரோஜி கூட அழுவாள் என்பது எனக்கு அப்பொழுதுதானே தெரிந்தது......!

"கிட்டி......இந்தச் சிலை ஏதாவது கேட்டால் பதில் சொல்லு......! நிச்சயமா சொல்லுவாயா......!"

ரோஜியிடமிருந்து வந்த இந்த வார்த்தைகள் அப்போது என்னை வியப்புறச் செய்யவே இல்லை! அவள் பிறவியே அப்படித்தானே...! உள்ளத்தில் தோன்றியதை விவரமின்றி அப்படியே கூறுபவள்தானே......!

முண்டமும் தலையுமாக இரு ரோஜிகளையும் பார்த்துக் கொண்டே இருந்தேன்...! அவள் இதைப் பார்த்தால் என்ன சொல்லுவாள்...! அழுவாளா...! என்னைக் கோபிப்பாளா......! அல்லது.........

"கிட்டி! என்னை ஏன் கொன்னுட்டே...!"

"நானில்லே, ரோஜி! அந்தப் "பேய்ஜன்மம்" தான்! அதுவும் நீ கொடுத்ததுதான்!"

"கிட்டி! நீ குழந்தையிலும் குழந்தையாயிட்டே! என் 'பேய் ஜன்மத்தை' உங்கிட்டே கொடுத்தேன்......அது உன்னை ஏமாத்தி என்னைக் கொன்னுடுத்து, பார்......!"

'படார்' என்று அறைக்கதவு அடித்துக் கொண்டது என்னைத் துள்ளி எழச் செய்தது. துவண்ட நடையுடன் சென்று கதவைத் திறந்து வெளியே நோக்கினேன். சில்லென்று அடித்த பனி முகத்திலும் மனத்திலும் கடுமையை உண்டாக்கியது. நிர்மலமான வான வீதியின் கீழ்க்கோடி சிவந்து வந்துகொண்டிருந்தது. மறுபடியும் அதே பழைய பிரமை! அருணேதயத்தின் முதல் செங்கிரணங்களின் மேல் பளுவின்றி நடந்து செல்வது போன்ற பிரமை......! இல்லை! பிரமை இல்லை......! பிரமை தானு! யாரோ செல்கின்றனரே! என் அறையை விட்டு நடந்து நேரே அக்கிரணங்களின்மேல் குலுங்கிச் செல்லும் பெண்ணுருவம்......!

"ரோஜீ......! கடைசியில் போகிருயா......" அவள் காதில் ஒன்றுமே விழவில்லை. அவளையே பார்த்துக்கொண்டிருந்த என் காதில் ஒரு வார்த்தை மட்டும் வெகு நேரத்துக்குப் பின் விழுந்தது.

"சார்......தந்தி!"

தந்தியை நான் வாங்கிக்கொண்டேன். அதைப் பிரிக்கவில்லை......! படிக்கவில்லை...! பார்க்கவும் விரும்பவில்லை......! அது என்ன என்பது எனக்குத் தெரியும்......! ரோஜியின் குரல் ஏற்கனவே எனக்கு அறிவித்துவிட்டது......! அவள் அன்றிரவு போய்விட்டாள்! இவ்வுலகையே விட்டுத் தன் உலகுக்குப் போய்விட்டாள்!

"கோயிலும் மசூதியும்"

எம். எஸ். கமலா

சௌதரீ இதரத் ஆலீ 'கடா' வில் பெரிய ஜாகிர்தார். அவர்களுடைய முன்னோர்கள் முகலாயர்களின் அரசாட்சிக் காலத்தில் பிரிட்டிஷ்காரர்களுக்கு வெகு சகாயம் செய்தனர். அதன் பயனாக அவர்களுக்கு இந்த ஜாகிர் கிடைத்தது. அவர்களுடைய திறமையால் அதை இன்னும் விரிவாக்கிக்கொண்டனர். இப்பொழுது அந்த இலாக்காவில் அவரைவிடப்பணம் படைத்தவர்கள் கிடையாது. பிரிட்டிஷ் (சாஸகர்கள்) அதிகாரிகள் அப்பக்கங்களுக்கு வந்தால் சௌதரீயின் யோக க்ஷேமத்தை விசாரித்துச் செல்வார்கள். ஆனால் சௌதரீ மாத்திரம் வந்தவன் எப்பேர்ப்பட்டவனாயினும் எழுந்து போய் எதிர்கொண்டழைத்துச் சலாம் செய்யும் வழக்கமில்லை. அவர் காரியாலயங்களுக்குச் செல்லமாட்டார். தர்பார்களுக்கோ, கோர்ட்டுகளுக்கோ எங்கும் செல்லமாட்டார். அதிகாரிகள் முன் கைகட்டி நின்று 'ஜீ ஹுஜூர்' என்று சொல்வதைத் தமக்குக் குறைவாய் நினைப்பார். அவருக்கு நஷ்டமேற்படினும் வழக்கிற்குப் போகமாட்டார். எல்லா வேலைகளுக்கும் பிரதிநிதிகள் உண்டு. அவர்கள் நூற்றை ஒன்றாக்கினாலும் சரி, ஒன்றை நூறாக்கினாலும் சரி, ஷரத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர். வட்டிப் பணத்தை வாங்க வெறுப்பார். பாரஸீக பாஷையிலும், அரபிப் பாஷையிலும் நல்ல மேதை. நாளுக்கு ஐந்து முறை நமாஸ் செய்வார். ரம்சான்பொழுது முப்பதும் பட்டினிகள் கிடப்பார். தினமும் குர்ரானைப் படிப்பார். தர்மத்தைத் தவறாமல் நடப்பார். அதிகாலையில் ஸ்நானம் செய்வது அவருக்கு நித்ய வழக்கம். அடை மழையாயிருப்பினும் புகைபனியாயிருப்பினும் காலை ஐந்தடிப்பதற்கு முன் ஒரு க்ரோஸ தூரம் நடந்து கங்கையை அணுகுவார். திரும்பி வரும்போது வெள்ளிக் கமண்டலத்தில் நிறையச் சுத்த கங்கா ஜலத்தைக் கொண்டு வருவார். கங்கை நீரைத் தவிர்த்து வேறு எந்த நீரையும் பருகமாட்டார். எந்த யதி சிரேஷ்டருக்கும் இவரைப்போல் கங்கை ஜலத்தின்மேல் இத்தனை சிரத்தை இருக்காது.

அவர் வீட்டைக் கோமயத்தால் மெழுகியிருப்பார்கள். அவர் வீட்டுத் தோட்டத்தில் ஒரு பண்டிதர் பன்னிரண்டு மாதமும் துர்க்கா ஜபம் பண்ணிக்கொண்டிருப்பார். சாதுக்களுக்கும், சன்யாசிகளுக்கும் அவர் செய்யும் உபசாரத்தைக் கண்டால் அரசர்கள்கூட ஆச்சர்யப்படுவார்கள். விரதங்கள் நடந்துகொண்டேயிருக்கும் ஒருபுறம்.

மறுபுறம் பகீர்களுக்காக வேறு சமையல் செய்து கொண்டிருப்பார்கள். ஒரு முறைக்கு நூறு நூற்றிருபது பேர்கள் சாப்பிட அமருவார்கள். இத்தனை தான் தர்மங்கள் செய்தும் அவருக்கு ஒரு மார்வாடி இடமாகிலும் ஒருசெல்லாக் காசு கடன் கிடையாது. அவரின் சகாயத்தை விவாகத்திற்கென்றும், சவச்சடங்கிற்கென்றும், வந்து வேண்டுபவர்களுக்கு, விறகா? தம் எஸ்டேட்டுக்குள்ளிருக்கும காட்டிற்குள் வெட்டிக் கொள்ளலாம். கலியாணமா? பெண்ணைப் பெற்றவருக்கு ஆகும் செலவை அளித்துப்பல்லக்குகள் முதல், யானை, குதிரை, பங்கா, மணப்பந்தலுக்குவேண்டிய வெள்ளிச் சாமான்கள்வரை அவரிடமே கிடைக்கும். நல்ல மனமும். உதார புத்தியும் சாந்த சுபாவமும் படைத்த அவருக்காக ஜனங்கள் உயிரை விடவும் சித்தமாயிருந்தார்கள்.

சௌதரீ சாஹேபிடம் 'பஜன் சிங்' என்ற ராஜபுத்திரன் சேவகனாயிருந்தான். ஆறடி உயரம். அகன்ற மார்பு. நல்ல உடுப்புகளை யணிந்து ஒரு குண்டான் தடியை வைத்துக் கொண்டிருப்பான். பத்துப் பேர் ஒரே முறையாய் வந்து தாக்கினாலும் தைரியமாய் ஒரே நிமிஷத்தில் அடித்துப் புத்தி சொல்லி வருவான். பயமென்ற வியாதி அவனை அணுகவேயில்லை. சௌதரிக்கு அவன் மேல் அளவற்ற ஆசை. மெக்காவுக்குச் செல்லும்போதுகூட அவனை அழைத்துச் செல்வார். அவருக்குச் சத்துருக்

களுக்கும் குறைவில்லை. அவர் சக்தியையும், புகழையும் பெருந்தன்மையையும் கண்டு பொறுமையால் பொங்கிக் கொண்டிருந்தனர், சுற்றுப் புறத்திலுள்ளவர்கள். சௌதரீ எப்பொழுதும் வலிவற்றவர்களின் சார்பில் நிற்பார். ஆதலால் அவருக்குப் பயந்து ஜமீந்தார்கள் தங்கள் குடிமங்களின்மேல் அதிகாரம் செலுத்தி அடக்கியாளப் பயந்து கொண்டிருந்தனர். பஜன் சிங்கு அவரருகிலிருந்து விட்டால் அவருக்குச் சத்துருவின் நிழலில் படுக்கக்கூடச் சந்தேகமில்லை. நிம்மதியாய்ப் படுத்துத் தூங்குவார். அநேக முறை இம்மாதிரி அவர் படுத்துள்ளார். சத்துருக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். பஜன் தன் உயிரை லக்ஷியம் செய்யாமல் அவர்களை அடித்துத் துரத்தினன். இவனைப்போல் எஜமான பக்தனை—அக்கினி போன்றவனை—எவரும் பார்த்திருக்க மாட்டார்கள். அவன் வீட்டைவிட்டு வெளிச் சென்றால் அவன் எங்கும் சண்டைக்குப் போகாமல் வீடுவந்து சேரவேண்டுமே என்று சௌதரீ சாஹேப் பயத்துடன் எதிர் பார்ப்பார். செம்மறி யாட்டைப் போன்றவன். கழுத்தில் போட்டுள்ள சங்கிலியைத் தளர்த்தினல் யாரிடமாவதுபோய் முட்டிக் கொள்ளுவது போன்ற சுபாவம். மூவுலகிலும் சௌதரியைத் தவிர்த்து அவன் கண்களுக்கு வேறு எவரும் தென்பட மாட்டார்கள். அவனுடைய அரசன், அவன் கடவுள், அவன் தேவதை அனைவரும் சௌதரீ சாஹேப்தான்.

முஸ்லீம்கள் சௌதரியை வெறுத்தனர், அவர் தங்கள் மத தர்மத்தை மீறிவிட்டாரென்று. அவருடைய கொள்கைகள் அவர்களுக்கு விசித்திரமாய்த் தோன்றின. உண்மை முஸ்லீமாக இருந்தால் கங்காஜலம் ஏன் பருக வேண்டும்? சாதுக்களை ஏன் உபசரிக்க வேண்டும்? துர்க்கா பூஜை செய்வானேன்? முல்லாக்களிடம் அவருக்கு விரோதமான தண்டனைச் சீட்டுக்கள் வந்து கொண்டிருந்தன. ஹிந்துக்களைத் துரத்தப் பிரயத்தினங்கள் செய்து கொண்டிருந்தனர்.

அன்று ஜன்மாஷ்டமி. டாகுர் த்வாரா என்னுமிடத்தில் தங்கள் கைவரிசையைக் காட்டி, ஹிந்துக்கள் வெட்கித் தலை குனிந்து ஓடும்படி செய்ய நினைத்தனர் முஸ்லீம்கள். சௌதரீ ஹிந்துக்களின் சார்பில் இருந்ததால் அவரையும் தொலைத்துவிட்டால் அன்றுடன் ஹிந்து மதமே ஒழிந்து விடுமென்று நினைத்தார்கள்.

நள்ளிரவு, கடாவில் பெரிய 'டாகுர்த்வாரா'வில் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி உற்சவம் நடந்து கொண்டிருந்தது. ஒரு கிழ பக்தர் தம்பூராவை மீட்டிக் கொண்டே பாகவத லீலையைப் பாடிக் கொண்டிருந்தார். பக்க வாத்தியக்காரர்களும் தத்தம் வீதம் வரும் போது தங்கள் திறமையைக் காட்டக் காத்திருந்தனர். நூற்றுக் கணக்கில் ஜனங்கள் சேர்ந்திருந்தனர்.

எதிர் பாராமல் ஒரு முஸ்லீம் படை திடீரென்று லாட்டிகளுடன் வந்து கோயிலின் மேல் கற்களை எறியத் தொடங்கின. இருந்திருந்தாற்போல் மழைப் பிஞ்சுகள் விழவே, எங்கு யார் வீசுகிறார்களென்று பார்க்கக் கோயிலைவிட்டு ஜனத்திரள் வெளியே வந்தது. அவர்கள் மேல் லாத்தியடிகள் வீழ்ந்தன. பஜனை செய்ய வந்த பக்தர்கள் கையில் ஜால்ராவும், மிருதங்கமும் தவிர வேறொன்றுமில்லை. சிலர் பயந்து கோயிலுக்குள் சென்று கல் இதயம் படைத்தவர்கள் வீசி எறியும் கல்லடிக்குத் தப்பி ஒளிந்து கொண்டனர். மற்றும் சிலர் வீட்டு முகம் நோக்கி ஓடினர். வேறு சிலர் ஒன்றும் தோன்றாமல் கால் விட்ட வாறு ஓடத் தொடங்கினர். நாற்புறமும் சச்சரவு அதிகமாயிற்று.

சௌதரீ சாஹேப் காதிற்கு இச்செய்தி எட்டியதும் பஜன் சிங்கை அழைத்து, "பஜன்! அந்தச் சச்சரவு யாது விசாரி. அந்தத் துஷ்டர்களுக்கு விளக்கமாகச் சொல்லி வா! கேளாவிட்டால் இரண்டு கொடு. ஆனால் கொலை மாத்திரம் செய்யாதே!" என்றார். இதைக் கேட்டதும் பஜன் சிங்குக்குத் தன் விருப்பம் நிறைவேறியதுபோல் தோன்றியது. ஒரே எட்டில் கோயிலுக்குள் பாய்ந்தான். அங்கு முஸ்லீம்கள் கோரமாய்ச் சண்டை செய்து கொண்டிருந்தனர். சிலரைத் துரத்திக் கொண்டு கோயிலுக்குள் நுழைந்துவிட்டனர். பஜன் சிங்கின் ரத்தம் கொதித்தது. துஷ்டர்களை அடிக்கத் தொடங்கினன். அவன் ஒருவன், அவனுக்கெதிரில் நிற்பவர்கள் பல பேர்களிருப்பினும் சிங்கம் அனைவரையும் விரட்டி விட்டான். சிலரை அடித்து விட்டான் கோபத்தில் உடல் தெரியவில்லை. யார் இறந்தாலும் பிழைத்தாலும் அவனுக்கு அக்கரையில்லை. அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது, தனக்கு இத்தனை வலிமை எங்கிருந்து வந்ததென்று. தர்ம யுத்தத்தில் ஆச்சரியகரமான செய்கைகளை மானிடர்களின் மூலமாய்க் கிருஷ்ணபகவான் நிறைவேற்றி விட்டாரோ என்னவோ?

பஜன்சிங்கை அனுப்பியதும் சௌதரியின் மனம் வேதனையிலாழ்ந்தது. அவன் கொலை புலை செய்யாமலிருக்க வேண்டுமே! என்று தோன்றியது. அவரும் எழுந்து அவனைப் பின் தொடர்ந்தார். துஷ்டர்கள் தத்தம் உயிருக்குப் பயந்து ஓடிக்கொண்டிருந்தனர் ஒருவன் மண்ணைக் கவ்விக்கொண்டு

முணகிக்கொண்டிருந்தான். மற்றொருவன் ரத்தகாயத்துடன் கதறிக்கொண்டிருந்தான். அவரால் இந்தக் கோரக் காட்சியைப் பார்க்கமுடியவில்லை. பஜன்சிங்கை அழைக்கக் கோயிலின் முன் சென்றார். அதே சமயம் உள்ளிருந்து ஓடி வந்த யாரோ ஒருவன் அவர் கால்களருகில் சுழன்று விழுந்தான். சௌதரீ அவனை உற்று நோக்கினார். அவர் கண்கள் இருண்டன. அவர் சொத்து சுதந்திரங்களுக்கு வாரிசுதாரனாகிய அவரின் ஒரே மருமகன் 'சாஹீத் உசேன்'

சௌதரீ துடிதுடித்தபடி அவனை எடுத்துக்கொண்டு, பஜன் இங்கே வா! விளக்கு!! விளக்கு!!! விளக்கு கொண்டுவா! இவன் என் மருமகன் சாஹீத்.''

இதைக் கேட்டதும் பஜன்சிங்க் டாகுருக்குக் கைகால்கள் நடுங்கத் தொடங்கின. மெள்ளத் தடுமாறியபடி விளக்கை ஏந்தி வெளியில் வந்தான். சாஹீத் உசேன் மண்டை உடைந்திருந்தது. அதிலிருந்து ரத்தம் வடிந்துகொண்டிருந்தது. சௌதரீ தலையிலடித்துக்கொண்டு, ''டாகுர்! நீ என் விளக்கையே அணைத்துவிட்டாய்'' என்று கதறினார்.

டாகுர் நடுங்கியபடியே ''தெய்வ சாட்சியாய் நான் அவரைக் கவனிக்கவில்லை'' என்றான். அவன் கண்களிலிருந்து நீர் வடிந்தது; அவன் முகம் பிணத்திற் கொப்பாயிருந்தது.

''இல்லை. தவறு உன்னுடையதென்று நான் சொல்லமாட்டேன். கடவுள் மந்திரத்தில் நுழைய அவனுக்கும் அதிகாரமில்லை. வம்சத்தின் சின்னம் நசித்துவிட்டதே என்ற வேதனை...... மேலும் உன் கையில்...... நீ எப்பொழுதும் எனக்காக உன் உயிரை உள்ளங்கையில் வைத்துத் திரிந்துகொண்டிருந்தாய். கடைசியில் கடவுள் உன் கையாலேயே எனக்குச் சர்வநாசத்தை அளித்துவிட்டார்'' என்று கதறினார். பஜன் சிங்கும் துக்கம், பச்சாத்தாபம் என்ற இரு ஆழமான நீர்ச் சுழலில் அமுக்கப்பட்டுக்கொண்டிருந்தான். 'அந்தோ! என் கையால் என் எஜமானருக்குச் சர்வ நாசமாக வேண்டுமா? தன் மகனிறந்தால் கூட இத்தனை துக்கம் தோன்றாது. யாருக்காகத் தன் வியர்வைக்குப் பதிலாய் இரத்தத்தைச் சிந்துகிறானோ, யார் தன் அன்பிற்குகந்த அன்பரோ, எவர் தன்னை சைகைக் காட்டி யழைத்தால் நெருப்பில் குதிக்கக்கூட அஞ்சாமல் அகமகிழ்ச்சியுடன் நிற்பானோ அப்பேர்ப்பட்டவரின் வம்சத்தைத் தன் விரல்களால் துண்டித்துவிட்டான். தான் அவருக்கு வளர்ப்புச் சர்ப்பமாகிவிட்டான். குரல் தழுதழுக்க, ''சர்க்கார்! என்னைவிட அபாக்கியவானும் இருப்பானா? என் முகத்தில் தழும்பு விழுந்துவிட்டது'' என்று சொல்லிக்கொண்டே பஜன் தன் இடையிலிருந்த கத்தியை உருவினான். தன் மார்பில் பாய்ச்சிக்கொண்டு, தன் களங்கத் தழும்பை தன் இரத்தத்தால் கழுவ நினைத்தான். சௌதரீ இமைப்பொழுதில் அந்தக் கத்தியைப் பிடுங்கிக்கொண்டு, ''என்ன செய்கிறாய்? பொறுத்துக்கொள். இவைகளெல்லாம் தெய்வீக விபத்துக்கள். இதில் உன் தவறு ஒன்றுமில்லை. கடவுளுக்கு விருப்பமானது நடந்தது. நானே துர்மார்க்கமாய் வந்து கோயிலில் நுழைந்தால், கடவுளை அவமானப்படுத்தினால், அப்பொழுது என்னை நீ தெரிந்து கொண்டும் என்னைக் கொலை செய்தாலும் நான் மன்னிப்பேன். எவனையோ அவமானப்படுத்தினால் அது அத்தனை பாபமில்லை. என் உள்ளம் உடைந்துவிட்டது. இந்த நோவு என் உயிரை எடுத்தாலன்றி விடாது. ஆனால் கடவுள் சாட்சியாய் எனக்கு உன் மேல் கோபம் இல்லை. உன் நிலையில் நானிருந்தால் எஜமானின் மகனாயிருந்தாலும் இதே வேலையைச் செய்திருப்பேன். வீட்டில் அனைவரும் என்னை இடித்துக் கூறி வதைப்பார்கள். என் பெண் அழுது அழுது கொலைக்குப் பிரதிக் கொலையைக் கேட்பாள். முஸ்லீம்களெல்லாம் என்மேல் ரத்த தாகம் செய்துகொள்ளுவார்கள். நான் 'காபிர்' மதத்திற்குத் தூரமானவன் என்று சொல்லிக் கொள்வேன். ஒருவேளை மதாவேசத்தில் எந்த வாலிபனாவது என்னைக் கொலை செய்ய வந்தாலும் என் உரிமைகளை நான் கைவிடமாட்டேன். நள்ளிரவாகிவிட்டது. இப்பொழுது இவ்விடம்விட்டுப் போ! என் ஜாகிரில் எங்கே பயமில்லையோ அங்கு ஒளிந்து கொள், அதோ பார்! யாரோ முஸ்லீம்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். எங்கள் வீட்டார்கள்கூட இருக்கிறார்கள்.

போ! ஓடிப்போ!! விரைவில் போ!!!

* * *

ஒரு வருடம் சௌதரியின் ஜாகீருக்குள்ளேயே ஒளிந்துகொண்டிருந்தான். ஒருபுறம் முஸ்லீம்கள், மறுபுறம் போலீஸ்கள் அவனைத் தேடிக்கொண்டிருந்தனர். சௌதரீ அவனை ஒளித்துக் கொண்டிருந்தார். தம் சமூகத்தினரின் ஏச்சையும் பேச்சையும் சகித்துக் கொண்டிருந்தார். வீட்டில் அனைவரும் தம்மை அவமதிப்பதையும் பொறுத்தார். போலீஸ்காரர்களின் படையெடுப்பையும் பொறுத்துக் கொண்டார். ஆயினும் பஜன்சிங்கின் பேச்சை வெளியிடவில்லை. நம்பிக்கையும், எஜமான பக்தியும் பூண்ட சேவகனை நியாயஸ்தலக் கூண்டில் சிக்க

வைக்க விரும்பவில்லை. அவர் ஜாகிரிலுள்ள பல குடும்பங்களையும் சோதனையிட்டனர். பண்டிதர்கள் விட்டுப் பணியாட்களை மாமன்களை, தாசிகளை எல்லாரையும் தம் கைக்குள் போட்டுக் கொண்டனர். அவர் மாத்திரம் நன்றியறிதலின் இருப்பிடத்தைப்பத்திரப்படுத்துவதுபோல் டாகுரை ஒளித்து வைத்தார்.

பஜன்சிங்குக்கோவெனில் தன் உயிரைக் காப்பாற்றச் சௌதரீபடும் அவஸ்தைகள் சகிக்கக் கூடாத நோவை அளித்துக் கொண்டிருந்தது. "என்னைப் போலீசுக்கு ஒப்படைத்துவிடுங்கள்" என்று சொல்ல நினைத்தால் சௌதரீ அவனை ஒவ்வொரு முறையும் வெகு பத்திரமான இடத்தில் ஒளித்து வைக்கும் முயற்சியில் இருந்தார்.

சௌதரீ தம் ஜாகிர் முழுவதும் திரிந்து கொண்டிருந்தார். வீட்டிலிருப்பவர்களின் வசைப் பாணங்களுக்கு இலக்காகாமலிருக்க வெளியியே சுற்றிக்கொண்டிருப்பார்.

அன்று இரவு அவர் உணவருந்திப் படுத்திருந்தார். பஜன்சிங்க் வந்து அவர் முன் நின்றான். சௌதரீ திடுக்கிட்டார். அவன் உருவம் அப்படி இருந்தது.

"டாகுர்!" என்றார்.

"சர்க்கார்! சௌக்கியமாய் இருக்கிறீர்களா?"

"கடவுளின் கிருபை. நீ அடையாளம் தெரியாமல் மாறிவிட்டாய், இப்பொ எங்கிருந்து வருகிறாய்?"

"மாலிக்! இனி ஒளிந்து கொண்டிருக்க முடியாது. உத்தரவளித்தால் கோர்ட்டில் போய் ஹாஜராகிறேன், யோகம் எப்படியிருக்கிறதோ அப்படி ஆகிறது. என்னால் உங்களுக்கு எத்தனை இன்னல்கள், இவற்றை என்னால் பார்க்க முடியவில்லை."

"இல்லை டாகுர்! நான் பிழைத்திருக்கும் போது.........நான் உயிருடன்.........தெரிந்திருந்தும் உன்னை ஓநாய் வாயில் தள்ள மாட்டேன். போலீஸ்கள் தங்களிஷ்டப்பிரகாரம் சாட்சிகளைத் தயார் செய்து கொள்கிறார்கள். நீ ஏன் வீணாய் உயிரைத் துறக்க வேண்டும். நான் இம்மாத்திரமாவது உனக்குச் செய்யாவிட்டால் என்னைவிட நன்றியற்றவன் எவனிருப்பான்?"

"சர்க்கார்! எங்காகிலும்...எவராயினும்..."

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம். கடவுளுக்கு இஷ்டமில்லாவிட்டால் எவரும் என் ஒரு ரோமக்காலைக்கூட அசைக்க முடியாது. நீ போ! இங்கிருப்பது உனக்கு அபாயம்'

"பொது மக்கள் உங்களுடன் முன்போல் ஒற்றுமையுடனிருக்கவில்லை என்று கேள்விப் பட்டேன்"

"துஷ்டர்களுக்குத் தூரமாய் இருப்பது நல்லது" என்றார். இந்தச் சந்திப்பு டாகுர் மனதில் நினைத்ததற்கு இன்னும் ஊக்கத்தையளித்தது. "இவர் என்னால தானே இப்படி திரிய வேண்டி வந்தது. இவரைச் சேர்ந்தவர்கள் இங்கு யார் இருக்கிறார்கள். சீ......! என் வாழ்க்கையும்..........."

விடிந்தது. டாகுர் ஜில்லா அதிகாரி முன் சென்று நின்றான். அவர் கேட்டார்.

"நீ இன்னும் சௌதரீயின் சொற்படி ஒளிந்து கொண்டிருக்கிறாயா?"

"இல்லை. உயிர்ப் பயத்தால்........."

* * *

இதை யறிந்த சௌதரீ செயலற்றுப்போனார். தாவாவுக்கு அனுகூலமாய் நடக்காவிடில் டாகுர் பிழைப்பது அரிது. அனுகூலமாய் நடந்தால் முஸ்லீம் உலகத்தில் அநியாயம் செய்தவராவர். நாற்புறமும் மௌல்விகள் அனுப்பும் தர்மச் சங்கங்கள் புறப்பட்டு விட்டன. போதாக் குறைக்கு முஸ்லீம்கள் தூக்குத் தண்டனை விதித்துத் தாக்கிலிட வேண்டுமென்று சந்தாதாரர்களாய், மசூதிகளிற் சந்தாதாரர்களைச் சேர்த்ததுமன்றி வீடு வீடாய் ஏறி இறங்கினர். இதில் ஜாதி ஆவேசத்தைத் தூண்டி விட்டனர். முஸ்லீம் பகிர்களுக்கு பெயரும் புகழும் கிடைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சுற்றுப்புற ஜில்லாக்களிலிருந்து மத கலகத்தில் சேர முஸ்லீம்கள் வந்து சேரத் தொடங்கினர்.

சௌதரீ சாஹேப் கேஸ் தமக்கு அனுகூலமாகச் செய்து கொள்ள நினைத்தார். எத்தனை இடிகள் அவர் தலை மேல் வீழ்ந்திடினும் அவர் கண்முன் பஜன் சிங்க் நிரபராதியாய் நியாயஸ்தலத்தில் நின்றான். நிரபராதியை ரட்சிக்கப் பயமேன்? வீட்டிலிருந்து பட்டணத்துக்குச் சென்று இருக்கத் தொடங்கினார்.

ஆறு மாத காலம் உயிரைக் கொடுத்து சௌதரீ கேசுக்காகக் கஷ்டப்பட்டார். நீரைப்போல் பணத்தைப் பிரவகிக்கச் செய்தார். சுழல்காற்றைப்போல் ஓடினார். வாழ்க்கையில் செய்யாத வேலைகளை எல்லாம் செய்தார். வக்கீல்களுக்குச் சேவை செய்தார். டாகுரைவிடுதலை செய்து விட்டார்.

இச் சங்கதி ஜாகிர் முழுவதும் பரவியது. கேட்டவரெல்லாம் ஆச்சரியத்துடன் அவர் நேர்மையைப் புகழ்ந்தனர். 'இதுதான் நல்லவர்களுக்கு அடையாளம். தம் வேலைக்காரனின் தூக்குத் தண்டனையைத் தப்பித்துவிட்டார்' என்றார்கள்.

ஆனால் மதத்துவேஷம் இந்த நற்காரியத்தை நற நறவென்று பற்களைக் கடித்துப் பார்த்தது. முஸ்லிம்கள் எரிந்து விழுந்தனர். ஹிந்துக்கள் தோளைத் தட்டிக்கொண்டனர். மகம்மதியர்களின் தன்மையே மாய்ந்துவிட்டதென்று மகம்மதியர்கள் நினைத்தனர். முல்லாக்கள் மிருதங்கம் வாசிப்பவர்களைத் துரத்த ஆரம்பித்தனர். ஹிந்துக்கள் ஒற்றுமை ஜெண்டாவை எடுத்தனர். மகம்மதியர்களிடம் முஸ்லீம் தனம் விழித்துக்கொண்டது. ஹிந்துக்களின் ஹிந்துத்வம். டாகுர் கால்களும் இதில் சரிந்தன.

சுதந்திரமாய்ச் சிவனுக்கு ஒரு சொம்பு ஜலத்தை அபிஷேகம் செய்யாவிடினும், இன்று கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டு 'லாட்டி' களைத் தயார் செய்துகொண்டனர். சௌதரி வீட்டு வேலையாட்கள் மசூதியை எட்டிப் பாராமலிருந்தவர்கள் நாளொன்றுக்கு ஐந்து முறை மசூதி முன் நின்று நமாஸ் செய்யத் தொடங்கினார்கள். கோயிலின்புறமே நிற்காமலிருந்த ஹிந்துக்கள் இரண்டுவேளை சந்தியாவந்தனம் செய்யத் தொடங்கினார்கள்.

நகரத்தில் ஹிந்துக்களின் தொகை அதிகம். அவர்களுக்குப் பஜன்சிங் தலைவன். அவன் லாட்டிக்குக்கூட நல்ல கௌரவமும் மதிப்பும் உண்டு. ஹிந்துக்கள் முஸ்லிம்களைவிடக் குறைந்திருப்பினும் பலம் படைத்தவர்களாயிருந்ததுமன்றி இப்பொழுது அனைவரும் ஒன்று சேர்ந்துவிட்டனர்.

மற்றும் ஒரு வருடம் ஓடியது. மறுபடியும் ஜன்மாஷ்டமி உற்சவம் வந்தது. ஹிந்துக்களுக்கு மூன்றாண்டுகளுக்குமுன் முஸ்லிம்கள் செய்த அவமானம் மறக்கவில்லை. ரகசியமாய் உற்சவத்திற்கு வேண்டியவைகள் தயாராகிக் கொண்டிருந்தன. அன்று விடிந்ததிலிருந்து பக்தர்கள் லாட்டிகளுடன் கோயிலுக்குள் சேர்ந்தனர். வெகு ஜனங்கள் தங்கள் இடையில் கத்திகளைச் சொருகிக்கொண்டிருந்தனர். என்றுமில்லாத புது வழக்கம் அவ்வருடம் சுவாமியை ஊர்வலமாய் எடுத்துச் செல்வதென்று தீர்மானித்தனர். அட்டகாசமாய் ஊர்வலம்வர எல்லாம் சித்தமாய்விட்டன. ஹிந்துக்கள் போர் புரியத் தயாராகவே இருந்தனர்.

விளக்குகள் ஏற்றப்பட்டன. மசூதிகளில் மாலை நேர நமாஸ் நடந்துகொண்டிருந்தது. ஊர்வலம் புறப்பட்டது. யானைகள், குதிரைகள், பாண்டு மேளம், தோரணங்கள், கொடிகள், பக்தர்கள், அவர்களுடன் பஜன்சிங் கூட நடந்துகொண்டிருந்தான். எதிரில் ஜும்மா மசூதி தென்பட்டது. எல்லோரும் லாட்டிகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டனர் அவர்களுக்கே சந்தேகம் தோன்றியது. எல்லோரும் ஒருவரை ஒருவர் நெருங்கி, காதுடன் காதைக் கடித்தனர். ஜால்ராவும், டமாரமும் நன்றாய் அடிக்கப்பட்டன. மசூதின்முன் ஊர்வலம் வந்தது. ஜெய கோஷம் வானை முட்டியது.

மசூதியிலிருந்து ஒரு முஸ்லீம் ஓடி வந்து "நமாஸ்வேளை, ஜால்ராவையும், டமாரத்தை நிறுத்தி விடுங்கள்" என்றான்.

"ஜால்ராவை நிறுத்த முடியாது" என்றான் பஜன்சிங்.

"நிறுத்த வேண்டிவந்து விடும்" என்றான் முஸ்லீம்.

"நீங்கள் ஏன் நமாஸ் செய்வதை நிறுத்தக் கூடாது?" என்றான் பஜன்.

"சௌதரியின் பலத்தை நம்பித் துள்ள வேண்டாம். இம்முறை சூடு தணிந்துவிடும்."

"சௌதரியின் பலத்தைக் கண்டு நீ இறுமாப்புக்கொள்ளு. இங்கு எங்கள் பலத்தின் மேல் தான் ஆதாரப்பட்டுள்ளோம். இது மத விவகாரம்"

இதற்குள் மற்றும் சில முஸ்லிம்கள் அங்கு வந்தனர். மேளதாளத்தை நிறுத்தச் சொன்னார்கள். இங்கு அதிகமாய் வாசித்தார்கள். வார்த்தைகள் வளர்ந்தன. ஒரு மௌல்வீ பஜன்சிங்கை, 'காபிர்' என்றான். டாகுர் அவன் தாடியைப் பிடித்துக் கொண்டான். ஜனங்கள் கூடிவிட்டனர். அடிதடிகள் அதிகமாயின. டாகுர் கூவிக் கொண்டே மசூதியினுள் நுழைந்தான். டாகுரின் அசகாய சாமார்த்தியத்தை இருதரப்பாரும் வியந்து பாராட்டினர்.

"டாகுர் இல்லாவிடில் ஒரு ஹிந்துவைக் கூட நாங்கள் விட்டுவைக்காமல் வதைத்திருப்போம்" என்றார்கள் முஸ்லீம்கள்.

"டாகுர் உண்மையில் மஹாவீராவதாரம் தான். அவன் லாட்டியடிதான் முஸ்லீம்களை விரட்டின," என்றார்கள் பெருமையுடன் ஹிந்துக்கள்.

உற்சவம் முடிந்துவிட்டது. சௌதரி தம் வீட்டுத் திவானிகாஸில் அமர்ந்து ஹூக்கா குடித்துக்கொண்டிருந்தார். அவர் முகம் வெளிறிக் கிடந்தது. கண்ணிமைகள் உப்

பிக் கிடந்தன. கண்கள் நெருப்புத் துண்டுகளாயிருந்தன. "கடவுளின் இல்லம் மாசு படுத்தப்பட்டது" என்ற சொற்கள் அவர் உள்ளத்துள் அடிக்கடி எழும்பிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் அவர் உள்ளம் கொதித்தது. சிந்திக்கத் தொடங்கினார். மடையன்களுக்கு அடித்துக் கொள்ள மைதானம் போதாதா? கடவுளின் பவித்திர வாசஸ்தலத்திலா வதைகள்? இது மசூதிக்கு அகௌரவம். கோயிலும் கடவுளின் வீடு. மசூதியும் அப்படித்தான் முஸ்லீம்கள் கோயிலை மாசுபடுத்தியபோது எப்படி தண்டனைக் கேற்றவர்களோ, அதுபோல் மசூதியை மாசு படுத்திய போது ஹிந்துக்களும் தண்டனைக்குகந்தவர்கள் தான்.

மேலும் இந்தக் காரியத்தை டாகுர் செய்துள்ளான். இந்தத் தப்பு செய்ததற்குத் அவன் என் மாப்பிள்ளையைக் கொன்றான். அவனால் இம் மாதிரி காரியம் நடக்குமென்று நான் அறிந்திருந்தால் அவனை நானே தூக்கு மரத்தில் ஏற்றி இருப்பேன். அவனுக்காக எத்தனை கஷ்டப்பட்டேன்! அப கீர்த்திக்கு ஆளானேன். அவன் நம்பிக்கையுள்ள சேவகன். என் உயிரைக் காப்பாற்றினான். எனக்காக வியர்வைக்குப் பதில் ரத்தத்தைச் சிந்தத் தயாராயிருப்பான். ஆனால் இன்று அவனே கடவுளின் இல்லத்தைக் களங்கப் படுத்தினான். அவன் இதற்குத் தண்டனை அனுபவிக்க வேண்டியதுதான். என்ன தண்டனை? நரகம்தான். அதைத் தவிர்த்து அவனுக்கு வேறு சிக்ஷையில்லை. கடவுளின் இல்லத்தை மாசு படுத்தினானென்றால் கடவுளை அவமதித்தது போல் தான். கடவுளுக்கு அவமானமா?" அவர் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

அவர் முன் பஜன் சிங் வந்து நின்றான். அவருக்குக் கோபம் பீறிக் கொண்டு வந்தது. 'நீ மசூதிக்குள் நுழைந்தாயா?" என்று கேட்டார் சீற்றத்துடன்.

'மௌல்விகள் எங்கள் மேல் வீழ்ந்தனர்"

'என் பேச்சுக்குப் பதில் சொல், நீ மசூதிக்குள் நுழைந்தாயா?

"மசூதியிலிருந்து அவர்கள் எங்கள் மேல் கற்களை வீசினார்கள். அதனால் அவர்களைப் பிடிக்க உள்ளே நுழைந்தோம்"

"மசூதி கடவுளின் வீடென்பதை அறிவாயா?"

"அறிவேன், அது கூடவா தெரியாது"

"கோயில் எப்படியோ? அப்படியே மசூதியும் கடவுளின் பவித்திர இல்லம்"

அதற்குப் பஜன் ஒன்றும் பதில் சொல்லவில்லை."

"முஸ்லீம்கள் கோயிலை மாசுபடுத்தியதற்கு அபராதிகளானால், ஹிந்துக்கள் மசூதியை மாசுப்படுத்தினால் அபராதிகள் தான்" என்றார் சௌதரீ.

அவனால் பேசமுடியவில்லை. அவன் சௌதரியை இம்மாதிரி கோபத்தில் என்றும் பார்த்ததில்லை.

"பஜன்! நீ என் மாப்பிள்ளையைக் கொன்றாய். நான் உனக்காகக் கேஸில் போராடினேன். எதற்காகத் தெரியுமா? நீ என் மருமகனுக்குக் கொடுத்த தண்டனை சரியானதுதான். அதற்கவன் உரியவன் என்று நினைத்துக் கொள்வேன். உண்மையில் நீ என்னையோ, என் மகனையோ அந்தத் தவறு செய்ததற்குக் கொன்றால் நான் அதற்குப் பதில் கொலையை விரும்ப மாட்டேன். அந்தத் தவறையே நீ இன்று செய்திருக்கிறாய். எந்த முஸ்லிம் ஆகிலும் உன்னை நரகத்திற்கு அனுப்பியிருந்தால் ஆனந்தமடைந்திருப்பேன். நீ வெட்கமற்றுத் தப்பித்துக்கொண்டுவந்து என் முன் நிற்கிறாய். இந்த அக்கிரமச் செய்கைக்குக் கடவுள் உன்னைத் தண்டிக்க மாட்டார் என்று நினைக்கிறாயா? அவரை அவமதித்தவரை மூளையை நசுக்கவேண்டுமென்பது அவரின் ஆக்ஞை. இது ஒவ்வொரு முஸல்மானின் கடமை. கள்வன் தண்டிக்கப் படாவிட்டால் மாத்திரம் கள்வனல்லவா? நீ கடவுளை அவமதித்ததாக ஒத்துக்கொள்கிறாயா? இல்லையா?"

டாகுர் தன் தவறை மறுக்கச் சக்தியற்றவனானான். சௌதரியின் நன்னடத்தை அவன் மூர்க்க குணத்தை உதறித் தள்ளியது. "ஆம், இந்தத் தவறு நடந்துவிட்டது."

"அந்தத் தவறுக்கு நீ எந்தத் தண்டனை விதித்தாயோ அந்தத் தண்டனையை அனுபவிக்கத் தயாராயிருக்கிறாயா?"

"நான் மனமறிந்து மாப்பிள்ளையைக் கொல்லவில்லை."

"நீ கொல்லாவிட்டால் நான் என் கைகளால் கொன்றிருப்பேன். தெரியுமா? இப்பொழுது கடவுளை அவமானப்படுத்தியதற்காக நான் பதிலுக்கு உன்னைச் சிட்சிக்கப் போகிறேன், சொல்; என் கைகளாலேயே வேண்டுமா? அல்லது கோர்ட்டு மூலமாய் வேண்டுமா? கோர்ட்டினால் சில நாட்கள் சிட்சை அடைவாய். நான் கொல்வேன். நீ

என் நேசன். நீ என்றால் எனக்குத் துவேஷமில்லை. என் உள்ளத்தில் பொங்கும் துக்க ஊற்று கடவுளுக்கன்றி வேறு யாருக்கும் தெரியாது. ஆனால் நான் உன்னைக் கொல்வேன். இது என் மத சம்பந்தமான ஆக்ஞை'' என்று கத்தியை எடுத்துக் கொண்டு டாகுர் முன் நின்றார் சௌதரீ சாஹெப். விசித்திரக் காட்சி. ஒரு கிழவன், தலைபருத்து, முதுகு கூனி. இடுப்பொடிந்த முதியவன் கடவுளுக்காக கத்தியை உருவி நின்றார். டாகுர் ஒரு அடியில் அவரை வீழ்த்தி விடுவான். ஆனால் அவன் தலைகுனிந்து காட்டினான்.

சௌதரீ என்றால் அவனுக்கு ரோமக்கால் ரோமக்காலுக்குக் கௌரவம் நிரம்பிக் கிடக்கிறது. சௌதரீ தர்ம விஷயத்தில் இத்தனை திடமாய் கடமையைக் கையாள்பவரென்று அவனுக்குத் தெரியாது. எந்தத் தர்மப் பிரபு தன்னைத் தூக்கு மரத்திலிருந்து தப்புவித்தாரோ, அவரே அதற்குப் பிரதிபலன் செய்ய ஏன் முயலுகிறார். அவர் தைரியவான். அப்பேர்ப்பட்ட கள்ளங் கபடமற்றவர் யாருமில்லை. இப்பொழுதும் அவருக்குக் கோபமில்லை.

பஜன்சிங்க் கபடமற்றுத் தைரியமாய் அவரைப் பார்த்தான். அவன் முகத்தில் கோபத்திற்குப் பதில் பச்சாத்தாபம் படர்ந்து கிடந்தது. இறப்போமென்ற பயமில்லை. துக்கமுமில்லை. சௌதரீ அவன் எதிரில் நின்றார்.

''மதம் சொல்லுகிறது கொன்றுவிடு'' என்று. நல்லெண்ணம் ''விட்டுவிடு'' என்று. மதமும் தர்மமும் சச்சரவு செய்யத் தொடங்கின. சௌதரீயின் நிலைமையை நன்கறிந்த டாகுர் குரல் தழுதழுக்க, ''எஜமான்! உங்கள் தயை படைத்த உள்ளம் என் மேல் கையை ஓங்க விடாது. நீங்கள் வளர்த்த சேவகனை நீங்கள் கொல்ல மாட்டீர்கள். ஆனால் இந்தத் தலை உங்களுடையது. நீங்கள் இதை ரட்சித்திர்கள். நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். என்னிடம் இதை நீங்கள் ஒளித்து வைத்தீர்கள். இது உங்கள் பொருள். அந்த அடமானப் பொருள் உங்களுக்குக் கிடைக்கும் காலை என் வீட்டுக்கு யாரையாகிலும் அனுப்பி வரவழைத்துக் கொள்ளுங்கள். இங்கு அளித்தால் இன்னல்கள் அதிகமாகும். வீட்டில் யார் கொன்றார்களோ, யார் அறிவார்கள்? நடந்த தவறுக்கு மன்னித்துவிடுங்கள்'' என்று டாகுர் அங்கிருந்து மதயானைபோல் அகன்றான்.

மறுநாள் பஜன்சிங்க் டாகுர் தலை சௌதரியின் முன் வைக்கப்பட்டிருந்தது. அவர் தம் கண்ணீரால் அதை நனைத்துக் கொண்டிருந்ததை அனைவரும் பார்த்துக் கொண்டு அமைதியாய் நின்றிருந்தனர். அவர் உள்ளக் குமுறலை, வளர்த்த பாசத்தை நேர்மையின் துடி துடிப்பை, மதவைரிகளால் ஏற்படும் சங்கட நோயை அவர்கள் அறிவார்களா?

பட்டு

என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

மிகவும்
ருசிகரமானது
மாத்திரமல்ல-
இது
நல்லது !



தீவிர ஜீவசக்தியளிக்கும் விடமின்கள் நிறைந்தது

போர்ன்-வீட்டாவிலுள்ள நேர்த்தியான சாக்லெட் வாசனை இளையோர் முதியோர் அனைவராலும் விரும்பப்படுவது. அதிலுள்ள கால்ஷியமும் விடமின்களும் உங்கள் எலும்புகளை நன்கு வளரச்செய்து புதிய ஆரோக்யமும ஜீவசக்தியும் ததும்பச் செய்கின்றன.

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

KB 31M

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

சென்னை-600 098.
198048
82
211, N41 KV
N428.8